திருமந்திரம்

சைவசித்தாந்த மகா சமாஜம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருமூலநாயனார் அருளிய

திருமந்திர மாலையெனப் பெயரிய

திருமந்திரம்

(பத்தாந் திருமுறை)

சைவசித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை

ஸ்ரீமுக ஞு ஐப்பசி மீ
1933

உரிமை பதிவு
செய்யப்பட்டது.

தனிப்பிரதி விலை ரூபா ஒன்று.
11 பிரதிகள் விலை ரூபா 10.

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ப தி ப் பு ரை

" நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன் "

—சுந்தரர்.

ஒன்றவன்தானாய், உலப்பிலி தேவர்கள் நக்கனென்றேத்திடு நாதனாய்ப், போற்றிசைத்தின்னுயிர் மன்னும் புனிதனாய் விளங்கும் முழுமுதற் கடவுள் அருட்டுணை கொண்டு, தமிழ்மறையும் பத்தாந் திருமுறையுமாகிய திருமந்திரம் என்னும் இந்நூல், நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாகத் திருமூலர் திருநாளாகிய இன்று, அவரது திருவடியில் சமர்ப்பிக்கப் பெற்று வெளியிடப்படுகின்றது. இந்நூலின்கண் பாடபேதங்களும் பிரதிபேதங்களும் ஆயிரக்கணக்கிலுள்ளபடியாலும், இலகுவிற் பொருள் விளங்காத இந்நூலைப்படித்துணர்தற்குக் கிடைக்கக்கூடிய எல்லாப் பாடபேதங்களும் பெரிதும் பயன்படக்கூடுமாகையாலும், பல ஏட்டுப் பிரதிகளைத் தருவித்துப் பரிசோதித்துப் பாடபேதங்களையும் பிரதிபேதங்களையும் விடாது குறித்து, நூலை வெளியிடுதல் நலம் என்று, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதிப் பதிப்பாசிரியர் திரு - எஸ். வையாபுரி பிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கள் தெரிவித்தார்கள். அம்மட்டிலமையாது, அவர்கள் தாமே ஏடுகளைச் சேகரித்துப் பரிசோதித்துப் பாடபேதங்களைக் குறித்து அச்சுத்தாள்களையும் திருத்துவதாக ஒப்புக்கொண்டார்கள். சென்னைப்பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சிப் பேராசிரியர் திரு. எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை, எம். ஏ. எல். டி. அவர்கள் தம்மிடமிருந்த ஏட்டுப் பிரதிகளைத் தந்து, மூலத்திற் கொள்ளவேண்டிய சிறந்த பாடங்களைத் தேர்ந்தெடுத்து ஏனையவற்றைப் பாடபேதங்களாகக் கீழே குறிக்கும் பொறுப்பை மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். இவ்விருபெரியார்களும், இவர்கட்குத் துணைபுரிந்த சென்னை

உயர்தர நீதிமன்ற வழக்கறிஞர் திரு. பி. என். அப்புஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல். அவர்களும் இவ்வரிய தொண்டில் ஈடுபட்டுப்பணியின் அவசியம் ஒன்றையே கருதி, உலப்பிலா ஊக்கமும் சலிப்பிலா முயற்சியும் எடுத்துக்கொண்டு ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்துப் பதினாயிரம் பாடபேதங்களைக் குறித்து அச்சுத் தாள்களைத் திருத்தி யுபகரித்தார்கள். இப்பெரியார்கட்கு நமது மறவா நன்றி கூறுவ தோடமையாது, இவர்கள் நீடூழிகாலம் நலமிக வாழ்ந்து மேன் மேலும் இத்தகைய தொண்டுகள் பல புரியுமாறு இறைவன் அருள் சுரக்க வழுத்துகின்றோம்.

இவ்வெளியீட்டுக்குப் பயன்பட்ட ஏட்டுப்பிரதிகள் ஐந்து. அவை (1) அரசாங்க ஏட்டுத்தொகுதி நிலையப்பிரதி ஒன்று ; (2) ஆழ்வார் குறிச்சி - திரு-எம். பி. எஸ். துரைசாமி முதலியார், பி. ஏ. பி. எல். அவர்கள் அன்புகூர்ந்து அனுப்பிய பிரதி ஒன்று; (3) காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் - தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் பிரதி ஒன்று (4), (5) திரு-எஸ். அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் பிரதி கள் இரண்டு ஆகிய ஐந்துமே. இப்பிரதிகளே யன்றி இதுகாறும் வெளிவந்துள்ள அச்சுப்பிரதிகள் ஐந்தும் வேண்டும்போதெல்லாம் ஒப்புநோக்கப்பட்டன. மேற்கூறிய ஏட்டுப்பிரதிகளை யுதவிய அன் பர்கட்கு நமது நன்றி என்றும் உரித்து.

இந்நூலின் இறுதியில் ஓர் அரும்பதவுரை யகராதியைச்சேர்க்க வேண்டுமென்று தெரிவித்து அரும்பதங்களைத் திரட்டி, கொழும்பு - திரு. இ. வைத்தியலிங்கனார் அவர்கள் அனுப்பிவைத்தார்கள். அவ் வரும்பதங்கட்கு ஆலங்குடி - திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் உரைகளைக் குறித்தார்கள். திருவாவடுதுறைப் புராணத்தில் திருமூலரைப்பற்றிய குறிப்பை, திரு. தி. பொ பழனியப்ப பிள்ளை யவர்கள் (திரு. பொன்னோதுவார் மூர்த்திகளின் பிரதியைப் பார்வை யிட்டு) எழுதியனுப்பினார்கள். இப்பெரியார்கட்கு நமது நன்றி பெரி தும் உரித்து.

வழக்கம்போல் சென்னை சாது அச்சுக்கூடத்தினர் இந்நூலைச் செம்மையாகவும் விரைவாகவும் அச்சிட்டு முடித்தனர். இவ்வெளியீடு செம்மையாக இன்று வருதற்காகத் திரு. வி. உலகநாத முதலியாரவர் கள் எடுத்துக்கொண்ட உழைப்பும் ஊக்கமும் அளவிடற்பாலனவன்று.

இந்நூல் இன்று வெளிவருவதற்குத் துணைபுரிந்த மேற்கூறிய பெரியார்கட்கெல்லாம் நமது நன்றியை மிக மகிழ்ச்சியோடு செலுத்துகின்றோம்.

இவ்வெளியீட்டோடு இதுவரை சமாஜப் பதிப்புக்களாக பதினொரு திருமுறைகள் வந்துள்ளன. பன்னிரண்டாம் திருமுறையும் பதினான்கு சாத்திரமும் ஓராண்டுக்குள் வெளிவருமென எதிர்பார்க்கின்றோம். சைவ நன்மக்கள் ஊக்கத்தோடு இவ்வெளியீட்டை ஆதரிக்க வேண்டுகிறோம்.

"வாழ்கவே வாழ்க என்னந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே."

150, கோவிந்தப்பநாய்க்கன் தெரு,
சென்னை
ஸ்ரீமுக ௵ ஐப்பசி ௴ ௧௬ ௳
அசுவினித் திருநாள்
1—11—1933.

இங்ஙனம்
ம. பாலசுப்பிரமணிய முதலியார்
பி.ஏ., பி.எல்., காரியதரிசி,
சைவசித்தாந்த மகா சமாஜம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருமூலர் வரலாறு*

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டென்உச்சி
அடிமன்ன வைத்தபி ரான்மூல னாகின்ற அங்கணனே.

—நம்பியாண்டார் நம்பிகள்.

கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருது மூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயர நீடும்
பசுக்களைக்கண் டவனுடலிற் பாய்ந்து போத
வயலாகப் பண்டையுடல் அருளான் மேவி
ஆவடுதண் டுறையாண்டுக் கொருபா வாகக்
குயிலாரு மரசடியி லிருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகி னாரே.

—உமாபதிசிவாசாரியார்.

திருக்கயிலாயமலைக் கோயிலுக்கு முதற் பெருநாயகமாகி இந்திரன் மாலயன் முதலாம் இமையவர்க்கு நெறியருளும் நந்தியெம் பெருமான் திருவருள் பெற்ற நான்மறையோகிகள் ஒருவர் (அணிமா முதலான அட்டமாசித்தியும் பெற்றவர்) அகத்திய முனிவரைக்கண்டு அவருடன் சிலநாள் வசிப்பதற்காகக் கயிலைமலையிலிருந்து பொதிய மலை நோக்கிப் புறப்பட்டார். வழியிலே திருக்கேதாரம், பசுபதி நேபாளம், அவிமுத்தம் (=காசி), திருப்பருப்பதம், காளத்தி, ஆலங்

* இவ்வரலாறும் குறிப்பு முதலியனவும் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல். அவர்களால் எழுதப்பட்டன.

காடு, ஏகம்பம் என்ற தலங்களில் இறைவனை வணங்கினார். காஞ்சியில் சில யோகியரைக் கண்டு நயந்து, திருவதிகை சென்று, பின்னர் தில்லையில் திருநடனங் கண்டு அங்குச் சிலநாள் தங்கிக் காவிரியைக் கடந்து, திருவாவடுதுறை சென்று தொழுதார். தொழுது மீளும் போது அவ்விடம் விட்டு " அகலாததொரு கருத்து முன்னியெழுங் குறிப்பினால் மூளுமாதரவெய்தப் பின்னுமகன்று" சென்றார். செல்லும்வழியில் காவிரிக்கரையில் பசுக்கூட்டங்கள் அழுவதைக்கண்டார்.

அந்தணர் வாழ்கின்ற சாத்தனூரில் பசுமேய்ப்பார் குடியில் தோன்றிய மூலன் என்பான் வழக்கம்போல் ஒருநாள் பசுக்களை மேய்க்கும்போது, தனது வாழ்நாள் முடிவெய்த,நிலத்தில் வீழ்ந்திறந்தான்.அவன் மேய்த்த பசுக்கள் அவன் உடம்பைச்சுற்றிச்சுற்றிக் கதறியழுதன. அவ்வழுகையைக்கண்ட சிவயோகியார் திருவருளாலே அப்பசுக்களின் துயரை நீக்கத் துணிந்து, தமது உடம்புக்குத் தகுந்த அரண்செய்து, கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தியால் மூலன் உடம்பில் தமதுயிரைப் பாய்த்தினார். ''பாய்த்தியபின் திருமூலராய் எழலும் பசுக்களெலாம், நாத்தழும்ப நக்கிமோந்து அணைந்து கனைப்பொடு நயந்து, வாய்த்தெழுந்த களிப்பினால் வாலெடுத்துத் துள்ளி" மேய்ந்தன. மாலைப்பொழுது வந்தவுடன் தத்தம் கன்றுகளை நினைந்து சாத்தனூருக்குத் திரும்பி, அவ்வவற்றின் வீடுகளுட் புகுந்தன. திருமூலர் எவ்வீட்டிலும் நுழையாமல் வெளியே நின்றார்.

இவ்வாறு இவர் நிற்பதைக்கண்ட மூலன் மனைவி திருமூலரைத் தனது கணவனென்றே எண்ணித் தொட்டழைக்க வந்தாள். ஆனால் திருமூலர் அதற்கிசையாது"இங்கு உனக்கு என்னுடன் அணைவொன்றில்லையென எதிர்மறுத்து" ஒருபொது மடத்தினுட் புகுந்து சிவயோகத்தி லமர்ந்திருந்தார்.

அன்றிரவெல்லாம் தூங்காது வருந்திய மூலன் மனைவி மறுநாட் காலை நல்லார் பலரிடத்து முறையிட்டாள். அவர்கள் திருமூலர் நிட்டையிலிருப்பதைக் கண்டு, "பித்துற்ற மயலன்று, பிறிதொரு சார்புளதன்று, சித்தவிகற்பம் களைந்து தெளிந்த சிவயோகமே" அவர் இருக்கும் நிலையெனத் தெரிந்து அவர் இல்வாழ்க்கைக்கு உதவார் என்பதை மூலன் மனைவிக்குத் தெரிவித்தார்கள். அவள் துயரெய்திமையலுற உடனிருந்தவர்கள் அவளைக் கொண்டகன்றார்கள்.

திருமூலர் பின்னர் கிட்டைவிட்டெழுந்து பசுக்கள்வந்த வழியே மீண்டுத்தாம் அரண் செய்து வைத்த தமதுடலைக் காணாது, மெய்ஞ் ஞானத்தால் ஆராய்ந்து, சிவபெருமான் தந்த, ஆகமப்பொருளை மண்ணின்மிசைத் தமது வாக்கினால் தமிழ்வகுப்ப இறைவன் திருவுளங்கொண்டு தமதுடலைக் கரப்பித்தார் எனத்தெளிந்தனர். மூலனுடைய சுற்றத்தார் மீண்டும் தொடர அவர்களுக்குத் தமது தொடர் பின்மையை நன்றாய் விளக்கிப் பிறகு திருவாவடுதுறை சென்றார்.

ஆங்கு இறைவனை வணங்கி மேற்குப் புறத்தில் மிகவுயர்ந்த ஓர் அரசமரத்தின் கீழ் அமர்ந்து சிவயோகம் புரிந்து மூவாயிரம் ஆண்டு இப்புவியிலிருந்து ''ஒன்றவன்றானென''த் தொடங்கி ஓராண்டுக் கொன்றாக மூவாயிரம் திருமந்திரமோதி மீண்டும் திருக்கயிலை சென்று ''ஒருகாலும் பிரியாமைத்தாள் அடைந்தார்''

" ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்ந்துலகத் தோருய்ய
ஞானமுதல் நான்குமலர் நல்திருமந் திரமாலை
பான்மைமுறை ஓராண்டுக் கொன்றாகப் பரம்பொருளாம்
ஏனஎயி றணிந்தாரை ஒன்றவன்றா னெனஎடுத்து "

" முன்னியஅப் பொருண்மாலைத் தமிழ்மூவா யிரஞ்சாத்தி
மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி யணிந்தார்தம் திருவருளாற் றிருக்கயிலை
தன்னிலணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார் "

இவ்வரலாறு சேக்கிழார் பெருமான் திருவாக்கால் திருத்தொண்டர் புராணத்துள் இருபத்தெட்டு இனிய பாக்களாற் கூறப்பட்டுள்ளது. இவ்வரலாற்றுக் காதரவான குறிப்புக்களும் இவ்வரலாற்றிற் காணப்பெறாத செய்திகளை யறிவிக்கும் குறிப்புக்களும் திருமந்திரத்தில் காணப்படுகின்றன. இக்குறிப்புக்களைத் திரட்டுங்கால், பாயிர முட்பட திருமந்திரம் முழுமையும் திருமூலர் வாக்கென்றே எண்ணிக் கொள்ள வேண்டும். திருமூலர் வாக்கல்ல வென்று ஐயுறக் கூடிய பாடல்கள் பின்னர் விவரிக்கப்படும்.

திராவிடமாபாடிய ஆசிரியர் சிவஞான சுவாமிகள் காலத்தில் விருந்த சாஸ்திரஞ் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளாற் பாடப் பெற்றதும் திருவாவடுதுறை ஆதீனத்து கஉ-வது பட்டமாகிய திருச்

சிற்றம்பல தேசிகசுவாமிகள் காலத்து (ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகட்குமுன்) அரங்கேறியதும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுட்களையுடையதும் இதுவரை அச்சில் வெளிவராததுமாகிய திருவாவடுதுறைப் புராணத்தில் "திருமூலரைத் தடுத்தாட் கொண்ட சருக்கம்" ஒன்றுளது. அதிற்கீழே காணும் மாறுபாடுகளோடு பெரியபுராண வரலாற்றை யொட்டியே திருமூலர் சரிதை கூறப்படுகின்றது. மூலன் உடலிற் புகவேண்டுமென்ற பவவினை திருமூலருக்குண்மையின் அவர் அவவாறு புகநேர்ந்ததென்றும் திருமூலர் அரண் செய்து வைத்த தமது சொந்த வுடலைப் போதியின்கீழ் மறையப் பொதிந்து இறைவனே வைத்ததாகவும் இப்புராணம் கூறுவதோடு திருமந்திரம் வெளிப்பட்ட விதத்தையும் கீழ்வரும் செய்யுளால் தெரிவிக்கின்றது.

"அறிவான் மிகுந்த சித்தர்குழாம் அலேகத்தெழுதி யவரவரே
நெறியாலுணர்ந்து களித்துலக முழுதுமுணர நிரப்பினர்கள்
பிறியாச் சிவபோகம் புசிக்கு மூலரின்றும் பிரானடியிற்
செறிவாமி யோகுற்றிருந்தனர் நீடூழி பலவும் சென்றனவால்"

"ஒன்றவன்" "நந்தியருள் பெற்ற" முதலிய முப்பது பாடல்களின் கருத்தமைதிகள் இப்புராணத்திற் கூறப்பட்டுள்ளன.

பெரிய புராண வரலாற்றுக் காதரவான அகச்சான்றுகள் :—
(1) திருமூலர் தாம் நந்தியருள் பெற்றவரென்று 67, 68, 73-ம் பாக்களிற் கூறுகிறார் (2) தாம் கயிலை வழிவந்ததாக 91-ம் பாட்டிலும் வான்வழியூடு வந்ததாக 83-ம் பாட்டிலும் கூறுகிறார். (3) தாம் திருவாவடுதுறையிலிருந்ததாக 78, 79-ம் பாக்களில் கூறுகிறார். (4) தாம் போதியின் கீழிருந்ததை 79, 82-ம் பாக்களிற் கூறுகிறார். இவற்றுள் 79-வது பாட்டு திருவாவடுதுறையின் போதியின் நீழலிலிருந்ததைத் தெளிவாகக் கூறுகிறது. 82-வது பாட்டில் நந்திநகர் புக்கு ஒன்பது கோடி யுகந்தனுள் போதியின் கீழிருந்தமை கூறப்பட்டது. (5) தம்மைத் தமிழ் செய்யுமாறு இறைவன் நன்றாகப் படைத்ததாக 81-ம் பாட்டிற் கூறுகிறார் (6) தாம் ஆகமம் கூறுவதாக 73, 74-ம் பாடல்களிற் கூறுகிறார் (7) இறைவன் திருக்கூத்தின் சீலாங்க வேதத்தைச் செப்புவதே தாம் வந்த காரணமென்று 77-ம் பாட்டிற் கூறுகிறார். (8) திருமூலர் கூறுவது மந்திரம், மந்திரமாலை

யென 85, 86-ம் பாடல்கள் குறிக்கின்றன. (9) திருமூலர் அருளிச் செய்த பாடல்கள் மூவாயிரம் என்று 99, 100, 101, 3046-ம் பாடல்கள் கூறுகின்றன. (10) திருமூலர் நெடுநாள் உயிரோடிருந்தமை 74, 80, 82-ம் பாடல்களாற்றுலங்கும். இம்மட்டில் பெரியபுராண வரலாற்றுக்கு ஆதரவுகளாகத் திருமந்திர அகச்சான்றுகள் கிடைக்கின்றன.

பெரிய புராணத்திற் காணுத வரலாற்றுக் குறிப்புகட்குத் திருமந்திர அகச்சான்றுகள் :—(1) நந்தியருள் பெற்றவர்கள் தம்மோடு எண்மர் இன்னாரின்னாரென்றும், அவர்கள் நாதர்கள் என்றும் திருமூலர் 67, 68-ம் பாக்களிற் கூறுகிறார் (2) மந்திரம் பெற்ற வழிமுறையில் மாலாங்கன் முதலிய எழுவர் தமது வழி (=சிஷ்யபாரம்பரை) யென்று 69-ம் பாட்டிற் கூறுகிறார். (3) திருமூலரை யுள்ளிட்ட எழுவர் ஏழு மடங்களைத் தாபித்தமை 101, 102 ம் பாடல்களிற் கூறப்பட்டுள்ளது. (4) ஏழுகோடி யுகம், ஒன்பது கோடி யுகம், எண்ணிலி கோடியெனப் பலபடத்தமது வாணாளைத் திருமூலர் 74, 82, 80-ம் பாடல்களிற் குறிக்கிறார். (5) மூவாயிரம் பாடல் கொண்ட திருமந்திரம் ஒன்பது தந்திரப் பகுப்புடையதாக 101-ம் பாடல் கூறுகின்றது (6) "பூர்வத்து மூவாயிரம் பொது" என்று 100-ம் பாட்டிலுள்ள குறிப்பிலிருந்து பிற்காலத்தில் மொத்த பாடற்றொகை மாறுபட்டதை நன்கு யறியலாம்.

திருமூலர் காலத்தைப்பற்றிய குறிப்புகள்:—(1) மன்றுதொழுத பதஞ்சலியும் தம்மோடு நந்தியருள் பெற்றவருள் ஒருவர் என்று 67-ம் பாட்டில் திருமூலர் கூறுகிறார். மகாபாஷ்யம் இயற்றிய பதஞ்சலி வேறு, யோக சூத்திரம் இயற்றிய பதஞ்சலி வேறு என சம்ஸ்கிருத நூல் வாலாற்றாசிரியர் டாக்டர் கீத(Dr. A. B. Keith) என்பவர் கருதுகிறார். முற்கூறிய பதஞ்சலியார் கி. மு. 150-ல் இருந்தவரென்றும் பிற்கூறியவர் கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்த மாகன் என்ற கவிக்கு முந்தியவரென்றும் அவ்வாசிரியர் கூறுகிறார். முற்கூறிய பதஞ்சலியே திருமூலருடன் நந்தியருள் பெற்ற நாதருள் ஒருவர் எனக் கொண்டாலும் திருமூலர் கி. மு. 150-ம் ஆண்டுக்கு முற்பட்டவரென்று கொள்ள இயலாது (2) ஆறு சமயங்கள் 1530, 1533, 1537, 1557, 1561-ம் பாக்களிற் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் முதன் மூன்று பாக்களிற் புறச்சமயங்களும் பின்

னிரண்டில் உட்சமயங்களும் கூறப்பட்டனவாக அதிகாரப் பகுப்பி லிருந்து அறியக்கிடக்கின்றது. எனவே திருமூலர் ஆறு சமயப்பகுப்பு ஏற்பட்ட பிறகு இருந்தனராதல் வேண்டும் (3) முத்தமிழ் வேதம் 76-ம் பாட்டிலும், தமிழ் சாத்திரம் பொங்கி மிகாமை 87-ம் பாட்டி லும், தமிழ் மண்டலமைந்து 1646-ம் பாட்டிலும் கூறப்பட்டுள்ளன. முத்தமிழ் வேதம் தேவாரத்தைக் குறிப்பதாயின் திருமூலர் தேவார காலத்துக்குப் பிந்தியவராதல் வேண்டும். ஆனுல் திருமூலர் சுந்தர மூர்த்தி சுவாமிகளால் திருத்தொண்டத் தொகையில் கூறப்படுகிறுர். முத்தமிழ் வேதம் வேறு தமிழ் வேதங்களென்று கொண்டால் திரு மூலர் அவ்வேதங்கட்குப் பிற்பட்டாராதல் வேண்டும். தமிழ் மண்டல மைந்து சேர, சோழ, பாண்டி, கொங்கு, தொண்டைமண்டலங்களைக் குறித்துளதாகக் கொள்ளின் இவ்வைந்தும் மண்டலங்களான பிறகு திருமூலர் உளராதல் வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்து ஆசிரி யன்மார் ஆராய்ச்சியில் கி. பி. மூன்றும் நூற்றுண்டுக்கு முன்னர் இம் மண்டலங்கள் ஐந்தும் சிறப்பாக விளங்கினவாகத் துலங்கவில்லை. திரு மூலர் காலம் தமிழ் சாத்திரம் பொங்கி மிகாதகாலம் என்பதும் நோக் கத்தக்கது (4) அகத்தியர் தென்னுடு போந்த வரலாறு 337, 338-ம் பாக்களிலும் சண்டீசர் வரலாறு 351-ம் பாட்டிலும் கூறப்பட்டுள்ளன. கண்ணப்பர் வரலாறும் வேறு நாயன்மார் வரலாறும் யாண்டும் கூறப் படவில்லை. (5) அட்டவீரட்டங்கள் 339—346-ம் பாக்களிற் கூறப் படுங்கால் காலனைக் காய்ந்ததும். காமனை யழித்ததும் கடவூரிலும் கொறுக்கையிலும் என்று தலங்களைக் குறித்தும் ஏனைய வீரட்டங்கள் தலங்கள் குறிக்கப் பெறுமலும் கூறப்பட்டுள்ளன, திருஞானசம்பந் தர் தேவாரத்தில் (கொறுக்கை, வழுவூர் நீங்கலாக) வீரட்டத் தலங் கள் ஆறு பாடல்பெற்றுள்ளன. வழுவூர் வீரட்டத்துக்குத் தேவாரப் பாடலே கிடையாது. கொறுக்கை வீரட்டத்துக்குச் சம்பந்தர் பாட லில்லை. சம்பந்தர் காலத்தைச் சேர்ந்த அப்பர் தேவாரத்தில் அடைவு திருத்தாண்டகத்து இரண்டாம் செய்யுளில் (“ காவிரியின் கரைக் கண்டி ”) அட்டவீரட்டத் தலங்களும் கூறப்பட்டுள்ளன. திருமூலர் காலத்தில் அட்டவீரட்டங்களுள் இரண்டுக்கு மட்டும் தலங்கள் குறிக் கப்பட்டும், தேவார காலத்தில் எட்டு வீரட்டங்கட்கும் தலங்கள் குறிக்கப்பட்டும் உள்ளன. இவ்வாறு கொள்ளின் திருமூலர்

சம்பந்தர் காலத்துக்கு (கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதிக்கு) முந்தியவர் என்பது பெறப்படும். திருமூலர் எட்டு வீரட்டங் கட்கும் திருமந்திரத்தில் தலங்குறிக்கவேண்டிய அவசியமில்லை யென்று கொள்ளின் இவ்வித ஆராய்ச்சிக்கு இடமில்லை. (6) திருத்தொண்டத் தொகையிலும், நம்பியாண்டார் நம்பிகள் திருத் தொண்டர் திருவந்தாதியிலும் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத் திலும் திருமூலரும் அவர் வரலாறும் கூறப்பெறுதலால் திருமூலர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முந்தியவரென்பதில் ஐயமில்லை. (7) திருமந்திரத்து 204-ம் செய்யுளின் இரண்டாம் அடி இந்நூலின் ௬௪-ம் பக்கத்திலுள்ள குறிப்பின்படி (கி. பி. ஒன்பதாம் நூற்றாண் டைச் சேர்ந்த) யாப்பருங்கல விருத்தியில் குறிக்கப்பட் டிருத்தலும் இம்முடிபை வலியுறுத்தும். (8) திருவாசகத்துக்கும் திருமந்திரத் துக்கும் பலவகையான சொல், சொற்றொடர், கருத்து ஒற்றுமைகள் காணப்படுதலால் இவ்விரண்டு நூல்கட்கும் ஒரு தொடர்பிருத்தல் வேண்டும். மாணிக்கவாசகர் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின ரென்ற மரபின்படி திருமூலர் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பட்டவ ராதல் வேண்டும். மாணிக்கவாசகரை கி. பி. ஒன்பதாம் நூற்றாண் டினராகக் கொள்வோர் திருமூலரை அவருக்கு முந்தியவராகக் கொள்ளவேண்டும். திருமந்திரத்து 2651-ம் செய்யுளிற் கூறப் படும் பெருந்துறை, திருப்பெருந்துறை, திருவாவடுதுறை, பொதுவாகக் கடவுள் அருட்டுறை என்பவற்றில் ஒன்றைக் குறிக்கவேண்டும். இச்சொல்லிலிருந்துமட்டும் திருமூலர் மாணிக்க வாசகருக்குப் பிற்பட்டவ ரென்று திடமாகக் கூறவியலாது. (9) திருஞானசம்பந்தர் திருவாவடுதுறைக்குச் சென்ற காலத்துப் பலிபீடத்தி னருகில் மணங் கமழ்ந்த தென்றும் அகழ்ந்து பார்த்தபோது திருமந்திரநூற் பிரதி கிடைத்த தென்றும் ஒரு வரலாறு கர்ண பரம்பரையாக வுள்ளதெனச் சில தேவாரப் பிரதி களிற் குறிக்கப்பட்டுளது. இவ்வரலாறு உண்மையாயின் திருமூலர் திருஞான சம்பந்தர் காலத்துக்கு (கி. பி. 600 - 650) முந்தியவ ராவார். ஆனால் இவ்வரலாறு பெரியபுராணத்திலாவது திருவாவடு துறைப் புராணத்திலாவது கூறப்படவில்லை. மேலும் திருமந்திரம் வெளிப்பட்ட முறை திருவாவடுதுறைப் புராணத்தில் மேலே கண்ட

படி வேறுவிதமாகக் கூறப்பட்டுளது. மேற்கூறிய பொருள்களையெல்லாம் ஒப்புநோக்கி முடிவு கூறின் பொதுவாகத் திருமூலர் காலம் கி. மு. 150-க்குப் பின் கி. பி. 900-க்கு முன் என்ற காலமாகும். பெரும்பாலும் கி. பி. மூன்றும் நூற்றாண்டுக்குப் பின்னும் கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னும் இருந்த காலவளவையா யிருத்தல் கூடும். திருமூலர் திருஞான சம்பந்தருக்கு மூந்தியவரென்றே உயர் திருவாளர்கள் - மறைமலை யடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளை, டாக்டர் - வை. வே. இரமண சாஸ்திரிகள் முதலியோர் கருதுகின்றனர்.

திருமந்திரம் தமிழ்முதல் நூலா, மொழிபெயர்ப்பா?:—டாக்டர்-வை. வே. இரமண சாஸ்திரிகள் திருமந்திரம் மொழிபெயர்ப்பென்றும் திருமூலர் கயிலையிலிருந்து "ஸ்ரீமந்த்ர மாலிகா" என்றொரு வடமொழி நூலைக் கொண்டுவந்து தமிழில் மொழிபெயர்த்தாரென்றும் கூறுகின்றார். பெரியபுராணத்திலும் திருவாவடுதுறைப் புராணத்திலும் இவ்வரலாறு கூறப்படவில்லை. மேலும் மொழிபெயர்ப்புக்கு மூவாயிரம் ஆண்டு தேவையில்லை, ஆண்டுக்கொரு பாடல் சொல்லவும் தேவையில்லை, வடமொழியில் இப்போது "ஸ்ரீமந்த்ர மாலிகா" என்றொரு நூல் இருப்பதாகவும் எப்போதாவது இருந்ததாகவும் தெரியவில்லை, எனவே திருமந்திரம் தமிழ்முதல் நூலே மொழிபெயர்ப்பல்லவென்று திடமாய்க் கூறலாம். வடமொழியிலுள்ள ஆகமப் பொருள்களைத் தமிழில் கூறுவதாகத திருமூலர் 81-ம் பாட்டில் சொல்வதிலிருந்து திருமந்திரம் மொழிபெயர்ப்பென்று ஏற்படாது. ஆகமப் பொருளை நன்றாக மனதிற் பதித்து தமது மொழியிலே திருமந்திரமாகச் செய்தார் என்பதே போதரும்.

திருமந்திரப் பாடற்றொகை:—திருமந்திரம் 99, 100, 101, 3046-ம் பாக்களிலிருந்தும் பெரியபுராணத்திலிருந்தும் திருமந்திர மாலை மூவாயிரம் பாடல்களையுடையதென அறிகிறோம். இப்போதுள்ளவை காப்புச் செய்யுளோடு சேர்ந்து 3048. வேறு நூல்களில் திருமந்திரச் செய்யுள்களென மேற்கோளாகக் காட்டப்பட்டு இப்போது கிடைக்கும் திருமந்திரப் பிரதிகளில் சேர்க்கப்படாதவை 11. இதுவரை அச்சில் வெளிவராமல் சில ஏட்டுப் பிரதிகளிலும் நமது பதிப்பிலும் வெளிவந்துள்ள பாடல்கள் 17. எனவே மூவாயிரத்துக்கு அதிகமாகவுள்ள இப்பாடல்களைப் பற்றி ஆராயவேண்டும். சேக்கிழார்

திருமூலரைப்பற்றிக் கூறுங்கால் ஆண்டுக் கொன்றாக மூவாயிரம் ஆண்டு இப்புவிமேலிருந்து மூவாயிரம் மந்திரம்செப்பிக் கயிலைநண்ணி ஒருகாலும் பிரியாமைத்தாளடைந்ததாகமட்டும் கூறுகின்றாரே தவிர, திருமூலர் தந்திரப் பகுப்பு, அதிகாரப் பகுப்பு முதலியன செய்த தாகக் கூறவில்லை. திருமூலரே அவற்றைச் செய்திருப்பின் சேக்கி ழார் கூறாமல் விடார். எனவே திருமூலர் சீடர்களும் அவர்கள் வழி முறை வந்தோரும் இப்பணியைச் செய்திருத்தல் வேண்டும். நமக்குக் கிடைத்த பிரதிகளிற்கூட தந்திரப் பகுப்பில்லை. அவ்வாறு பாகு பாடு செய்தவர்கள் சில பாடல்களை இரண்டு அதிகாரங்கட்குப் பொருத்தமென் றெண்ணி இரண்டதிகாரங்களில் வைத்திருத்தல் கூடும். நமது பதிப்பில் அவ்வவ் விடங்களிற் குறித்துள்ளபடி இப்போ துள்ளபிரதிகளில் பாடல்கள் அதிகாரங்களில் பலவகையானமாறுபட்ட முறையில் வைக்கப்பட்டுள்ளன. சில பாடல்கள் இருமுறை மும்முறை வருவதால் மூவாயிரத்துக்குமேல் மொத்த எண்ணிக்கையில் 58 அதிகம் ஏற்படுகிறது. இதில் முக்காற்பங்குக்குமேல் சொல் வேறுபாடின்றி பாடல்கள் அப்படியே மற்றொருமுறை இருமுறை வந்துள்ளன. காற் பங்கு பாடல்கள் இரண்டொரு சொல் வேறுபாட்டோடாவது அல்லது அடிகள் முன்பின்னாகவாவது வந்துள்ளன. சில பாடல்கள் திருமூலர் வாக்கல்லவென்று ஐயுறக் கூடிய நிலையிலுள்ளன. அத்தகையன 99, 100, 101, 102, 3046-ம் பாடல்களாகிய ஐந்து. இவைகள் திரு மூலரைப் படர்க்கையில் வைத்துக் கூறுதல் முதலிய பல காரணங் களால் திருமூலர் வாக்கல்லவென்று ஐயுறவேண்டிய நிலையிலிருக்கின் றன. திருமூலர் "ஒன்றவன்றானென வெடுத்தார்" என்று சேக்கி ழார் கூறுவதால் காப்புச் செய்யுளும், எல்லா அச்சுப்பிரதிகளிலும் முதற் செய்யுளாக வந்துள்ள "போற்றிசைத்தின்னுயிர்" என்ற 2-ம் செய்யுளும் திருமூலர் வாக்கல்லவென்று ஐயுறவேண்டி யிருக் கிறது. தந்திரப் பகுப்பு, அதிகாரப்பகுப்பு செய்தவர்கள் காப்புச் செய்யுளையும் சிவபெருமான் துதியொன்றையும் சேர்த்திருத்தல் கூடும். எனவே மேற்கூறிய ஐந்தும் இவ்விரண்டும் சேர்ந்து ஏழு பாடல்களும், அதிகமாக இருமுறை மும்முறை வந்துள்ள வகையில் 58 பாடல்களும் ஆகமொத்தம் அறுபத்தைந்து பாடல்கள் அதிக மாக வந்துள்ளனவென்று ஊகிக்கலாம். இவைகளைக் கழித்தால்

மொத்த தொகை மூவாயிரத்துக்கும் குறைகிறது. நமது பதிப்பில் புதியனவாக வந்துள்ள பாடல்களிற் சிலவும், வேறு நூல்களில் மேற்கோள்களாகக் காட்டப்பட்ட சிலவும் சேர்ந்தால் மொத்த தொகை 3000 ஆகும். இவ்விரண்டு கூறினுள் எவ்வெப்பாடல்கள் திருமூலர் வாக்கென்று உறுதியாகக் கூறவியலாது. எனவே திருமந்திரத்தில் அதிகமாக இடைச் செருகல்கள் உள்ளனவென்று கருதவேண்டிய தில்லை. டாக்டர் வை. வே. இரமணசாஸ்திரிகள் காப்புச் செய்யுள், 2, 59 - 102, 3046, 3047 ஆகிய 48 பாடல்கள் திருமூலர் வாக்கல்ல வென்று ஒதுக்குகிறார்கள். இவ்வளவு அதிகமாக ஒதுக்கவேண்டி யது அவசியமில்லை யென்று மேற் கூறியவாற்றால் விளங்கும். இரு முறை மும்முறை வந்துள்ள பாடல்களின் எண் அட்டவணையும், பிரதிகளிலில்லாத பாடல்களின் எண் அட்டவணையும், நமது பதிப் பில் புதியனவாக வந்துள்ள பாடல்களின் அட்டவணையும், கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை ஒப்பிட்டால் மேற்கூறிய கணக் கின் விவரம் நன்கு புலப்படும்.

மூவாயிரந் தமிழ், மூந்நூறு மந்திரம், முப்பதுபதேசம்:—இவ்வாறு 3046-ம் செய்யுள் கூறுகின்றது. இச்செய்யுளைத் திருமூலர் வாக் கென்று கொண்டு திரு. விசுவநாத பிள்ளையவர்கள் பதிப்பில் நான் காந் தந்திரத்தில் திருவம்பலச்சக்கரம் 89, வயிரவி மந்திரம் 50, ஏரொளிச்சக்கரம் 36, வயிரவச்சக்கரம் 6, சாம்பவி மண்டலசக்கரம் 10. புவநாபதிச்சக்கரம், 12, நவாக்கரிசக்கரம் 100 ஆ 303 பாடல் கள்தான் மூந்நூறுமந்திரம் என்றும், முதல் தந்திரத்தில் உபதேசம் என்ற அதிகாரத்தில் கூறப்பட்ட 30 பாடல்கள்தான் 30 உபதேசம் என்றும் வெளியிடப்பட்டுள்ளன. இம்முடிபுகட்குப் போதிய ஆதா ரங்களில்லை. சிலர் திருமூலர் மூவாயிரம் திருமந்திரம் இயற்றியது போல் மூந்நூறு மந்திரங்களும் முப்பது உபதேசங்களும் அடங்கிய வேறு நூல்களையும் இயற்றினார் என்று கூறுகின்றனர். இதற்கும் ஆதாரமில்லை, அத்தகைய வேறு நூல்களும் கிடைக்கவில்லை, சேக்கி ழாரும் திருமூலர் வேறு நூல்களியற்றியதாகக் கூறவில்லை. திருமூலர் பெயரால் வழங்கும் சில வைத்திய நூல்களை அவர் இயற்றினாரென் பதற்குப் போதிய சான்றுகளில்லை. பொதுவாக நோக்குமிடத்து மூவாயிரம் திருமந்திரப் பாடல்களுள் மிக முக்கியமானவை மூந்நூறு

என்றும் அவற்றுள் மூப்பது செம்பொருள்கள் கூறப்பட்டுள்ளன வென்றும் கூறலாமே யொழிய வேறெதுவும் துணிந்து கூறவியலாது. இந்நூலில் நாலாந்தந்திரத்திற் பல பொருள்கள் மிக முக்கியமாகவும் பெரும்பகுதி அந்தாதித் தொடையிலும் கூறப்பட்டுள்ளபடியால் அப்பொருள்கள் மறவாது நினைவு கூர்ந்து நாடோறும் ஓதற்குரிய தன்மையில் வைக்கப்பட்டுள்ளன வென்று ஒருவாறு ஊகிக்கலாம்.

திருமந்திரத்திற் கூறப்படும் பொருள் :—இது,

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் **திருமூலர் சொல்லும்**
ஒருவாசகம் என்றுணர்"

என்ற செய்யுளால் விளங்கும். சைவசித்தாந்தச் செம்பொருள்களை யும் யோகப் பயிற்சி நுட்பங்களையும் இந்நூல் கூறுகின்றதெனப் பொதுவாகக் கூறலாம்.

தந்திரம், பாடல், அதிகாரம் இவற்றின் தொகை :—

	பாடல் தொகை	அதிகாரத் தொகை
பாயிரம்	112	9
முதல் தந்திரம்	224	24
இரண்டாம் ,,	212	25
மூன்றாம் ,,	335	21
நான்காம் ,,	535	13
ஐந்தாம் ,,	154	23
ஆறாம் ,,	131	14
ஏழாம் ,,	418	38
எட்டாம் ,,	527	43
ஒன்பதாம் ,,	399	22
ஆக	3047	232

ஒரே பாட்டு இருமுறை அல்லது மும்முறை வந்துள்ளதைக் காட்டும் அட்டவணை :—

முதற் குறிப்பு		முதன்முறை பாட்டின் எண்	மறுமுறை பாட்டின் எண்
தானே இருநில	...	10	1165
எழுந்துநீர்	...	72	553
சிவமுதல்	...	106	990
ஓலக்கஞ் சூழ்ந்த	...	108	540
ஒன்றிய ஈரெண்	...	185	863
ஒன்று மிரண்டு	...	236	2536
இராப்பகல்	...	331	1856
உண்ணீர் அமுதம்	...	336	882
நின்றது தானாய்	...	403	438
தேடுந்திசை	...	406	414
தானே திசை	...	412	2967
மண்ணொன்று	...	440	2351
அகன்றனகலிட	...	448	3011
போகின்ற வெட்டு	...	457	2926
***ஏனோர் பெருமை**	...	490, 2012	3024
சத்தி சிவன்விளை	...	492	1771
ஆவனவாவ	...	504	2175
குறிப்பினினுள்	...	587	1794
அறிவாயசத	...	617	2471
அண்ணலிருப்பிடம்	...	766	2660
போற்றுகின்றேன்	...	884	2988
விந்துவு நாதமும்	...	961	1971
ஐம்பதெழுத்தே	...	965	2698
இயைந்தனள்	...	972	1115
ஆமத்தினிதிருந்	...	973	1213
அகாரமுயிரே	...	975	2503
இரவும் பகலும்	...	1134	1528
உணர்வதெழு மந்திரம்	...	1222	1306
காணுறு கோடி	...	1452	1848
ஊழிதோறூழி	...	1458	1846
உய்ந்தன மென்பீர்	...	1460	2622

முதற் குறிப்பு		முதன்முறை பாட்டின் எண்	மறுமுறை பாட்டின் எண்
சைவப் பெருமை	...	1478	1567
ஆதார சோதனை	...	1492	1707
பின்னெய்த	...	1586	1629
தரிக்கின்ற	...	1589	1782
அவ்வுலகத்தே	...	1652	1869
ஆயுமலரின்	...	1711	2359
உணர்வுடையார்	...	1786	2938
ஏறுடையாயிறை	...	1862	2111
கொல்லையின்	...	2016	2903
காயக்குழப்பனை	...	2071	2550
கூடகில்லார்	...	2093	2559
அறிவறிவென்றங்	...	2362	2637
*தோம்பதந்தம்	...	2441, 2473	2826
அத்தத்தாளாகி	...	2452	2582
ஆகியவச்சோ	...	2493	2570
துரியமடங்கிய	...	2498	2572
ஆறேயருவி	...	2530	2979
தலைகின்றதாழ்	...	2597	2845
உணர்வு மவனே	...	2857	3035

இந்நூலின் ௪௮௯, ௫௨௪-ம் பக்கங்களின் அடிக் குறிப்புக்களி லும், ௫௨௯, ௫௩௧-ம் பக்கங்களிலும் உள்ள சில பாடல்கட்கும் மூலத்திலுள்ள சில பாடல்கட்குமுள்ள ஒற்றுமை கீழ் வருமாறு :—

முதல்முறை பாட்டெண்	மறுமுறை வந்தவிடம்
64	அண்ணன் மூதலா (பக் - ௫௨௯)
412	தானே கடல்மலை (பக் - ௫௩௧)
1513	சாயுச்சியம் (பக் - ௫௨௪ குறிப்பு)
2318	முன்னைப் பிறவியின் (பக் - ௫௩௧)
2423	பாசம் பயிலுயிர் (பக் - ௫௨௪ குறிப்பு)
2775	ஆகாசமாலை (பக் - ௪௮௯ குறிப்பு)

சிலபிரதிகளிலில்லாத பாடல்களின் அட்டவணை:—இப்பதிப்பில் நான்கு ஏட்டுப் பிரதிகளிலில்லையென்று குறிக்கப்பட்ட பாடல் :—965.

மூன்று பிரதிகளிலில்லையெனக் குறிக்கப்பட்ட பாடல்கள்:—473, 1485, 1632, 1702, 1703, 2012, 2363, 2637.

இரண்டு பிரதிகளிலில்லையெனக் குறிக்கப்பட்டவை :—304, 1508, 1513, 1848, 3046, 3047,

ஒரு பிரதியிலில்லையெனக் குறிக்கப்பட்டவை :—6, 72, 78, 88, 113—142, 185, 227, 266, 309, 403, 404, 406, 408, 414, 498, 499, 552, 668, 723, 736, 760, 922, 958, 1092, 1197, 1272, 1278, 1367, 1450, 1477, 1478, 1492, 1501, 1529, 1547, 1549, 1551, 1610, 1626, 1665, 1667, 1683, 1801, 1843, 1845, 1866, 1901, 1916, 1957, 2041, 2068, 2079, 2150, 2152, 2184, 2355, 2375, 2621, 2759, 2764, 2781, 2782, 2967, 2981.

சில ஏட்டுப் பிரதிகளில் அதிகமாகவும் இப்பதிப்பின் அடிக்குறிப்புக்களிலும் உள்ள பாடல்கள் :—

	பக்கம்		பக்கம்		பச்கம்
அத்தாளத்	471	சாயுச்சிய	524	பள்ளமுதி	470
ஆகஞ்	,,	சித்தஞ்	497, 524	பாசமதாகு	,,
ஆகாசமாலை	486	திருமந்திரமே	471	பாசம்பயி	524
ஆணவ	497, 524	திருமேனி	471	மனவுநன	470
உண்ணலுற	488	நெற்றி	497, 524	மேலைத்திரு	472
ஓடும்இரு	,,	பத்திவிலை	486		

அந்தாதித் தொடையில் வந்துள்ள பாடல்களின் அட்டவணை:- 113—142, 381—387, 475—480, 481—486, 674—703, 712—714, 715—719, 740—788, 803—824, 825—844, 884—913, 919—929, 936—948, 1015—1044, 1045—1074, 1075—1124,

1125—1154, 1155—1290, 1291—1296, 1297—1306, 1308—1318, 1319—1418, 1803—1806, 1809—1813, 1814—1817, 1925—1936, 1937—1945, 1948—1952, 1953—1968, 2373—2381, 2382—2386, 2388—2391, 2393—2396, 2419—2423, 2467—2469, ஆக 590 பாடல்கள்.

இப்பதிப்புப் பாடலெண்களையும் திரு. மா. வே. விசுவநாத பிள்ளையவர்கள் பதிப்புப் பாடலெண்களையும் காட்டும் அட்டவணை :—

சமாஜப் பதிப்பு	விசுவநாதபிள்ளை பதிப்பு
காப்பு	காப்பு
1	2
2	1
3—50	3—50
51—94	61—104
95—98	109—112
99, 100	107, 108
101, 102	105, 106
103—112	51—60
113—3047	113—3047

உ

சிவமயம்

உள்ளுறை

	பக்கம்
பதிப்புரை	iii
திருமூலர் வரலாறு	vi
விநாயகர் காப்பு	க
பாயிரம்	க
கடவுள் வாழ்த்து	க
வேதச் சிறப்பு	கூ
ஆகமச் சிறப்பு	க0
குருபாரம்பரியம்	கஉ
திருமூலர் வரலாறு	கங
அவையடக்கம்	கசு
திருமந்திரத் தொகைச் சிறப்பு	கஎ
குருமட வரலாறு	கஎ
திருமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறைமை	கஅ
முதற்றந்திரம்	உ0
உபதேசம்	உக
யாக்கை நிலையாமை	உச
செல்வம் நிலையாமை	உஅ
இளமை நிலையாமை	ங0
உயிர் நிலையாமை	ஙக
கொல்லாமை	ஙங
புலால் மறுத்தல்	ஙங
பிறன்மனை நயவாமை	ஙச
மகளிர் இழிவு	ஙச
நல்குரவு	ஙரு
அக்கினிகாரியம்	ஙசு
அந்தணரொழுக்கம்	ஙஅ
இராசதோடம்	ச0
வானச்சிறப்பு	சஉ
தானச்சிறப்பு	சஉ
அறஞ்செய்வான் திறம்	சங
அறஞ்செயான் திறம்	சச
அன்புடைமை	சசு
அன்பு செய்வாரை அறிவன் சிவன்	சஎ
கல்வி	சகூ
கேள்விகேட்டமைதல்	ரு0
கல்லாமை	ருஉ
நடுவுநிலைமை	ருச
கள்ளுண்ணாமை	ருச
இரண்டாந் தந்திரம்	ருஎ
அகத்தியம்	ருஎ
பதிவலியில்வீரட்டம்எட்டு	ருஎ
இலிங்கபுராணம்	ருஅ
தக்கன்வேள்வி	ருகூ
பிரளயம்	சுக
சக்கரப்பேறு	சுஉ
எலும்பும் கபாலமும்	சுஉ
அடிமுடிதேடல்	சுங
சர்வசிருஷ்டி	சுச
திதி	சுசு
சங்காரம்	எக
திரோபவம்	எங
அநுக்கிரகம்	எச
கர்ப்பக்கிரியை	எசு
மூவகைச்சீவவர்க்கம்	அங
பாத்திரம்	அச

	பக்கம்
அபாத்திரம்	அரு
தீர்த்தம்	அசு
திருக்கோயிலிழிவு	அஎ
அதோமுகதெரிசனம்	அஅ
சிவநிந்தை	அகூ
குருநிந்தை	கூO
மயேசுரநிந்தை	கூக
பொறையுடைமை	கூக
பெரியோரைத் துணைக்கோடல்	கூஉ
மூன்றாந்தந்திரம்	கூச
அட்டாங்கயோகம்	கூச
இயமம்	கூரு
நியமம்	கூரு
ஆதனம்	கூசு
பிராணாயாமம்	கூஎ
பிரத்தியாகாரம்	கூகூ
தாரணை	கOக
தியானம்	கOங
சமாதி	கOசு
அட்டாங்கயோகப்பேறு	கOஅ
அட்டமாசித்தி	ககO
கலைநிலை	கஉஉ
சரீரசித்தியுபாயம்	கஉச
காலசக்கரம்	கஉசு
ஆயுள்பரிட்சை	கஙக
வாரசரம்	கஙரு
வாரசூலம்	கஙகூ
கேசரியோகம்	கஙகூ
பரியங்கயோகம்	கசO
அமுரிதாரணை	கசச
சந்திரயோகம்	கசரு
நாலாந்தந்திரம்	கருக
அசபை	கருக
திருவம்பலச்சக்கரம்	கருரு

	பக்கம்
அருச்சனை	களO
நவகுண்டம்	களஉ
சத்திபேதம் - திரிபுரைச் சக்கரம்	களஎ
வயிரவிமந்திரம்	கஅக
பூரணசத்தி	கஅகூ
ஆதாரவாதேயம்	ககூச
ஏரொளிச்சக்கரம்	உகO
வயிரவச்சக்கரம்	உகசு
சாம்பவிமண்டலச்சக்கரம்	உகஎ
புவனாபதிசக்கரம்	உககூ
நவாக்கரிசக்கரம்	உஉக
ஐந்தாந்தந்திரம்	உஙஅ
சுத்த சைவம்	உஙஅ
அசுத்த சைவம்	உஙஅ
மார்க்க சைவம்	உஙகூ
கடுஞ்சுத்த சைவம்	உசக
சரியை	உசஉ
கிரியை	உசங
யோகம்	உசச
ஞானம்	உசசு
சன்மார்க்கம்	உசஅ
சகமார்க்கம்	உருO
சற்புத்திரமார்க்கம்	உருக
தாசமார்க்கம்	உருஉ
சாலோகம்	உருங
சாமீபம்	உருச
சாரூபம்	உருச
சாயுச்சியம்	உருச
சத்திநிபாதம்-மந்தம்	உருரு
மந்ததரம்	உருரு
தீவிரம்	உருசு
தீவிரதரம்	உருஎ
புறச்சமயதூஷணம்	உருஅ
நிராகாரம்	உசுக
உட்சமயம்	உசுஉ

	பக்கம்
ஆறந்தந்திரம்	௨௬௬
சிவகுருதரிசனம்	௨௬௬
திருவடிப்பேறு	௨௬௯
ஞாதுருஞானஞேயம்	௨௭௧
துறவு	௨௭௩
தவம்	௨௭௪
தவதூடணம்	௨௭௬
அருளுடைமையின் ஞானம் வருதல்	௨௭௮
அவவேடம்	௨௮௦
தவவேடம்	௨௮௧
திருநீறு	௨௮௧
ஞானவேடம்	௨௮௨
சிவவேடம்	௨௮௪
அபக்குவன்	௨௮௪
பக்குவன்	௨௮௬
ஏழாந்தந்திரம்	௨௮௯
ஆறுதாரம்	௨௮௯
அண்டலிங்கம்	௨௯௦
பிண்டலிங்கம்	௨௯௨
சதாசிவலிங்கம்	௨௯௩
ஆத்துமலிங்கம்	௨௯௭
ஞானலிங்கம்	௨௯௮
சிவலிங்கம்	௩௦௦
சம்பிரதாயம்	௩௦௧
திருவருள் வைப்பு	௩௦௩
அருளொளி	௩௦௭
சிவபூசை	௩௦௯
குருபூசை	௩௧௩
மகேசுவரபூசை	௩௧௫
அடியார் பெருமை	௩௧௭
போசனவிதி	௩௧௯
பிடாவிதி	௩௨௦
முத்திரைபேதம்	௩௨௧
பூரணக்குகைநெறிச்சமாதி	௩௨௩
சமாதிக்கிரியை	௩௨௪
விந்துற்பனம்	௩௨௭
விந்துஜயம் - போகசரவோட்டம்	௩௨௯
ஆதித்தநிலை - அண்டாதித்தன்	௩௩௬
பிண்டாதித்தன்	௩௩௮
மனவாதித்தன்	௩௩௮
ஞாநாதித்தன்	௩௩௯
சிவாதித்தன்	௩௪௧
பசுவிலக்கணம் - பிராணன்	௩௪௧
புருடன்	௩௪௨
சீவன்	௩௪௩
பசு	௩௪௩
போதன்	௩௪௪
ஐந்திந்திரிய மடக்கு மருமை	௩௪௫
ஐந்திந்திரிய அடக்கு முறைமை	௩௪௬
அசற்குருநெறி	௩௪௯
சற்குருநெறி	௩௫௦
கூடாவொழுக்கம்	௩௫௩
கேடுகெண்டிரங்கல்	௩௫௬
இதோபதேசம்	௩௫௯
எட்டாந்தந்திரம்	௩௬௩
உடலிற் பஞ்சபேதம்	௩௬௩
உடல்விடல்	௩௬௬
அவத்தைபேதம் - கீழாலவத்தை	௩௬௬
மத்திய சாக்கிராவத்தை	௩௭௧
அத்துவாக்கள்	௩௭௪
சுத்தநனவாதிபருவம்	௩௭௫
கேவலசகலசுத்தம்	௩௮௧
பராவத்தை	௩௮௯
முக்குணநிர்க்குணம்	௩௯௪
அண்டாதிபேதம்	௩௯௪

	பக்கம்
பதினொராந் தானமும் அவத்தையெனக்காணல்	௩௯௪
கலவுசெலவு	௩௯௫
நின்மலாவத்தை	௩௯௯
அறிவுதயம்	௪௦௪
ஆறந்தம்	௪௦௭
பதிபசுபாசம் வேறின்மை	௪௧௩
அடித்தலையறியும் திறங் கூறல்	௪௧௭
முக்குற்றம்	௪௧௮
முப்பதம்	௪௧௯
முப்பரம்	௪௨௦
பரலட்சணம்	௪௨௧
முத்துரியம்	௪௨௪
மும்முத்தி	௪௨௫
முச்சொரூபம்	௪௨௬
முக்காரணம்	௪௨௭
முச்சூனிய தொந்தத்தசி	௪௨௮
முப்பாழ்	௪௨௯
காரியகாரணவுபாதி	௪௩௦
உபசாந்தம்	௪௩௧
புறங்கூறாமை	௪௩௨
அஷ்டதளகமல முக்குண அவத்தை	௪௩௫
நவாவத்தை நவாபிமானி	௪௩௭
சுத்தாசுத்தம்	௪௩௮
மோக்ஷநிந்தை	௪௪௦
இலக்கணாத்திரயம்	௪௪௨
தத்துவமசி வாக்கியம்	௪௪௨
விசுவக்கிராசம்	௪௪௬
வாய்மை	௪௪௭
ஞானிசெயல்	௪௫௦

	பக்கம்
அவாவறுத்தல்	௪௫௦
பத்தியுடைமை	௪௫௨
முத்தியுடைமை	௪௫௪
சோதனை	௪௫௪
ஒன்பதாந்தந்திரம்	௪௫௭
குருமட தரிசனம்	௪௫௭
ஞானகுரு தரிசனம்	௪௫௮
பிரணவசமாதி	௪௬௨
ஒளி	௪௬௩
தூலபஞ்சாக்கரம்	௪௬௬
சூக்குமபஞ்சாக்கரம்	௪௬௮
அதிசூக்குமபஞ்சாக்கரம்	௪௬௯
திருக்கூத்துத் தரிசனம்	௪௭௧
ஆகாசப்பேறு	௪௮௬
ஞானோதயம்	௪௮௮
சத்தியஞானானந்தம்	௪௯௦
சொரூப உதயம்	௪௯௨
ஊழ்	௪௯[illegible]
சிவதரிசனம்	௪௯௫
சிவசொரூபதரிசனம்	௪௯௫
முத்திபேதம், கருமநிருவாணம்	௪௯௭
சூனிய சம்பாஷணை	௪௯௮
மோனசமாதி	௫௦௯
வரையுரைமாட்சி	௫௧௨
அணைந்தோர்தன்மை	௫௧௩
தோத்திரம்	௫௧௭
சர்வவியாபி	௪௭௨
பிறநூல்களில் திருமந்திரச் செய்யுள்கள்	௫௨௯
அரும்பதஉரையகராதி	௫௩௨
பாட்டு முதற்குறிப்பகராதி	௫௩௭

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருமந்திரம்

விநாயகர் காப்பு

[1]ஐந்து [2]கரத்தனை யானை முகத்தனை
[3]இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் [4]கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

க. கடவுள் வாழ்த்து

1 *ஒன்றவன் [5]தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்[6]ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் [7]ஏழும்பர்ச்
[8]சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே. க

2 [9]போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனுங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே.

3 [10]ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
[11]நக்கனென் றேத்திடு நாதனை நாள்தொறும்

---

* சில பிரதிகளில் இதுவே முதற் செய்யுளாகக் காணப்படுகின்றது. இதற்கேற்பப் பெரியபுராணத்தும் 'திருமந்திரமாலை...ஒன்றவன்றா னெனவெடுத்து' (திருமூல நாயனார் புராணம், 26) என்று வந்துள்ளது. வேறு சில பிரதிகளில், இதுவும் அடுத்த செய்யுளும் முறை மாறிக் காணப்படுகின்றன.

பா - ம்—1அந்தி நிறத்தனை. 2முகத்தனை. 3இந்துவிளம்பிறை. 4கொழுந்தனை. 5தாளே. 6ஐந்தும். 7எழுபார். 8சென்றவன். 9போற்றிசைத் தென்னுயிர். 10ஒக்கநன். 11நக்குநின்

[1]பக்கநின் றார்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே. ௩

4 அகலிடத் [2]தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் [3]தென்றனைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
[4]இகலிடத் தேஇருள் நீங்கிநின் [5]றேனே. ௪

5 சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
[6]தவனச் சடைமுடித் தாமரை யானே. ௫

6 *அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் [7]ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே. ௬

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்
[8]தன்னையப் பாஎனில் [9]அப்பனு மாய்உளன்
பொன்னையொப் [10]பாகின்ற போதகத் தானே. ௭

8 தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
[11]சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் [12]நல்லன் தாழ்சடை யோனே. ௮

9 பொன்னாற் புரிந்திட் [13]டபொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி

* இச் செய்யுள் ஒரு பிரதியில் இல்லை.

பா - ம்—1பக்க நின்றறி. 2தெம்மெய்யை. 3தெம்மெய்யைப்; தேமெய்யை; தெம்மையே. 4அகலிடத். 5றானே. 6தவளச். 7ஆவதுமில்லை. 8அன்னையப் பாவென்னில்; தன்னையொப் பாமென்னில். 9அத்தனு. 10பாகின்ற; பாகிய. 11சேயனு மல்லன் அணியன். 12நல்லநல். 13டதுபோற் புரிசடை.

என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே. ௯

10 தானே இருநிலந் [1]தாங்கிவிண் ணாய்நிற்குந்
தானே சுடும்அங்கி ஞாயிறுந் திங்களுந்
தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்
தானே [2]தடவரை தண்கட லாமே. ௧௦

11 *அயலும் புடையும்எம் ஆதியை [3]நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை
[4]முயலும் முயலில் முடிவுமற் றாங்கே
பெயலும் மழைமுகிற் பேர்நந்தி தானே. ௧௧

12 கண்ணுத லான்ஒரு [5]காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்
மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ணல் இவன்என் றறியகி லார்களே. ௧௨

13 மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்ன நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தான்தன்னை மேல்அளந் தாரில்லை
கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே. ௧௩

14 கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணன்எம் மாயன்
கடந்துநின் றான்அவர்க் கப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்குங் கண்டுநின் றானே. ௧௪

15 ஆதியு மாய்அர [6]னாய்உட லுள்நின்ற
வேதியு [7]மாய்விரிந் தார்ந்திருந் தான்அருட்

---

* இச்செய்யுளிலிருந்து 30-வது செய்யுள் வரையுள்ள செய்யுட்கள் ஒரு பிரதியில் 26, 27, 28, 29, 30, 21, 22, 23, 24, 25, 16, 17, 18, 19, 20, 11, 12, 13, 14, 15 என்ற எண்களுடையனவாய்க் காணப்படுகின்றன.

பா - ம்—1 தாங்கினனாய். 2 வடவரை. 3 நோக்கி. 4 முயலில் முயலு. 5 காதலன். 6 னையும்உட. 7 மாயிருந் தான்றிருந்தா ருடன்.

சோதியு [1]மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே. ௧௫

16 கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரருந் தேவருங்
கோது குலாவிக் குணம்பயில் வாரே. ௧௬

17 காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினு
மாயங் கத்தூரி யதுமிகும் அவ்வழி
[2]தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினும்
ஈசன் உறவுக் கெதிரில்லை தானே. ௧௭

18 [3]அதிபதி செய்து அளகை [4]வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவ நோக்கி
அதுபதி [5]யாதரித் தாக்கம தாக்கின்
இதுபதி கொள்ளென்ற [6]எம்பெரு மானே. ௧௮

19 இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறி வாளன்
[7]விதுபதி செய்தவன் [8]மெய்த்தவம் நோக்கி
[9]அதுபதி யாக அமருகின் றானே. ௧௯

20 முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் [10]உறையும் [11]அறனெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவங்
கடிமலர்க் குன்ற மலையது தானே. ௨0

21 வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தஎங்
கோனைப் புகழுமின் கூடலு மாமே. ௨௧

பா - ம்—1மாஞ்சுருங் காத்தெறற் றன்மையுள். 2தேயங். 3அதுபதி. 4வேந்தரை; நகரை. 5யாதரி வாகம தாகி. 6எந்தைபிரானே. 7விதிபதி. 8வித்தவ. 9அதிபதி. 10உறையு மாறின்றி. 11அரனெறி.

22 மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
நினைத்த தறிவ [1]னெனில்தான் நினைக்கிலர்
[2]எனக்கிறை அன்பிலன் என்பர் [3]இறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே. ௨௨

23 வல்லவன் வன்னிக் [4]கிறையிடை வாரணை
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே. ௨௩

24 போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி [5]தன்னடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக் [6]கேசெல்வ
மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் [7]றார்வழி மன்னிநின் றானே. ௨௪

25 பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி [8]மாயா விருத்தமும் ஆமே. ௨௫

26 தொடர்ந்துநின் றானைத் தொழுமின தொழுதால
படர்ந்துநின் றான்பரி பாரக முற்றுங்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
உடந்திருந் தானடிப் புண்ணிய [9]மாமே ௨௬

27 சந்தி எனத்தக்க தாமரை வாண்முகத்
தந்தமில் ஈசன் அருள்நமக் கேயென்று
நந்தியை நாளும் வணங்கப் படும்அவர்
புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே. ௨௭

28 இணங்கிநின் றான்எங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானும்

பா - ம்—1னேநீதான் நினைகிலாய். 2எனக்கின்றை. 3இறைய வன். 4கிடையிறை; கிறையிட. 5தன்தனைத். 6கேசெல. 7றார்மன. 8மாய விருகமும். 9னாமே.

உணங்கிநின் [1]றான் அம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே. ௨௮

29 காணநில் லாயடி யேற்குற [2]வாருளர்
நாணநில் லேன்உன்னை நான்தழு விக்கொளக்
கோணநில் லாத குணத்தடி யார்மனத்
தாணிய னாகி அமர்ந்துநின் றானே. ௨௯

30 வானின் [3]றழைக்கும் மழைபோல் இறைவனுந்
தானின் [4]றழைக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின் றழைக்கு மதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது [5]ஞானங் கருதியே. ௩௦

31 மண்ணகத் தான்ஒக்கும் வானகத்தான் ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் [6]வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே. ௩௧

32 தேவர் [7]பிரான்நம் பிரான்திசை பத்தையு
மேவு பிரான்விரி நீருல கேழையுந்
தாவு பிரான்தன்மை தானறி வாரில்லை
பாவு பிரான்[8]அருட் பாடலு மாமே. ௩௨

33 பதிபல வாயது பண்டிவ் வுலகம்
விதிபல செய்தொன்று மெய்ம்மை உணரார்
துதிபல தோத்திரஞ் சொல்லவல் லாரும்
[9]மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே. ௩௩

34 சாந்து கமழுங் [10]கவரியின் கந்தம்போல்
வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் [11]புகழுகின் றேனே. ௩௪

பா - ம்—1றாரு மார்பதி. 2வாருள்ள. 3றிழைக்கு. 4றிழைக்குங்கொல். 5ஞாலங்கரியே. 6வேதத்தினன். 7பிரானப். 8அருள்; அடிப். 9மதிபல. 10கவுரி. 11புகழவென்றானே.

35 ஆற்றுகி லாவழி [1]யாகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் குங்கிழக் [2]குத்திசை எட்டொடு
[3]மாற்றுவன் அப்படி [4]யாட்டவு மாமே. ௩௫

36 அப்பனை நந்தியை ஆரா [5]அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே. ௩௬

37 நானும்நின் றேத்துவன் நாள்தொறும் நந்தியைத்
தானும்நின் றான்தழல் [6]தாஞொக்கு மேனியன்
வானில்நின் றார்மதி போல்உடல் [7]உள்ளுவந்
தூனில்நின் றாங்கே உயிர்க்கின்ற வாறே. ௩௭

38 பிதற்றொழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்றொழி யேன்பிற வாஉரு வானைப்
பிதற்றொழி யேன்எங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்றொழி யேன்பெரு [8]மைத்தவன் நானே. ௩௮

39 வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தஞ் [9]செய் தீசன் அருள்பெற லாமே. ௩௯

40 குறைந்தடைந் தீசன் குரைகழல் நாடும்
நிறைந்தடை செம்பொனின் நேரொளி ஒக்கும்
[10]மறைஞ்சடஞ் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறஞ்சடஞ் [11]செய்வான் புகுந்துநின் றானே. ௪0

41 சினஞ்செய்த நஞ்சுண்ட [12]தேவர் பிரானைப்
புனஞ்செய்த நெஞ்சிடை போற்றவல் [13]லார்க்குக்

பா - ம்—1நீரும்; யாரும். 2குந்திசை யெட்டுக்கு. 3மாற்று மவன்படி; மாற்றுவனப்படி. 4மாட்டமு. 5அமுதனை. 6போலொக்கு. 7உள்ளதி லூனில். 8மைத்தவந் தானே. 9செயவீசன். 10மறஞ் சடஞ். 11செய்யான். 12செஞ்சடையானைப். 13லார்க்குற்பனஞ்; லார்க்குப்பனஞ்.

கனஞ்செய்த வாள்நுதல் பாகனும் அங்கே
(இனஞ்செய்த மான்போல்)இணங்கிநின் றானே. சக

42 போயரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயக னன்முடி செய்தது வேநல்கு
மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராகிலும்
வேயன தோளிக்கு [1]வேந்தொன் றுந் தானே. சஉ

43 அரனடி சொல்லி அரற்றி அழுது
பரனடி நாடியே [2]பாவிப்ப நாளும்
உரனடி செய்தங் கொதுங்கவல் லார்க்கு
நிரனடி செய்து நிறைந்துநின் றானே. சங

44 போற்றிஎன் பார்அம [3]ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் [4]பொலியவைத் தேனே. சச

45 விதிவழி அல்லதிவ் வேலை உலகம்
விதிவழி இன்பம் விருத்தமும் இல்லை
துதிவழி [5]நித்தலுஞ் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவ னாமே. சரு

46 அந்திவண் ணாஅர னேசிவ னேஎன்று
சிந்தைசெய் வண்ணந் திருந்தடி யார்தொழ
முந்திவண் ணாமுதல் வாபர னேஎன்று
[6]புந்தி வண்ணன்எம் [7]மனம்புகுந் தானே. சசா

47 [8]மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
[9]பனையுள் இருந்த பருந்தது போல
நினையாத வர்க்கில்லை [10]நின்இன்பந் தானே. சஎ

பா - ம்—1வேந்தொன்று. 2பாவிப்பன். 3ரர்புனித். 4பொதிய; விளங்க. 5நிற்றலுஞ். 6வந்தி ; வந்திவ். 7மகம். 8மனையில். 9பனையில். 10நின்றின்பந்.

48 அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
[1]படியார் அருளும் பரம்பரன் எந்தை
[2]விடியா விளக்கென்று மேவிநின் [3]றேனே. சஅ

49 [4]பரைபசு பாசத்து நாதனை உள்ளி
[5]உரைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத்
திரைபசு பாவச் செழுங்கடல் [6]நீந்திக்
கரைபசு பாசங் கடந்தெய்த லாமே. சகூ

50 சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் [7]தூவிப் பணிந்துநின்
றாடுவன் ஆடி அமரர்பி ரான்என்று
நாடுவன் நானின் றறிவது தானே. ருo

உ. வேதச் சிறப்பு

51 வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம் எல்லாம் [8]உளதர்க்க
வாதத்தை விட்டு [9]மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே. க

52 *வேதம் [10]உரைத்தானும் வேதிய னாகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே. உ

53 இருக்குரு வாம்எழில் வேதத்தி னுள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி

*இதுவும் அடுத்த செய்யுளும் சில பிரதிகளில் பின் முன்னாக உள்ளன.

பா - ம்—1படியால். 2விடியார். 3றானே. 4நரர்பசு; நரைபசு; பரபசு. 5வரைபசு. 6நீங்கிக். 7தூவித்தொழுதுநின். 8உளதாக. 9மதியர். 10உரைத்தாலும் (நான்கடிகளிலும் இவ்வாறே).

வெருக்குரு வாகிய வேதியர் சொல்லுங்
கருக்குரு [1]வாய்நின்ற கண்ணனு மாமே. ௩

54 திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக [2]வேதாந்தம் ஓதுமே. ௪

55 ஆறங்க மாய்வரு மாமறை ஓதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் [3]பெருக்குகின் றாரே. ௫

56 பாட்டும் ஒலியும் பரக்குங் கணிகையர்
ஆட்டும் [4]அறுத அவனியின் [5]மாட்டாதார்
வேட்டு விருப்பார் விரதமில் லாதவர்
ஈட்டும் இடஞ்சென் [6]றிகலலுற் றாரே. ௬

---

௩. ஆகமச் சிறப்பு

57 அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா [7]முகத்தில் அரும்பொருள் [8]கேட்டதே. க

58 அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் [9]விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே. உ

59 பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறி [10]வாரென்க

பா - ம்—1வாய்நிறை. 2வேதத்தும். 3பெருகுகின். 4அறுதார். 5மாட்டாத. 6றிரக்கமுற். 7முகத்தால். 8கேட்டே. 9விருப்பம் உரைத்தனன். 10வாரெனப்.

பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் [1]அறஞ்சொன்ன வாறே. ௩

60 அண்ணல் அருளால் அருளுந்திவ் யாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரி
தெண்ணில் [2]எழுபது கோடிநூ றாயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே. ௪

61 பரனாய்ப் பராபரங் [3]காட்டி உலகிற்
றரனாய்ச் [4]சிவதன்மந் தானேசொல் காலத்
தரனாய் அமரர்கள் அர்ச்சிக்கு நந்தி
உரனாகி ஆகமம் [5]ஓங்கிநின் றானே. ௫

62 சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்
உவமா [6]மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் றானே. ௬

63 பெற்றநல் ஆகமங் காரணங் காமிகம்
உற்றநல் வீரம் [7]உயர்[8]சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா [9]லோத்தரந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே. ௭

64 அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
[10]அண்ணல் [11]அறைந்த அறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே. ௮

65 மாரியுங் கோடையும் வார்பனி [12]தூங்கநின்
றேரியு [13]நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய முந்தமி ழுமுட னேசொலிக்
காரிகை [14]யார்க்குக் கருணைசெய் தானே. ௯

பா - ம்—1அறஞ்செய்த; அரன்சொன்ன. 2எழுபத்தெண். 3காட்ட. 4சுவதன்மக். 5ஓங்குகின். 6மயேசுரர். 7உயர்வாதுளஞ் சிந்தியம். 8சிந்தியம். 9லோத்திரத். 10மண்ணில் அறிந்த. 11அறிந்தது. 12தூங்கி நின். 13மின்றங். 14யார்க்குங்.

66 அவிழ்க்கின்ற வாறும் 1அதுகட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறுந்
தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்
2உணர்த்தும் அவனை உணரலு மாமே. க0

ச. குரு பாரம்பரியம்

67 நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி 3வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே. க

68 நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே 4மூலனை நாடினோம்
நந்தி அருளாவ தென்செயும் 5நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந் தேனே. உ

69 மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி 6கஞ்ச மலையனோ
டிந்த எழுவரும் என்வழி யாமே.

70 நால்வரும் நாலு திசைக்கொன்று நாதர்கள்
நால்வரும் நானா விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் நான்பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வருந் தேவராய் நாதரா னார்களே. ச

71 மொழிந்தது 7மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்புஞ்
செழுஞ்சுடர் 8மூன்றொளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டகி லானே. ரு

பா - ம்—1அதுகிட்டு. 2உமிழ்த்தும். 3வியாக்கிரன். 4நாதனை. 5நாட்டிற்கு; நாட்டில். 6கஞ்சன். 7மூலர்க்கும் நால்வரும். 8மூன்றொளி.

72 *எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையுஞ்
செழுந்தண் நியமங்கள் செய்மினென் றண்ணல்
கொழுந்தண் [1]பவளக் குளிர்சடை [2]யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. ௯

௫. திருமூலர் வரலாறு

73 நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்
தந்தி [3]மதிபுனை அரனடி நாடொறுஞ்
சிந்தைசெய் [4]தாகமஞ் செப்பலுற் றேனே. க

74 செப்புஞ் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
[5]ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே. உ

75 இருந்தவக் காரணங் கேளிந் திரனே
பொருந்திய செல்வப் புவனா [6]பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் [7]வந்தனன் பத்தியி னாலே. ௩

76 [8]சதாசிவந் தத்துவம் முத்தமிழ் வேதம்
[9]மிதாசனி யாதிருந் [10]தேனின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மன நீங்கி
உதாசனி [11]யாதுட னேஉணர்ந் தோமால். ௪

77 மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க [12]மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே. ௫

* இச்செய்யுள் ஒரு பிரதியிலில்லை.

பா - ம்—1தவளக். 2யோனும். 3மதிபொதி யரனை யடிதொறுஞ். 4யாகமஞ். 5ஒப்பிலிகோடி. 6பதியை. 7வந்தனற். 8சதாசிவன். 9நிதாசனி. 10தேநின்ற. 11யாருட. 12மேனி; மேனிய.

78 *நேரிழை யாவாள் [1]நிரதிச யானந்தப்
பேருடை [2]யாளென் பிறப்பறுத் [3]தாண்டவள்
சீருடை [4]யாள்சிவ னாவடு தண்டுறை
சீருடை [5]யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே. கூ

79 சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ [6]போதியின் நீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. எ

80 இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே. அ

81 பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் [7]செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்ச்செய்யு மாறே. கூ

82 ஞானத் தலைவி[8]தன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பா [9]லாட்டி நாதனை அர்ச்சித்து
[10]நானும் இருந்தேன்நற் [11]போதியின் கீழே. க0

83 செல்கின்ற [12]வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் [13]முனிவராய்ப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர்[14]தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே. கக

---

*இச்செய்யுள் ஒரு பிரதியிலில்லை.

பா - ம்—1நிறைந்திசை. 2யானென். 3தாண்டவன். 4யான்சிவ. 5யான்பதஞ். 6பொதிய. 7செய்கிலீர். 8நன். 9லாட்டியென். 10யானும். 11பொதிகையின். 12வாற்றிற்சிவன்முனி. 13முனிவரர். 14தம்பாலாய்.

84 சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் [1]உள்நின்ற உற்பத்தி
அத்தன் [2]எனக்கிங் கருளால் அளித்ததே. கஉ

85 நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் [3]சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான்பற்றப் [4]பற்றத் தலைப்படுந் தானே. கங

86 பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
[5]மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே. கச

87 [6]அங்கிமி காமைவைத் தானுடல் [7]வைத்தான்
எங்குமி காமைவைத் தானுல கேழையுந்
தங்கிமி காமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்
பொங்கி மிகாமைவைத் தான்பொருள் தானுமே. கரு

88 *அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண் டிலேன்என் றச்சுதன் சொல்ல
முடிகண்டேன் என்றயன் பொய்மொழிந் தானே. கசு

89 பெற்றமும் மானும் மழுவும் பிறிவற்ற
தற்பரன் கற்பனை யாகுஞ் சராசரத்
தற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்
நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே. கஎ

90 ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை [8]தன்னில் வரும்பரை

---

* இச்செய்யுள் சில பிரதியிலில்லை.

பா - ம்—1உன்னின்ற. 2நினக்கிங். 3சொல்லவும்; சொல்குவன். 4பற்றித் தலைப்படுமாறே. 5மறப்பிலா. 6அங்கு. 7வைத்தபின்; வைத்து. 8தன்னை.

யாயத்தை [1]யச்சிவன் தன்னை யகோசர
[2]வீயத்தை முற்றும் [3]விளக்கியிட் டேனே. கஅ

91 விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானச் [4]சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கறும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பில் கயிலை வழியில்வந் தேனே. கசு

92 நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவ னாயினேன்
நந்தி [5]அருளால்மெய்ஞ் [6]ஞானத்துள் நண்ணினேன்
நந்தி [7]அருளாலே நானிருந் தேனே. உ0

93 இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும
அருக்கனுஞ் சோமனும் ஆரழல் [8]வீச
உருக்கி[9]ய ரோமம் ஒளிவிடுந் தானே. உக

94 பிதற்றுகின் றேன்[10]என்றும் போர்நந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத் திரவும் பகலும்
முயற்றுவன் ஓங்கொளி வண்ணன்எம் மானை
[11]இயற்றிகழ் சோதி இறைவனு மாமே. உஉ

சு. அவையடக்கம்

95 ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
யாரறி வார்இந்த அகலமும் நீளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே. க

96 பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்
ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்

பா - ம்—1ச்சிவன். 2வீரத்தை. 3விளங்கியிட்; விளங்கிவிட். 4செந்தீ. 5அருளாலே. 6ஞானத்து; ஞானத்தை. 7அருளாமென. 8வீசி. 9யுரோமம். 10எண்ணும். 11இயற்றுகொள்.

நாடவல் லார்நெறி [1]நாட அறிகிலேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே. ௨

97 மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்
இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
[2]உன்னும் அவனை உணரலு மாமே. ௩

98 தத்துவ ஞானம் [3]உரைத்தது தாழ்வரை
முத்திக் கிருந்த முனிவருந் தேவரும்
[4]ஒத்துடன் வேறா யிருந்து துதிசெயும்
பத்திமை [5]யால்இப் பயனறி யாரே. ௪

௭. திருமந்திரத் தொகைச்சிறப்பு

99 [6]மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
[7]ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே. ௧

100 வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி [8]முடிவிது மூவா யிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்புத் [9]தருமிவை தானே. ௨

௮. குருமட வரலாறு

101 வந்த மடமேழு மன்னுஞ்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன்[10]மடவரை
தந்திரம் ஒன்பது சார்வுமூ [11]வாயிரஞ்
சுந்தர [12]ஆகமச் சொல்மொழிந் தானே. ௧

பா - ம்—1ஞானம். 2உன்னியவனை. 3உரைத்துத். 4இத்துடன். 5யான. 6மூலர். 7ஞாலமருளவே. 8முடிவது; வடிவிதின். 9தருமவன். 10வடவரை. 11வாயிர. 12ஆகமஞ் சொல்மொழி.

102 [1]கலந்தருள் காலாங்கர் [2]தம்பால [3]கோரர்
நலந்தரு [4]மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே. உ

௩. திரிமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறைமை

103 அளவில் [5]இளமையும் அந்தமும் ஈறும்
[6]அளவியல் காலமும் [7]நாலும் உணரில்
தளர்விலன் சங்கரன் தன்னடி [8]யார்சொல்
அளவில் பெருமை [9]அரிஅயற் காமே க

104 ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை [10]யானுஞ்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனார்
[11]பேதித் துலகம் பிணங்குகின் [12]றார்களே. உ

105 ஈசன் இருக்கும் இருவினைக் கப்புறம்
பீசம் உலகிற் பெருந்தெய்வ மானது
[13]ஈசன் அதுஇது என்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் [14]தூரறிந் தார்களே. ௩

106 [15]சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் [16]டொன்றொடொன் றாகும்
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதற் சங்கரன் தன்பெயர் தானே. ௪

107 பயன்அறிந் தவ்வழி [17]எண்ணும் அளவில்
அயனொடு மால்நமக் கன்னியம் இல்லை

பா - ம்—1சலந்தரு. 2தம்பாற். 3தம்பாடுசார. 4மன்னிய; தமனியத்; நமனியத். 5இன்மையும். 6அளவிய. 7நாளும். 8யார் சேர். 9அறியயற்; அறிய நின்றனே. 10யயனுஞ்; யாயனுஞ். 11பேதித்து நின்று. 12றாரே. 13நீசர். 14தூதறிந். 15சிவமுதல். 16டொன்றென்- 17யென்னும்.

நயனங்கள் மூன்றுடை நந்தி [1]தமராம்
[2]வயனம் பெறுவீர்அவ் வானவ ராலே. ௫

108 ஓலக்கஞ் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்தடி யேன்தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடென் றானே. ௬

109 வானவர் என்றும் மனிதர்இவர் என்றுந்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோருந் தனித்தெய்வம் மற்றில்லை
ஊனமர்ந் தோரை உணர்வது தானே. ௭

110 சோதித்த பேரொளி [3]மூன்றைந் தெனநின்ற
[4]ஆதிக்கண் ஆவ [5]தறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித் [6]தவரைப் பிதற்றுகின் றாரே. ௮

111 [7]பரத்திலே ஒன்றாய்உள் ளாய்ப் புறமாகி
வரத்தினுள் மாயவ னாய்அய னாகித்
தரத்தினுள் தான்பல தன்மைய னாகிக்
[8]கரத்தினுள் நின்று கழிவுசெய் தானே. ௯

112 தானொரு கூறு சதாசிவன் எம்இறை
வானொரு கூறு மருவியும் அங்குளான்
கோனொரு [9]கூறுடல் உள்நின் [10]றுயிர்க்கின்ற
தானொரு கூறு [11]சலமய னாமே. ௧௰

பாயிரம் முற்றிற்று

பா - ம்—1தமராவர். 2வயன் பெறுவீரவ்; மயம் பெருவீரவ். 3முன்னறைந் தேன்நின்ற. 4ஆதிக்குள். 5தறிகிலாதார்கள். 6தவனைப். 7பரத்தினே. 8காத்தினு. 9கூறுணின். 10றுறைகின்ற. 11சலாமய.

முதல் தந்திரம்

க. உபதேசம்*

113 விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியோ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே. க

114 களிம்பறுத் தான்எங்கள் [1]கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே. உ

115 பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே. ௩

116 வேயின் எழுங்கனல் போலேஇம் [2]மெய்யெனுங்
கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னுந்
தோயம தாய்எழுஞ் சூரிய னாமே. ௪

117 சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே. ௫

118 மலங்களைந் தாமென மாற்றி அருளித்
[3]தலங்களைந் தானற் சதாசிவ [4]மான
புலங்களைந் [5]தானப் பொதுவினுள் நந்தி
நலங்களைந் தானுள் நயந்தான் அறிந்தே. ௬

* சில பிரதிகளில் இப்பகுதி காணப்படவில்லை.

பா - ம்—1கண்ணுடை. 2மேனியுங். 3தலங்கடந். 4மாதிப். 5தான.

119 அறிவைம் புலனுட [1]னேரான் றதாகி
நெறியறி யாதுற்ற நீராழம் போல
அறிவறி வுள்ளே [2]அழிந்தது போல
குறியறி விப்பான் குருபர னாமே. எ

120 ஆமேவு [3]பால்நீர் பிறிக்கின்ற அன்னம்போல்
தாமே தனிமன்றில் தன்னைத் தனிநித்தந்
தீமேவு [4]பல்கர ணங்களுள் உற்றன
[5]தாமேழ் பிறப்பெரி சார்ந்தவித் தாமே. அ

121 வித்தைக் கெடுத்து வியாக்கிர தேமிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்றாய் உடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே. கூ

122 சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துள்புக்குத் தன்னொளி [6]தானாய்
[7]அவயோகஞ் சாரா [8]தவன்பதி போக
நவயோக நந்தி நமக்களித் தானே. க0

123 அளித்தான் உலகெங்குந் தானான உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் [9]திருமன்றுள் ஆடுந் திருத்தாள்
அளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே. கக

124 வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறுந்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே. கஉ

125 சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
சத்தமுஞ் சத்த [10]முடிவுந்தம் முள்கொண்டோர்

பா - ம்—1னேரா னதாகி. 2அழிந்ததைபோல. 3பாலைப். 4லப்பில திரணங்களுற்ற. 5தாமே. 6தாய. 7தவயோகஞ். 8யவன்பதி. 9தனிமன்றுள். 10மனமுந் தமிழ்கொண்டோர்.

நித்தர் நிமலர் நிராமயர் [1]நீள்பர
மூத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே. கஉ௫

126 முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்
தப்பரி சாக அமர்ந்திருந் தாரே. கஉ௬

127 இருந்தார் [2]சிவமாகி எங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் [3]முக்காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தார் [4]இழவுவந் தெய்திய சோம்பே. கஉ௭

128 சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பதுஞ் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர்கண் [5]டாரச் சுருதிக்கண் தூக்கமே. கஉ௮

129 தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே
தூங்கிக் கண்டார்நிலை சொல்வதெவ் வாறே. கஉ௯

130 எவ்வாறு காண்பான் அறிவு தனக்கெல்லை
அவ்வா [6]றருட்செய்வன் ஆதி யரன்தானும்
ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடுஞ்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம். கஉ௰

131 மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே. கஉ௧

132 பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்

பா - ம்—1நீராளர். 2சிவசித்தர். 3முற்காலத். 4விழவும் வந். 5டார் சுருதியின்கண்; டார் சுருதியின்பக்கண். 6றருள்செயனுதி.

பெற்றார்அம் மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே. உ௦

133 பெருமை சிறுமை அறிந்தெம் பிரான்போல்
அருமை எளிமை அறிந்தறி வாரார்
ஒருமையுள் ஆமைபோல் [1]உள்ளொங் தடக்கி
இருமையுங் [2]கெட்டிருந் தார்புரை அற்றே. உ௧

134 புரைஅற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்
திரைஅற்ற [3]சிந்தைநல் ஆரியன் செப்பும்
உரையற் [4]றுணர்வோர் உடம்பிங் கொழிந்தாற்
கரையற்ற சோதி [5]கலந்தசத் தாமே. உ௨

135 சத்த முதல்ஐந்துந் [6]தன்வழித் தான்சாரில்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த [7]வெளியிற் சுடரிற் சுடர்சேரும்
அத்தம் இதுகுறித் தாண்டுகொள் அப்பிலே. உ௩

136 அப்பினிற் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த அவ்வுரு
அப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோற்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே. உ௪

137 அடங்குபே ரண்டத் தணுஅண்டஞ் சென்றங்
[8]கிடங்கொண்ட தில்லை இதுவன்றி வேறுண்டோ
[9]கடந்தொறும் நின்ற [10]உயிர்கரை [11]காணில்
திடம்பெற நின்றான் திருவடி தானே. உ௫

138 திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே. உ௬

பா - ம்—1ஓரைந். 2கண்டிருந். 3சிந்தையுள் ளாரியனென். 4றுணர்வற் றுடம்பிங். 5கலந்தசிச். 6தன்வழிச் சாரில். 7வொளியிற். 8இடங்கண்ட. 9கடந்தொன்று. 10உயிர்கரி. 11காணும்.

139 தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல தானே. உஎ

140 தானே புலன்ஐந்துந் தன்வச மாயிடுந்
தானே புலன்ஐந்துந் தன்வசம் போயிடுந்
தானே புலன்ஐந்துந் தன்னில் [1]மடைமாறும்
தானே தனித்தெம் [2]பிரான்தனைச் சந்தித்தே. உஅ

141 சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை
சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி
வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையாற்
புந்திக்குள் [3]நிற்பது நந்திபொற் போதமே. உகூ

142 போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில்வைத்துப புண்ணிய ராயினர்
நாதன் நடத்தால் நயனங் களிகூர
வேதந் துதித்திடப் போயடைந்தார் விண்ணே. ௩௦

உ. யாக்கை நிலையாமை*

143 மண்ணொன்று கண்டீர் [4]இருவகைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது [5]தீவினை [6]சேர்ந்தது
விண்ணின் ஊநீர்விழின் மீண்டுமண் ணானாற்போல்
[7]எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே. க

144 [8]பண்டம்பெய் கூரை பழகி [9]விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்

* இவ்விடத்து இரண்டாந் தந்திரத்துள்ள 'அகத்தியம்' முதலிய பகுதிகள் சில பிரதிகளிற் காணப்படுகின்றன. அவற்றில் தந்திரப் பகுப்புமில்லை.

பா - ம்—1அடைமாறும்; மடமாறும். 2பிரானைச் சந்திக்கவே. 3வைப்பது நந்திசொற். 4இருவினைப். 5தீயினைச்; தீமுனைச். 6செத்தது. 7எண்ணின்ற. 8பண்டம் பொய்க்; பண்டமெய்க். 9விழுதலால்.

கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே. ௨

145 ஊரெலாங் கூடி ஒலிக்க [1]அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
[2]சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே. ௩

146 *காலும் இரண்டு [3]முகட்டலக் கொன்றுள
பாலுள் பருங்கழி முப்பத்தி ரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்
போலுயிர் மீளப் புகஅறி யாதே. ௪

147 சீக்கை விளைந்தது செய்வினை [4]மூட்டிற்ற
ஆக்கை [5]பிரிந்த தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து [6]மூடிட்டுக் கொண்டுபோய்க்
[7]காக்கைக் குப்பலி [8]காட்டிய வாறே. ௫

148 அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு [9]மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் [10]படுத்தார் கிடந்தொழிந் தாரே. ௬

149 [11]மன்றத்தே [12]நம்பி மாடம் எடுத்தது
[11]மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினன்
[11]மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினன்
சென்றத்தா வென்னத் திரிந்திலன் தானே. ௭

150 வாசந்தி பேசி மணம்புணர்ந் தப்பதி
[13]நேசந் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை

---

* இதுவும் அடுத்த செய்யுளும் ஒரு பிரதியில் பின் முன்னாக உள்ளன.

பா - ம்—1அழுதிடப். 2சூரியங். 3முகட்டல. 4மூட்டற்ற. 5மரிந்த. 6மூட்டிடங். 7காக்கைப் பலியிட்டுக் கைகொட்டு மாறே. 8வைக்கின்ற. 9மணந்தனல்; மணந்தனங் 10பழுத்தார். 11மன்றகத்தே. 12நம்பிக்கு. 13நேசத்தே கூட்டி.

ஆசந்தி மேல்வைத் தமைய அழுதிட்டுப்
[1]பாசந்திச் சுட்டுப் பலியட்டி னார்களே. அ

151 கைவிட்டு நாடிக் [2]கருத்தழிந் தச்சற
நெய்யட்டிச் சோறுண்ணும் ஐவரும் போயினார்
மையிட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே. கூ

152 பந்தல் பிரிந்தது பண்டாரங் [3]கட்டற்ற
ஒன்பது [4]வாசலும் ஒக்க [5]அடைந்தன
துன்புறு [6]காலந் துரிசுவர மேன்மேல்
அன்புடை யார்கள் [7]அழுதகன் றார்களே. க0

153 நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே [8]பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே. கக

154 முப்பதும் முப்பதும் முப்பத் தறுவருஞ்
[9]செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
[9]செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப[10]அனைவரும் ஓட்டெடுத் தார்களே. கஉ

155 மதுவூர் குழலியும் மாடும் மனையும்
இதுவூர் ஒழிய [11]இதணம தேறிப்
பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி
[12]மதுவூர வாங்கியே வைத்தகன் றார்களே. கங

156 வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்
அச்சக [13]லாதென நாடும் அரும்பொருள்
[14]பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு [15]மற்றவர்
எச்சக [16]லாநின் றிளைக்கின்ற வாறே. கச

பா - ம்—1பாசந்தி. 2கருத்தறிந். 3கட்டற. 4வாய்தலும். 5அடைத்தன. 6காலத்துரிசுவா மேன்முன். 7அழுதகண் ணார்களே. 8காமமுறை கொட்ட. 9செப்பு. 10எனைவரும். 11விமானம; விதனம. 12அதுவூர். 13லாததென்றுடும். 14விச்சது. 15மாற்றவர். 16லநின்.

157 ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி
[1]நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே. கரு

158 [2]வளத்திடை முற்றத்தோர் மாநிலம் முற்றுங்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடமுடைந் தால்அவை ஓடென்று வைப்பர்
[3]உடலுடைந் தால்இறைப் போதும் வையாரே. கசு

159 ஐந்து [4]தலைப்பறி யாறு சடையுள
சந்தவை முப்பது [5]சார்வு பதினெட்டுப்
[6]பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேலறி யோமே. கஎ

160 அத்திப் பழமும் அறைக்கீரை நல்வித்துங்
கொத்தி உலைப்பெய்து கூழட்டு வைத்தனர்
அத்திப் பழத்தை அறைக்கீரை வித்துண்ணக்
கத்தி எடுத்தவர் காடுபுக் காரே. கஅ

161 மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை
காலும் இரண்டு [7]முகட்டலக் கொன்றுண்டு
ஓலையான் [8]மேய்ந்தவ ரூடு வரியாமை
வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் [9]தளியே. ககூ

162 கூடங் கிடந்தது கோலங்கள் இங்கில்லை
[10]ஆடும் இலையமும் அற்ற தறுதலும்
பாடுகின் றார்சிலர் பண்ணில் அழுதிட்டுத்
தேடிய [11]தீயினில் தீயவைத் தார்களே. உ0

163 முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்

பா - ம்—1நீர்த்துறை. 2வடத்திடை. 3உடலிறந். 4தலைப்பரி. 5சார்வது. 6பந்தம். 7முகட்டல. 8மேய்ந்தவா யூடுவரிதமை; மேய்ந்தவாவூடு வரிதானும்; ...வரீதாமை. 9தளிகையே; தகளியே. 10மாடு இலையமு மற்ற தறுத்தலும். 11தீயைவைத்.

பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினிற்
கெட்ட தெழுபதிற் [1]கேடறி யீரே. உக

164 இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்ச தறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சிரு ளாவ தறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே. உஉ

165 மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த
உடலும் உயிரும் உருவந் தொழாமல்
இடர்படர்ந் தேழா நரகிற் கிடப்பர்
[2]குடர்பட [3]வெந்தமர் கூப்பிடு மாறே. உங

166 குடையுங் குதிரையுங் கொற்றவா ளுங்கொண்
டிடையுமக் காலம் இருந்து நடுவே
புடையு மனிதனார் [4]போகும்அப் போதே
அடையும் இடம்வலம் ஆருயி ராமே. உச

167 காக்கை [5]கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் [6]பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் [7]செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே. உரு

ங. செல்வம் நிலையாமை

168 அருளும் [8]அரசனும் [9]ஆனையுந் தேரும்
பொருளும் [10]பிறர்கொள்ளப் போவதன் முன்னந்
தெருளும் [11]உயிரொடுஞ் செல்வனைச் சேரின்
[12]மருளும் பிணையவன் மாதவ [13]மன்றே. க

169 இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்குந்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா

பா - ம்—1கேட்டறி. 2குடர்படா. 3வெந்தமர்க். 4போகும் பொழுதும். 5வரிலென். 6பழிக்கிலென். 7செய்தாட்டுங். 8அரசும். 9தேரும் பிறர் கொள்ளப். 10கலங்கிடு போதவன். 11உருவொடுஞ். 12அருளும் பிணையவன். 13னன்றே ; மாமன்றே.

மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
[1]பெயற்கொண்டல் போலப் [2]பெருஞ்செல்வ மாமே.

170 தன்னது சாயை தனக்குத வாதுகண்
டென்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்
[3]உன்னுயிர் போம்உடல் ஒக்கப் [4]பிறந்தது
[5]கண்ணது காணொளி கண்டுகொ ளீரே. ௩

171 ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் [6]கொடுத்தது கைவிட்ட வாறே. ௪

172 தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்
ஆற்றுப் [7]பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் [8]மறுத்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்கால் [9]குதிக்கலு மாமே. || ௫

173 மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கோர் [10]வீடு பேறாகச்
சிமிழொன்று வைத்தமை தேர்ந்தறி யாரே. ௬

174 வாழ்வும் மனைவியும் மக்கள் உடன்பிறந்
தாரு [11]மளவே [12]தெமக்கென்பர் ஒண்பொருள்
மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக்
கூவுந் துணையொன்று [13]கூடலு மாமே. ௭

175 வேட்கை மிகுத்தது மெய்கொள்வார் இங்கிலை
பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது
[14]நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. ௮

பா - ம்—1பெயக்கற்ற கொண்டல்போற். 2பெருஞ் செலவாமே. 3உண்ணுயிர். 4பிரிந்தது. 5கண்ணொளி. 6கொடுத்தவர். 7பெருக்கின். 8மறித்துங்கள். 9குதிக்கலு. 10வீடதுபோகச் ; வீடுமேற்றுகச். 11மழவே. 12தமக்கென்பர் ; தமக்கென்ற. 13கூறலு. 14நாட்டியத் தார்தமர்.

176 உடம்பொ டுயிரிடை [1]விட்டோடும் போது
அடும்பரி சொன்றில்லை அண்ணலை எண்ணும்
விடும்பரி சாய்நின்ற மெய்ந்நமன் தூதர்
சுடும்பரி [2]சத்தையுஞ் சூழகி லாரே. ௯

---

௪. இளமை நிலையாமை

177 கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் [3]விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு [4]தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே. ௧

178 ஆண்டு பலவுங் [5]கழிந்தன அப்பனைப்
பூண்டுகொண் டாரும் புகுந்தறி வார்இல்லை
நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினுந்
தூண்டு விளக்கின் சுடரறி யாரே. ௨

179 தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்துற் றுக் கொள்ளும் [6]உயிருள்ள போதே. ௩

180 விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயுமொத் தேனே. ௪

181 *பாலன் இளையன் விருத்தன் எனநின்ற
காலங் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலங் கடந்தண்டம் ஊடறுத் தானடி
மேலுங் கிடந்து விரும்புவன் நானே. ௫

---

* இதுவும் அடுத்த செய்யுளும் சில பிரதிகளில் பின் முன்னாக உள்ளன.

பா - ம்—1விட்டிடும். 2சைத்தையுஞ். 3விளிவிலா. 4தாஞ்சில. 5கழிந்தும் ; கழிந்தென. 6உலாவுள்ள ; அவாவுள்ள.

182 காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாணாள் கழிவதுஞ்
[1]சாலும்அவ் வீசன் சலவிய னாகிலும்
ஏல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே. ௬

183 பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்
பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்
பருவூசி ஐந்தும் [2]பணித்தலைப் பட்டாற்
[3]பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே. ௭

184 [4]கண்ணாறுங் காய்கதி ரோனும் உலகினை
உண்ணின் றளக்கின்ற தொன்றும் அறிகிலார்
விண்ணுறு [5]வாரையும் வினையுறு வாரையும்
[6]எண்ணுறும் முப்பதில் [7]ஈர்ந்தொழிந் தாரே. ௮

185 *ஒன்றிய ஈரெண் கலையும்[8]உடனுற
நின்றது கண்டு நினைக்கிலர் [9]நீசர்கள்
கன்றிய காலன்[10]கருக்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே. ௯

186 எய்திய [11]நாளில் இளமை கழியாமை
எய்திய நாளில் இசையினால் ஏத்துமின்
எய்திய நாளில் எறிவ தறியாமல்
எய்திய நாளில் [12]இருந்துகண் டேனே. ௧௦

௫. உயிர் நிலையாமை

187 தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற தெல்லாம் [13]இறக்கின்ற கண்டும்

* இச்செய்யுள் ஒரு பிரதியிலில்லை.

பா - ம்—1சாலவு மீசன் சருவிய. 2பணித்தலைப்; பணிதலைப்; பண்ணித்தலைப். 3பருவூசியைந்தும். 4கண்ணுங்; 5வாரும். 6எண்ணின்று. 7ஈர்ந்தொழிந். 8உடன்றன. 9நீதர்கள். 10கழுக்குழி. 11நாளும். 12இரந்துகண். 13உயிர்க்கின்ற; இறவிறை.

பிழைப்பின்றி எம்பெரு மானடி ஏத்தார்
அழைக்கின்ற [1]போதறி [2]யாரவர் தாமே. ௧

188 ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து [3]வருவர்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல்விட் டாரே. ௨

189 [4]மத்தளி ஒன்றுள தாளம்இ ரண்டுள
[5]அத்துள்ளே வாழும் [6]அரசரும் [7]அஞ்சுள்ள
அத்துள்ளே வாழும் [8]அரசனும் அங்குளன்
மத்தளி [9]மண்ணாய் மயங்கிய வாறே. ௩

190 வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கடம் என்றே விரகறி யாதவர்
[10]தாங்கவல் லாருயிர் தாமறி யாரே. ௪

191 சென்றுணர் வான்திசை பத்துந் திவாகரன்
[11]அன்றுணர் வால்அளக் கின்ற தறிகிலர்
நின்றுண ரார்இந் நிலத்தின் மனிதர்கள்
பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற [12]மாயமே. ௫

192 மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை
[13]பேறு மதனைப் பெரிதுணர்ந் தாரிலை
கூறுங் கருமயிர் வெண்மயி ராவது
ஈறும் பிறப்புமொ [14]ராண்டெனும் நீரே. ௬

193 துடுப்பிடு பானைக்கும் ஒன்றே அரிசி
[15]அடுப்பிடு மூன்றிற்கும் அஞ்செரி கொள்ளி
அடுத்தெரி யாமற் [16]கொடுமின் அரிசி
விடுத்தன [17]நாள்களும் மேற்சென் றனவே. ௭

பா - ம்—1போதடி. 2வாரவர். 3வருந்துவர். 4மத்தளம். 5வைத்துளே. 6அமைச்சனும்; அரசரும். 7அங்குளன். 8அரசன் புறப்பட்டால். 9பண்ணாய். 10தாங்கலைவாருயிர். 11நன்றுணர். 12மாயனே. 13யீறு. 14ராண்டினுள். 15அடுப்பெரி. 16கெடுமின். 17தானமும்.

194 இன்புறு வண்டிங் கினமலர் [1]மேற்போய்
உண்பது வாச மதுபோல் உயிர்நிலை
இன்புற நாடி நினைக்கிலு மூன்றொளி
கண்புற நின்ற கருத்துள்நில் லானே. ௮

195 ஆம்விதி நாடி [2]அறஞ்செய்மின் அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்
நாம்விதி வேண்டும தென்சொலின் மானிடர்
ஆம்விதி பெற்ற அருமைவல் லார்க்கே. ௯

196 அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய [3]னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக்கொ டுண்மின் தலைப்பட்ட போதே. ௧௦

---

௬. கொல்லாமை

197 பற்றாய [4]நற்குரு பூசைக்கும் [5]பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை [6]ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் [7]சித்தமும்
[8]உற்றாறும் [9]ஆவி [10]அமர்ந்திடம் உச்சியே. ௧

198 கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
[11]வல்லடிக் காரர் [12]வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே. ௨

---

௭. *புலால் மறுத்தல்

199 பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்

---

* இத்தலைப்புச் சில பிரதிகளில் காணப்படவில்லை.

பா - ம்—1 நாறிப்போய். 2 அறஞ்செய்யு மன்னிலம்; ...முன்னிலம், 3 சாகிச். 4 நற்குருப் பூசிக்கும். 5 பண்மலர்; நன்மலர். 6 எண்மலர்; வெண்மலர். 7 சாந்தமும். 8 உற்றரும். 9 ஆவியுமாறிடம். 10 அமிர்திடம். 11 வல்லடியாக. 12 வரிக்கயிற்.

செல்லாகப் [1]பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே. ௧

200 கொலையே களவுகட் காமம் பொய்கூறல்
[2]மலைவான பாதக மாம்அவை நீக்கித்
தலையாஞ் சிவனடி [3]சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையாம் இவைஞான னந்தத் திருத்தலே. ௨

௮. பிறன்மனை நயவாமை

201 [4]ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
[5]காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
[6]ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே. ௧

202 [7]திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
அருத்தமென் றெண்ணி அறையிற் புதைத்துப்
பொருத்தமி லாத புளிமாங் கொம்பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே. ௨

203 பொருள்கொண்ட [8]கண்டனும் [9]போதகை யாளும்
இருள்கொண்ட [10]மின்வெளி கொண்டுநின் றோரும்
மருள்கொண்டு மாதர் [11]மயலுறு வார்கள்
மருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே. ௩

௯. மகளிர் இழிவு

204 *இலைநல வாயினும் எட்டி பழுத்தாற்
[12]குலைநல வாங்கனி கொண்டுண லாகா

* இச்செய்யுளின் இரண்டாமடி **யாப்பருங்கல விருத்தியில்** [பக்கம் 352] "குலைநல வாங்கனி கொண்டுண லாகா விளையாள்" என ஒரு சீர்மிக்கு வந்ததாகக் காட்டப்பட்டுளது.

பா - ம்—1பற்றிய. 2அலைவான ; அலையாத. 3சாரவல்லார்கட்கு. 4ஆர்த்த. 5காய்த்த. 6ஈத்தம. 7தருக்கி ; கருக்க. 8வனும். 9போதத்தை ; போகத்தை. 10பின்வெளி கண்டுநின். 11மயமுறு ; மயக்குறு. 12குலநலமாங்கனி.

முலைநலங் கொண்டு முறுவல்செய் வார்மேல்
[1]விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே. ௧

205 மனைபுகு வார்கள் மனைவியை நாடில்
சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்குங்
கனவது போலக் கசிந்தெழும் [2]இன்பம்
நனவது போலவும் நாடவொண் ணாதே. ௨

206 இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்
[3]புயலுறப் புல்லிப் புணர்ந்தவர் எய்தும்
மயலுறும் வானவர் [4]சார்விது என்பார்
அயலுறப் பேசி அகன்றொழிந் தாரே. ௩

207 வையகத் தேமட வாரொடுங் கூடியென்
மெய்யகத் [5]தோருளம் வைத்த விதியது
கையகத் தேகரும் பாலையின் சாறுகொள்
மெய்யகத் [6]தேபெறு வேம்பது வாமே. ௪

208 கோழை ஒழுக்கங் [7]குளமூடு பாசியில்
ஆழ நடுவார் அளப்புறு வார்களைத்
[8]தாழத் துடக்கித் தடுக்ககில் [9]லாவிடில்
பூழை நுழைந்தவர் போகின்ற வாறே. ௫

---

௧௦. நல்குரவு

209 [10]புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட் டார்களும் அன்பில ரானார்
[11]கொடையில்லை [12]கோளில்லை [13]கொண்டாட்ட மில்லை
நடையில்லை [14]நாட்டில் இயங்குகின் றார்கட்கே. ௧

பா - ம்—1விலகுறி ; விலை கூறி. 2அன்பை. 3புயலுறும் புல்விற்...எயினும். 4சார இரும். 5தோருழ ; தோரும். 6தேபெரு ; தேபொரும் பாம்பது. 7குடமூடு. 8தாழைத்துடக்கத் ; தாளைத். 9லாவீட்டில். 10புடவியளந்தது. 11குடையில்லை. 12கேளில்லை. 13கொண்டாடநட்பில்லை ; கொண்டாடவில்லை. 14காடியங்கிநின்.

210 பொய்க்குழி தூர்ப்பான் புலரி [1]புலருதென்
றக்குழி தூர்க்கும் அரும்பண்டந் தேடுவீர்
எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்
அக்குளி தூரும் அழுக்கற்ற [2]போதே. உ

211 கற்குழி தூரக் கனகமுந் [3]தேடுவர்
அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரியது
அக்குழி தூர்க்கும் அறிவை அறிந்தபின்
அக்குழி தூரும் அழுக்கற்ற வாறே. ௩

212 தொடர்ந்தெழு சுற்றம் வினையினுந் தீய
கடந்தோர் ஆவி கழிவதன் முன்னே
[4]உடந்தொரு காலத் [5]துணர்விளக் கேற்றித்
தொடர்ந்துநின் றவ்வழி தூக்கலு மாமே. ௪

213 அறுத்தன ஆறினும் ஆனின மேவி
அறுத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்
[6]ஒறுத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை
வெறுத்தனன் ஈசனை வேண்டிநின் றானே. ௫

கக. *அக்கினி காரியம்

214 வசையில் விழுப்பொருள் வானும் நிலனுந்
திசையுந் திசைபெறு தேவர் குழாமும்
[7]விசையம் பெருகிய வேத [8]முதலாம்
அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே. க

215 ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்
போகதி நாடிப் [9]புறங்கொடுத் துண்ணுவர்

*ஒரு பிரதியில் இப்பகுதியும் அடுத்த பகுதியும் அக்கினி காரியமென்ற தலைப்போடும், மற்றொரு பிரதியில் அந்தணரொழுக்கமென்ற தலைப்போடும் காணப்படுகின்றன.

பா - ம்—1புலருகென். 2வாறே. 3தேடுவீர். 4உடந்தரு. 5துடல்விளக். 6பொறுத்தன. 7விசையும். 8முதலாய். 9புறங்குடித்; பரக்குடத்.

தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாமறி வாலே தலைப்பட்ட வாறே. ௨

216 [1]அணைதுணை அந்தணர் அங்கியுள் அங்கி
[2]அணைதுணை வைத்ததின் உட்பொரு ளான
இணைதுணை [3]யாமத் தியங்கும் பொழுது
[4]துணையணை யாயதோர் தூய்நெறி யாமே. ௩

217 *போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு
மாதிரண் டாகி மகிழ்ந்துட னேநிற்குந்
தாதிரண் டாகிய [5]தண்ணம் பறவைகள்
[6]வேதிரண் டாகி [7]வெறிக்கின்ற வாறே. ௪

218 நெய்நின் றெரியும் நெடுஞ்சுட [8]ரேசென்று
மைநின் றெரியும் வகையறி வார்கட்கு
மைநின் [9]றவிழ்தரு [10]மத்தின மாம்என் றுஞ்
[11]செய்நின்ற செல்வம் தீயது வாமே. ௫

219 பாழி அகலும் எரியுந் திரிபோலிட்
டூழி அகலும் உறுவினை நோய்பல
வாழிசெய் தங்கி [12]உதிக்க அவைவிழும்
வீழிசெய் தங்கி வினைசுடு [13]மாமே. ௬

220 பெருஞ்செல்வங் [14]கெடென்று முன்னே படைத்த
வருஞ்செல்வம் [15]தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணி
அருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றாரே. ௭

221 ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகி [16]என்னுள்ளத் திருக்கின்ற

---

*இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் ஒரு பிரதியில் பின் முன்னாக வந்துள்ளன.

பா - ம்—1 அணையணை. 2 துணைதுணை. 3 யீமத். 4 துணைதுணை. 5 தன்மை. 6 வேறிரண். 7 வெறுக்கின்ற. 8 ரேயொன்று. 9 றவிழ் கருமத். 10 மந்திரமாம் ஒன்று; மத்தினவாவென்று. 11 செய்கின்ற செல்வம் பதியது. 12 உதித்தவகைவிழும். 13 மாறே. 14 கெடொன்று, கொண்டேன்று. 15 வக்க. 16 ஒன்றுள்ளத்.

கண்சுட ரோன்உல கேழுங் கடந்தஅத்
தண்சுட ரோமத் தலைவனு மாமே. அ

222 ஓமத்துள் அங்கியின் உள்ளுளன் எம்இறை
ஈமத்துள் அங்கி இரதங்கொள் வானுளன்
வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடல்
1கோமத்துள் அங்கி குரைகடல் தானே. ௯

223 அங்கி நிறுத்தும் அருந்தவர் ஆரணத்
தங்கி இருக்கும் வகையருள் செய்தவர்
எங்கும் நிறுத்தி இளைப்பப் பெரும்பதி
பொங்கி நிறுத்தும் புகழது வாமே. ௧௦

௧௨. அந்தணரோழுக்கம்

224 அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
2தந்தவ நற்கரு மத்துநின் றங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே. ௧

225 வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப்
போதாந்த மான பிரணவத் 3துள்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
4ஈதாந்தம் எனுதுகண் டின்புறு வோர்களே. ௨

226 காயத் திரியே கருதுசா வித்திரி
5ஆய்தற் 6குவப்பர் மந்திரமாங் குன்னி
சேயத் தேரேறி 7நினைவுற்று நேயத்தாய்
மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே. ௩

227 *பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து
குருநெறி யாலுரை கூடிநால் வேதத்

*இச்செய்யுள் ஒரு பிரதியிலில்லை.

பா - ம்—1கோபதத்துள். 2தந்தவா. 3துட்புகு. 4மீதாந்தம். 5யாயத்தகும்பர 6குரைப்பர். 7நினைவற்று நேயத்தால்.

திருநெறி யான கிரியை யிருந்து
சொருபம தானோர் துகளில்பார்ப் பாரே.　௪

228 சத்திய [1]முந்தவம் [2]தான்அவன் ஆதலும்
எய்த்தகும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்
ஒத்த [3]உயிர்கள் உண்டா யுணர்வுற்றுப்
பெத்தம் அறுத்தலு மாகும் பிரமமே.　௫

229 வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தம் [4]கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே.　௬

230 நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
[5]நூலுடை அந்தணர் காணும் நுவலிலே.　௭

231 [6]சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடையம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை [7]யின்றிப்
[8]பித்தேறும் மூடர் பிராமணர் தாம்அன்றே.　௮

232 திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்
குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணுந்
துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே.　௯

233 மறையோ [9]ரவரே மறையவ [10]ராஞல்
மறையோர்தம் வேதாந்த வாய்மையில் தூய்மை
குறையோர்தன் மற்றுள்ள [11]கோலா கலமென்
றறிவோர் [12]மறைதெரிந் தந்தண ராமே.　௧௦

பா - ம்—1முற்றவன். 2தானமதாகி 3உயிருடல். 4கேட்டுத்தம். 5நூலிடை. 6சத்தியும். 7யின்றியூண். 8பித்தெனும். 9ரெவரே. 10ரான. 11கோரதலமென்; கொள்கலமென். 12மறையவரந்தண.

234 *அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் [1]அந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்
அந்தியுஞ் சந்தியும் ஆகுதி பண்ணுமே. ௧௧

235 வேதாந்த ஞானம் [2]விளங்க விதியிலோர்
நாதாந்த [3]போதம் நணுகிய [4]போக்கது
போதாந்த மாம்பரன் பாற்புகப் புக்கதால்
நாதாந்த முத்தியுஞ் சித்தியும் நண்ணுமே. ௧௨

236 ஒன்றும் இரண்டும் [5]ஒருங்கிய காலத்து
[6]நன்றும் இருந்தும் [7]நலம்பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்குந் திருவுடை யோரே. ௧௩

237 தானே [8]விடும்பற் றிரண்டுந் தரித்திட
நானே விடப்படு மேதொன்றை நாடாது
பூமேவு நான்முகன் புண்ணிய [9]போகனாய்
ஓமேவும் [10]ஓரா குதிஅவி உண்ணவே. ௧௪

---

௧௩. இராச தோடம்

238 கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுககில் லானே. ௧

239 நாள்தோறும் [11]மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தோறும் நாடி [12]அவநெறி நாடானேல்

---

*ஒரு பிரதியில் இச்செய்யுள் இப்பகுதியி னீற்றயற் செய்யுளாகக் காணப்படுகிறது.

பா - ம்—1தந்தணர். 2விளங்கி. 3போகம். 4போது ; போகத்துப் ; போதத்துப். 5ஒடுங்கிய. 6நின்றும். 7நிலம்பல. 8விடப்பற். 9போதனாய். 10ஓமா. 11மீனவன். 12அவனெறி.

நாள்தோறும் நாடு [1]கெடுமூட நண்ணுமால்
நாள்தோறுஞ் செல்வம் நரபதி குன்றுமே. உ

240 வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடம் [2]மெய்வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாகுமே. ங

241 மூடங் கெடாதோர் [3]சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடொன் றிலனாகும் ஆதலாற் பேர்த்துணர்ந்
தாடம் பரநூற் சிகையறுத் தால்நன்றே. ச

242 ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே. ரு

243 ஆவையும் [4]பாவையும் மற்றற வோரையுந்
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே. சு

244 திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறி யேஆற்றல் வேண்டுஞ்
சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவையும்
அறைந்திடில் வேந்தனுக் காறிலொன் றாமே. எ

245 வேந்தன் உலகை [5]மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழி யாகிற்பர்
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாங்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே. அ

246 கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன் [6]முகம்பற்றி உண்ணுதோர்

பா - ம்—1கெடுமுடன். 2நல்வேடமே. 3சிகைநாண். 4பாரையும். 5மிகநின்று. 6முகிழ்பற்றி

மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
[1]மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே. கூ

247 தத்தஞ் [2]சமயத் [3]தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமுஞ்செயும் [4]மும்மையில் [5]இம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே. கo

கச. *வானச் சிறப்பு

248 அமுதூறு [6]மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்
[7]கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறுங் காஞ்சிரை ஆங்கது வாமே. க

249 வரையிடை நின்றிழி வான்நீர் அருவி
உரையில்லை [8]உள்ளத் [9]தகத்துநின் றூறு
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்
கரையில்லை எந்தை [10]கழுமணி யாறே. உ

கரு. †தானச் சிறப்பு

250 ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை [11]கரைந்துண்ணுங் காலம் அறிமினே. க

*இத்தலைப்பு இரண்டு பிரதிகளில் சிவவானச் சிறப்பு என்றுள்ளது.

†இப்பகுதியும் அடுத்ததும் தானச்சிறப்பு, துறந்தார்க்கீதல் என்னும் தலைப்போடு மூன்று பிரதிகளிற் காணப்படுகின்றன.

பா - ம்—1மேல்தண்டஞ் செய்வது. 2சமயக். 3தகுதியில். 4அம்மையில்; எம்மையில்; மெய்ம்மையில். 5இன்மைக்கே. 6மாமதன். 7கமுதூறு. 8உள்ளகத்துள்ளூறி நின்றும். 9தக்கதுநின். 10கருமணி. 11கவர்ந்துண்ணுங்.

கசு. அறஞ்செய்வான் திறம்

251 தாமறி வாரண்ணல் தாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்
தாமறி வார்சில தத்துவ ராவர்கள்
தாமறி வார்க்குத் தமர்பர னாமே. க

252 யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு [1]வாயுறை
யாவர்க்கு மாம்உண் ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. உ

253 அற்றுநின் றாருண் ணும் ஊணே [2]அறனென்னுங்
கற்றன [3]போதங் கமழ்பவர் மானிடர்
உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்
பற்றிவந் துண்ணும் பயன்அறி யாரே. ங

254 அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
[4]தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர் வெம்மை [5]பரந்து
விழிக்கவன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே. ச

255 தன்னை அறியாது [6]தானல என்னுதிங்
கின்மை யறியா திளையரென் றோராது
வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னந்
தன்மையின் நல்ல தவஞ்செய்யும் நீரே. ரு

256 *துறந்தான் வழிமுதற் சுற்றமும் இல்லை
இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை
மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்
அறந்தான் [7]அறியும் அளவறி [8]வாரே. சு

*ஒரு பிரதியில் இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் பின் முன்னாக வந்துள.

பா - ம்—1வாயறுகு. 2அறனெனு மற்றதன். 3போகங்கழல்பவர்; போதங்கழல்பவர். 4அழுக்கிய. 5பாரத திழிக்கவென்றென் செய்தீர். 6தானல்லார். 7வழிமுதலென்று. 8யாரே.

257 தான்தவஞ் செய்வதாஞ் [1]செய்தவத் தவ்வழி
மான்தெய்வ மாக மதிக்கும் மனிதர்கள்
ஊன்தெய்வ மாக உயிர்க்கின்ற பல்லுயிர்
நான்தெய்வம் என்று நமன்வரு வானே. எ

258 திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
[2]இளைப்பினை நீக்கும் [3]இருவழி உண்டு
கிளைக்குந் தனக்குமஅக் கேடில் புகழோன்
விளைக்குந் தவம்அறம் மேற்றுணை யாமே. அ

259 பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அறநெறிக் கல்லது
உற்றுங்க ளால்ஒன்றும் ஈந்தது வேதுணை
மற்றண்ணல் வைத்த வழிகொள்ளு மாறே. கூ

கஎ. *அறஞ்செயான் திறம்

260 எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல்லறஞ் செய்யா [4]தவர்செல்வம்
வட்டிகொண் [5]டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் [6]பதகர் பயன்அறி யாரே. க

261 ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம்அறி யாரே. உ

262 அறம்அறி யார்அண்ணல் பாதம் [7]நினையுந்
திறம்அறி யார்சிவ லோக நகர்க்குப்
புறம்அறி யார்பலர் பொய்ம்மொழி கேட்டு
மறம்அறி வார்பகை மன்னிநின் றாரே. ந

*இத்தலைப்புப் பிரதிகளில் அறஞ்செய்யாமை, அறஞ்செய்யான் தீமை, அறஞ்செய்யான் தன்மை எனப் பல படியாகக் காணப்படுகின்றது.

பா - ம்—1செய்த தவவழி. 2இளைப்பின்றி. 3இருவழியே. 4ாவர்செல்வம். 5டாட்டியே. 6பதகர்அப். 7அணையுந்.

263 இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்
உருமிடி நாக முரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் [1]தாழகி லாவே. ௪

264 [2]பரவப் படுவான் பரமனை யேத்தார்
இரவலர்க் [3]கீதலை யாயினும் ஈயார்
[4]கரகத்தால் நீரட்டிக் காவை [5]வளர்க்கார்
நரகத்தில் நிற்றிரோ [6]நாளெஞ்சி னீரே. ௫

265 வழிநடப் பாரின்றி வானோர் உலகங்
கழிநடப் [7]பார்கடந் தார்கருப் பாரும்
வழிநடக் கும்வினை மாசற [8]வோட்டிட
வழிநடக் கும்மள வீழ்ந்தொழிந் தாரே. ௬

266 *கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்
மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே. ௭

267 இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம்அறி யாரே. ௮

268 கெடுவது மாவதுங் கேடில் புகழோன்
நடுவல்ல செய்தின்ப நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யிற் பசுவது வாமே. ௯

269 செல்வங் கருதிச் [9]சிலர்பலர் வாழ்வெனும்
புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்

---

*இச்செய்யுள் ஒரு பிரதியில் இல்லை.

பா - ம்—1சாரகிலாவே. 2பரசப். 3கீத்தலை. 4கரகத்தே நீராட்டிக். 5வளரார். 6கல்நெஞ்சி. 7பார்நடந்தார் கரும்பாருமழி நடக். 8வோட்டிட்டொழி நடப்பார் வினை ஓங்கி நின்றாரே. 9சிலபல.

இல்லங் கருதி இறைவனை ஏத்துமின்
வில்லி இலக்கெய்த விற்குறி யாமே. ௧௦

௧அ. அன்புடைமை

270 அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. ௧

271 பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
[1]மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. ௨

272 என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
[2]பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
[3]என்போன் மணியினை எய்தவொண் ணாதே. ௩

273 ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி
பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர [4]நெறிகொடு [5]கொங்குபுக் காரே. ௪

274 என்னன் புருக்கி இறைவனை ஏத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியுந்
தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே. ௫

275 தானொரு காலஞ் சயம்புவென் றேத்தினும்
வானொரு காலம் வழித்துணை யாய்நிற்குந்
தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்
தானொரு வண்ணம்என் அன்பில்நின் றானே. ௬

பா - ம்—1மின்னைக் கடந்து. 2பொன்பேரகலிற்; பொன்போல் விறகிற். 3என்பொன். 4நெருக்கொடு. 5கோங்கு.

276 முன்படைத் தின்பம் படைத்த முதலிடை
அன்படைத் தெம்பெரு மானை அறிகிலார்
வன்படைத் திந்த அகலிடம் வாழ்வினில்
அன்படைத் [1]தான்தன் அகலிடத் தானே. எ

277 கருத்துறு செம்பொன்செய் [2]காய்கதிர்ச் சோதி
இருத்தியும் வைத்தும் இறைவனென் றேத்தியும்
அருத்தியுள் ஈசனை யாரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே. அ

278 நித்தலுந் துஞ்சும் பிறப்பையுஞ் செய்தவன்
வைத்த பரிசறிந் தேத்து மனிதர்கள்
[3]இச்சையு ளேவைப்பர் எந்தை பிரானென்று
நச்சியே அண்ணலை நாடுகி லாரே. கூ

279 அன்பினுள் ளான்புறத் [4]தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி [5]அமரும் அரும்பொருள்
அன்பினுள் [6]ளார்க்கே [7]அணைதுணை யாமே. க0

ககூ. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

280 இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் [8]செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே. க

281 இன்பப் பிறவிக் [9]கியல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில்பல [10]என்னினும்
[11]அன்பிற் கலவிசெய் தாதிப் பிரான்வைத்த
முன்பப் பிறவி முடிவது தானே. உ

பா - ம்—1தானரன். 2காயத்திற். 3இச்சையுள் வைப்பன். 4தானட. 5வருமரும்பொருள். 6ளோர்க்கே. 7அனைத்துணை. 8செய்தன்பு. 9கியலது. 10வேனிது. 11வன்பிற்.

282 அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி
இன்புறு கண்ணியொ [1]டேற்க இசைந்தன
துன்புறு கண்ணியைந் [2]தாடுந் துடக்கற்று
நண்புறு சிந்தையை நாடுமின் நீரே. ந

283 புணர்ச்சியுள் ஆயிழை மேல்அன்பு போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல் [3]லாருக்
குணர்ச்சியில் லாது குலாவி உலாவி
[4]அணைத்தலும் இன்பம் அதுவிது வாமே. ச

284 உற்றுநின் றாரொடு மத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றுந் தெரிந்தறி வார்இல்லை
பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே. ரு

285 கண்டேன் [5]கமழ்தரு கொன்றையி னான்அடி
கண்டேன் கரியுரி யான்றன் கழலிணை
கண்டேன் கமல மலர்உறை வானடி
கண்டேன் கழலதென் அன்பினுள் [6]யானே. சு

286 நம்பனை நானு விதப்பொரு ளாகுமென்
றும்பரில் வானவர் ஓதுந் தலைவனை
[7]இன்பனை இன்பத் திடைநின் றிரதிக்கும்
அன்பனை யாரும் அறியகி லாரே. எ

287 *முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்
அன்பில் இறைவனை யாம்அறி [8]வோம்என்பார்
இன்பப் பிறப்பும் இறப்பும் இலான்நந்தி
அன்பி லவனை அறியகி லாரே. அ

288 ஈசன் அறியும் இராப்பக லுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் [9]வார்களைத்

*இச்செய்யுளும் அடுத்ததும் இரண்டு பிரதிகளில் பின் முன்னாக வந்துள.

1டேற இசைந்தனன். 2தாடித் துடக்கறுத் தன்புறு. 3லார்க்குக் 4அணைத்தணைத்தின்பம். 5கழல்தரு. 6ளானே. 7இன்பத்திடைக் கின்றிரதிக்கு மீசனை. 8யோமென்பர். 9வார்கட்குத்.

[1]தேசுற் றறிந்து செயலற் றிருந்திடில்
ஈசன்வந் தெம்மிடை ஈட்டிநின் றானே. ௯

289 விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்
தொட்டுத் [2]தொடர்வன் தலையாப் பெருமையை
எட்டுமென் றாருயி ராய்நின்ற ஈசனை
மட்டுக் கலப்பது மஞ்சன மாமே. ௧௰

உ௰. கல்வி

290 குறிப்பறிந் [3]தேனுடல் உயிரது [4]கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் [5]பிரானை
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி [6]யாமிகுங் கல்விகற் றேனே. ௧

291 கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி உரைசெய்யுங்
கற்றறி [7]காட்டக் கயலுள [8]வாக்குமே. ௨

292 நிற்கின்ற [9]போதே நிலையுடை யான்கழல்
கற்கின்ற செய்மின் [10]கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்
மற்றொன் றிலாத [11]மணிவிளக் காமே. ௩

293 கல்வி யுடையார் [12]கழிந்தோடிப் போகின்றார்
பல்வி யுடையார் பாம்பரிந் துண்கின்றார்
எல்லியுங் காலையும் ஏத்தும் இறைவனை
வல்லியுள் [13]வாதித்த காயமு மாமே. ௪

294 துணையது வாய்வருந் தூயநற் சோதி
துணையது வாய்வருந் தூயநற் சொல்லாந்

பா - ம்—[1]தேசுற்று நின்று ; தேசுற்றிருநது. [2]தொடர்மின். [3]தேனுடலுள்ளுயிர். [4]கூட்டிச். [5]பிரானும். [6]யாமிருங்கல்விபெற். [7]கொட்ட. [8]வாகுமே. [9]போத. [10]கழிந்துறும். [11]மணவிளக். [12]கலந்தோடிப். [13]வாசித்த ; ஆதித்த.

துணையது வாய்வருந் [1]தூயநற் கந்தந்
துணையது வாய்வருந் தூயநற் கல்வியே. ௫

295 நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பற்றினாற் பண்பின் [2]பயன்கெடுங்
கோலொன்று பற்றினாற் கூடா பறவைகள்
மாலொன்று பற்றி மயங்குகின் றார்களே. ௬

296 ஆய்ந்துகொள் [3]வார்க்கரன் அங்கே வெளிப்படுந்
தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடும்
ஏய்ந்த இளமதி எட்டவல் லார்கட்கு
வாய்ந்த மனமல்கு நூலேணி யாமே. ௭

297 வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன்
கழித்துணை யாங்கற் றிலாதவர் சிந்தை
ஒழித்துணை யாம்உம் பராய்உல கேழும்
வழித்துணை யாம்பெருந் தன்மைவல் லானே. ௮

298 பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லா முதல்வன் அருள்பெறில்
[4]கிற்ற விரகிற் கிளரொளி வானவர்
கற்றவர் பேரின்பம் உற்றுநின் றாரே. ௯

299 [5]கடலுடை யான்மலை யானைந்து பூதத்
[6]துடலுடை யான்பல ஊழிதொ றூழி
அடல்விடை யேறும் அமரர்கள் நாதன்
இடமுடை யார்நெஞ்சத் தில்லிருந் தானே. ௧௦

௨௧. கேள்வி கேட்டமைதல்

300 அறங்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறங்கேட்டும் [7]வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் ஈசன்
திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே. ௧

பா - ம்—[1]தூய்மலர்க். [2]பயனங்கே. [3]வார்காண. [4]கிற்றுவல கிற். [5]கடலிடை. [6]துடலிடை. [7]மன்னர்.

301 *தேவர் பிரான்தனைத் திவ்விய மூர்த்தியை
யாவர் ஒருவர் அறிவார் அறிந்தபின்
ஓதுமின் கேள்மின் உணர்மின் உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கிநின் றாரே. ௨

302 மயன்பணி கேட்பது மாநந்தி [1]வேண்டின்
அயன்பணி கேட்பது அரன்பணி யாலே
சிவன்பணி கேட்பவர் தேவரு மாவர்
பயன்பணி கேட்பது பற்றது வாமே. ௩

303 பெருமான் இவனென்று பேசி யிருக்குந்
திருமா னிடர்பின்னைத் தேவரு மாவர்
[2]வருமா தவர்க்கு மகிழ்ந்தருள் செய்யும்
அருமா தவத்தெங்கள் ஆதிப் பிரானே. ௪

304 †ஈசன் அருளும் இறப்பும் பிறப்பையும்
பேசி யிருந்து பிதற்றி மகிழ்வெய்தி
நேசமு மாகும் நிகழொளி யாய்நின்று
வாச மலர்க்கந்த மன்னிநின் றானே. ௫

305 விழுப்பமுங் கேள்வியும் மெய்நின்ற ஞானத்
தொழுக்கமுஞ் சிந்தை உணர்கின்ற போது
வழுக்கி விடாவிடில் வானவர் கோனும்
இழுக்கின்றி எண்ணிலி [3]காலம தாமே. ௬

306 சிறியார் மணற்சோற்றில் தேக்கிடு மாபோல்
செறிவால் அனுபோகஞ் சித்திக்கும் என்னில்
குறியாத தொன்றைக் குறியாதார் தம்மை
அறியா திருந்தார் [4]அவராவர் அன்றே. ௭

307 உறுதுணை யாவ துயிரும் உடம்பும்
உறுதுணை யாவ துலகுறு கேள்வி

---

* இச்செய்யுளும் அடுத்ததும் ஒரு பிரதியில் பின் முன்னாக வந்துள.

† இச்செய்யுள் இரண்டு பிரதிகளில் இல்லை.

பா - ம்—[1]கேட்பின். [2]மருமாதவர்க்கு. [3]கோலமம். [4]அவரவர்.

செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே. அ

308 புகழநின் றார்க்கும் புராணன்எம் ஈசன்
இகழநின் றார்க்கும் இடும்பைக் கிடமா
மகிழநின் றதியை ஓதி [1]உணராக்
[2]கழியநின் றார்க்கொரு [3]கற்பசு வாமே. கூ

309 *வைத்துணர்ந் தான்மனத் தோடும்வாய் பேசி
ஒத்துணர்ந் தான்உரு ஒன்றொடொன் [4]றொவ்வா
தச்சுழன் றாணி கலங்கினும் ஆதியை
நச்சுணர்ந் தார்க்கே நணுகலு மாமே. கO

உஉ. கல்லாமை

310 கல்லா தவருங் கருத்தறி காட்சியை
வல்லா ரெனில்அருட் கண்ணான் மதித்துளோர்
கல்லாதார் உண்மைபற் றாநிற்பர் கற்றோருங்
கல்லாதார் [5]இன்பங் காணுகி லாரே. க

311 வல்லார்கள் என்றும் வழியொன்றி வாழ்கின்றார்
அல்லா தவர்கள் [6]அறிவு பலஎன்பார்
எல்லா இடத்தும் உளன்எங்கள் தம்இறை
கல்லா தவர்கள் கலப்பறி யாரே. உ

312 நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்காள்
எல்லா வுயிர்க்கும் இறைவனே யாயினுங்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே. ந

313 கில்லேன் வினைத்துய ராக்கு மயலானேன்
கல்லேன் அரனெறி அறியாத் தகைமையின்

*இச்செய்யுள் ஒரு பிரதியில் இல்லை.

பா - ம்—[1]உணரார். [2]நகழநின். [3]நார்பசு. [4]றொவ்வாவாம்.
[5]பேரின்பங். [6]அறிவம்பலமென்பார்.

வல்லேன் வழங்கும் பொருளே மனத்தினுட்
கல்லேன் கழியநின் றாடவல் லேனே. ௪

314 நில்லாது சீவன் நிலையன் றெனவெண்ணி
வல்லார் அறத்துந் தவத்துளும் ஆயினார்
கல்லா மனித்தர் கயவர் உலகினில்
பொல்லா [1]வினைத்துயர் [2]போகஞ்செய் வாரே. ௫

315 விண்ணினின் உள்ளே விளைந்த விளங்கனி
கண்ணினின் உள்ளே கலந்தங் கிருந்தது
மண்ணினின் உள்ளே மதித்து மதித்துநின்
றெண்ணி எழுதி இளைத்துவிட் டாரே. ௬

316 கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடா காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்கும்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே. ௭

317 கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன்அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே. ௮

318 கற்றுஞ் சிவஞானம் இல்லாக் [3]கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்றன்பில் நிற்போர் கணக்கறிந் தார்களே. ௯

319 ஆதிப் பிரான்அம ரர்க்கும் [4]பரஞ்சுடர்
சோதி அடியார் தொடரும் பெருந்தெய்வம்
ஓதி உணரவல் லோம்என்பர் உள்நின்ற
சோதி [5]நடத்துந் தொடர்வறி யாரே. ௧௦

பா - ம்—[1]உளத்துயர். [2]போதஞ்செய். [3]கலாதிகள். [4]அரும்பொருள். [5]நடந்த தொடர்வறிவாரே.

உங. *நடுவு நிலைமை

320 நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே. க

321 நடுவுநின் றான்நல்ல கார்முகில் வண்ணன்
நடுவுநின் றான்நல்ல நான்மறை [1]யோதி
நடுவுநின் [2]றார்சிலர் ஞானிக ளாவோர்
நடுவுநின் [3]றார்நல்ல நம்பனு மாமே. உ

322 நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்
நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்
நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் றாரொடு நானும்நின் றேனே. ங

323 தோன்றிய எல்லாந் [4]துடைப்பன் அவனன்றி
ஏன்றுநின் [5]றாரென்றும் ஈசன் இணையடி
மூன்றுநின் [6]றார்முதல் வன்திரு நாமத்தை
நான்றுநின் றார்நடு வாகிநின் றாரே. ச

உச. கள்ளுண்ணாமை

324 கழுநீர்ப் பசுப்பெறிற் கயந்தோறுந் தேரா
கழுநீர் விடாய்த்துத்தங் காயஞ் சுருக்கும்
முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை [7]அகன்றோர்
செழுநீர்ச் சிவன்றன் சிவானந்தத் தேறலே. க

325 சித்தம் [8]உருக்கிச் சிவமாஞ் சமாதியில்
[9]ஒத்த சிவானந்தத் தோவாத தேறலைச்

---

*இது ஒரு பிரதியில் நடுவு நில்லாமை யெனவும், மற்றொன்றில் நடுவு நிலையாமை யெனவும் காணப்படுகிறது.

பா - ம்—[1]யோகி. [2]றார்சிவ. [3]றானல்ல. [4]துடைப்பனவனறிவாய். [5]றாரெனும். [6]றான்முதல். [7]யதற்றோர். [8]முருகி. [9]ஒத்துச் சிவானந்தம் ஓவாத தேறலை.

சுத்த மதுவுண்ணச் சுவானந்தம் விட்டிடா
[1]நித்தல் இருத்தல் [2]கிடத்தல்கீழ்க் காலே. உ

326 காமமுங் கள்ளுங் கலதிகட் கேயாகும்
[3]மாமல முஞ்சம யத்துள [4]மயலுறும்
போமதி யாகும் புனிதன் இணையடி
யோமய ஆனந்தத் தேறல் உணர்வுண்டே. ங

327 வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்பவர்
காமத்தோர் காமக்கள் ளுண்டே கலங்குவர்
ஓமத்தோர் உள்ளொளிக் குள்ளே உணர்வர்கள்
நாமத்தோர் அன்றே நணுகுவர் தாமே. ச

328 உள்ளுண்மை ஓரார் [5]உணரார் பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினின் [6]வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகஞ் [7]சேர்வுறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே. ரு

329 மயக்குஞ் சமய மலமன்னு மூடர்
மயக்கு மதுவுண்ணு மாமூடர் தேரார்
மயக்குறு மாமாயை [8]மாயையின் வீடு
மயக்கில் தெளியின் [9]மயக்குறும் அன்றே. சு

330 மயங்குந் தியங்குங் கள்வாய்மை அழிக்கும்
இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்தார்
இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே. எ

331 இராப்பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்
இராப்பகல் அற்ற இறையடி இன்பத்
திராப்பகல் மாயை இரண்டிடத் தேனே. அ

பா - ம்—[1]நிற்றல். [2]கிடத்தலின் கீழ்காலே; கிடத்தலினீள் காலே. [3]மாமய. [4]மயலறும்; மயலற்றுப். [5]உணர். [6]வாழ்வற்றார். [7]சேர்வுற்றார். [8]மாயையின் மாமாயை. [9]மயலுறுமாறே; மயங்குறு மன்றே.

332 சத்தியை வேண்டிச் [1]சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானந் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞானஆ னந்தத்திற் சார்தலே. கூ

333 சத்தன் அருள்தரிற் சத்தி அருளுண்டாஞ்
சத்தி அருள்தரிற் சத்தன் அருளுண்டாஞ்
சத்தி சிவமாம் இரண்டுந்தன் னுள்வைக்கச்
[2]சத்தியம் எண்சித்தித் தன்மையு மாமே. க௦

334 [3]தத்துவம் நீக்கி மருள்நீக்கித் [4]தானாகிப்
பொய்த்தவம் நீக்கிமெய்ப் போகத்துட் [5]போகியே
மெய்த்த சகமுண்டு விட்டுப் [6]பரானந்தச்
சித்திய தாக்குஞ் சிவானந்தத் தேறலே. கக

335 யோகிகள் [7]கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைப் பொசித்தவர் எண்சித்தி
மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்
றாகும் மதத்தால் அறிவழிந் தாரே. க௨

336 உண்ணீர் அமுத முறுமூ றலைத்திறந்
தெண்ணீர் [8]குரவன் இணையடித் தாமரை
நண்ணீர் சமாதியி [9]னாடிநீ ரானலங்
கண்ணாற் றொடேசென்று கால்வழி காணுமே. கங

முதல் தந்திரம் முற்றிற்று.

பா - ம்—[1]சமயத்துக். [2]சத்தியும். [3]சத்தது. [4]தானாக்கிப். [5]போக்கியே. [6]பேரானந்தச். [7]கால்காட்டி. [8]குரவின். [9]னடுணரா நலங்.

இரண்டாந் தந்திரம்

க. *அகத்தியம்

337 நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து
கெடுகின்ற தெம்பெரு [1]மானென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னிரென் றானே. க

338 அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயஞ்செய் மேல்பா லவனொடு
மங்கி [2]உதயஞ்செய் வடபால் தவமுனி
எங்கும் வளங்கொள் இலங்கொளி தானே. உ

உ. பதிவலியில் வீரட்டம் எட்டு

339 கருத்துறை [3]அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத் துயிர்களை யெல்லாம்
வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே. க

340 [4]கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு
நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்
[5]தலையை யரிந்திட்டுச் சந்திசெய் தானே. உ

341 எங்கும் [6]பரந்தும் இருநிலந் தாங்கியுந்
தங்கும் படித்தவன் தாளுணர் தேவர்கள்
பொங்குஞ் சினத்துள் அயன்தலை முன்னற
அங்(கு)அச் சுதனை உதிரங்கொண் டானே. ங

*இத்தலைப்புச் சில பிரதிகளில் இல்லை. இப்பகுதியும் அடுத்த பகுதியும் வீரட்டமெட்டு என்னுந் தலைப்போடு காணப்படுகின்றன.

பா - ம்—[1]மானென தீசன். [2]உதயஞ்செயும் வடமாமுனி. [3]அந்தணன். [4]தலையிற். [5]தலையைப் பரிந்திட்டு. [6]பரிந்தும்.

342 எங்கும் [1]கலந்தும்என் உள்ளத் தெழுகின்ற
அங்க முதல்வன் அருமறை [2]யோகிபாற்
பொங்குஞ் சலந்தரன் [3]போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித் தாழிசெய் தானே. ௪

343 அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் [4]எய்தமை யாரறி வாரே. ௫

344 [5]முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி யுரியர னாவ தறிகிலர்
சத்தி கருதிய தாம்பல தேவரும்
[6]அத்தீயின் உள்ளெழுந் தன்று கொலையே. ௬

345 மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற [7]நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி [8]யோகமாய்
[9]ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே. ௭

346 இருந்த மனத்தை இசைய இருத்திப்
பொருந்தி யிலிங்க [10]வழியது போக்கித்
திருந்திய காமன் [11]செயலழித் தங்கண்
அருந்தவ யோகங் கொறுக்கை அமர்ந்ததே. ௮

---

௩. *இலிங்க புராணம்

347 அடிசேர்வன் [12]என்னஎம் ஆதியை நோக்கி
முடிசேர் மலைமக [13]னார்மக ளாகித்

---

*இப்பகுதியும் அடுத்த பகுதியும் தக்கன்வேள்வி யென்னுந் தலைப்போடு சில பிரதிகளிற் காணப்படுகின்றன.

பா - ம்—[1]கலந்தென். [2]யோகிபாற். [3]போர்செலல்; போர் செல்ல. [4]சுட்டமை. [5]முத்திக். [6]அத்தியின். [7]நோக்கிமுக். [8]யேக மாய். [9]ஞாலங். [10]வெளியது. [11]செயலழியத்தம்; செயலழியத்தங் கருந்தவ. [12]என்னவகாதியை. [13]ளானமக.

திடமார் தவஞ்செய்து தேவர் அறியப்
படியார அர்ச்சித்துப் பத்திசெய் தானே. ௧

348 திரிகின்ற [1]முப்புரஞ் செற்ற பிரானை
[2]அரியனென் றெண்ணி அயர்வுற வேண்டா
[3]புரிவுடை யாளர்க்குப் பொய்யலன் ஈசன்
[4]பரிவொடு நின்று பரிசறி [5]வானே. ௨

349 ஆழி வலங்கொண் டயன்மால் இருவரும்
ஊழி வலஞ்செய்ய ஒண்சுட ராதியும்
ஆழி கொடுத்தனன் அச்சுதற் கவ்வழி
வாழிப் பிரமற்கும் வாள்கொடுத் தானே. ௩

350 தாங்கி இருபது தோளுந் தடவரை
ஓங்க எடுத்தவன் [6]ஒப்பில் பெருவலி
ஆங்கு நெரித்தம ராவென் றழைத்தபின்
[7]நீங்கா அருள்செய்தான் நின்மலன் தானே. ௪

351 உறுவ(து) அறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆன்ஐந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே. ௫

352 ஓடிவந் தெல்லாம் ஒருங்கிய தேவர்கள்
வாடி முகமும் வருத்தத்துத் தாஞ்சென்று
நாடி இறைவா தழஎன்று [8]கும்பிட
ஈடில் புகழோன் எழுகவென் றானே. ௬

௪. தக்கன் வேள்வி

353 தந்தை பிரான்வெகுண் டான்தக்கன் [9]வேள்வியை
வெந்தழல் ஊடே [10]புறப்பட விண்ணவர்

பா - ம்—[1]வப்புரஞ். [2]அரியயனென். [3]புரியுடை; புரிசடை. [4]பரிசொடு. [5]வார்க்கே. [6]ஒய்வில். [7]நீங்க. [8]கூப்பிட்டு. [9]வேள்வியில். [10]புறப்பட்ட.

முந்திய பூசை முடியார் [1]முறைகெட்டுச்
சிந்தினர் அண்ணல் சினஞ்செய்த போதே. க

354 சந்தி செயக்கண் டெழுகின் றரிதானும்
எந்தை யிவனல்ல யாமே உலகினிற்
பந்தஞ்செய் பாசத்து [2]வீழ்ந்து தவஞ்செய்ய
அந்தமி லானும் அருள்புரிந் தானே. உ

355 அப்பரி சேயய னார்பதி வேள்வியுள்
அப்பரி சேயங்கி அதிசய மாகிலும்
அப்பரி சேயது நீர்மையை [3]புள்கலந்
தப்பரி சேசிவன் ஆலிக்கின் றானே. ௩

356 அப்பரி சேஅயன் மால்முதல் தேவர்கள்
அப்பரி சேயவ ராகிய காரணம்
அப்பரி [4]சங்கி யுளநாளும் உள்ளிட்
டப்பரி சாகி [5]அலர்ந்திருந் தானே. ச

357 [6]அலர்ந்திருந் தானென் றமரர் துதிப்பக்
குலந்தருங் [7]கீழங்கி கோளுற நோக்கிச்
சிவந்த [8]பரமிது சென்று கதுவ
உவந்த பெருவழி [9]யோடிவந் தானே. ரு

358 அரிபிர மன்தக்கன் அருக்க னுடனே
வருமதி லாலை வன்னிநல் இந்திரன்
சிரமுக நாசி [10]சிறந்தகை [11]தோள்தான்
அரனருள் இன்றி அழிந்தநல் லோரே. சா

359 செவிமந் திரஞ்சொல்லுஞ் [12]செய்தவத் தேவர்
[13]அவிமந் திரத்தின் அடுக்களை [14]கோலிச்
செவிமந் திரஞ்செய்து தாமுற நோக்குங்
குவிமந் திரங்கொல் கொடியது வாமே. எ

பா - ம்—[1]முறைகெடச். [2]வீய்ந்து. [3]புடைகலந். [4]சங்கியும் நாளும் உள்ளிட்டபின். [5]அலந்திருந்; அமர்ந்திருந். [6]அலந்திருந். [7]கோளங்கி. [8]பரிமீது; பழமிது. [9]யோட்டுவந். [10]சிந்தைகை. [11]தோளார்; தோளான். [12]சேமத்துத். [13]விதிமந். [14]கோயிலுச்.

360 நல்லார் நவகுண்டம் ஒன்பதும் [1]இன்புறப்
[2]பல்லார் அமரர் பரிந்தருள் செய்கென
[3]வில்லாற் புரத்தை விளங்கெரி கோத்தவன்
பொல்லா அசுரர்கள் பொன்றும் படிக்கே. அ

361 தெளிந்தார் கலங்கினும் [4]நீகலங் காதே
அளிந்தாங் கடைவதெம் ஆதிப் பிரானை
[5]விளிந்தா னதுதக்கன் வேள்வியை வீயச்
சுளிந்தாங் கருள்செய்த தூய்மொழி யானே. கூ

ரு. பிரளயம்

362 கருவரை மூடிக் கலந்தெழும் வெள்ளத்
திருவருங் கோவென் றிகல இறைவன்
ஒருவனும் நீருற ஓங்கொளி யாகி
அருவரை யாய்நின் றருள்புரிந் தானே. க

363 அலைகடல் ஊடறுத் தண்டத்து வானோர்
தலைவன் எனும்பெயர் தான்றலை மேற்கொண்
[6]டுலகார் அழற்கண் டுள்வீழா தோடி
அலைவாயில் வீழாமல் அஞ்சலென் றானே. உ

364 தண்கடல் விட்ட தமரருந் தேவரும்
எண்கடல் சூழெம் பிரானென் றிறைஞ்சுவர்
விண்கடல் செய்தவர் மேலெழுந் தப்புறங்
கண்கடல் செய்யுங் கருத்தறி யாரே. ங

365 சமைக்கவல் லானைச் சயம்புவென் றேத்தி
அமைக்கவல் லாரிவ் வுலகத்து ளாரே
[7]திகைத்ததெண் ணீரிற் கடலொலி ஓசை
[8]மிகைக்கொள அங்கி மிகாமைவைத் தானே. ச

பா - ம்—[1]இன்பிற். [2]பல்லாராமா ரமராபதிரிந்தருள். [3]வில்லாய் வரையை விளங்கொளி சொற்றவன். [4]தீகலங். [5]விளிந்தானத்தக்கனவ். [6]டுலகிலாராழங்கண் ; டுலகலாராழங்கண் ; டுலகாராழங்கண். [7]திசைத்ததெண். [8]மிசைக் கொளி ; மிகைக்கொலி.

366 பண்பழி செய்வழி பாடுசென் றப்புறங்
கண்பழி யாத கமலத் திருக்கின்ற
நண்பழி யாளனை நாடிச்சென் [1]றச்சிரம்
விண்பழி [2]யாத விருத்திகொண் டானே. ௫

௬. சக்கரப்பேறு

367 [3]மால்போ [4]தகனென் னும் [5]வண்மைக்கிங் காங்காரங்
[6]கால்போதங் கையினோ [7]டந்தரச் சக்கர
மேல்போக வெள்ளி மலைஅம ராபதி
பார்போக மேழும் படைத்துடை யானே. ௧

368 சக்கரம் பெற்றுநல் தாமோ தரன்தானும்
சக்கரந் தன்னைத் [8]தரிக்கவொண் ணாமையால்
மிக்கரன் தன்னை விருப்புடன் அர்ச்சிக்கத்
தக்கநற் சத்தியைத் தான்கூறு செய்ததே. ௨

369 கூறது வாகக் [9]குறித்துநற் சக்கரங்
கூறது [10]செய்து கொடுத்தனன் மாலுக்குக்
கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குக்
கூறது செய்து [11]தரித்தனன் கோலமே. ௩

370 தக்கன்றன் வேள்வி தகர்த்தநல் வீரர்பால்
தக்கன்றன் வேள்வியில் தாமோ தரன்தானுஞ்
சக்கரந் தன்னைச் சசிமுடி மேல்விட
அக்கி உமிழ்ந்தது வாயுக் கரத்திலே. ௪

௭. எலும்புங் கபாலமும்

371 *எலும்புங் கபாலமும் ஏந்தி எழுந்து
வலம்பன் மணிமுடி வானவ ராதி

*இச்செய்யுள் ஒரு பிரதியில் அடுத்த செய்யுட்குப்பின் காணப்படுகிறது.

பா - ம்—[1]றச்சரம். [2]யாது. [3]மாபோ. [4]தகனென்று. [5]வண்மைக் கிரங்கார். [6]ஆபோதங் ; கால்போகங். [7]டந்தச். [8]திரிக்கவொண் ; தரிக்கவெண். [9]குறித்தநற். [10]செய்யக். [11]கொடுத்தனன்.

எலும்புங் கபாலமும் ஏந்தில னாகில்
எலும்புங் கபாலமும் இற்றுமண் ணாமே. க

அ. *அடிமுடி தேடல்

372 பிரமனும் மாலும் [1]பிரானேநான் என்னப்
பிரமன்மால் தங்கள்தம் பேதைமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி அரற்றுகின் றாரே. க

373 ஆமேழுலகுற நின்றஎம் அண்ணலுந்
தாமே ழுலகில் தழற்பிழம் பாய்நிற்கும்
வானே ழுலகுறும் மாமணி கண்டனை
நானே [2]அறிந்தேன் அவன்ஆண்மை யாலே. உ

374 ஊனாய் உயிராய் உணர்வங்கி யாய்முன்னஞ்
சேணாய்வா னோங்கித் திருவுரு வாய்அண்டத்
தாணுவும் ஞாயிறுந் தண்மதி யுங்கடந்
தாண்முழு தண்டமு மாகிநின் றானே. ங

375 நின்றான் நிலமுழு தண்டத்துள் நீளியன்
அன்றே [3]யவன்வடி வஞ்சின ராய்ந்தது
சென்றார் இருவர் திருமுடி மேற்செல
நன்றாங் கழலடி நாடவொண் ணாதே. ச

376 சேவடி ஏத்துஞ் செறிவுடை வானவர்
மூவடி தாவென் றானும் முனிவரும்
பாவடி யாலே பதஞ்செய் பிரமனுந்
தாவடி யிட்டுத் தலைப்பெய்து மாறே. ரு

377 தானக் கமலத் திருந்த சதுமுகன்
தானக் [4]கருங்கட லூழித் தலைவனும்

*இப்பகுதியிலுள்ள செய்யுள்கள் எலும்புங் கபாலமும் என்ற தலைப்பினோடேயே சில பிரதிகளிற் காணப்படுகின்றன.

பா - ம்—[1]பிரானும்நான். [2]அறிந்தேனென் ஆண்மையினாலே; அழிந்தேனல னாண்மையினாலே. [3]யவனடியஞ்சின. [4]கருங்கடன் வாழித்.

ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற
தானப் பெரும்பொருள் [1]தன்மைய தாமே. ௬

378 ஆலிங் கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்
மேலிங்ஙன் வைத்ததோர் மெய்ந்நெறி [2]முன்கண்
டாலிங் கனஞ்செய் [3]துலகம் வலம்வருங்
[4]கோலிங் கமைஞ்சருள் கூடலு மாமே. ௭

379 வாள்கொடுத் தானை வழிபட்ட தேவர்கள்
ஆள்கொடுத் தெம்போல் அரனை அறிகிலர்
ஆள்கொடுத் தின்பங் [5]கொடுத்துக்கோ ளாகத்
தாள்கொடுத் தானடி சாரகி லாரே. ௮

380 *ஊழி வலஞ்செய்தங் கோரும் ஒருவற்கு
வாழி சதுமுகன் வந்து [6]வெளிப்படும்
வீழித் தலைநீர் விதித்தது தாவென்
றூழிக் கதிரோன் ஒளியைவென் றானே. ௯

---

௯. †சர்வ சிருஷ்டி

381 ஆதியோ டந்தம் இலாத [7]பராபரம்
போதம தாகப் புணரும் பராபரை
சோதி யதனிற் [8]பரந்தோன்றத் தோன்றுமாந்
தீதில் பரையதன் பால்திகழ் நாதமே. ௧

382 நாதத்தில் விந்துவும் நாதவிந் [9]துக்களில்
தீதற் றகம்வந்த [10]சிவன்சத்தி என்னவே
[11]பேதித்து ஞானங் கிரியை [12]பிறத்தலால்
வாதித்த விச்சையில் வந்தெழும் விந்துவே. ௨

---

*ஒரு பிரதியில் இச்செய்யுளின் முன் 'அடிமுடி காண்பார்' என்று தொடங்கும் 98-ம் செய்யுள் காணப்படுகிறது.

†இத்தலைப்புச் சில பிரதிகளில் சிருஷ்டி யென்றே யுளது.

பா - ம்—[1]தன்மையினுமே. [2]முன்கண்டு வாலிங். [3]துலகமலம் வருங். [4]கோலிங்கனமருள். [5]கொடுத்தகோ. [6]வெளிப்பட்டு. [7]பராபரன். [8]பரந்தோன்றித் [9]துக்களைத். [10]சிவசத்தி. [11]பேதித்த. [12]மறத்தலால், பிதற்றலால்.

383 இல்லது சத்தி இடந்தனில் உண்டாகிக்
கல்லொளி போலக் கலந்துள் ளிருந்திடும்
வல்லது ஆக வழிசெய்த [1]அப்பொருள்
[2]சொல்லது [3]சொல்லிடில் தூராதி தூரமே. ௩

384 தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்
ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்ப்
பாரச் சதாசிவம் [4]பார்முதல் ஐந்துக்குஞ்
சார்வத்துச் சத்திஓர் [5]சாத்துமா னாமே. ௪

385 [6]மானின்கண் வானாகி வாயு [7]வளர்ந்திடும்
கானின்கண் நீருங் கலந்து கடினமாய்த்
தேனின்கண் ஐந்துஞ் செறிந்தைந்து பூதமாய்ப்
[8]பூவின்கண் நின்று பொருந்தும் புவனமே. ௫

386 புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசை [9]யானாய்
புவனம் [10]படைப்பானப் புண்ணியன் தானே. ௬

387 புண்ணியன் நந்தி [11]பொருந்தி உலகெங்கும்
[12]தண்ணிய மானை வளர்த்திடுஞ் சத்தியுங்
[13]கண்ணியல் பாகக் கலவி முழுதுமாய்
[14]மண்ணியல் பாக மலர்ந்தெழு பூவிலே. ௭

388 நீரகத் தின்பம் பிறக்கும் நெருப்பிடை
[15]காயத்திற் சோதி பிறக்குமக் காற்றிடை
ஓர்வுடை நல்லுயிர்ப் பாதம் ஒலிசத்தி
நீரிடை மண்ணின் நிலைப்பிறப் பாமே. ௮

பா - ம்—[1]சோதியைச். [2]சொல்லாது. [3]சொல்லிட்டுத். [4]பார்முக மைந்தாகிச். [5]சார்வத்துச் சத்தியோர் சாத்து விமானமே; ஆர்வத்துச் சத்தி ஓராவத்துமானுமே. [6]வானின்கண். [7]வளர்ந்தனிற். [8]பூணின்கண். [9]வாயயன். [10]படைப்பான்; படைப்பானும். [11]பொருந்தும். [12]மண்ணியல்பாகி வளர்ந்திடுஞ். [13]தண்ணியல்பாகித் தாணி. [14]கண்ணியல்பாகிக் கலந்தெழும். [15]காய்கதிர்ச்; கார்கத்திற்.

389 உண்டுல கேழும் உமிழ்ந்தான் உடனாகி
அண்டத் தமரர் தலைவனும் ஆதியுங்
கண்டச் சதுமுகக் காரணன் தன்னொடும்
பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே. ௯

390 ஓங்கு பெருங்கடல் உள்ளுறு வானொடும்
பாங்கார் கயிலைப் [1]பராபரன் தானும்
வீங்குங் கமல மலர்மிசை மேலயன்
ஆங்குயிர் வைக்கும் அதுவுணர்ந் தானே. ௧0

391 காரணன் அன்பிற் கலந்தெங்கும் நின்றவன்
நாரணன் நின்ற நடுவுட லாய்நிற்கும்
பாரணன் அன்பிற் பதஞ்செய்யும் நான்முகன்
ஆரண மாய்உல காயமர்ந் தானே. ௧௧

392 பயன்எளி தாம்பரு மாமணி செய்ய
நயன்எளி தாகிய நம்பன்ஒன் றுண்டு
அயன்ஒளி யாயிருந் தங்கே படைக்கும்
பயனெளி [2]தாம்வய [3]ணங்தெளிந் தேனே. ௧௨

393 போக்கும் வரவும் புனிதன் அருள்புரிந்
தாக்கமுஞ் சிந்தைய தாகின்ற காலத்து
மேக்கு [4]மிகநின்ற எட்டுத் திசையொடுந்
தாக்குங் கலக்குந் தயாபரன் தானே. ௧௩

394 நின்றுயி ராக்கு நிமலன்என் னுருயிர்
ஒன்றுயி ராக்கும் அளவை உடலுற
[5]முன்றுய ராக்கும் [6]உடற்குந் துணையதா
நன்றுயிர்ப் பானே நடுவுநின் றானே. ௧௪

395 ஆகின்ற தன்மையில் அக்கணி கொன்றையன்
வேகின்ற செம்பொனின் [7]மேலணி மேனியன்
போகின்ற சீவன் புகுந்துட லாய்உளன்
ஆகின்ற தன்மைசெய் [8]ஆண்டகை யானே. ௧௫

பா - ம்—[1]பராபரனாகி; பராபரனுதனும். [2]தாமயன் பண்டெளிந். [3]னங்தெளிந். [4]மிசைநின்ற. [5]முன்றுயி. [6]முடக்குந். [7]மெல்லணி. [8]தாண்டகை.

396 ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளக்கும்
பருவங்கள் [1]தோறும் பயன்பல வான
[2]திருவொன்றிற் [3]செய்கை செகமுற்று மாமே. ௧௬

397 புகுந்தறி வான்புவ னாபதி அண்ணல்
புகுந்தறி [4]வான்புரி சக்கரத் தண்ணல்
புகுந்தறி [5]வான்மலர் மேலுறை புத்தேள்
புகுந்தறி [6]யும்முடிக் காகினின் [7]றாரே. ௧௭

398 ஆணவச் சத்தியும் ஆம்அதில் ஐவருங்
காரிய காரண ஈசர் கடைமுறை
பேணிய ஐந்தொழி லால்விந்து விற்பிறந்(து)
ஆணவம் நீங்கா தவரென லாகுமே. ௧௮

399 உற்றமுப் பாலொன்று [8]மாயாள் உதயமா
மற்றைய [9]மூன்று மாயோ தயம்விந்து
[10]பெற்றவன் நாதம் பரையிற் பிறத்தலால்
துற்ற பரசிவன் தொல்விளை யாட்டிதே. ௧௯

400 [11]ஆகாய மாதி சதாசிவ ராதியென்
போகாத சத்தியுட் போந்துடன் போந்தனர்
மாகாய [12]ஈசன் அரன்மால் [13]பிரமனும்
ஆகாயம் பூமி காண [14]அளித்தலே. ௨௦

401 அளியார் [15]முக்கோணம் வயிந்தவந் தன்னில்
அளியார் திரிபுரை [16]யாம்அவள் தானே
அளியார் சதாசிவ [17]மாகி அமைவாள்
அளியார் கருமங்கள் [18]ஐந்துசெய் வாளே. ௨௧

பா - ம்—[1]என்றும் பயப்புப் பலவாம். [2]திருவொன்றின்; திருவொன்றிச். [3]சேர்க்கை; சிறக்கை. [4]வான்புரிச். [5]வான்மலரார்வுறை; வான்மலராவுறை. [6]பும்முழக். [7]றானே. [8]மையாள். [9]மூன்றுமா மாயாவுதயம். [10]பெற்றவள். [11]ஆகமமாதி சோதி வராதியென். [12]ஈசனும் மாலாய்ப் பிரமனுப். [13]பிரமன். [14]அளித்ததே. [15]முக்கோண. [16]யாமவளாலே. [17]மாதிபவைவர். [18]ஐந்துஞ்செய் வாரே.

402 வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
[1]காரணி காரிய மாகக் கலந்தவள்
[2]வாரணி ஆரணி [3]வானவர் மோகினி
பூரணி [4]போதாதி போதமு மாமே. உஉ

403 *நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்றங் கியங்கும் அரன்திரு மாலவன்
[5]மன்றது செய்யும் மலர்மிசை மேலயன்
என்றிவ ராக இசைந்திருந் தானே. உந

404 *ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் [6]அளித்தான்
ஒருவனு மேஉல கேழும் [7]துடைத்தான்
ஒருவனு [8]மேஉல கோடுயிர் தானே. உச

405 செந்தா மரைவண்ணன் தீவண்ணன் எம்இறை
[9]மைந்தார் முகில்வண்ணன் மாயஞ்செய் பாசத்தும்
கொந்தார் குழலியர் கூடிய கூட்டத்தும்
அந்தார் பிறவி [11]அறுத்துநின் றானே. உரு

406 *தேடுந் திசைஎட்டுஞ் சீவன் உடல்உயிர்
கூடும் பிறவிக் குணஞ்செய்த மாநந்தி
ஊடு மவர்தம துள்ளத்துள் ளேநின்று
நாடும் வழக்கமும் நான்அறிந் தேனே. உசா

407 ஓராய மேஉல கேழும் [12]படைப்பதும்
ஓராய மேஉல கேழும் [13]அளிப்பதும்
ஓராய மேஉல கேழும் [14]துடைப்பதும்
ஓராய [15]மேஉல கோடுயிர் தானே. உஎ

* இச் செய்யுள் ஒரு பிரதியில் இல்லை.

பா - ம்—[1]காரண. [2]வாரணமாரணி. [3]யானஅம். [4]பூதாதி ; போகாதி. [5]நன்றது. [6]அளந்தான் ; உளர்ந்தான். [7]கடந்தான். [8]மேஉடலோடுயிர். [9]மஞ்சார். [10]ஐந்தார். [11]அமைத்துநின். [12]படைத்தது. [13]நடப்பது. [14]இறப்பது ; பிறப்பது. [15]மேஉடலோடுயிர்.

408 *நாதன் ஒருவனும் நல்ல இருவருங்
கோது குலத்தொடுங் கூட்டிக் குழைத்தனர்
ஏது பணியென் றிசையும் [1]இருவருக்
காதி இவனே அருளுகின் றானே. ௨௮

409 அப்பரி செண்பத்து நான்குறூ றாயிரம்
மெய்ப்பரி செய்தி விரிந்துயி ராய்நிற்கும்
[2]பொய்ப்பரி செய்திப் புகலும் [3]மனிதர்கட்
கிப்பரி சேஇருள் [4]மூடிநின் றானே. ௨௯

410 ஆதித்தன் சந்திரன் [5]அங்கிஎண் பாலர்கள்
போதித்த வானொலி [6]பொங்கிய நீர்புவி
வாதித்த சத்தாதி வாக்கு மனாதிகள்
ஓதுற்ற மாயையின் விந்துவின் [7]உற்றதே. ௩௦

௧௦. திதி

411 புகுந்துநின் றான்வெளி யாய்இரு ளாகிப்
புகுந்துநின் [8]றான்புகழ் வாய்இகழ் வாகிப்
புகுந்துநின் றான்உட லாய்உயி ராகிப்
புகுந்துநின் றான்புந்தி மன்னிநின் றானே. ௧

412 தானே திசையொடு தேவரு மாய்நிற்குந்
தானே உடலுயிர் தத்துவ மாய்நிற்குந்
தானே கடல்மலை [9]யாதியு மாய்நிற்குந்
தானே உலகில் தலைவனு மாமே. ௨

413 உடலாய் உயிராய் உலகம தாகிக்
கடலாய்க் கார்முகில் நீர்பொழி வானாய்
இடையாய் உலப்பிலி எங்குந்தா னாகி
அடையார் [10]பெருவழி அண்ணல்நின் றானே. ௩

* இச்செய்யுள் ஒரு பிரதியில் இல்லை.

பா - ம்—[1]ஒருவருக். [2]அப்பரிசேதென் று. [3]மனிதர்கள். [4]மூடநின்றாரே. [5]அங்கி எனப்பலர். [6]பொங்கெரி. [7]உற்றே. [8]றான்புகழா யிகழாகிப். [9]தண்புனலாய் நிற்குந் ; தாபரமாய்நிற்குந். [10]பெருவெளி.

414 *தேடுந் திசைஎட்டுஞ் சீவன் உடல்உயிர்
கூடு மரபிற [1]குணஞ்செய்த மாநந்தி
ஓடும் அவர்தம துள்ளத்து ளேநின்று
நாடும் வழக்கமும் நான்அறிந் தேனே. ௪

415 தானொரு காலந் தனிச்சுட ராய்நிற்குந்
தானொரு கால்சண்ட மாருத மாய்நிற்குந்
தானொரு [2]காலந் தண்மழை யாய்நிற்குந்
தானொரு [3]காலந்தண் மாயனு மாமே. ௫

416 அன்பும் அறிவும் அடக்கமு மாய்நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியு மாய்நிற்கும்
முன்புறு காலமும் ஊழியு மாய்நிற்கும்
அன்புற ஐந்தில் அமர்ந்துநின் றானே. ௬

417 உற்று வனைவான் அவனே உலகினைப்
பெற்று வனைவான் அவனே பிறவியைச்
சுற்றிய சாலும் [5]குடமுஞ் சிறுதூதை
மற்றும் அவனே வனையவல் லானே. ௭

418 உள்ளுயிர்ப் பாயுட லாகிநின் றான்நந்தி
வெள்ளுயி [6]ராகும் [7]வெளியாய் நிலங்கொளி
[8]உள்ளுயிர்க் கும்உணர் [9]வேயுட லுட்பராந்
தள்ளுயி ராவண்ணந் தாங்கிநின் றானே. ௮

419 தாங்கருந் தன்மையுந் தானவை பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் பிறிதில்லை
ஓங்கி எழுமைக்கும் யோகாந்த மவ்வழி
தாங்கிநின் றானும்அத் தாரணி [10]தானே. ௯

---

* இச்செய்யுள் ஒரு பிரதியிலில்லை.

பா - ம்—[1]குணஞ்செய்து ; குணஞ்செயும். [2]காற்பௌவ நீர்மை செயாநிற்குந் ; காலந் தண்பார் மழையாய் நிற்குந். [3]காலஞ் சதாசிவனாமே. [4]அன்புற்றும். [5]சிறுமுழை தோண்டியும். [6]ராக்கும். [7]வெளியா னிலங்கொளி. [8]உள்ளுயிராக்கும். [9]வேயுடம்பாம். [10]தாரனே.

420 அணுகினுஞ் [1]சேயவன் அங்கியிற் [2]கூடி
நணுகினும் ஞானக் கொழுந்தொன்று நல்கும்
பணிகினும் பார்மிசைப் பல்லுயி ராகித்
தணிகினும் மண்ணுடல் அண்ணல்செய் வானே. க0

கக. சங்காரம்

421 அங்கிசெய் தீசன் அகலிடஞ் [3]சுட்டது
அங்கிசெய் தீசன் அலைகடற் [3]சுட்டது
அங்கிசெய் தீசன் அசுரரைச் [3]சுட்டது
[4]அங்கியவ் வீசற்குக் கைஅம்பு தானே. க

422 இலயங்கள் மூன்றினும் ஒன்றாகற் [5]பாந்த
நிலையன் [6]றழிந்தமை நின்றுணர்ந் தேனல்
உலைதந்த மெல்லரி [7]போலும் உலகம்
மலைதந்த மானிலந் தான்வெந் ததுவே. உ

423 பதஞ்செய்யும் பாரும் பணிவரை எட்டும்
உதஞ்செய்யும் ஏழ்கடல் ஓதம் [8]முதலாங்
குதஞ்செய்யும் அங்கி [9]கொளுவியா காசம்
விதஞ்செய்யும் நெஞ்சில் [10]வியப்பில்லைத் தானே. ங

424 கொண்டல் வரைநின் றிழிந்த குலக்கொடி
அண்டத்துள் ஊறி [11]யிருந்தெண் [12]டிரையாகி
[13]ஒன்றின் பதஞ்செய்த [14]ஓம்என்ற அப்புறக்
[15]குண்டத்தின் மேல்அங்கி கோலிக்கொண் டானே. ச

425 நித்தசங் காரம் உறக்கத்து [16]நீள்மூடம்
வைத்தசங் [17]காரமுஞ் சாக்கிரா தீதமாஞ்
சுத்தசங் காரந் தொழிலற்ற கேவலம்
உய்த்தசங் காரம் பரன்அருள் உண்மையே. ரு

பா - ம்—[1]சிவன். [2]கூடும். [3]சுட்டதவ். [4]அங்கிசெய்தீசற்குக். [5]பாந்தள். [6]றிழிந்தமை. [7]யோதும். [8]முதலாக். [9]கொளுவிய காயம். [10]விதப்பில்லைத். [11]யருந்தெண். [12]டிசையாதி. [13]ஒண்டின் பதஞ்செய்ய. [14]தோமென்ற தப்புறக் ; ஓமமென்றவப்புக். [15]குன்றத்தின். [16]தின்மூடம் ; நீளுடல். [17]காரங் கருவிட மாளுதல்.

426 நித்தசங் காரம் இரண்டுடல் நீவுதல்
வைத்தசங் காரமும் மாயாசங் காரமாஞ்
சுத்தசங் காரம் மனாதீதந் தோய்வுறல்
உய்த்தசங் காரஞ் [1]சிவன்அருள் உண்மையே. ௬

427 நித்தசங் காரங் [2]கருவிடர் நீக்கினால்
ஒத்தசங் காரம் உடலுயிர் நீவுதல்
[3]சுத்தசங் காரம் [4]அதீதத்துட் டோய்வுறல்
உய்த்தசங் காரம் [5]பரனருள் உண்மையே. ௭

428 *நித்தசங் காரமும் நீடிளைப் பாற்றலின்
வைத்தசங் காரமும் மன்னும் அனாதியிற்
சுத்தசங் காரமுந் தோயாப் பரன்அருள்
[6]உய்த்தசங் காரமும் [7]நாலாம் உதிக்கிலே. ௮

429 †பாழே முதலா எழும்பயிர் [8]அப்பயிர்
பாழாய் அடங்கினும் [9]பண்டைப்பாழ் பாழாகா
[10]வாழாச்சங் [11]காரத்தின் மாலயன் [12]செய்தியாம்
[13]பாழாம் பயிராய் அடங்கும்அப் பாழிலே. ௯

430 தீயவைத் தார்மின்கள் சேரும் வினைதனை
[14]மாயவைத் தான்வைத்த [15]வன்பதி ஒன்றுண்டு

---

*இரண்டு பிரதிகளில் இச்செய்யுள் 424, 425-ம் செய்யுள்களுக் கிடையிற் காணப்படுகிறது.

†ஒரு பிரதியில் இதற்கு முன், ‘ நித்தசங் காரங் கருவிட னித்திரை, ஒத்தசங் காரம் உடலுயிர் நீவுதல், சுத்தசங் கார மதீதத்துட் டோய்வுறல், உய்த்தசங் கார முபசாந்த மாகுமே ’ என்னும் செய்யுள் எழுதப் பட்டுளது.

பா - ம்—[1]சிவமான. [2]கருவிற் புகுநீதி. [3]வைத்தசங். [4]கேவலம் ஆன்மாவுக்(கு). [5]சிவமாகும். [6]வைத்தசங். [7]மாலாய். [8]அவ்விடம். [9]பண்டைப் பாழாகாவாம். [10]ஊழார்சங். [11]காரத்திலொண். [12]சேதி; செய்தியாய்ப். [13]பாழாய்ப். [14]மாயம்வைத். [15]வப்பதி.

காயம்வைத் தான்கலந் தெங்கும் நினைப்பதோர்
ஆயம்வைத் [1]தானுணர் வாரவைத் தானே.* ௧0

௧உ. திரோபவம்

431 உள்ளத் தொருவனை [2]உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே. ௧

432 இன்பப் பிறவி படைத்த இறைவனுந்
துன்பஞ்செய் பாசத் துயருள் [3]அடைத்தனன்
என்பிற் கொளுவி [4]இசைந்துறு தோற்றசை
முன்பிற் கொளுவி [5]முடிகுவ [6]தாமே. உ

433 இறையவன் [7]மாதவன் இன்பம் படைத்த
[8]மறையவன் மூவரும் வந்துடன் கூடி
இறையவன் செய்த இரும்பொறி யாக்கை
மறையவன் வைத்த பரிசறி [9]யாதே. ௩

434 காண்கின்ற கண்ணொளி காதல்செய் [10]தீசனை
ஆண்பெண் அலியுரு வாய்நின்ற ஆதியை
[11]ஊண்படு நாவுடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்
சேண்படு பொய்கைச் [12]செயலணை யாரே. ௪

435 தெருளும் உலகிற்குந் தேவர்க்கும் இன்பம்
அருளும் வகைசெய்யும் ஆதிப் [13]பிரானுஞ்

---

*இச்செய்யுளை யடுத்து, 'சங்காரபேதம் : நித்த சங்காரம், மாயா சங்காரம், மகாமாயா சங்காரம், பரமோக்ஷ சங்காரம், ஆத்மமோக்ஷ சங்காரம் ; முத்தித் தசையில், சுத்த நித்த சங்காரம், சுத்த மாயா சங்காரம், சுத்த சுத்த சங்காரம்' என்னும் குறிப்பு இரண்டு பிரதிகளில் காணப்படுகிறது.

பா - ம்—[1]தாருணர் ; தாயுணர். [2]உள்ளுறை ; உள்ளுறுஞ். [3]அடைந்தனன் ; அடைந்தன. [4]இசைந்தது ; இசைத்தது. [5]முடிக்குவ. [6]தாக்குமே. [7]மாயவன். [8]மறையயன். [9]யாரே; யார்க்கே. [10]ஈசனை. [11]ஊண்பலி நாவிடை. [12]செவியனையானே. [13]பிரானைச்.

சுருளுஞ் சுடருறு தூவெண் சுடரும்
இருளும் அறநின் [1]றிருட்டறை யாமே. ௫

436 [2]அரைக்கின் றருள்தரும் அங்கங்கள் ஓசை
[3]உரைக்கின்ற ஆசையும் ஒன்றொடொன் றொவ்வாப்
[4]பரக்கும் உருவமும் பாரகந் தானாய்க்
கரக்கின் [5]றவைசெய்த காண்டகை யானே. ௬

437 ஒளித்துவைத் தேனுள் ளுறவுணர்ந் தீசனை
வெளிப்பட்டு நின்றருள் செய்திடு மீண்டே
களிப்பொடுங் காதன்மை என்னும் பெருமை
வெளிப்பட் டிறைஞ்சினும் வேட்சியு மாமே. ௭

438 நின்றது [6]தானாய் நிறைந்த மகேசுரன்
சென்றங் [7]கியங்கி யரன்திரு மாலவன்
நன்றது செய்யும் மலர்மிசை மேலயன்
[8]என்றிவ ராகி இசைந்திருந் தானே. ௮

439 ஒருங்கிய பாசத்துள் உத்தம [9]சித்தின்
இருங்கரை மேலிருந் தின்புற நாடி
வருங்கரை ஓரா வகையினிற் கங்கை
[10]அருங்கரை பேணில் அழுக்கற லாமே. ௯

440 மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்
உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே
கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா
அண்ணலும் இவ்வண்ண மாகிநின் றானே. ௰

---

௧௩. அநுக்கிரகம்

441 எட்டுத் திசையும் [11]எறிகின்ற காற்றொடு
வட்டத் திரையனல் மாநிலம் ஆகாயம்

பா - ம்—[1]திருட்டறலாமே. [2]அமைக்கின் றருட்கரும். [3]உமைக்கின்ற. [4]பகைக்கும். [5]றமைசெய்த. [6]காணாய்; தானா. [7]கியங்கும் அயன்திரு. [8]என்றறிவாதி. [9]சித்தன். [10]அருங்கலம்பேணா தழுக்கதுவாமே; அருங்கலம் பேணிய வழுக்கதுவாமே. [11]அடிக்கின்ற காற்றவன்.

ஒட்டி உயிர்நிலை என்னும்இக் காயப்பை
கட்டி [1]அவிழ்ப்பன் கண்ணுதல் காணுமே. க

442 உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பங்கொள் வார்க்கு நமன்இல்லை
[2]விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்குத்
[3]தச்சு மவனே சமைக்கவல் லானே. உ

443 [4]குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
[4]குசவன் மனத்துற்ற தெல்லாம் வினைவன்
[5]குசவனைப் போல்எங்கள் கோன்நந்தி வேண்டில்
[6]அசைவில் உலகம் அதுஇது வாமே. ங

444 விடையுடை யான்விகிர் தன்மிகு பூதப்
படையுடை யான்பரி சேஉல [7]காக்குங்
[8]கொடையுடை யான்குணம் எண்குண மாகுஞ்
சடையுடை [9]யான்சிந்தை [10]சார்ந்துநின் றானே. ச

445 உகந்துநின் றேபடைத் தான்உல கேழும்
உகந்துநின் றேபடைத் தான்பல ஊழி
உகந்துநின் றேபடைத் தான்ஐந்து பூதம்
உகந்துநின் றேஉயிர் ஊன்படைத் தானே. ரு

446 படைத்துடை யான்பண் டுலகங்கள் ஏழும்
படைத்துடை [11]யான்பல தேவரை முன்னே
படைத்துடை யான்பல [12]சீவரை முன்னே
படைத்துடை யான்பர [13]மாகிநின் றானே. சு

447 [14]ஆதி படைத்தனன் ஐம்பெரும் [15]பூதம்
[14]ஆதி படைத்தனன் [16]ஆசில்பல் ஊழி
[14]ஆதி படைத்தனன் எண்ணிலி [17]தேவரை
[14]ஆதி [18]படைத்தவை [19]தாங்கிநின் றானே. எ

பா - ம்—[1]அவிழ்க்கின்ற. [2]விச்சு வரிசுடர். [3]தைச்சு. [4]குயவன். [5]குயவனை. [6]அயைவில்; அசையில். [7]காகுங். [8]குடையுடை. [9]யான் சிரஞ். [10]தாங்கிநின். [11]யானல்ல. [12]சீவனை. [13]மோடுயிர்தானே. [14]அநாதி. [15]பூதங்கள். [16]ஆயபல் ஊழிகள். [17]தேவர். [18]படைத் துயிர்; படைத்தவன். [19]யாகிநின்.

448 அகன்றான் [1]அகலிடம் ஏழுமொன் றாகி
இவன்றா னெனநின் றெளியனும் அல்லன்
சிவன்றான் பலபல சீவனும் ஆகி
நவின்றான் உலகுறு நம்பனு மாமே. அ

449 உண்ணின்ற சோதி உறநின்ற ஒருடல்
விண்ணின் றமரர் விரும்பும் விழுப்பொருள்
மண்ணின்ற வானோர் புகழ்திரு மேனியன்
கண்ணின்ற மாமணி [2]மாபோத மாமே. கூ

450 ஆரும் அறியாத அண்டத் திருவுருப்
பார்முத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமற் காணுஞ் சுகம்அறிந் தேனே. க0

கச. கர்ப்பக்கிரியை

451 ஆக்குகின் றான்முன் [3]பிரிந்த இருபத்தஞ்
சாக்குகின் றானவ னாதிஎம் ஆருயிர்
ஆக்குகின் றான்கர்ப்பக் கோளகை யுள்ளிருந்
தாக்குகின் றான்அவன் ஆவ தறிந்தே. க

452 அறிகின்ற மூலத்தின் மேல்அங்கி அப்புச்
செறிகின்ற ஞானத்துச் [4]செந்தாள் கொளுவிப்
பொறைநின்ற [5]இன்னுயிர் போந்துற நாடிப்
பறிகின்ற பத்தினும் பாரஞ்செய் தானே. உ

453 இன்புறு காலத் திருவர்முன் பூறிய
துன்புறு பாசத் துயர்மனை வாழுளன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத் [6]தமைத்தொ தாழிந் தானே. ங

454 கருவை ஒழிந்தவர் கண்டநால் [7]மூவேழ்
புருடன் உடலில் பொருந்துமற் [8]றோரார்

பா - ம்—[1]கடலிடம். [2]மாபோதகமே. [3]பிரிந்திரு பத்தஞ்சும். [4]சேர்ந்தார். [5]இன்னுயிர்ப் போந்துறை நாடப். [6]தமைந்தொழிந். [7]மூவெழு. [8]றோரா.

திருவின் கருக்குழி தேடிப் [1]புகுந்த
துருவம் இரண்டாக ஓடி விழுந்ததே. ச

455 [2]விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதல்ஐந்தும் ஈரைந்தொ டேறிப்
[3]பொழிந்த [4]புனல்பூதம் போற்றுங் கரணம்
[5]ஒழிந்த நுதல்உச்சி உள்ளே [6]ஒளித்ததே. ரு

456 பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவுந்
தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்
மேவிய சீவனில் [7]மெல்லநீள் வாயுவுங்
கூவி [8]அவிழுங் குறிக்கொண்ட போதே. சு

457 போகின்ற [9]எட்டுப் புகுகின்ற பத்தெட்டு
மூழ்கின்ற முத்தனும் ஒன்பது [10]வாய்தலும்
நாகமும் எட்டுடன் நாலு புரவியும்
பாகன் விடானெனிற் [11]பன்றியு மாமே. எ

458 ஏற எதிர்க்கில் இறையவன் றாகும்
மாற எதிர்க்கில் [12]அரியவன் றாகும்
நேரொக்க வைக்கின் [13]நிகர்போதத் தாகும்
பேரொத்த மைந்தனும் பேரர சாளுமே. அ

459 [14]ஏயங் கலந்த [15]இருவர்தஞ் [16]சாயத்துப்
பாயுங் கருவும் உருவா மெனப்பல
காயங் கலந்தது காணப் பதிந்தபின்
மாயங் கலந்த மனோலய மானதே. கூ

460 கர்ப்பத்துக் [17]கேவல மாயாள் [18]கிளைக்கூட்ட
நிற்குந் [19]துரியமும் [20]பேதித்து நினைவெழ

பா - ம்—[1]புகுந்து வருவம் ; புகுந்தங்குருவம். [2]விழுந்த விலிங்கம். [3]பொழிந்து. [4]புலன்பூதம். [5]ஒழிந்து. [6]ஒளித்தே. [7]மெல்லென. [8]விழுங்குங் ; விழுங்குறி கொண்டதப்போதே. [9]எட்டும். [10]வாயிலும். [11]பந்தியு. [12]அரியயன். [13]நிகர்போதந் ; நிகர்பொருத் ; நிகர்போகத். [14]ஏகங். [15]இருவாதுஞ். [16]சாயத்தும். [17]கெல்லா. [18]கிளைகூட்ட. [19]துரியம். [20]பெற்ற; பெற்று.

வற்புறு காமியம் எட்டாதல் மாயையஞ்
சொற்புறு தூய்மறை [1]வாக்கிஞஞ் [2]சொல்லே. கO

461 என்பால் மிடைந்து [3]நரம்பு [4]வரிக்கட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து
இன்பால் உயிர்நிலை [5]செய்த [6]இறையோங்கும்
[7]நன்பால் ஒருவனை நாடுகின் றேனே. கக

462 பதஞ்செய்யும் பால்வண்ணன் [8]மேனிப் பகலோன
[9]இதஞ்செய்யு மொத்துடல் எங்கும் புகுந்து
குதஞ்செய்யும் அங்கியின் கோபந் தணிப்பான்
விதஞ்செய்யு மாறே [10]விதித்தொழிந் [11]தானே. கஉ

463 [12]ஒழிபல செய்யும் வினையுற்ற நாளே
வழிபல [13]நீராடி [14]வைத்தெழு [15]வாங்கிப்
பழிபல செய்கின்ற பாசக் கருவைச்
சுழிபல வாங்கிச் [16]சுடாமல்வைத் தானே. கங

464 சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிர மத்தே தோன்றுமவ் [17]வியோனியும்
புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால்விரல்
அக்கரம் எட்டும்எண் சாணது வாகுமே. கச

465 போகத்துள் ஆங்கே புகுந்த புனிதனுங்
[18]கோசத்துள் ஆகங் கொணர்ந்த கொடைத்தொழில்
[19]ஏகத்துள் ஆங்கே இரண்டெட்டு மூன்றைந்து
மோகத்துள் ஆங்கொரு [20]முட்டைசெய் தானே. கரு

466 பிண்டத்தில் உள்ளுறு [21]பேதைப் புலன்ஐந்தும்
பிண்டத்தி னூடே பிறந்து மரித்தது
அண்டத்தின் உள்ளுறு சீவனும் அவ்வகை
அண்டத்து நாதத் [22]தமர்ந்திடுந் தானே. கசு

பா - ம்—[1]வாகனுய்ச் ; யவர்கானைச். [2]சொலவே. [3]நரம்புப் ; நரம்பால். [4]புரிகட்டி. [5]செய. [6]இறையோங்க. [7]நண்பால். [8]மேனி. [9]உதஞ்செய்யு. [10]வித்தொழிக். [11]தேனே. [12]ஒழிபலஞ். [13]நீராட்டி. [14]வைத்தழு. [15]வங்கி. [16]சுடாமல் நின்றனே. [17]வியோனியுள். [18]கோகத்துள். [19]ஓகத்துள். [20]மூட்டைசெய். [21]பேதப்புனல் ஐந்தும். [22]தமர்ந்து நின்றனே.

467 இலைப்பொறி யேற்றி யெனதுடல் ஈசன்
துலைப்பொறி யிற்கரு ஐந்துட னட்டி
நிலைப்பொறி முப்பது நீர்மை கொளுவி
[1]உலைப்பொறி ஒன்பதில் [2]ஒன்றுசெய் தானே. கஎ

468 இன்புற் [3]றிருவர் [4]இசைவித்து வைத்தமண்
துன்பக் கலசம் மணிவான் ஒருவனே
ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு
வெந்தது சூளை விளைந்தது தானே. கஅ

469 அறியீ ருடம்பினி லாகிய வாறும்
பிறியீ [5]ரதனிற் பெருகுங் குணங்கள்
செறியீ ரவற்றினுட் சித்திகள் இட்ட
தறியவீ ரைந்தினு ளானது பிண்டமே. ககூ

470 உடல்வைத்த வாறும் உயிர்வைத்த வாறும்
மடைவைத்த ஒன்பது [6]வாய்தலும் வைத்துத்
திடம்வைத்த தாமரைச் சென்னியுள் அங்கிக்
கடைவைத்த ஈசனைக் கைகலந் தேனே. உ0

471 கேட்டுநின் [7]றேன்எங்கும் கேடில் பெருஞ்சுடர்
[8]மூட்டுகின் றுன்முதல் யோனி மயனவன்
[9]கூட்டுகின் றுன்குழம் பின்கரு வையுரு
நீட்டிநின் றுகத்து நேர்பட்ட வாறே. உக

472 பூவுடன் மொட்டுப் பொருந்த அலர்ந்தபின்
[10]காவுடைத் [11]தீபங் கலந்து [12]பிறந்திடும்
நீரிடை நின்ற குமிழி நிழலதாய்ப்
பாருடல் எங்கும் [13]பரந்தெட்டும் [14]பற்றுமே. உஉ

473 *எட்டினுள் ஐந்தாகும் இந்திரி யங்களுங்
கட்டிய மூன்று கரணமு மாய்விடும்

---

*இச்செய்யுள் மூன்று பிரதிகளில் இல்லை.

பா - ம்—[1]அலைப்பொறி. [2]ஆண்டுசெய். [3]றிருந்தவர். [4]இயலுற்று; இகலித்து. [5]ரதனின் பெருகு. [6]வாசலும்; வாயலும். [7]றெங்குங். [8]மூட்டுகின். [9]கூட்டுகின். [10]காளிடை. [11]தீயுங். [12]பிறிந்திடு; பொறிந்திடு. [13]பரந்தெழும். [14]எட்டிலே; பத்துமே.

ஒட்டிய பாச உணர்வென்னுங் காயப்பை
கட்டி அவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே. ௨௩

474 கண்ணுதல் நாமங் கலந்துடம் பாயிடைப்
பண்ணுதல் செய்து பசுபாசம் [1]நீங்கிட
எண்ணிய வேதம் [2]இசைந்த பரப்பினை
மண்முத லாக வகுத்துவைத் தானே. ௨௪

475 அருளல்ல தில்லை [3]அரனவன் அன்றி
அருளில்லை யாதலி [4]னவ்வோர் உயிரைத்
தருகின்ற போதிரு கைத்தாயர் தம்பால்
வருகின்ற நண்பு [5]வகுத்திடுந் தானே. ௨௫

476 வகுத்த [6]பிறவியை மாதுநல் லாளுந்
தொகுத்திருள் நீக்கிய சோதி யவனும்
பகுத்துணர் வாகிய [7]பல்லுயிர் எல்லாம்
வகுத்துள்ளும் நின்றதோர் மாண்பது வாமே. ௨௬

477 மாண்பது வாக வளர்கின்ற [8]வன்னியுங்
காண்பது ஆண்பெண் அலியெனுங் கற்பனை
பூண்பது மாதா பிதாவழி போலவே
[9]ஆம்பதி செய்தானச் சோதிதன் ஆண்மையே. ௨௭

478 ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகுந்
[10]தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்
[11]பாணவ மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே. ௨௮

479 பாய்ந்தபின் னஞ்சோடில் [12]ஆயுளும் நூறாகும்
[13]பாய்ந்தபின் னாலோடில் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் திவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே. ௨௯

பா - ம்—[1]நீக்கிட. [2]இசைத்த. [3]அரனறிவின்றி; அவனவளன்றி. [4]ஞவோர் உயிர்க்குத். [5]வகுத்துவைத். [6]பிறவியின். [7]பல்வகை எங்கும். [8]வன்னியைக். [9]ஆம்பனை. [10]தான்மிகு. [11]ஆண்வச. [12]பாயுரு. [13]பாய்ந்தி.

480 பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு விளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்
(பாய்கின்ற வாயுமா தர்க்கில்லைப் பார்க்கிலே.) ௩௦

481 மாதா உதரம் மலமிகில் மந்தனாம்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே. ௩௧

482 குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவியும் இரண்டாம் [1]அபான னெதிர்க்கில்
குழவி அலியாகுங் கொண்டகால் ஒக்கிலே. ௩௨

483 கொண்டநல் வாயு இருவர்க்கும் [2]ஒத்தெழில்
கொண்ட குழவியுங் கோமள மாயிடுங்
கொண்டநல் வாயு இருவர்க்குங் குழறிடில்
கொண்டதும் இல்லையாங் கோல்வளை யாட்கே. ௩௩

484 கோல்வளை உந்தியிற் கொண்ட குழவியுந்
[3]தால்வளை யுள்ளே [4]தயங்கிய சோதியாம்
[5]பால்வளர்ந் துள்ளே பகலவன் பொன்னுருப்
போல்வளர்ந் துள்ளே [6]பொருந்துரு வாமே. ௩௪

485 உருவம் வளர்ந்திடும் ஒண்டிங்கள் பத்திற்
பருவம தாகவே பாரினில் [7]வந்திடும்
மருவி வளர்ந்திடு மாயையி னாலே
(அருவம தாவதிங் காரறி வாரே.) ௩௫

486 இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்
தட்டான் [8]அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்

பா - ம்—[1]அது தானே துய்க்கில். [2]ஒத்தேறில். [3]தாய்வளை; தூய்வளை. [4]தயங்கு சோதியும். [5]பால்வளை கின்ற. [6]புருவமதாமே. [7]வந்து. [8]அறிந்தான்.

*பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மையெவ் வாறே. ௩௬

487 இன்புற நாடி இருவருஞ் [1]சந்தித்துத்
துன்புறு பாசத்தில் தோன்றி வளர்ந்தபின்
முன்புற நாடி நிலத்தின்முன் தோன்றிய
தொன்புற நாடிநின் றோதலு மாமே. ௩௭

488 [2]குயிற்குஞ்சு முட்டையைக் [3]காக்கைக் கூட்டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்
இயக்கில்லைப் போக்கில்லை [4]யேனென்ப தில்லை
மயக்கத்தால் [5]காக்கை வளர்க்கின்ற வாறே. ௩௮

489 முதற்கிழங் காய்முளை யாய்அம் முளைப்பின்
அதற்புத லாய்ப்பல மாய்நின் றளிக்கும்
அதற்கது வாய்இன்ப மாவது போல
அதற்கது வாய்நிற்கும் ஆதிப் பிரானே. ௩௯

490 [6]ஏனோர் பெருமைய னாகினும் எம்மிறை
ஊனே சிறுமையுள் உட்கலந் தங்குளன்
வானோர் அறியும் அளவல்ல மாதேவன்
தானே யறியுந் தவத்தினி னுள்ளே. ௪0

491 பரத்திற் [7]கரைந்து பதிந்தநற் காயம்
[8]உருத்தரித் திவ்வுடல் ஓங்கிட வேண்டித்
திரைக்கடல் உப்புத் திரண்டது போலத்
[9]திரித்துப் பிறக்குந் திருவரு ளாலே. ௪௧

---

*இவ்வடியும் அடுத்தவடியும் ஒரு பிரதியில் "மொட்டாய் மலர்ந்து பொருளங்கே தங்கினூற், றட்டா னறியுந் தலைப்பெய்த நாளே" என வேறாகக் காணப்படுகின்றன.

பா - ம்—[1]சிந்தித்துத். [2]குயிற்குட்டி. [3]காக்கைதன். [4]யேயென்ப; யென்னென்ப. [5]அக்காக்கை; ஆக்கை. [6]ஏனோபெரும்பய. [7]பதிந்து. [8]உருத்தெரிந். [9]திரித்தும்; திருத்தம்.

கரு. *மூவகைச்சீவ வர்க்கம்

492 சத்தி சிவன்விளை [1]யாட்டால் உயிராக்கி
ஒத்த [2]இருமாயா கூட்டத் [3]திடைபூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் [4]பிரிவித்துச்
சித்தம் புகுந்து [5]சிவமய [6]மாக்குமே. க

493 விஞ்ஞானர் நால்வரு மெய்ப்பிரள [7]யாகலத்
தஞ்ஞானர் மூவருந் [8]தாங்கு [9]சகலத்தின்
அஞ்ஞானர் மூவரு மாகும் பதின்மராம்
விஞ்ஞான ராதியர் வேற்றுமை [10]தானே. உ

494 விஞ்ஞானர் கேவலத் தாரது விட்டவர்
தஞ்ஞானர் அட்டவித் தேசராஞ் [11]சார்ந்துளோர்
எஞ்ஞானர் ஏழ்கோடி மந்திர நாயகர்
மெய்ஞ்ஞானர் ஆணவம் விட்டுநின் றாரே. ங

495 இரண்டா [12]வதில்முத்தி [13]எய்துவர் அத்தனை
இரண்டாவ [14]துள்ளே இருமல [15]பெத்தர்
இரண்டாகு நூற்றெட்டு ருத்திரர் என்பர்
முரண்சேர் சகலத்தர் மும்மலத் தாரே. ச

496 [16]பெத்தத்த சித்தொடு [17]பேண்முத்தச் சித்தது
[18]ஒத்திட் டிரண்டிடை [19]யூடுற்றார் சித்துமாய்
மத்தது [20]மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத் [21]தமிழ்ந்து சகலத்து ளாரே. ரு

497 [22]சிவமாகி ஐவகைத் திண்மலஞ் செற்றோர்
[23]அவமாகார் சித்தர் முத்தாந்தத்து வாழ்வார்

---

*இத்தலைப்பு ஒரு பிரதியில் மூவகை யாருயிர் வர்க்கம் என்றும், மற்றொன்றில் மூவகை யாருயிர் என்றுங் காணப்படுகிறது.

பா - ம்—[1]யாட்டா லும்முயிர். [2]இருமாயாக். [3]திடையூட்டி; திடைமூட்டி. [4]பிறிவித்து. [5]சிவன்வச. [6]மாகுமே. [7]யாகலவஞ் ஞானர். [8]தங்குஞ். [9]சகலத்துள். [10]காணே. [11]தாழ்ந்துளோர். [12]வதில் முத்தர். [13]யோதுவர். [14]துள்ளோர். [15]பேதத்தால். [16]பெத்தத்தா. [17]பேண்முத்தி சித்தது. [18]மொத்தத் திரட்டி. [19]யீடுற்ற. [20]மும்மல வாழ்க்கை. [21]தழிந்து; தழிந்த. [22]சிவயாதி. [23]அவமாகாச்.

பவமான தீர்வோர் பசுபாசம் அற்றோர்
நவமான தத்துவம் [1]நாடிக்கண் டோரே. கூ

498 *விஞ்ஞானர் [2]ஆணவ கேவல [3]மேவுவோர்
[4]விஞ்ஞானர் மாயையில் தங்கும் இருமலர்
அஞ்ஞானர் அச்சக [5]லத்தர் சகலராம்
விஞ்ஞான ராதிகள் ஒன்பான்வே றுயிர்களே. எ

499 †[6]விஞ்ஞான [7]கன்மத்தால் மெய்யகங் கூடிய
அஞ்ஞான கன்மத்தி னல்சுவர் யோனிபுக்
கெஞ்ஞான மெய்தீண்டி யேயிடை யிட்டுப்போய்
மெஞ்ஞான ராகிச் சிவமேவல் உண்மையே. அ

500 ஆணவந் துற்ற [8]வவித்தா நனவற்றோர்
காணிய விந்துவா நாத சகலாதி
ஆணவ மாதி யடைந்தோ [9]ரவரன்றே
சேணுயர் சத்தி சிவதத்துவ மாமே.‡ கூ

கக. பாத்திரம்

501 திலமத் [10]தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
[11]பலமற் றேபர போகமுங் குன்றுமே. க

---

*இச்செய்யுள் ஒரு பிரதியிலில்லை.

†இச்செய்யுள் ஒரு பிரதியிலில்லை.

‡இச்செய்யுளை யடுத்து, "மூவகை யாருயிர் வர்க்க வியற்கை: ஒன்பானுருவாவது விஞ்ஞானர், விஞ்ஞான சகலர், விஞ்ஞான பிரளயாகலர் ௩-ம்; இருமல விஞ்ஞானர், இருமல பிரளயாகலர், இருமல சகலர் ௩-ம்; கேவல விஞ்ஞானகலா சகலர், பிரளயாகல சகலர், சகல சகலர் ௩-ம் ஆக ஒன்பானுயிர் வர்க்கம் இது" என்னும் குறிப்பு ஒரு பிரதியில் காணப்படுகிறது.

பா-ம்—[1]நாடிக்கொண்டாரே. [2]ஆணவங். [3]மேவுவோர்., [4]அஞ்ஞானர். [5]லாசகலத்தர். [6]விஞ்ஞான ரரணவங் கேவல மெய்யுளோர். [7]கன்மத்தர். [8]விற்று ணளவிரரோர். [9]னவனன்றே. [10]தனைப்பொன். [11]பலமுமற.

502 கண்டிருந் தாருயிர் உண்டிடுங் காலனைக்
கொண்டிருந் தாருயிர் கொள்ளுங் [1]குணத்தனை
[2]நன்றுணர்ந் தார்க்கருள் செய்திடு நாதனைச்
சென்றுணர்ந் தார்சிலர் தேவரு மாமே. ௨

503 கைவிட்டி லேன்கரு வாகிய காலத்து
மெய்விட்டி [3]லேன்விகிர் தன்னடி தேடுவன்
பொய்விட்டு நானே புரிசடை யானடி
நெய்விட் டிலாத விடிஞ்சிலு மாமே. ௩

504 ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
[4]காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
[5]ஏவன செய்யும் இளங்கிளை யோனே. ௪

---

௧௭. அபாத்திரம்

505 கோல வறட்டைக் [6]குனித்து குளகிட்டுப்
பாலைக் கறந்து பருகுவ [7]தேயொக்குஞ்
சீலமும் நோன்பும் இலாதவர்க் கீந்தது
காலங் கழிந்த பயிரது ஆகுமே. ௧

506 ஈவது [8]யோக இயம நியமங்கள்
[9]சார்வ தறிந்தன்பு தங்கு மவர்க்கன்றி
ஆவ தறிந்தன்பு தங்கா தவர்களுக்
[10]கீவ பெரும்பிழை யென்றுகொ ளீரே. ௨

507 ஆமா [11]றறியான் அதிபஞ்ச [12]பாதகன்
[13]தோமாறும் ஈசற்குந் தூய குரவற்குங்
காமாதி விட்டோர்க்குந் [14]தரல்தந்து கறபிப்போன்
[15]போமா நரகிற் [16]புகான்போதங் கற்கவே. ௩

• பா - ம்—[1]குணத்தினை. [2]நன்றிருந். [3]லேன்விருத். [4]காவன. [5]ஏவின. [6]குதித்துக். [7]தன்னொக்குஞ். [8]யோகம். [9]சார்வறிந்தன்பு [10]ஈயல். [11]றறியார். [12]பாதகத். [13]ஓமாறும். [14]தூடணங்; தாடந்து [15]போமாழ். [16]புகார் போகங்.

508 மண்மலை யத்தனை மாதனம் ஈயினும்
அண்ணல் இவனென்றே யஞ்சலி யத்தனாய்
எண்ணி யிறைஞ்சாதார்க் கீந்த இருவரும்
நண்ணுவர் ஏழா [1]நரகக் குழியிலே. ௪

௧௮. தீர்த்தம்

509 உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றாடார் [2]வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து [3]திரிவரே
கள்ள [4]மனமுடைக் கல்வியி லோரே. ௧

510 தளியறி வாளர்க்குத் தண்ணிதாய்த் தோன்றுங்
குளியறி வாளர்க்குக் கூடவும் ஒண்ணான்
வளியறி வாளர்க்கு வாய்க்கிலும் வாய்க்குந்
[5]தெளியறி வாளர்தஞ் சிந்தையு ளானே. ௨

511 உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனைக்
கள்ளத்தி னாருங் கலந்தறி வார்இல்லை
வெள்ளத்தை நாடி விடுமவர் தீவினைப்
பள்ளத்தி லிட்டதோர் [6]பந்தருள் ளானே. ௩

512 அறிவார் அமரர்கள் ஆதிப் பிரானைச்
செறிவா னுறைபதஞ் சென்று வலங்கொள்
மறியார் வளைக்கை [7]வருபுனற் கங்கைப்
பொறியார் புனல்மூழ்கப் புண்ணிய [8]ராமே. ௪

513 கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்டல்
[9]உடலுற்றுத் தேடுவார் தம்மையொப் பாரிலர்
திடமுற்ற நந்தி திருவரு ளாற்சென்
றுடலிற் புகுந்தமை ஒன்றறி யாரே. ௫

பா - ம்—[1]நரகிடைதானே. [2]வினைகெடார். [3]திரிவர்கள். [4]மனத் திடைக். [5]தெளிவறி. [6]பத்தலுள்ளாமே; பந்தலுள்ளாரே. [7]மறி புனற். [8]ஞமே. [9]உடலுறத்.

514 கலந்தது நீர துடம்பிற் கறுக்குங்
கலந்தது நீர துடம்பிற் சிவக்குங்
கலந்தது நீர துடம்பில் வெளுக்குங்
கலந்தது [1]நீர்நிலங் காற்றது வாமே. சு

கக. திருக்கோயிலிழிவு

515 [2]தாவர லிங்கம் பறித்தொன் றில் தாபித்தால்
ஆவதன் முன்னே அரசு நிலைகெடுஞ்
[3]சாவதன் முன்னே பெருநோய் [4]அடுத்திடுங்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே. க

516 கட்டுவித் [5]தார்மதிற் கல்லொன் று வாங்கிடில்
[6]வெட்டுவிக் கும்அபி டேகத் தரசரை
முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
[7]வெட்டுவித் தேவிடும் விண்ணவன் ஆணையே. உ

517 ஆற்றரு [8]நோய்மிக் கவனி [9]மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க [10]ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. ங

518 முன்னவ னார்கோயில் பூசைகள் [11]முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள [12]வாரி வளங்குன் றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
[13]என்னரு நந்தி எடுத்துரைத் தானே. ச

519 பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு [14]மாம்என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே. ரு

பா - ம்—[1]நீரனல். [2]தாபர. [3]சார்வதன். [4]தலைப்படுங். [5]தான் மதிட். [6]அட்டதிக்காளபி. [7]வெட்டுவிக்குந்தலை. [8]கோய்மிகும்; கோய் மிக்கும். [9]மறைகுன்றும். [10]ளானவை. [11]முட்டின். [12]மாரி. [13]என் னுரை; எண்ணரு. [14]மாம் அன்றே.

உ௦. *அதோமுக தெரிசனம்

520 எம்பெரு [1]மான்இறை வாமுறை யோஎன்று
வம்பவிழ் வானோர் [2]அசுரன் வலிசொல்ல
[3]அம்பவள மேனி [4]அறுமுகன் போயவர்
தம்பகை [5]கொல்லென்ற [6]தற்பரன் தானே. க

521 †அண்டமொ டெண்டிசை தாங்கும் அதோமுகங்
கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
உண்டது நஞ்சென் [7]றுரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே. உ

522 செய்தான் [8]அறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே யுரைத்துப் [9]புகழும் [10]மனிதர்கள்
மெய்யே யுரைக்கில் விண்ணோர் தொழச்செய்வன்
மைதாழ்ந் திலங்கு [11]மிடறுடை யோனே. ங

523 நந்தி எழுந்து நடுவுற [12]ஓங்கிய
செந்தீக் [13]கலந்துட் [14]சிவனென நிற்கும்
[15]முந்திக் கலந்தங் [16]குலகம் வலம்வரும்
[17]அந்தி இறைவன் அதோமுக மாமே. ச

524 ‡அதோமுகங் கீழண்ட மான புராணன்
[18]அதோமுகத் தன்னொடும் எங்கு [19]முயலுஞ்

---

*இத்தலைப்பின் முன்னே ஒரு பிரதியில் ஆறுமுகம் : என்றும், மற்றொன்றில் அறுமுகம்: என்றும் எழுதப்பட்டுளது.

†இதற்கு முன் ஒரு பிரதியில் அதோமுகம் என்ற தலைப்புக் காணப்படுகின்றது.

‡இதற்கு முன் ஒரு பிரதியில் அதோமுகதரிசனம் என்ற தலைப்புக் காணப்படுகின்றது.

பா - ம்—[1]மாஇறை. [2]தான். [3]அம்பவிழ. [4]அறுமுகா. [5]சொல்லென்ற; கொல்லுற்ற. [6]தாபரன். [7]றுரைப்பார். [8]அறிவன். [9]புகலு. [10]மனிதர்காள் [11]மணிமிடற்றோனே. [12]ஓங்கியே. [13]கலந்துடன். [14]சிவனெனவே; சீவனென. [15]அந்தீக்; பந்தீக். [16]குலகமலம்வரும். [17]அந்தீ. [18]அதோமுகம். [19]முயலுரு.

[1]சதோமுகத் [2]தொண்மலர்க் கண்ணிப் பிரானும்
[3]அதோமுகன் ஊழித் தலைவனு மாமே. ௫

525 அதோமுக மாமல ராயது [4]கேளும்
அதோமுகத் தாலொரு நூறாய் விரிந்து
[5]அதோமுக [6]மாகிய அந்தமில் சத்தி
[5]அதோமுக மாகி அமர்ந்திருந் தானே. ௬

உக. சிவநிந்தை

526 தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே
[7]அளிவுறு வாரம ராபதி [8]நாடி
எளியனென் றீசனை நீசர் இகழில்
கிளியொன்று [9]பூஞையிற் கீழது வாகுமே. க

527 [10]முளிந்தவர் வானவர் தானவர் எல்லாம்
விளிந்தவர் மெய்ந்நின்ற ஞானம் உணரார்
[11]அளிந்தமு தூறிய ஆதிப பிரானைத்
[12]தளிந்தவர்க் கல்லது தாங்கஒண் ணாதே. உ

528 அப்பகை யாலே அசுரருந் தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப்பகை யாகிலும் [13]எய்தார் இறைவனைப்
[14]பொய்ப்பகை செய்யினும் ஒன்றுபத் தாமே. ௩

529 போகமும் மாதர் புலவி யதுநினைந்
தாகமும் உள்கலந் தங்குள தாதலில்
வேதிய ராயும் விகிர்தனும் என்கின்ற
நீதியுள் [15]ஈசன் நினைப்பொழி வாரே. ச

பா-ம்—[1]சதோமுகந் தேர்மலர்க். [2]தேர்மலர்க். [3]அதோமுக மூழித். [4]கேண்மின். [5]அதோ முதலாகி ; [6]மாகி. [7]பளிவுறு. [8]நாடு. [9]பூஞையாற். [10]முனிந்தவர். [11]அழிந்தமு. [19]தணிந்தவர்க். [13]எய்தா திறைவனை. [14]யொப்பரி. [15]ஈசனைப்பொழி.

உஉ. *குருநிந்தை

530 பெற்றிருந் தாரையும் பேணார் கயவர்கள்
உற்றிருந் தாரை உளைவன சொல்லுவர்
கற்றிருந் தார்வழி உற்றிருந் தாரவர்
பெற்றிருந் [1]தாரன்றி [2]யார்பெறும் பேறே. க

531 ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கோருகம்
[3]வாரிடைக் கிருமியாய் [4]மாய்வர் மண்ணிலே. உ

532 பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் [5]கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் [6]மாண்டிடுஞ்
சத்தியம் ஈது சதாநந்தி [7]ஆணையே. ங

533 [8]மந்திரம் ஓரெழுத் [9]துரைத்த மாதவர்
சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்
[10]நுந்திய சுணங்கனாய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே. ச

534 ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நந்நந்தி யாணையே. ரு

535 சன்மார்க்க சற்குருச் சந்நிதி பொய்வரின்
நன்மார்க்க முங்குன்றி ஞானமுந் தங்காது
[11]தொன்மார்க்க மாய துறையும் மறந்திட்டுப்
பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமு மாமே. சு

*இத்தலைப்பு இரண்டு பிரதிகளில் **மாயேசுரநிந்தை** என்றுளது.

பா - ம்—[1]தார்கனி ; தார்களி ; தார்கன்னி. [2]யாபெறும் ; யார் பெரும். [3]பாரிடைக். [4]படிகுவர் ; படிவர். [5]கலங்கிடத் தீமைகள். [6]மாய்ந்திடுஞ். [7]தானே ; தானே. [8]மந்திர. [9]துரைசெய்த. [10]பிந்திய. [11]சொன்மார்க்க.

536 கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
மெய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதி[1]போன் றுங்
[2]கைப்பட்ட நெய்பால் [3]தயிர்நிற்கத் தானறக்
[4]கைப்பிட்டுண் [5]பான்போன் றும் [6]கன்மிஞானிக் கொப்பே.

உரு. *மயேசுரநிந்தை

537 ஆண்டான் அடியவ ரார்க்கும் விரோதிகள்
ஆண்டான் அடியவர் [7]ஐயமேற் றுண்பவர்
ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்
தாந்தாம் விழுவது [8]தாழ்நர காகுமே. க

538 ஞானியை நிந்திப் [9]பவனும் [10]நலனென்றே
ஞானியை வந்திப் [11]பவனுமே நல்வினை
யான கொடுவினை தீர்வா ரவன்வயம்
போன பொழுதே புகுஞ்சிவ போகமே. உ

உச. பொறையுடைமை

539 பற்றிநின் றார்நெஞ்சிற் பல்லிதான் ஒன் றுண்டு
முற்றிக் கிடந்தது மூக்கையும் [12]நாவையுந்
தெற்றிக் [13]கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றா தொழிவது மாகமை யாமே. க

540 ஒலக்கஞ் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனியன் பாதம் பணிந்துய்ய
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் மன்னவன்
ஞாலத் [14]திவன்மிக நல்லனென் றாரே. உ

---

*இத்தலைப்பு ஒரு பிரதியில் மாசற்ற சிந்தை என்றுளது.

பா - ம்—[1]பொனாறுங் ; போன்று. [2]நெற்பட்ட. [3]தயிர்தானிள நிற்கக். [4]கைப்பிட்டுப் போனது. [5]போனது ; பான்போன்று. [6]கனம் ஞானிக். [7]ஆரைய மேற்றுண்பார். [8]தாழ்வாம் நரகமே ; தாழ்ந்த நரகமே. [9]பவரும். [10]நலனேனோர் ; நலனன்னோர். [11]பவனுமெய். [12]நாவியுந். [13]கிடந்தது. [14]திவர்மிக ; திவன்மிக்க.

541 [1]ஞானம் விளைந்தவர் நம்பிட மன்னவர்
[2]சேனை [3]வளைந்து திசைதொறுங் [4]கைதொழ
ஊனை [5]விளைத்திடும் உம்பர்தம் ஆதியை
ஏனை [6]வளைந்தருள் எட்டலு மாமே. ௩

542 வல்வகை யாலும் மனையிலும் மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதஞ்செய்யுங்
கொல்லையி னின்று குதிகொள்ளுங் கூத்தனுக்
கெல்லையி லாத விலயமுண் டாமே. ௪

உரு. *பெரியாரைத் துணைக்கோடல்

543 ஓடவல் [7]லார்தம ரோடு நடாவுவன்
பாடவல் லாரொலி பார்மிசை வாழ்வன்
தேடவல் [8]லார்க்கருள் தேவர் பிரானொடுங்
கூடவல் லாரடி கூடுவன் யானே. க

544 தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமனத் தங்கன்பு [9]வைத்த திலையாகும்
நீயிடர்ப் பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே
போமிடத் தென்னொடும் போதுகண் டாயே. உ

545 அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் [10]சிலர்தத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே. ௩

546 தார்சடை யான்றன் தமராய் உலகினிற்
போர்புக ழானெந்தை பொன்னடி சேருவர்

*இரண்டு பிரதிகளில் இத்தலைப்பு பெரியாரைச் சேர்தல் என்றுளது.

பா - ம்—[1]ஞாலம் விழைந்தவர். [2]சேனம் விளைந்து. [3]விழைந்து. [4]கைதொழும். [5]விளைந்திடும். [6]விளைந்தருள். [7]லாதவரோட. [8]லாரொலி ; லாரொலி. [9]வைத். [12]சிவதத்.

வாயடை [1]யாவுள்ளந் தேர்வார்க் கருள்செய்யுங்
[2]கோவடைந் தந்நெறி கூடலு மாமே.

547 உடையான் அடியார் அடியா ருடன்போய்ப்
படையா ரழன்மேனிப் பதிசென்று புக்கேன்
கடையார நின்றவர் கண்டறி விப்ப
உடையான் [3]வருகென வோலமென் [4]றாரே. ௫

548 அருமைவல் லான்கலை [5]ஞானத்துள் தோன்றும்
பெருமைவல் லோன்பிற விச்சுழி [6]நீந்தும்
உரிமை வல்லோனுணர்ந் தூழி யிருக்குந்
திருமைவல் [7]லாரொடு [8]சேர்ந்தனன் [9]யானே. ௬

இரண்டாந்தந்திரம் முற்றிற்று.

பா - ம்—[1]யாவுளந் தேவர்க்; யாவுளர் தேவர்க். [2]கோய்நடந் தென்னெறி; கோயடைந்தேனெறி. [3]தருகென. [4]றானே- [5]ஞாலத் துள். [6]நீத்தும். [7]லாரொடுந். [8]சேந்தனன். [9]வானே.

மூன்றாந் தந்திரம்

க. அட்டாங்க யோகம்*

549 [1]உரைத்தன வற்கரி ஒன்று மூடிய
நிரைத்த [2]இராசி [3]நிரைமுறை எண்ணிப்
[4]பிரச்சதம் [5]எட்டும் பேசியே நந்தி
நிரைத்த இயமம் நியமஞ்செய் தானே. க

550 செய்த இயம [6]நியமஞ் சமாதிசென்
[7]றுய்யப் பராசத்தி உத்தர பூருவ
மெய்த கவச நியாசங்கள் முத்திரை
எய்த [8]வுரைசெய்வன் இந்நிலை [9]தானே. உ

551 அந்நெறி இந்நெறி [10]என்னு தட்டாங்கத்
[11]தன்னெறி சென்று சமாதியி லேநின்மின்
நன்னெறி [12]செல்வார்க்கு [13]ஞானத்தி [14]லேகலாம்
புன்னெறி [15]யாகத்திற் போக்கில்லை யாகுமே. ங

552 †இயம [16]நியமமே எண்ணிலா ஆதனம்
[17]நயமுறு [18]பிராணாயாமம் பிரத்தி யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
[19]அயமுறும் அட்டாங்க மாவது மாமே. ச

---

*இரண்டு பிரதிகளில் இத்தலைப்பினை யடுத்து இயமாதி நியமாதி என்றுளது.

†இச்செய்யுள் ஒரு பிரதியில் இல்லை.

பா - ம்—[1]உரைத்த நவாக்கிரி ; உரைதத வனக்கிரி ; உரைத்த வக்கினி. [2]இரா. [3]நிறைமுறை. [4]பிரைச்சதம். [5]எட்டுமுன். [6]நியமச்; சமாதிகள் சென்று. [7]பையப். [8]வுரைசெய்த ; வுரைசெய்ய. [9]காணே. [10]என்னுதே யட்டாங்கந். [11]தன்னெறியே. [12]செய்வார்க்கு. [13]ஞாலத்தி. [14]லேகாலம். [15]யாக்கத்திற். [16]நியமம். [17]நயனுறு. [18]பிராணயநன் ; பிராணாயம். [19]அயமறும்.

உ. *இயமம்

553 எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையுஞ்
செழுந்த ணியமங்கள் செய்மினென் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. க

554 கொல்லான்பொய் கூறான் களவிலான் [1]எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லா னியமத் திடையின்நின் றானே. உ

ங. †நியமம்

555 ஆதியை வேதத்தின் அப்பொரு [2]ளானைச்
சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்
பாதியுள் மன்னும் பராசத்தி யோடுடன்
நீதி [3]புணர்ந்து நியமத்த னாமே. க

556 தூய்மை [4]அருளூண் சுருக்கம் [5]பொறைசெவ்வை
வாய்மை நிலைமை [6]வளர்த்தலே [7]மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
[8]நேமியீ ரைந்து நியமத்த னாமே. உ

557 [9]தவஞ்செபஞ் சந்தோடம் [10]ஆத்திகந் தானஞ்
சிவன்றன் [11]விரதமே [12]சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ [13]பூசையொண் மதிசொல்லீர் ஐந்து
நிவம்பல செய்யின் நியமத்த னாமே. ங

---

*இத்தலைப்பு இரண்டு பிரதிகளில் நியமம் என்றுள்ளது.

†மூன்று பிரதிகளில் இத்தலைப்பு இல்லை.

பா - ம்—[1]எண்குணத்து. [2]ளாளனைச். [3]புணர்ந்த. [4]அருளுஞ்; அருளூண். [5]பொறைசெம்மை. [6]வரைத்தலே. [7]மாற்றுப. [8]நேய முறு மீரைந் தியமத்த தாமே. [9]தபஞ்செபந் தோடம். [10]ஆர்தின. [11]நியமமே. [12]சித்தாந்தங். [13]பூசைமதி தோ லீரைந்து.

ச. *ஆ த ன ம்

558 பங்கய மாதி [1]பரந்தபல் ஆதனம்
அங்குள [2]வாம்இரு நாலும்அவற்றினுள்
சொங்கில்லை [3]யாகச் சுவத்திக மெனமிகத்
தங்க இருப்பத் தலைவனு மாகுமே. ௧

559 [4]ஓரணை [5]யப்பத மூருவின் மேலேறிட்
[6]டார வலித்ததன் மேல்வைத் தழகுறச்
சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் [7]பத்மா சனமென [8]லாகுமே. ௨

560 [9]துரிசில் வலக்காலைத் [10]தோன்றவே மேல்வைத்து
அரிய முழந்தாளி [11]லங்கையை நீட்டி
[12]உருசி யொடுமுடல் செவ்வே யிருத்திப்
பரிசு [13]பெறுமது பத்திரா சனமே. ௩

561 ஒக்க [14]அடியிணை யூருவில் ஏறிட்டு
முக்கி யுடலை முழங்கை தனில்ஏற்றித்
[15]தொக்க அறிந்து துளங்கா திருந்திடிற்
குக்குட ஆசனங் கொள்ள லு மாமே. ௪

562 பாத முழந்தாளிற் பாணி களைநீட்டி
ஆதர வோடும்வாய் அங்காந் தழகுறக்
[16]கோதில் நயனங் கொடிமூக்கி லேயுறச்
சீர்திகழ் சிங்கா [17]தனமெனச் செப்புமே. ௫

563 பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
[18]சொத்திரம் வீரஞ் சுகாதனம் [19]ஓரேழு

---

*ஒரு பிரதியில் இத்தலைப்புப் **பங்கய வாதனம்** என்றுளது.

பா - ம்—[1]பகர்ந்தபல். [2]வாமொரு ; வாமெரு. [3]யாதச். [4]ஓராணை. [5]யப்பாத. [6]டாரம். [7]பற்மாதனமென. [8]வாகுமே. [9]துரிசி. [10]தோன்ற. [11]லங்கைகளை [12]உருகியிடுமுடற். [13]பெறுவது. [14]வடிவிணை யுருவில். [15]தொக்கத் திறந்து. [16]கோதி நயனங்கள். [17]தனமெனலாகுமே. [18]கொத்திரம். [19]ஈரேழு.

[1]முத்தம மாமுது ஆசனம் [2]எட்டெட்டுப்
பத்தொடு நூறு பலஆ [3]சனமே. கூ

ரு. பிராணுயாமம்

564 ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் [4]கொடாதுபோய்ப்
பொய்யரைத் [5]துள்ளி விழுத்திடுந் தானே. க

565 ஆரிய [6]னல்லன் குதிரை [7]இரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படுந் தானே. உ

566 புள்ளினும் மிக்க புரவியை [8]மேற்கொண்டாற்
கள்ளுண்ண வேண்டாந் தானே களிதருந்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் உணர்வுடை [9]யோருக்கே. ந

567 பிராணன் மனத்தொடும் பேரா [10]தடங்கிப்
பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லை
பிராணன் மடைமாறிப் பேச்சறி வித்துப்
பிராண [11]னடைபேறு பெற்றுண்[12]டீர் நீரே. ச

568 ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் [13]கும்பம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத் [14]திரண்டதி ரேசகம்
மாறுதல் [15]ஒன்றின்கண் வஞ்சக மாமே. ரு

569 வளியினை வாங்கி [16]வயத்தில் அடக்கில்
[17]பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாந்

பா - ம்—[1]முத்தமயூரமுது. [2]எட்டு. [3]தனங்களே. [4]கொடாதே போய்ப். [5]தள்ளி. [6]நல்ல; னல்ல; னல்லன். [7]இரண்டுண்டு. [8]மேல் கண்டாற். [9]யோர்க்கே. [10]தடக்கிப். [11]னடைபெறும். [12]டீரே; டிநீரே; டிரீரே. [13]கும்பகம். [14]திரண்டேயி. [15]ஒன்றின. [16]வயிற்றில். [17]பளிங்கொத்த; அளிவுற்ற.

[1]தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
[2]வளியினும் [3]வேட்டு [4]வளியனு மாமே. சு

570 எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே [5]யதுசெய்ய ஆக்கைக் கழிவில்லை
[6]அங்கே பிடித்தது [7]விட்டள வுஞ்செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே. எ

571 ஏற்றி இறக்கி இருகாலும் [8]பூரிக்குங்
காற்றைப் [9]பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
[10]கூற்றை யுதைக்குங் குறியது வாமே. அ

572 மேல்கீழ் [11]நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
[12]பாலாம் இரேசகத் தாலுட் பதிவித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டான் அருள்பெற லாமே. கூ

573 வாமத்தில் ஈரெட்டு மாத்திரை [13]பூரித்தே
ஏழுற்ற முப்பத் திரண்டும் இரேசித்துக்
காமுற்ற [14]பிங்கலைக் கண்ணாக [15]இவ்விரண்
[16]டோமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே. க0

574 இட்ட [17]தவ்வீ டிளகா திரேசித்துப்
[18]புட்டிப் படத்தச நாடியும் பூரித்துக்
[19]கொட்டிப் பிராணன் அபானனுங் கும்பித்து
நட்டம் [20]இருக்க நமனில்லைத் தானே. கக

பா - ம்—[1]தெளியத் தெளியச் சிவனருள். [2]வளியதும் ; வளியனும்; வெளியிட்ட வெட்ட வெளியெனும். [3]வேட்ட. [4]வெளியது. [5]யதுசெய்தலார்க்கு மரிதல்ல. [6]கொங்கே பிடித்திட்டு லாடத்தெதிர்செல்லச். [7]வீட்டள. [8]பூரித்துக் ; கும்பித்துக். [9]பிணிக்குங். [10]கூற்றந் துரப்பதோர் கோலமதாமே. [11]நடுவாக ; நடுபக்க. [12]பாலாகி ரேசகத். [13]பூரித்தங் கேழுற்ற. [14]பிங்கலை. [15]அவ்விரண், இவ்விரண்டோம மத்தால். [16]ரோமத்தால். [17]தவிடுயிளகா ; தவிசோ. [18]புட்டி வரத்தச. [19]கொட்ட. [20]இடுக்க.

575 புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற [1]வாயுவை
[2]நெறிப்பட வுள்ளே [3]நின்மல [4]மாக்கில்
[5]உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே. ௧௨

576 [6]கூடம் எடுத்துக் [7]குடிபுக்க மங்கையர்
ஓடுவர் [8]மீளுவர் பன்னிரண் டங்குலம்
[9]நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்
[10]கூடிக் கொளிற்கோல அஞ்செழுத் தாமே. ௧௩

577 பன்னிரண் [11]டானை பகல்இர வுள்ளது
பன்னிரண் டானையைப் பாகன் அறிகிலன்
பன்னிரண் டானையைப் பாகன் அறிந்தபின்
பன்னிரண் டானைக்குப் பகல்இர வில்லையே. ௧௪

௬. பிரத்தியாகாரம்

578 கண்டுகண் டுள்ளே கருத்துற [12]வாங்கிடிற்
கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்
பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
இன்றுகண் டிங்கே இருக்கலு மாமே. ௧

579 நாபிக்குக் கீழே [13]பன்னிரண் டங்குலந்
தாபிக்கு மந்திரந் [14]தன்னை அறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண் டீசன் [15]குடியிருந் தானே. ௨

580 மூலத் திருவிரல் மேலுக்கு முன்னின்ற
பாலித்த யோனிக் கிருவிரற் கீழ்நின்ற

பா - ம்—[1]வாயு. [2]நெறிப்பட்ட ; நெறிப்பட்டுநேர் நேரே. [3]நின்மலஞ்செய்யில். [4]மாக்கினால். [5]உறுக்குச். [6]கூடும்; மாடம். [7]குடிபுக்கு. [8]பன்னிரண்டங்குல மாத்திரை. [9]கூடுவதெட்டுக் குறைவது நால்விரல். [10]நாடிக்கொள் வீர்கோல வஞ்சகந் தானே. [11]டானைக்குப். [12]ஓங்கிடிற். [13]நாலிரண். [14]தனையறி வாரில்லை. [15]குடிபுகுந்.

கோலித்த குண்டலி யுள்ளெழுஞ் செஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் [1]கீழதே. ௩

581 நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து [2]நினையவும் வல்லையேல்
[3]மாசித்த [4]மாயோகம் வந்து [5]தலைப்பெய்துந்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை [6]யாகுமே. ௪

582 சோதி [7]இரேகைச் சுடரொளி தோன்றிடிற்
கோதில் [8]பரானந்தம் என்றே குறிக்கொண்மின்
நேர்திகழ் [9]கண்டத்தே [10]நிலவொளி எய்தினால்
[11]ஒதுவ [12]துன்னுடல் உன்மத்த [13]மாமே. ௫

583 மூலத் [14]துவாரத்தை [15]மொக்கர மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்திது தானே. ௬

584 எருவிடும் வாசற் கிருவிரன் மேலே
கருவிடும் வாசற் கிருவிரற் கீழே
உருவிடுஞ் சோதியை [16]உள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்துநின் றானே. ௭

585 [17]ஒருக்கால் உபாதியை [18]ஒண்சோதி தன்னைப்
[19]பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவைக்
கரைத்துணர் வுன்னல் [20]கரைதல்உள் நோக்கல்
பிரத்தியா காரப் பெருமைய தாமே. ௮

586 புறப்பட்ட வாயுப் [21]புகவிடா வண்ணந்
[22]திறப்பட்டு நிச்சயஞ் சேர்ந்துடன் நின்றால்

பா - ம்—[1]கீழே. [2]நினைவால் நினைந்திரு. [3]மாசித்தி. [4]யோகம். [5]தலைப்பெய்யுந். [6]தானே ; யாமே. [7]இரேகை அடரொளி. [8]குரானந்தம். [9]கண்டத்தினி லொளி. [10]நீல வொளியெய்தில். [11]ஒதிய தன்னுடல். [12]துன்னிடல். [13]மாகுமே. [14]துவாரதது. [15]முக்கார. [16]உணரவல். [17]ஒருக்கலுமபாதியை. [18]ஒண்சோதனை தன்னை. [19]பிரித்துரை. [20]கரைதர; கரைதலு. [21]புகாவிடா. [22]திறப்பட்ட.

[1]உறப்பட்டு நின்றது உள்ளமும் அங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே. சு

587 குறிப்பினின் உள்ளே குவலயந் தோன்றும்
[2]வெறுப்பிருள் நீங்கி விகிர்தனை நாடுஞ்
சிறப்புறு சிந்தையைச் சிக்கென் றுணரில்
[3]அறிப்புறு காட்சி அமரரு மாமே. க௦

எ. தாரணை

588 [4]கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
[5]வீணாத்தண் டூடே [6]வெளியுறத் தானோக்கிக்
[7]காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணாள் [8]அடைக்கும் [9]வழியது [10]வாமே. க

589 மலையார் சிரத்திடை வானீர் அருவி
நிலையாரப் பாயும் நெடுநாடி [11]யூடே
சிலையார் [12]பொதுவில் திருநட மாடுந்
தொலையாத ஆனந்தச் சோதிகண் டேனே. உ

590 மேலை நிலத்தினாள் [13]வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் [14]சந்திக்கப்
பாலனும் ஆவான் [15]பார்நந்தி [16]ஆணையே. ௩

591 கடைவாச லைக்கட்டிக் காலை எழுப்பி
[17]இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி
மடைவாயிற் கொக்குப்போல் [18]வந்தித் திருப்பார்க்
குடையாமல் ஊழி இருக்கலு மாமே. ௪

பா - ம்—[1]உறப்பட்ட. [2]வெறிப்பிருள் ; வெறுப்பட்டு. [3]அறப்புறு. [4]கோணாமல் முகத்தைக். [5]வீணாதண். [6]வெறியுறத். [7]காணாக் கணு. [8]அடைக்க. [9]வழியிது. [10]வாகுமே. [11]யூடுபோய்ச். [12]பொதும்பில். [13]வேதப். [14]சாதிக்க. [15]பாராநந்தி. [16]தானே. [17]இடைவாசலூடே. [18]வந்திக்க வல்லார்க்.

592 *கலந்த உயிருடன் காலம் அறியில்
கலந்த உயிரது [1]காலின் நெருக்கங்
கலந்த உயிரது காலது [2]கட்டிற்
கலந்த உயிருடல் காலமும் நிற்குமே. ரு

593 வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு
வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்திற வாதார் மதியிட்டு [3]மூட்டுவர்
[4]கோய்திற வாவிடிற் கோழையு மாமே. சு

594 வாழலு மாம்பல காலும் மனத்திடைப்
[5]போழ்கின்ற வாயு [6]புறம்படாப் பாய்ச்சுறில்
ஏழுசா [7]லேகம் இரண்டு பெருவாய்தல்
பாழி பெரியதோர் பள்ளி [8]அறையே. எ

595 நிரம்பிய ஈரைந்தில் ஐந்திவை போனால்
இரங்கி விழித்திருந் தென்செய்வை பேதாய்
[9]வரம்பினைக் கோலி [10]வழிசெய்கு வார்க்குக்
குரங்கினைக் [11]கொட்டை பொதியலு மாமே. அ

596 [12]முன்னம் வந்தனர் எல்லாம் [13]முடிந்தனர்
[14]பின்னை வந்தவர்க் [15]கென்ன பிரமாணம்
[16]முன்னூறு கோடி உறுகதி [17]பேசிடில்
[18]என்ன மாயம் [19]இடிகரை நிற்குமே. கூ

597 அரித்த வுடலைஐம் பூதத்தில் வைத்துப்
பொருத்தலும் [20]பூதஞ்சத் தாதியிற் போந்து
தெரித்த [21]மனுதிசத் தாதியிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே. க௦

*மூன்று பிரதிகளில் இதுவும் அடுத்த செய்யுளும் பின் 'முன்னாக வந்துள்ளன.

பா - ம்—[1]காலனெருக்கங். [2]காட்டிக். [3]மூடுவர். [4]கோதிற. [5]போகின்ற. [6]புறப்படப். [7]லோகம். [8]அறையிலே. [9]வரம்பினுட்; வரம்பிடை. [10]வழிவரு ; வழிசெய்குரவர். [11]கோட்டைப். [12]முன்னமே. [13]முடித்தனர். [14]பின்னமே; பின்னையே. [15]கென்னை. [16]முன்னூறு. [17]பேசில் ; பேரிடில். [18]என்னமா. [19]இட்டுக்கரை. [20]பூதஞ்சித். [21]மனுதிசித்.

அ. தியானம்

598 [1]வருமாதி யீரெட்டுள் வந்த தியானம்
பொருவாத புந்தி புலன்போக மேவல்
உருவாய சத்தி பரத்தியான முன்னுங்
[2]குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே. ௧

599 கண்ணுக்கு மூக்குச் செவிஞானக் [3]கூட்டத்துட்
[4]பண்ணுக்கி [5]நின்ற பழம்பொருள் ஒன்றுண்
டண்ணுக்கின் [6]உள்ளே அகண்ட [7]ஒளிகாட்டிப்
[8]புண்ணுக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே. ௨

600 ஒண்ணு நயனத்தில் உற்ற [9]ஒளிதன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்
விண்ணாறு வந்து வெளிகண் [10]டிடவோடிப்
பண்ணாமல் நின்றது பார்க்கலு மாமே. ௩

601 ஒருபொழு துன்னார் உடலோ டுயிரை
ஒருபொழு துன்னார் உயிருட் சிவனை
ஒருபொழு துன்னார் சிவனுறை சிந்தையை
ஒருபொழு துன்னார் சந்திரப் [11]பூவே. ௪

602 மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்குந் [12]திரியொக்கத் தூண்ட
[13]மனத்து விளக்கது மாயா விளக்கே. ௫

603 எண்ணு யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் [14]அமுதினைக் கண்டறி வாரில்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற [15]நோக்கினுற்
கண்ணாடி போலக் [16]கலந்துநின் றானே. ௬

பா - ம்—[1]வருவாதி. [2]குருவாய்ச். [3]கோட்டத்திற். [4]பண்ணுகி. [5]வைத்த. [6]ஊடே. [7]வெளிகாட்டிப். [8]பிண்ணுக்கி, புண்ணுக்கா. [9]வெளிதன்னைக். [10]டிடவோடிற். [11]பூவையே. [12]திரிபோகத். [13]மனத்துள். [14]அமுதனைக். [15]நோக்கிற்; நோக்கிடிற். [16]கலந்திருந் தானே.

604 நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லைத் தானில்லை
தேட்டமும் இல்லைச் சிவனவ னாமே. ௭

605 நயனம் இரண்டும் நாசிமேல் வைத்திட்
[1]டுயர்வெழா வாயுவை உள்ளே அடக்கித்
துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லைத் தானே. ௮

606 மணிகடல் யானை [2]வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்தெழு [3]நாதங்கள் [4]தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கஒண் ணாதே. ௯

607 கடலொடு [5]மேகங் களிறொடும் ஓசை
[6]அடவெழும் வீணை அண்டரண் டத்துச்
[7]சுடர்மனு வேணுச் சுரிசங்கின் ஓசை
திடமறி யோகிக்கல் லாற்றெரி யாதே. ௧௦

608 ஈசன் இயல்பும் இமையவர் ஈட்டமும்
பாசம் [8]இயங்கும் பரிந்துயி ராய்நிற்கும்
ஓசை யதன்மணம் போல விடுவதோர்
ஓசையாம் ஈசன் உணரவல் லார்க்கே. ௧௧

609 நாத முடிவிலே [9]நல்லாள் இருப்பது
நாத முடிவிலே நல்யோகம் இருப்பது
நாத முடிவிலே நாட்டம் இருப்பது
நாத முடிவிலே [10]நஞ்சுண்ட கண்டனே. ௧௨

610 உதிக்கின்ற ஆறினும் உள்ளங்கி ஐந்துந்
துதிக்கின்ற தேசுடைத் தூங்கிருள் நீங்கி

பா - ம்—[1]டுயர்விழா. [2]வளர்குழல். [3]ராகங்கள். [4]தானிவை. [5]வேகக். [6]அடலொடும் அவ்வினை. [7]சுடர்மன்னு ; சுடர்மணி. [8]இரங்கப் பரிந்துயி. [9]நல்லான். [10]நஞ்சுகண் டேனே.

அதிக்கின்ற [1]ஐவருள் நாதம் ஒடுங்கக்
கதிக்கொன்றை ஈசன் கழல்சேர லாமே. ௧௩

611 பள்ளி அறையிற் பகலே இருளில்லை
கொள்ளி அறையிற் கொளுந்தாமற் காக்கலாம்
ஒள்ளி [2]தறியிலோ ரோசனை நீளிது
வெள்ளி அறையில் விடிவில்லைத் தானே. ௧௪

612 கொண்ட விரதங் குறையாமற் றன்னொன்றித்
தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு
மண்டல மூன்றினும் ஒக்க வளர்ந்தபின்
பிண்டமும் ஊழி பிரியா திருக்குமே. ௧௫

613 அவ்வவர் மண்டல மாம்பரி சொன்றுண்டு
அவ்வவர் மண்டலத் தவ்வவர் தேவராம்
அவ்வவர் மண்டலம் அவ்வவர்க் கேவரில்
அவ்வவர் மண்டல மாயமற் றோர்க்கே. ௧௬

614 இளைக்கின்ற நெஞ்சத் திருட்டறை உள்ளே
முளைக்கின்ற மண்டலம் மூன்றினும் ஒன்றித்
துளைப்பெரும் பாசத் துருவிடு மாகில்
இளைப்பின்றி மார்கழி ஏற்றம தாமே. ௧௭

615 [3]முக்குண [4]மூடற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் திரித்துப் [5]பிடித்திட்டுத்
தக்க வலமிடம் நாழிகை சாதிக்க
வைக்கும் உயிர்நிலை வானவர் கோனே. ௧௮

616 நடவித்த [6]நாபிக்கு நால்விரன் மேலே
மடவித்த வாணிக் கிருவிரல் உள்ளே
[7]கடவித் திருந்து கருதவல் லார்கள்
சடலத் தலைவனைத் தாமறிந் தாரே. ௧௯

பா - ம்—[1]ஐவ ரருள்நாத மோடுங். [2]தறையிலோ. [3]முக்கண ; முக்கன. [4]னூடு ; லூடுற. [5]பிரித்திட்டுத். [6]நாபிக்குள் ; நாவிக்கு ; நாவுக்கு. [7]கடலிற்றிரிந்து.

617 அறிவாய சத்தென்னு மாறு றகன்று
செறிவான மாயை சிதைத்தரு ளாலே
பிறியாத பேரரு [1]ளாயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே. ௨0

௰. சமாதி

618 சமாதி யமாதியிற் [2]றான்செல்லக் கூடும்
சமாதி யமாதியிற் றானெட்டுச் சித்தி
சமாதி யமாதியில் தங்கினோர்க் கன்றே
சமாதி யமாதி தலைப்படுந் தானே. ௧

619 [3]விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடிற்
சந்தியி [4]லான சமாதியிற் கூடிடும்
அந்த மிலாத அறிவின் அரும்பொருள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே. ௨

620 மன்மனம் எங்குண்டு [5]வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே [6]மனோலய மாமே. ௩

621 விண்டலர் கூபமும் விஞ்சத் [7]தடவியுங்
கண்டுணர் வாகக் கருதி யிருப்பர்கள்
செண்டு வெளியிற் செழுங்கிரி [8]யத்திடை
கொண்டு குதிரை [9]குசைசெறுத் [10]தாரே. ௪

622 மூல நாடி [11]முகட்டல [12]குச்சியுள்
நாலு வாசல் நடுவுள் இருப்பிர்காள்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் [13]வார்த்தை கனவிலும் இல்லையே. ௫

பா - ம்—[1]ளாயமே. [2]றான்சொல்லக் கேட்கிற். [3]விந்து. [4]லாத. [5]வாயு. [6]மனோமயனாமே. [7]தடாவியுங். [8]மத்திடை. [9]குசைசெகுத்; குசைசெலுத. [10]தானே. [11]முக்கடல். [12]குச்சியில். [13]அவத்தை.

623 மண்டலம் ஐந்து வரைகளும் ஈராறு
கொண்டிட நிற்குங் குடிகளும் [1]ஆறெண்மர்
கண்டிட நிற்குங் கருத்து நடுவாக
உண்டு நிலாவிடும் [2]ஓடும் பதத்தையே. ௬

624 [3]பூட்டொத்து மெய்யிற் [4]பொறிப்பட்ட வாயுவைத்
[5]தேட்டற்ற வங்கிலஞ் சேரும் படிவைத்து
நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே. ௭

625 உருவறி யும்பரி சொன்றுண்டு வானோர்
கருவரை பற்றிக் கடைந்தமு துண்டார்
அருவரை யேறி அமுதுண்ண மாட்டார்
திருவரை யாமனந் தீர்ந்தற்ற வாறே. ௮

626 நம்பனை யாதியை நான்மறை ஓதியைச்
செம்பொனின் உள்ளே திகழ்கின்ற சோதியை
அன்பினை யாக்கி யருத்தி ஒடுக்கிப்போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் [6]கூட்டமிட் டாரே.

627 மூலத்து மேலது முச்சது ரத்தது
காலத் திசையிற் கலக்கின்ற [7]சந்தினில்
மேலைப் பிறையினில் [8]நெற்றிநேர் [9]நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே.

628 கற்பனை [10]யற்றுக் கனல்வழி யேசென்று
[11]சிற்பனை எல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை [12]நாடிப் புணர்மதி யோடுற்றுத்
தற்பர மாகத் [13]தகுந்தண் சமாதியே. ௧௧

629 தலைப்பட் டிருந்திடத் தத்துவங் கூடும்
வலைப்பட் டிருந்திடும் மாதுநல் லாளுங்

பா - ம்—[1]ஆறென்பர். [2]ஒடு; ஓடுமப். [3]பூட்டொத்த; பூட்டற்ற. [4]பொறிபடா. [5]தேட்டுற்ற; தேட்டொத்த. [6]கற்றகுட்டமிட். [7]சந்தியில். [8]நிலைநெற்றி நேர். [9]நின்று. [10]யாறு. [11]செற்பனை, சொற்பனை [12]நாட்டி. [13]தகுந்தனை சாதியே; தகுந்தன சாதியே.

[1]குலைப்பட் டிருந்திடுங் கோபம் அகலுந்
[2]துலைப்பட் டிருந்திடுந் தூங்கவல் லார்க்கே. கஉ

630 சோதித் தனிச்சுட ராய்நின்ற தேவனும்
ஆதியும் [3]உள்நின்ற சிவனு மாகுமால்
ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்
ஆதி அடிபணிந் தன்புறு வாரே. கங

631 சமாதிசெய் வார்க்குத் தகும்பல யோகஞ்
சமாதிகள் வேண்டாம் இறையுட னேகிற்
சமாதிதா னில்லைத் தானவ னாகிற்
சமாதியில் [4]எட்டெட்டுச் சித்தியும் எய்துமே. கச

கo. *அட்டாங்க யோகப்பேறு

இயமம்

632 போதுகந் தேறும் புரிசடை யானடி
[5]யாதுகந் தாரம [6]ராபதிக் கேசெல்வர்
ஏதுகந் தானிவன் என்றருள் செய்திடு
மாதுகந் தாடு மால்விடை யோனே. க

நியமம்

633 [7]பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்
கற்றிருந் தாங்கே கருது மவர்கட்கு
முற்றெழுந் தாங்கே முனிவர் எதிர்வரத்
தெற்றுஞ் சிவபதஞ் சேரலு மாமே. உ

ஆதனம்

634 [8]வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்
திருந்தம ராபதிச் செல்வன் இவனெனத்

---

*ஒரு பிரதியில் இத்தலைப்பு அட்டாங்க யோகம் என்றுளது.

பா - ம்—[1]கொலைப்பட் ; குணப்பட். [2]துணைப்பட்டிருந்தன. [3]முன்நின்ற. [4]எட்டுச். [5]யாருகந். [6]ராபதிச் செல்வர். [7]பற்றைப் பகைத்தன்பு. [8]வருந்தத்.

தருந்தண் முழவங் குழலும் இயம்ப
இருந்தின்பம் எய்துவர் ஈசன் அருளே. ௩

பிராணாயாமம்

635 செம்பொற் சிவகதி சென்றெய்துங் காலத்துக்
கும்பத் தமரர் குழாம்வந் தெதிர்கொள்ள
எம்பொற் றலைவன் இவனா மெனச்சொல்ல
இன்பக் கலவி இருக்கலு மாமே. ௪

பிரத்தியாகாரம்

636 சேருறு காலந் திசைநின்ற தேவர்கள்
ஆரிவன் என்ன அரனும் இவனென்ன
ஏருறு தேவர்கள் எல்லாம் எதிர்கொள்ளக்
காருறு கண்டனை மெய்கண்ட வாறே. ௫

தாரணை

637 நல்வழி [1]நாடி நமன்வழி மாற்றிடுஞ்
சொல்வழி யாளர் சுருங்காப் பெருங்கொடை
இல்வழி யாளர் இமையவர் எண்டிசைப்
பல்வழி எய்தினும் பார்வழி யாகுமே. ௬

தியானம்

638 தூங்கவல் [2]லார்க்குத் துணையேழ் புவனமும்
வாங்கவல் [3]லார்க்கு வலிசெய்து [4]நின்றிடுந்
தேங்கவல் [5]லார்க்குத் திளைக்கும் அமுதமுந்
தாங்கவல் லார்க்குந் தன்னிட மாமே. ௭

சமாதி

639 காரிய மான உபாதியைத் தான்கடந்
தாரிய காரணம் ஏழுந்தன் பாலுற

பா - ம்—[1]நாடின். [2]லார்க்குந். [3]லார்க்கும். [4]நின்றிட்டுத்.
[5]லார்க்குந்.

ஆரிய காரண மாய [1]தவத்திடைத்
[2]தாரியல் தற்பரஞ் சேர்தல் [3]சமாதியே.* அ

கக. †அட்டமாசித்தி

பரகாயப் பிரவேசம்

640 பணிந்தெண் திசையும் பரமனை நாடித்
துணிந்தெண் திசையுந் தொழுதெம் பிரானை
அணிந்தெண் [4]திசையினும் அட்டமா சித்தி
தணிந்தெண் திசைசென்று தாபித்த வாறே. க

641 [5]பரிசறி வானவர் [6]பண்பன் [7]அடியெனத்
துரிசற நாடியே [8]தூவெளி [9]கண்டேன்
அரிய தெனக்கில்லை அட்டமா சித்தி
[10]பெரிதருள் செய்து பிறப்பறுத் தானே. உ

642 குரவன் அருளிற் குறிவழி [11]மூலன்
பரையின் [12]மணமிகு [13]சங்கட்டம் பார்த்துத்
[14]தெரிதரு சாம்பவி கேசரி [15]சேரப்
[16]பெரிய சிவகதி [17]பேறெட்டாஞ் சித்தியே. ௩

---

*இரண்டு பிரதிகளில் பின்வருங் குறிப்பு இவ்விடத்துக் காணப்படுகிறது. 'யோக பேதமாவன: தியான யோகம் உருவத் தியானத்திலே ரு அருவத்தியான மாதியாக ரு என்ப. கரு ஆக அடங்கும். விந்துத்தியானம், நாதத்தியானம், புந்தித்தியானம், பரத்தியானம், குருத்தியானம், சிவத்தியானம் என சு என்றுரெனக் கண்டுகொள்க. பேதஞ் சிவானு போகத்திற் கண்டு கொள்க. அச்சமாதியோக வரலாறு யோக போகமாவன: இயமபேதம் க0, நியமபேதம் க0, ஆசன பேதம் க0, பிராணுயாமம் ௩உ, பிராகாமியம் ரு எல்லாங் தன்னுள்.

†இரண்டு பிரதிகளில் இத்தலைப்பு பரகாயம் என்று எழுதப்பட்டுளது.

பா - ம்—[1]தலத்திடைக். [2]காரியல். [3]சமாதிக்கே. [4]டிசையும். [5]பரிசற. [6]பண்பின். [7]அடியேன். [8]தூவொளி, தூயொளி. [9]கண்டனர். [10]பெரிய தருள். [11]மூலப். [12]மனுமிகு; மனமிகு. [13]சக்கட்டமார்த்துத். [14]தெரிசறி. [15]சேவை [16]பெயரில். [17]பேரெட்டாஞ்.

643 *[1]காயாதி பூதங் கலைகால மாயையில்
ஆயா தகல அறிவொன் [9]றனாதியே
ஓயாப் பதியதன் உண்மையைக் கூடினால்
வீயாப் பரகாயம் மேவலு மாமே. ௪

644 இருபதி னாயிரத் [3]தெண்ணூறு பேதம்
மருவிய கன்ம [4]மாமந்த யோகந்
தருமிவை காய உழைப்பாகுந் தானே
[5]அருமிரு நான்காய் அடங்குமா சித்திக்கே. ௫

645 மதிதனில் [6]ஈராறாய் மன்னுங் கலையின்
உதய மதுநா லொழியவோ ரெட்டுப்
பதியும்[7]ஈ ராறாண்டு பற்றறப் பார்க்கில்
திதமான ஈராறு சித்திக ளாமே. ௬

646 நாடும் [8]பிணியாகு நஞ்சனஞ் [9]சூழ்ந்தக்கால்
நீடுங் கலைகல்வி [10]நீள்மேதை கூர்ஞானம்
[11]பீடொன்றி [12]னால்வாயாச சித்தி[13]பே தத்தின்
நீடுந் [14]தூரங்கேட்டல் நீண்முடி [15]வீராறே. ௭

647 ஏழா னதிற்சண்ட வாயுவின் வேகியாந்
தாழா நடைபல [16]யோசனை சார்ந்திடுஞ்
சூழான ஓரெட்டில் தோன்றா நரைதிரை
தாழான ஒன்பதிற் றன்பர காயமே. ௮

648 [17]ஈரைந்திற் [18]பூரித்துத் [19]தியான உருத்திரன்
ஏரொன்று [20]பன்னொன்றில் ஈராறும் எண்சித்தி

*ஒரு பிரதியில் இச்செய்யுட்குமுன் பரகாயம் என்ற தலைப்புக் காணப்படுகிறது. 640-வது செய்யுட்கு முன் காணப்படவில்லை.

பா - ம்—[1]காலாதி. [2]றமனாதி; றனாதி. [3]தெண்ணிலி. [4]மாமதன்; மாமக. [5]வருமிரு; அருமிகு. [6]ஈராறு. [7]ஈராண்டு ; ஈரிரண்டு. [8]பிணியால். [9]சூழ்ந்தால்.. [10]சின்பேதை. [11]வீடொன்றி. [12]னவில்வாயாச்; னல்வாயற; னலவரவர். [13]பெற்றதின். [14]தூரார்கேட்டல்; தூரங்கேட்டதில்; தூரங்கேட்ட. [15]வாறே. [16]ரோசனை. [17]ஈரைந்தேற். [18]பூசமித்தியா யுருத்திரன்; பூசமத்தியாயு. [19]தியாக. [20]பன்னொன்றில்.

சீரொன்று மேலேழ் கீழேழ் புவிச்சென்று
ஏரொன்று வியாபியாய் [1]நிற்றல்ஈ ராறே. ௯

649 தானே [2]அணுவுஞ் [3]சகத்துத்தன் [4]நொய்ம்மையும்
[5]மாணுக் [6]கனமும் பரகாயத் [7]தேகமுந்
[8]தாணுவ் தும்பர காயஞ்சேர் தன்மையும்
ஆணுத [9]வுண்மையும் [10]வியாபியு [11]மாமெட்டே. ௧௦

650 தாங்கிய [12]தன்மையுந் [13]தானணுப் பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் குறையில்லை
யாங்கே [14]எழுந்தோம் அவற்றுள் [15]எழுந்துமிக்
[16]கோங்கி வரமுத்தி முந்திய வாறே. ௧௧

651 முந்திய முந்நூற் றறுபது காலமும்
வந்தது நாழிகை [17]வான்முத லாயிடச்
[18]சிந்தை செயச்செய மண்முதல் தேர்ந்தறிந்
துந்தியுள் நின்று [19]வுதித்தெழு மாறே. ௧௨

652 சித்தந் [20]திரிந்து சிவமய [21]மாகியே
முத்தந் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்
சுத்தம் [22]பெறலாம் [23]ஐந்தில் தொடக்கற்றோர்
சித்தம் பரத்தில் [24]திருநடத் தோரே. ௧௩

653 [25]ஒத்தஇவ் வொன்பது வாயுவும் [26]ஒத்தன
ஒத்தஇவ் ஓன்பதின் மிக்க தனஞ்செயன்
ஒத்தஇவ் வொன்பதில் ஒக்க இருந்திட
ஒத்த வுடலும் உயிரும் [27]இருந்ததே. ௧௪

பா - ம்—[1]நின்ற. [2]அதுவுஞ். [3]சகத்துந்தன். [4]நோன்மையும். [5]மாணு ; மாணுத். [6]ககனமும் ; கன்மமும். [7]தேமுகர்; தெழுமுகர். [8]தாணுலதுபர. [9]புன்மையும். [10]வியாப்பிய. [11]மாமே. [12]தண்மையுந். [13]தானவை. [14]எழுந்தே. [15]அழுந்துமிக். [16]கோங்கியவாமுத்தி. [17]வாமுத, யாமுத. [18]சிந்தைசெய் மண்முதல் தேர்ந்தறி வார்வலர். [19]முதித்தெழு. [20]தெரிந்து. [21]மாக்கியே. [22]பெறலாக ; பெறலாகும். [23]ஐந்தின். [24]திருநடந். [25]ஒததறி; ஒத்தவியொன்பது. [26]ஒத்தபின் ஒத்தென. [27]இருந்தே.

654 இருக்குந் தனஞ்செயன் ஒன்பது காலில்
இருக்கும் இருநூற் றிருபத்து [1]மூனாய்
இருக்கு [2]முடலி லிருந்தில வாகில்
இருக்கும் உடலது வீங்கி வெடித்ததே. கரு

655 வீங்குங் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை [3]பலவதாய்
வீங்கிய வாதமுங் கூனு [4]முடமதாய்
வீங்கு வியாதிகள் கண்ணில் மருவியே. கசு

656 கண்ணில் வியாதி யுரோகந் தனஞ்செயன்
கண்ணிலிவ் வாணிகள் காச [5]மவனல்லன்
கண்ணினிற் கூர்மன் கலந்தில [6]ஞதலாற்
கண்ணினிற் சோதி கலந்ததும் இல்லையே. கஎ

657 நாடியின் ஓசை நயனம் இருதயந்
தூடி யளவுஞ் சுடர்விடு சோதியைத்
தேவருள் ஈசன் திருமால் பிரமனும்
[7]ஓவற நின்றங் குணர்ந்திருந் தாரே. கஅ

658 ஒன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்
ஒன்பது நாடி யுடையதோ ரோரிடம்
ஒன்பது நாடி [8]ஒடுங்கவல் லார்கட்(கு)
ஒன்பது [9]காட்சி யிலைபல வாமே. ககூ

659 ஓங்கிய [10]அங்கிக்கீழ் ஒண்சுழு னைச்செல்ல
வாங்கி இரவி மதிவழி ஓடிடத்
தாங்கி உலகங்கள் ஏழுந் தரித்திட
ஆங்கது சொன்னோம் [11]அருவழி யோர்க்கே. உ0

660 தலைப்பட்ட [12]வாறண்ணல் தையலை நாடி
வலைப்பட்ட பாசத்து வன்பிணை மான்போல்

பா - ம்—[1]நான்கில். [2]முடலீ திருந்தில ; முடலமிருந்தில [3]பலவதாம். [4]முடமதாம் ; முடம்பதாம். [5]மவனல்லக். [6]வாதலாற் [7]ஓதகு. [8]ஒருங்கவல். [9]வாசல் உலை நலமாமே. [10]அங்கிகீழ் ; அங்கி கீழே. [11]அறிவுடை. [12]வாரணன்.

துலைப்பட்ட நாடியைத் [1]தூவழி செய்தால்
விலக்குண்ண வைத்ததோர் [2]வித்தது வாமே. உக

661 ஓடிச் சென்றங்கே ஒருபொருள் கண்டவர்
நாடியி னுள்ளாக நாதம் எழுப்புவர்
தேடிச்சென் றங்கே தேனை முகந்துண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டுமே. உஉ

662 கட்டிட்ட தாமரை ஞாளத்தில் ஒன்பது
மட்டிட்ட [3]கன்னியர் மாதுடன் சேர்ந்தனர்
[4]கட்டிட்டு நின்று [5]களங்கனி யூடுபோய்
[6]பொட்டிட்டு [7]நின்று பூரண மானதே. உ௩

663 பூரண சத்தி எழுமூன் [8]றறையாக
ஏரணி கன்னியர் எழுநூற்றஞ் [9]சாக்கினர்
நாரணன் நான்முக னாதிய [10]ஐவர்க்குங்
[11]காரண மாகிக் கலந்து [12]விரிந்ததே. உ௪

664 விரிந்து குவிந்து விளைந்தஇம் மங்கை
கரந்துள் எழுந்து கரந்தங் கிருக்கிற்
பரந்து [13]குவிந்தது பார்முதற் பூதம்
இரைந்தெழு வாயு [14]விடத்தினில் ஓங்கே. உ௫

665 இடையொடு பிங்கலை என்னும் இரண்டு
மடைபடு வாயுவு மாறியே நிற்குந்
தடையவை யாறேழுந் தண்சுட ருள்ளே
மிடைவளர் மின்கொடி தன்னில் ஒடுங்கே. உ௬

666 ஒடுங்கி [15]ஒடுங்கி யுணர்ந்தங் கிருக்கில்
[16]அடங்கி அடங்கிடும் வாயு வதனுள்
மடங்கி மடங்கிடு மன்னுயி ருள்ளே
நடங்கொண்ட [17]கூத்தனும் நாடுகின் [18]றானே. உ௭

பா - ம்—[1]தூய்வழி. [2]விடத்தது. [3]கண்ணியர்; சென்னியர். [4]தட்டிட்டு. [5]தளங்கனி னூடுபோய். [6]பொட்டின்று. [7]நின்றது. [8]றகையாக; றசையாக. [9]சாயினர். [10]ஐந்துக்குங். [11]காரணியாகிக்; காரணனாகிக். [12]விரிந்தே. [13]குவிந்து. [14]விடத்தில் ஒடுங்கே. [15]ஒருங்கி. [16]மடங்கி மடங்கிடும். [17]கூத்தனை. [18]றேனே.

667 நாடியின் உள்ளே நாதத் [1]தொனியுடன்
தேடி யுடன்சென்ற திருவினைக் கைக்கொண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் [2]கட்டிடு
[3]மாடி ஒருகை [4]மணிவிளக் கானதே. ௨௮

668 *[5]அணுமாதி சித்திக ளானவை கூறில்
அணுவில் அணுவின் பெருமையில் நேர்மை
இணுகாத வேகார் பரகாய மேவல்
அணுமைத் தனையெங்குந் தானாத லென்றெட்டே.

669. எட்டா கியசித்தி [6]யோரெட்டி யோகத்தாற்
கிட்டாப் பிராணனே செய்தாற் கிடைத்திடும்
ஒட்டா நடுநாடி மூலத்த னல்பானு
விட்டான் மதிபுண்ண வும்வரு மேலதே. ௩0

670 சித்திக ளெட்டன்றிச் சேரெட்டி யோகத்தாற்
புத்திக ளானவை எல்லாம் புலப்படுஞ்
சித்திகள் எண்சித்தி தானாந் [7]திரிபுரை
சத்தி அருள்தரத் தானுள வாகுமே. ௩௧

அணிமா

671 †எட்டிவை தன்னோ டெழிற்பரங் கைகூடப்
பட்டவர் சித்தர் பரலோகஞ் சேர்தலால்
இட்டம துள்ளே [8]இறுக்கல் பரகாட்சி
எட்டு வரப்பு மிடந்தானின் றெட்டுமே. ௩௨

672 [9]மந்தர மேறு மதிபானு [10]வைமாற்றிக்
கந்தாய்க் குழியிற் கசடற வல்லார்க்குத்
[11]தந்தின்றி [12]நற்காய [13]மியலோகஞ் சார்வாகும்
அந்த வுலகம் [14]அணுமாதி யாமே. ௩௩

---

*இச்செய்யுள் ஒரு பிரதியில் இல்லை.

†இரண்டு பிரதியில் இதுவும் அடுத்த செய்யுளும் பின் முன்னாக வந்துள்ளன.

பா - ம்—[1]தொலியுடன். [2]கட்டிட்டு. [3]மாடில். [4]மாமணிக். [5]அணிமாதி. [6]யொட்டிடு. [7]திரிபுரைச். [8]இருக்கல். [9]மந்தரம்வேறு. [10]வைமாற்றக். [11]கந்தின்றி. [12]நற்காமிய லோகஞ்சார். [13]மியலொக்குஞ்சார். [14]அணிமாதி.

673 முடிந்திட்டு வைத்து முயங்கிலோ ராண்டில்
அணிந்த [1]அணிமாகை தானும் இவனுந்
தணிந்தவப் பஞ்சினுந் [2]தானொய்ய தாகி
மெலிந்தங் கிருந்திடும் மெல்லவொண் ணாதே. ௬௪

லகிமா

674 ஆகின்ற [3]வத்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவம் எங்கும் புகலதாய்ச்
[4]சாகின்ற காலங்கள் தன்வழி [5]நின்றிடின்
[6]மாய்கின்ற [7]தையாண்டின் மாலகு வாகுமே. ௬௫

675 மாலகு [8]வாகிய மாயனைக் கண்டபின்
தானொளி யாகித் தழைத்தங் கிருந்திடும்
பாலொளி யாகிப் [9]பரந்தெங்கு நின்றது
மேலொளி யாகிய மெய்ப்பொருள் [10]காணுமே. ௬௬

மகிமா

676 மெய்ப்பொருள் சொல்லிய மெல்லிய லாளுடன்
தற்பொரு ளாகிய தத்துவங் கூடிடக்
கைப்பொரு ளாகக் கலந்திடு மோராண்டின்
மைப்பொரு ளாகு மகிமாவ தாகுமே. ௬௭

677 ஆகின்ற [11]காலொளி யாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவது மில்லையாம்
மேனின்ற காலம் வெளியுற [12]நின்றன
[13]தாழ்கின்ற காலங்கள் தன்வழி யாகுமே. ௬௮

678 தன்வழி யாகத் தழைத்திடு ஞானமுந்
தன்வழி [14]யாகத் தழைத்திடும் வையகந்
தன்வழி யாகத் தழைத்த பொருளெல்லாந்
தன்வழி தன்னரு ளாகிநின் றானே. ௬௯

பா - ம்—[1]வனுமாயை ; வணுமாயை. [2]தன்னொய்ய ; தானேய. [3]வக்கினி ; வத்தினி. [4]சாய்கின்ற. [5]கண்டிடின். [6]மாகின்ற. [7]ஐயாண்டின். [8]வாய. [9]படர்ந்தெங்கு. [10]தானுமே. [11]தாவொளி. [12]நின்றபின்; நின்றனன். [13]தானின்ற. [14]மீதாகத்.

பிராத்தி

679 நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் [1]படையவை யெல்லாங்
கொண்டவை யோராண்டு கூட இருந்திடில்
விண்டது [2]வேறல்ல பிராத்திய தாகுமே. ௪0

கரிமா

680 ஆகின்ற [3]மின்னொளி யாவது கண்டபின்
பாகின்ற பூவிற் பரப்பவை காணலா
[4]மேனின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவது மில்லையே. ௪௧

681 போவதொன் றில்லை வருவது தானில்லை
சாவதொன் றில்லை தழைப்பது தானில்லை
தாமத மில்லை தமரகத் தின்னொளி
யாவது மில்லை யறிந்துகொள் வார்க்கே. ௪௨

682 அறிந்த பராசத்தி யுள்ளே அமரிற்
பறிந்தது பூதப் படையவை யெல்லாங்
[5]குவிந்தவை யோராண்டு கூட இருக்கில்
[6]விரிந்த பரகாய மேவலு மாமே. ௪௩

பிராகாமியம்

683 ஆன விளக்கொளி யாவ தறிகிலர்
மூல விளக்கொளி முன்னே யுடையவர்
[7]கான விளக்கொளி கண்டுகொள் வார்கட்கு
மேலை விளக்கொளி வீடெளி [8]தாகின்றே. ௪௪

*ஈசத்துவம்

684 நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
[9]கண்டன பூதப் படையவை எல்லாங்

---

*ஒரு பிரதியில் இத்தலைப்பு ஈசுரதத்துவம் என்றுளது.

பா - ம்—[1]படையானவை யெலாங். [2]சித்தியகாரம தாகுமே சத்தியதாரசமாகுமே. [3]பின்னொளி. [4]மேகின்ற. [5]குறிந்தவை; [6]விரிந்தது. [7]கால. [8]தாய்நின்றே. [9]கண்டனன்.

கொண்டவை யோராண்டு கூடி யிருந்திடிற்
பண்டைய [1]வீசன் தத்துவ மாகுமே. ௪௫

685 *ஆகின்ற சந்திரன் [2]தன்னொளி யாயவன்
ஆகின்ற சந்திரன் தட்பமு மாயிடும்
ஆகின்ற சந்திரன் தன்கலை [3]கூடிடில்
ஆகின்ற சந்திரன் தானவ னாமே. ௪௬

686 தானே படைத்திட வல்லவ னாயிடுந்
தானே யளித்திட வல்லவ னாயிடுந்
தானே சங்காரத் தலைவனு மாயிடுந்
[4]தானே யிவனெனுந் [5]தன்மைய னாமே. ௪௭

687 [6]தன்மைய [7]தாகத் தழைத்த கலையினுள்
[8]பன்மைய தாகப் பரந்தஐம் பூதத்தை
[9]வன்மைய தாக [10]மறித்திடில் ஓராண்டின்
[11]மென்மைய தாகிய மெய்ப்பொருள் காணுமே. ௪௮

வசித்துவம்

688 மெய்ப்பொரு ளாக விளைந்தது வேதெனின்
நற்பொரு ளாகிய நல்ல [12]வசித்துவங்
கைப்பொரு ளாகக் கலந்த உயிர்க்கெல்லாந்
தற்பொரு [13]ளாகிய தன்மைய னாகுமே. ௪௯

689 தன்மைய தாகத் தழைத்த பகலவன
மென்மைய தாகிய மெய்ப்பொருள் கண்டிடின்
பொன்மைய தாகப் புலன்களும் [14]போயிட
நன்மைய தாகிய நற்கொடி காணுமே. ௫௦

690 நற்கொடி யாகிய நாயகி தன்னுடன்
[15]அக்கொடி யாகம் அறிந்திடில் ஓராண்டு

---

*ஒரு பிரதியில் இச்செய்யுளுக்கு முன் **வசித்துவம்** என்ற தலைப்புக் காணப்படுகிறது, 688-ம் செய்யுளுக்கு முன் இல்லை.

பா - ம்—[1]வீச. [2]தண்ணளி. [3]கூட்டிடில். [4]தானிவனெனனுங். [5]தண்மைய. [6]தண்மைய. [7]னாகத். [8]பண்மைய. [9]வண்மைய. [10]மறித்திடுமோ ராண்டின். [11]மெய்மைய. [12]சிவதத்துவங்; வைசித்துங்; வசித்துங். [13]ளாகித். [14]போய்விட. [15]மற்கொடியாக மறிந்திடில்.

பொற்கொடி யாகிய புவனங்கள் போய்வருங்
கற்கொடி யாகிய காமுக னுமே. ருக

691 காமரு தத்துவ மானது வந்தபின்
பூமரு கந்தம் புவனம தாயிடும்
மாமரு [1]வுன்னிடை மெய்த்திடு [2]மானனுய்
நாமரு [3]வும்ஒளி நாயக மானதே. ருஉ

692 நாயக மாகிய [4]நல்லொளி கண்டபின்
தாயக மாகத் தழைத்தங் கிருந்திடும்
போயக மான [5]புவனங்கள் கண்டபின்
[6]பேயக மாகிய பேரொளி காணுமே. ருங

693 பேரொளி யாகிய பெரியஅவ் வெட்டையும்
பாரொளி யாகப் பதைப்பறக் [7]கண்டவன்
தாரொளி யாகத் தரணி முழுதுமாம்
ஓரொளி யாகிய காலொளி காணுமே. ருச

694 காலோ டுயிருங் கலக்கும் [8]வகைசொல்லிற்
காலது அக்கொடி நாயகி தன்னுடன்
காலது ஐஞ்ஞூற் றொருபத்து மூன்றையுங்
காலது [9]வேண்டிக் கொண்டஇவ் வாறே. ருரு

695 ஆறது வாகும் [10]அமிர்தத் தலையினுள்
ஆறது ஆயிர முந்நூற் றொடைஞ்சுள
ஆறது வாயிர [11]மாகு மருவழி
ஆறது வாக [12]வளர்ப்ப திரண்டே. ருசு

696 இரண்டினின் மேலே சதாசிவ நாயகி
இரண்டது கால்கொண் டெழுவகை [13]சொல்லில்
இரண்டது ஆயிரம் ஐம்பதோ [14]டொன்றாய்த்
திரண்டது காலம் எடுத்ததும் அஞ்சே. ருஎ

பா - ம்—[1]வுன்னிடம் எய்திடு. [2]மானுய். [3]வும்மொழி. [4]நலன் ஒளி. [5]புமான் புவனங்கள். [6]பேயமதாகிய. [7]கண்டபின். [8]வகை சொல்லினுலது. [9]வெண்மண்டி ; பெண்மண்டிக். [10]இரதத். [11]மாகும் வரும் வழி. [12]வளப்பத். [13]சொல்லிடில். [14]டொன்றெத்.

697 அஞ்சுடன் அஞ்சு முகமுள நாயகி
அஞ்சுடன் அஞ்சது வாயுத மாவது
அஞ்சது [1]வன்றி இரண்டது வாயிரம்
அஞ்சது [2]காலம் [3]எடுத்துளும் ஒன்றே. ருஅ

698 ஒன்றது வாகிய தத்துவ நாயகி
ஒன்றது கால்கொண் டூர்வகை சொல்லிடில்
ஒன்றது வென்றிகொள் ஆயிரம் ஆயிரம்
ஒன்றது [4]காலம் எடுத்துளு [5]முன்னே. ருகூ

699 [6]முன்னெழும் அக்கலை நாயகி தன்னுடன்
[7]முன்னூறு வாயு முடிவகை சொல்லிடின்
[8]முன்னூறும் [9]ஐம்பத் தொன்றுடன் அஞ்சுமாய்
[10]முன்னூறு வாயு முடிவகை யாமே. கூ0

700 ஆய்வரும் அத்தனி நாயகி தன்னுடன்
ஆய்வரு வாயு அளப்பது சொல்லிடில்
ஆய்வரும் [11]ஐஞ்ஞூற்று முப்பதொ டொன்பது
[12]மாய்வரு [13]வாயு வளப்புள் ளிருந்ததே. கூக

701 [14]இருநிதி யாகிய எந்தை யிடத்து
[14]இருநிதி வாயு இயங்கு நெறியில்
இருநூற்று முப்பத்து மூன்றுடன் அஞ்சாய்
[14]இருநிதி வாயு [15]இயங்கும் எழுத்தே. கூஉ

702 எழுகின்ற [16]சோதியுள் நாயகி தன்பால்
எழுகின்ற வாயு இடமது சொல்லில்
எழுநூற் றிருபத் [17]தொன்பா னதுநாலாய்
எழுந்துடன் அங்கி [18]இருந்ததிவ் வாறே. கூங

பா - ம்—[1]வின்றி. [2]காலா லெடுத்துளும். [3]எடுத்துரும்; எடுத்ததும். [4]காலால். [5]மொன்றே. [6]முன்னேழும். [7]முன்னூறு. [8]மூன்னூறு. [9]ஐம்பதொ டொன்றுடன்; ஐமலத்தோடொன்றும். [10]மூன்னூறு; முந்நூறு. [11]ஐஞ்ஞூறு முப்பத்தொ. [12]வாய்வரு. [13]மாய. [14]இருநீதி. [15]வளப்புளிருந்தே. [16]சோதியு. [17]தொடொன் பது நாலாய்; தொன்பது நாலாய். [18]இருந்தவிவ்.

703 ஆறது கால்கொண் டிரதம் விளைத்திடும்
ஏழது கால்கொண் டிரட்டி [1]இறக்கிட
எட்டது கால்கொண் டிடவகை [2]யொத்தபின்
ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே. ௬௪

704 சந்திரன் சூரியன் தற்பரன் தாணுவிற்
சந்திரன் தானுந் தலைப்படுந் தன்மையைச்
சந்தியி லேகண்டு [3]தானஞ் [4]சகமுகத்
துந்திச் சமாதி [5]யுடையொளி யோகியே. ௬௫

705 அணங்கற்ற மாதல் அருஞ்சன நீவல்
வணங்குற்ற [6]கல்விமா ஞான மிகுத்தல்
[7]சுணங்குற்ற வாயர் [8]சித்தி தூரங் கேட்டல்
[9]நுணங்கற் [10]றிரோதல்கால் வேகத்து நுந்தலே. ௬௬

706 மரணஞ் [11]சரைவிடல் வண்பர காயம்
இரணஞ் சேர்பூமி இறந்தோர்க் களித்தல்
அரணன் [12]திருவுற வாதன்மூ வேழாங்
[13]கரணுறு கேள்வி கணக்கறிந் தோனே. ௬௭

707 ஓதம் ஒலிக்கும் உலகை வலம்வந்து
பாதங்கள் நோவ நடந்தும் பயனில்லை
[14]காதலில் அண்ணலைக் காண இனியவர்
நாதன் இருந்த நகரறி வாரே. ௬௮

708 [15]மூல முதல்வேதா [16]மாலரன் முன்னிற்கக்
[17]கோவிய ஐம்முகன் [18]கூறப் பரவிந்து
சாலப் [19]பரநாதம் விந்துத் தனிநாதம்
பாவித்த சத்தி [20]பரைபரன் பாதமே. ௬௯

பா - ம் [1]இறக்கிட்டெட்டது. [2]ஏற்றபின். [3]ரணஞ்சதுமுகத். [4]சமுத்துயுந்திச். [5]யுடையோனி. [6]கல்வியா. [7]சிணுங்குற்ற. [8]சித்திதாங். [9]துணங்கற். [10]றிரோகல்கால். [11]சிறைவிடல். [12]திருவுரு. [13]காணுறு. [14]காதலிவ் வண்ணலைக். [15]மூலன். [16]மாலாங்கன் முன்னீசன். [17]பாவிய வீசன் ஐம்முகன் பால்விந்து. [18]கூறிற். [19]பால்நாதம். [20]பரையான.

709 ஆதார யோகத் ததிதே வொடுஞ்சென்று
மீதான [1]தற்பரை மேவும் பரனொடு
மேதாதி யீரெண் கலைசெல்ல மீதொளி
ஓதா அசிந்தமீ தானந்த யோகமே. எ0

710 மதியமும் [2]ஞாயிறும் வந்துடன் கூடித்
துதிசெய் பவரவர் தொல்வா னவர்கள்
விதியது செய்கின்ற மெய்யடி யார்க்குப்
பதியது காட்டும் பரமனின் றானே. எக

711 கட்டவல் லார்கள் [3]கரந்தெங்குந் தானவர்
மட்டவிழ் தாமரை யுள்ளே மணஞ்செய்து
பொட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு
[4]நட்டறி வார்க்கு நமனில்லை தானே. எஉ

கஉ. கலை நிலை

712 காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடிற்
காதல் வழிசெய்து கங்கை வழிதருங்
காதல் வழிசெய்து காக்கலு மாமே. க

713 காக்கலு மாகுங் கரணங்கள் நான்கையுங்
காக்கலு மாகுங் கலைபதி னாறையுங்
காக்கலு மாகுங் கலந்தநல் [5]வாயுவுங்
காக்கலு மாகுங் கருத்துற நில்லே. உ

714 நிலைபெற நின்றது நேர்தரு வாயு
சிலைபெற நின்றது தீபமும் ஒத்துக்
கலைவழி நின்ற கலப்பை அறியில்
[6]அலைவற வாகும் [7]வழியிது வாமே. ங

715 புடையொன்றி நின்றிடும் பூதப் பிரானை
மடையொன்றி நின்றிட வாய்த்த [8]வழியுஞ்

பா - ம்—[1]தற்பர. [2]நாயறும். [3]கலந்தெங்குந். [4]நட்டிடு. [5]வாயு வுங். [6]மலைவறி. [7]வழியது. [8]வழியிற்.

சடையொன்றி நின்றஅச் சங்கர [1]நாதன்
விடையொன்றி லேறியே வீற்றிருந் தானே. ச

716 இருக்கின்ற காலங்கள் ஏதும் அறியார்
பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி
ஒருக்கின்ற வாயு வொளிபெற நிற்கத்
தருக்கொன்றி நின்றிடுஞ் சாதக னாமே. ரு

717 சாதக [2]மானஅத் தன்மையை நோக்கியே
மாதவ மான வழிபாடு செய்திடும்
போதக மாகப் புகலுறப் பாய்ச்சினால்
வேதக மாக விளைந்து கிடக்குமே. சு

718 கிடந்தது தானே [3]கிளர்பயன் மூன்று
நடந்தது தானேஉள் நாடியுள் நோக்கிப்
படர்ந்தது தானே பங்கய மாகத்
தொடர்ந்தது தானேஅச் சோதியுள் நின்றே. எ

719 தானே [4]எழுந்தஅத் தத்துவ [5]நாயகி
ஊனே வழிசெய்தெம் உள்ளே [6]யிருந்திடும்
[7]வானோர் உலகின்ற அம்மை மதித்திடத்
தேனே பருகிச் சிவாலய மாகுமே. அ

720 திகழும் படியே செறிதரு வாயு
அழியும் [8]படியை அறிகில ராரும்
அழியும் [8]படியை [9]அறிந்தபின் நந்தி
திகழ்கின்ற வாயுவைச் [10]சேர்தலு மாமே. கூ

721 சோதனை தன்னில் துரிசறக் காணலாம்
நாதனும் நாயகி தன்னிற் பிரியுநாள்
[11]சாதன மாகுங் குருவை வழிபட்டு
மாதன மாக மதித்துக்கொள் வீரே. க0

பா - ம்—[1]னந்தி. [2]மானதன்; மாவன. [3]கிளர்பயில்; கிளர்பயிர். [4]எழுந்த. [5]நாயகன். [6]யிருந்திட. [7]வானொருங் கின்ற. [8]படியே. [9]அறிந்தவின். [10]சேர்க்கலு. [11]சாதகமாகுங் குருவழிப்பட்டு.

722 ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுண்ண வல்லீரேல்
நீரா யிரமும் நிலமாயிரத் தாண்டும்
பேராது காயம் பிரான்நந்தி [1]ஆணையே. கக

723 *ஓசையில் ஏழும் ஒளியின்கண் ஐந்தும்
நாசியின் மூன்றும் நாவில் இரண்டுந்
[2]தேசியும் தேசனுந் தன்னிற் பிரியுநாள்
மாசறு சோதி வகுத்துவைத் தானே. கஉ

கங. சரீரசித்தி உபாயம்

724 உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் [3]அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே. க

725 உடம்பினை முன்னம் [4]இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
[5]உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்
[6]றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. உ

726 [7]சுழற்றிக் கொடுக்கவே [8]சுத்தி கழியுங்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்
துழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்
[9]கழற்றி தவிர்ந்துடல் அஞ்சன மாமே. ங

727 அஞ்சனம் [10]போன்றுட லையறு [11]மந்தியில்
வஞ்சக வாத மறுமத்தி யானத்திற்
செஞ்சிறு [12]காலையிற் [13]செய்திடிற் பித்தறும்
[14]நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே. ச

*இச்செய்யுள் ஒரு பிரதியில் இல்லை.

பா - ம்—[1]யாமே. [2]தேகியுந் தேகனுந். [3]அறிந்தேன். [4]அழுக்கென். [5]உடம்பிலே. [6]உடம்பினை. [7]சுழித்துக். [8]சுத்திக். [9]கழற்றித். [10]போலுட. [11]மாதியில். [12]காலையே. [13]பித்தறுஞ் செய்வீரேல். [14]நஞ்சற்றுச்.

728 மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள
வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்
[1]நான்றவிம் முட்டை யிரண்டையுங் கட்டியிட்
டூன்றி யிருக்க உடம்பழி யாதே. ரு

729 நூறும் அறுபதும் ஆறும் வலம்வர
நூறும் அறுபதும் ஆறும் இடம்வர
நூறும் அறுபதும் ஆறும் [2]எதிரிட
நூறும் அறுபது மாறும் புகுவரே. சு

730 சத்தியார் கோயி லிடம்வலஞ் சாதித்தான்
மத்தியா னத்திலே [3]வாத்தியங் கேட்கலாந்
தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படுஞ்
சத்தியஞ் [4]சொன்னோஞ் சதாநந்தி [5]ஆணையே. எ

731 திறத்திறம் விந்துத் திகழு மகார
[6]முறப்பெற வேநினைந் தோதுஞ் [7]சகார
[8]மறிப்பது மந்திர மன்னிய நாத
மறப்பெற யோகிக் கறநெறி யாமே. அ

732 உந்திச் [9]சுழியின் உடனே பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால்
முந்தி முகட்டின் நிறுத்தி அபானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே. கூ

733 மாறு [10]மலக்குதந் தன்மே லிருவிரற்
கூறு இலிங்கத்தின் கீழே குறிக்கொண்மின்
ஆறு உடம்பிடை அண்ணலும் அங்குளன்
கூறு உபதேசங் கொண்டது காணுமே. க0

734 நீல நிறனுடை நேரிழை யாளொடுஞ்
சாலவும் புல்லிச் சதமென் [11]றிருப்பார்க்கு
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு [12]மாவர் பராநந்தி [13]ஆணையே. கக

பா - ம்—[1]நான்றவிழ். [2]எதிரிடில். [3]வாக்கியங். [4]சொன்னேன். [5]தானே. [6]முறப்பர. [7]சிகார. [8]மறப்பது. [9]சுழுனையுடன்சேர். [10]மலக்குதத்தின்மே. [11]றிருப்பாற்கு. [12]மாவன். [13]தானே.

735 அண்டஞ் [1]சுருங்கில் அதற்கோ ரழிவில்லை
பிண்டஞ் [1]சுருங்கிற் பிராணன் நிலைபெறும்
உண்டி [1]சுருங்கில் உபாயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியு மாமே. கஉ

736 [2]*பிண்டத்துள் உற்ற பிழக்கடை வாசலை
[3]அண்டத்துள் உற்று அடுத்தடுத் தேகிடில்
வண்டிச் சிக்கு மலர்க்குழல் மாதரார்
கண்டிச் [4]சிக்குநற் காயமு [5]மாமே. கங

737 சுழலும் பெருங்கூற்றுத் தொல்லைமுன் சீறி
[6]அழலும் இரதத்துள் [7]அங்கியுள் ஈசன்
கழல்கொள் திருவடி காண்குறில் ஆங்கே
நிழலுளுந் தெற்றுளும் [8]நிற்றலு மாமே. கச

738 நான்கண்ட வன்னியும் நாலு கலையேழுந்
தான்கண்ட [9]வாயுச் சரீர முழுதொடும்
ஊன்கண்டு கொண்ட [10]வுணர்வு மருந்தாக
மான்கன்று நின்று வளர்கின்ற வாறே. கரு

739 ஆகுஞ் சனவேத சத்தியை அன்புற
[11]நீர்கொள நெல்லின் வளர்கின்ற நேர்மையைப்
[12]பாகு படுத்திப் பல்கோடி [13]களத்தினால்
[14]ஊழ்கொண்ட மந்திரந் தன்னால் [15]ஒடுங்கே. கசு

கச. காலசக்கரம்.

740 மதிவட்ட மாக வரையைந்து நாடி
[16]இதுவிட்டிங் கிரா [17]றமர்ந்த [18]அதனாற்

*ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்.—[1]சுருக்கில். [2]பிண்டத்துற்ற. [3]அண்டத்துற்று வந்தடுத் தடுத்; அண்டத்துற்று மடுத்தடுத். [4]சிக்குங். [5]மாகுமே. [6]உழலு மயிர் தத்துள். [7]அங்கியு மீசன். [8]நித்தலு. [9]வாயுவுஞ். [10]வுணவு. [11]நீர்கொள் குளநெல் வானின்ற; நீகொள்ளி னெல்லின். [12]பாகும் படுத்தப். [13]கடத்தினால்; கணக்கினால்; கட்டினால். [14]ஊனின்ற. [15]ஒருங்கே; ஒடுங்குமே. [16]யதிலட்டங்; இதுவட்டங். [17]றாமிந்த. [18]வரையிற்.

பதிவட்டத் துள்நின்று [1]பாலிக்கு மாறு
மதுவிட்டுப் போமாறு மாயலுற் றேனே. க

741 உற்றறி வைந்தும் உணர்ந்தறி வாறேழுங்
கற்றறி வெட்டுங் கலந்தறி வொன்பதும்
பற்றிய பத்தும் பலவகை நாழிகை
அற்றறி யாது அழிகின்ற வாறே. உ

742 அழிகின்ற ஆண்டவை ஐயைஞ்சு மூன்று
மொழிகின்ற முப்பத்து மூன்றென்ப தாகுங்
கழிகின்ற காலறு பத்திரண் [2]டென்ப
தெழுகின்ற [3]ஈரைம்ப [4]தெண்ணற் றிருந்தே. ங

743 திருந்து தினமத் தினத்தி னொடுநின்
றிருந்தறி நாளொன் றிரண்டெட்டு மூன்று
பொருந்திய நாளொடு புக்கறிந் தோங்கி
வருந்துத லின்றி மனைபுக லாமே. ச

744 மனைபுகு வீரும் மகத்திடை நாடி
எனவிரு பத்தஞ்சும் ஈரா றதனால்
தனையறிந் [5]தேறட்டுத் தற்குறி யாறு
வினையறி [6]யாறு விளங்கிய நாலே. ரு

745 நாலுங் கடந்தது நால்வரும் நாலஞ்சு
[7]பாலங் கடந்தது [8]பத்துப் பதினஞ்சு
கோலங் கடந்த குணத்தாண்டு மூவிரண்
டாலங் கடந்ததொன் றூறறி வாரே. சு

746 ஆறும் இருபதுக் கைஞ்சு மூன்றுக்குந்
தேறு [9]மிரண்டு மிருபத்தொ டாறிவை
கூறு மதியொன் றினுக்கிரு பத்தேழு
வேறு பதியங்க ளுள்விதித் தானே. எ

பா - ம்—[1]பாரிக்கு. [2]டெண்பத். [3]தீரைம்ப. [4]தெண்ணத் திருந்தே. [5]தோடத்; தேறடத்; தெட்டு. [6]யாது; யாறும். [7]பானங். [8]பாத்துப் பதினைஞ்சு. [9]மிரண்டிருபத்தொ.

747 விதித்த இருபத்தெட் [1]டொடுமூன் றறையாகத்
தொகுத்தறி முப்பத்து மூன்று தொகுமின்
[2]பதித்தறி [3]பத்தெட்டும் பாரா திகழுல்
உதித்தறி மூன்றிரண் [4]டொன்றின் முறையே.* அ

748 முறைமுறை [5]யாய்ந்து [6]முயன்றில ராகில்
இறையிறை யார்க்கும் இருக்க அரிது
மறையது காரண மற்றொன் றுமில்லை
பறையறை யாது பணிந்து முடியே. கூ

749 முடிந்த தறியா முயல்கின்ற மூர்க்கர்
இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டு
கடிந்தனன் மூளக் கதுவவல் லார்க்கு
நடந்திடும் பாரினில் நண்ணலு மாமே. க0

750 நண்ணு சிறுவிர [7]ஞணுக மூன்றுக்கும்
பின்னிய மார்பிடைப் பேராமல் ஒத்திடுஞ்
சென்னியின் மூன்றுக்குஞ் சேரவே [8]நின்றிடும்
உன்னி [9]யுணர்ந்திடும் ஓவியந் தானே. கக

751 ஓவிய மான வுணர்வை அறிமின்கள்
பாவிக ளித்தின் பயனறி வாரில்லை
தீவினை யாமுடன் மண்டல மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் [10]புண்ணியத் தண்டே. கஉ

752 தண்டுடன் ஓடித் [11]தலைப்பெய்த யோகிக்கு
மண்டல மூன்று மகிழ்ந்துடல் ஒத்திடுந்

---

*இரண்டு பிரதிகளில் இச்செய்யுள் முடிந்த விடத்து **ஆயுட் பரீட்சை** [770 - 789] தொடங்கி அது முடிந்தபின் அடுத்த பாட்டு முதலியவற்றிற்குத் தலைப்பாகக் **கலைநிறுத்த ஆயுர்வர்த்தனை** என்பது காணப்படுகிறது.

பா - ம்—[1]டொடுமுறையாகத். [2]பதித்தறு. [3]பத்தெட்டுப்பாரதி காணல்; பத்தெட்டுப்பாராதி காணல். [4]டொன்றினின். [5]யாவது; பாய்ந்து. [6]முயன்றறிவாகில்; முயன்றிலவாகில். [7]னண்ணுத; ஞுருத; ஞணுத. [8]நின்றிடில். [9]அணைந்திடும். [10]புண்ணியர்கண்டே. [11]தலைப்படும்.

கண்டவர் கண்டனர் காணார் வினைப்பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின் றாரே. கங

753 பிணங்கி [1]அழிந்திடும் பேறது கேள்நீ
அணங்குட [2]னாதித்த னாறு [3]விரியின்
வணங்குட னேவந்த வாழ்வு குலைந்து
சுணங்கனுக் காகச் சுழல்கின்ற வாறே. கச

754 சுழல்கின்ற வாறின் துணைமலர் [4]காணான்
தழலிடைப் புக்கிடுந் தன்னு [5]ளிலாமற்
கழல்கண்டு போம்வழி காணவல் [6]லாற்குக்
குழல்வழி நின்றிடுங் கூத்தனு மாமே. கரு

755 கூத்தன் குறியிற் குணம்பல கண்டவர்
சாத்திரந் தன்னைத் தலைப்பெய்து நிற்பர்கள்
[7]பார்த்திருந் துள்ளே அனுபோக நோக்கிடில்
ஆத்தனு மாகி [8]யலர்ந்திரு மொன்றே. கசு

756 [9]ஒன்றில வளர்ச்சி [10]உலப்பிலி கேளினி
[11]நன்றென்று மூன்றுக்கு நாளது சென்றிடுஞ்
சென்றிடு முப்பதுஞ் சேர இருந்திடிற்
[12]குன்றிடைப் பொன்திகழ் கூத்தனு மாமே. கஎ

757 கூத்தவன் ஒன்றிடுங் கூர்மை அறிந்தங்கே
ஏத்துவர் பத்தினில் எண்டிசை தோன்றிடப்
பார்த்து மகிழ்ந்து [13]பதுமரை நோக்கிடிற்
சாத்திடு நூறு தலைப்பெய்ய லாமே. கஅ

758 சாத்திடு நூறு தலைப்பெய்து நின்றவர்
காத்துடல் ஆயிரங் கட்டுறக் காண்பர்கள்
சேர்த்துடல் ஆயிரஞ் சேர இருந்தவர்
மூத்துடன் [14]கோடி [15]யுகமது வாமே. ககூ

பா - ம்—[1]அளித்திடும். [2]னாகித்த. [3]விரிவின். [4]காணார். [5]னிலாமற். [6]லார்க்குக். [7]பாத்திருந். [8]யலந்திரு. [9]ஒன்றில். [10]உலப்பில. [11]நன்றெனு. [12]குன்றிடை யொன்றிடுங். [13]பதும்பறை. [14]கூடி. [15]முகமது.

759 [1]உகங்கோடி கண்டும் [2]ஒசிவற நின்று
அகங்கோடி [3]கண்டு ளயர்வறக் காண்பர்கள்
சிவங்கோடி விட்டுச் செறிய இருந்தங்
குகங்கோடி கண்டங் [4]குயருறு வாரே. உ௦

760 *உயருறு வாருல கத்தொடுங் கூடிப்
[5]பயனுறு [6]வார்பலர் தாமறி யாமற்
செயலுறு வார்சிலர் சிந்தையி லாமற்
கயலுறு கண்ணியைக் காணகி லாரே. உக

761 காணகி லாதார் கழிந்தோடிப் போவர்கள்
[7]நாணகி [8]லாதார் நயம்பேசி விடுவர்கள்
காணகி லாதார் கழிந்த பொருளெலாங்
காணகி லாமற் கழிகின்ற வாறே. உஉ

762 [9]கழிகின்ற அப்பொருள் காணகி லாதார்
[9]கழிகின்ற அப்பொருள் காணலு மாகுங்
[9]கழிகின்ற வுள்ளே கருத்துற [10]நோக்கிற்
கழியாத அப்பொருள் காணலு மாமே. உங

763 கண்ணன் பிறப்பிலி காணந்தி [11]யாயுள்ளே
எண்ணுந் திசையுடன் ஏகாந்த னாயிடுந்
திண்ணென் றிருக்குஞ் சிவகதி [12]யாகிற்கும்
நண்ணும் பதமிது நாடவல் லார்கட்கே. உச

764 நாடவல் லார்க்கு நமனில்லை கேடில்லை
நாடவல் லார்கள் நரபதி யாய்நிற்பர்
தேடவல் லார்கள் தெரிந்த பொருளிது
கூடவல் லார்கட்குக் கூறலு மாமே. உரு

*ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]முகங்கோடி. [2]மொசிவற. [3]கண்டுள் வயலுறக் ; கண்டு ளயலறக். [4]குயர்வுறு. [5]பயனறி. [6]வாரவர். [7]காணகிலார் நயம்பேசி. [8]லார்நயம்பேசித் திரிவர்கள். [9]கழிக்கின்ற. [10]நோக்கிக். [11]யுள்ளே. [12]யாய்நிற்கும்.

765 கூறும் பொருளி தகார வுகாரங்கள்
தேறும் பொருளிது சிந்தையுள் நின்றிடக்
கூறு மகாரங் குழல்வழி யோடிட
[1]ஆறும் [2]அமர்ந்திடும் அண்ண லு [3]மாமே. உசு

766 அண்ணல் இருப்பிட மாரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வார்களுக்
கண்ணல் [4]அழிவின்றி உளளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவனிவ னுகுமே. உஎ

767 அவனிவ னுகும் பரிசறி வாரில்லை
அவனிவ னுகும் பரிசது கேள்நீ
அவனிவ னேனை [5]ஒளியினுள் ஒன்றிடும்
அவனிவன் வட்டம தாகிநின் ருனே. உஅ

768 வட்டங்க ளேழு மலர்ந்திடும் உம்முளே
சிட்டன் இருப்பிடஞ் சேர [6]அறிகிலீர்
ஒட்டி யிருந்துள் உபாயம் உணர்ந்திடக்
கட்டி இருப்பிடங் காண லு [7]மாகுமே. உகூ

769 காண லு மாகும் பிரமன் அரியென்று
காண லு மாகுங் கறைக்கண்டன் ஈசனைக்
காண லு மாகுஞ் சதாசிவ சத்தியுங்
காண லு மாகுங் கலந்துடன் [8]வைத்ததே. ௩0

கரு. [9]ஆயுள் பரீட்சை

770 வைத்தகை சென்னியில் நேரிதாய்த் தோன்றிடில்
உத்தம மிக்கிடில் ஓரா று திங்களா
மத்த மிகுத்திட் டிரட்டிய தாயிடில்
நித்தல் உயிர்க்கொரு திங்களில் ஓசையே.* க

---

* ஒரு பிரதியில் இச் செய்யுளையடுத்து 723-வது செய்யுள் காணப்படுகிறது.

பா - ம்—[1]மாறும். [2]அமர்ந்திடம்; திடுமதி. [3]மாகுமே. [4]அறி வின்றி. [5]ஒளியினி லொன்றும. [6]அறிகிலார். [7]மாமே. [8]வைத்தே. [9]ஆயுப்பரீட்சை.

[1]கதிமனை யுள்ளே கனைகள் பரப்பி
[2]எதிர்மலை யாமல் இருந்தனன் தானே. கரு

814 [3]இருந்தனள் சத்தியு மக்கலை சூழ
இருந்தனள் கன்னியு மந்நடு வாக
[4]இருந்தனள் மானேர் [5]முகநில வார
இருந்தனள் தானும் [6]அமுதம் பொழிந்தே. கசு

815 [7]பொழிந்த இருவெள்ளி [8]பொன்மண் ணடையில்
வழிந்துள் ளிருந்தது வான்முத லங்குக்
[9]கழிந்தது போகாமற் காக்கவல் லார்க்குக்
கொழுந்தது வாகுங் குணமது தானே. கஎ

816 குணமது வாகிய கோமள வல்லி
[10]மணமது வாக மகிழ்ந்தங் கிருக்கில்
தனமது வாகிய தத்துவ ஞானம்
இனமது வாக [11]இருந்தனன் தானே. கஅ

817 இருந்த பிராணனும் உள்ளே எழுமாம்
[12]பரிந்தஇத் தண்டுடன் அண்டம் [13]பரிய
[14]விரிந்தஅப் பூவுடன் மேலெழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழலு மாமே. ககூ

818 மண்டலத் துள்ளே மனவொட்டி [15]யாணத்தைக்
கண்டகத் தங்கே கருதியே [16]கீழ்க்கட்டிப்
பண்டகத் துள்ளே பகலே ஒளியாகக்
குண்டலக் காதனுங் கூத்தொழிந் தானே. உ0

819 ஒழிகின்ற வாயுவும் உள்ளே அமருங்
கழிகின்ற வாயுவுங் காக்கலு மாகும்
வழிகின்ற [17]காலத்து வட்டக் கழலைப்
பழிகின்ற காலத்துப் பையகற் றீரே. உக

பா - ம்—[1]கதிமனவுள்ளே. [2]எதிர்மனை. [3]இருந்தன. [4]இருந்தனன். [5]முகநலவாக. [6]அமிர்தம். [7]பொழிந்தும் ; பொருந்த. [8]பொன்மன்னடையில். [9]கழிந்தன ; கழிந்து. [10]மனமது. [11]இருந்ததென்றனே. [12]விரிந்தஇத். [13]பிரிய. [14]இருந்த அப்பூடன. [15]யானத்தைக். [16]கழுக்கட்டிற். [17]கோலத்தி.

1365 ஒன்றிய சக்கரம் [1]ஓதிடும் வேளையில்
[2]வென்றிகொள் மேனி [3]மதிவட்டம் பொன்மையாங்
குன்றிய ரேகை கலந்திடுஞ் செம்மையில்
[4]என்றிய லம்மை எழுத்தவை பச்சையே. சஎ

1366 ஏய்ந்த மரவுரி தன்னில் எழுதிய
வாய்ந்தஇப் [5]பெண்ணெண்பத் தொன்றில் [6]கிரைத்தபின்
காய்ந்தவி நெய்யுட் கலந்துடன் ஓமமு
[7]மாந்தலத் தாமுயி ராகுதி பண்ணுமே. சஅ

1367 *பண்ணிய பொன்னைப் [8]பரப்பற நீபிடி
எண்ணிய நாட்களில் [9]இன்பமும் எய்திடும்
நண்ணிய நாமமும் நான்முகன் [10]ஓத்தபின்
[11]துண்ணென [12]நேயநற் சேர்க்கலு மாமே. சகூ

1368 ஆகின்ற சந்தனங் குங்குமங் கத்தூரி
போகின்ற சாந்து சவாது புழுகுநெய்
ஆகின்ற கற்பூர [13]மாகோ சனநீருஞ்
சேர்கின்ற ஒன்பதுஞ் [14]சேரநீ வைத்திடே. ருo

1369 [15]வைத்திடும் பொன்னுடன் [16]மாதவ நோக்கிடற்
கைச்சிறு கொங்கை கலந்தெழு கன்னியைத்
[17]தச்சிது வாகச் சமைந்தஇம் மந்திரம்
[18]அர்ச்சனை யாயிரம் ஆயிரஞ் சிந்தியே. ருக

1370 சிந்தையி னுள்ளே திகழ்தரு சோதியாய்
எந்தை கரங்கள் [19]இருமூன் றும் உள்ளது
[20]பந்தமா சூலம் படைபாசம் [21]வில்லம்பு
முந்தை [22]கிலீமெழ முன்னிருந் [23]தாளே. ருஉ

---

*ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]எய்திடும். [2]வெள்ளிகொள்மென்மதி. [3]மதிவட்டமும். [4]அன்றியி ; மன்றிய. [5]பொன்னெண்பத். [6]திரைததபின [7]மாய்ந்த வியாயிர மாகுதிபண்ணே. [8]பகைப்பற. [9]இன்பமே. [10]ஒத்திடும். [11]சொல்லியல்லறிற். [12]மேயநற் சொக்கனு. [13]மோகோசனநீருஞ். [14]சேரநீர். [15]வைத்தவை. [16]மாதவன். [17]தச்சது. [18]மச்சியல்பாக. [19]இதுமூன றும். [20]பந்தமானசூலப். [21]வில்லம்பும். [22]கிலீயெழ ; கலி யெழ. [23]தானே ; தானன்றே.

1371 இருந்தனர் [1]சத்திகள் அறுபத்து நால்வர்
இருந்தனர் கன்னிகள் எண்வகை எண்மர்
இருந்தனர் சூழ எதிர்சக் [2]கரத்தே
இருந்த [3]கரமிரு வில்லம்பு கொண்டே. ௫௩

1372 கொண்ட [4]கனகங் குழைமுடி யாடையாய்க்
கண்டஇம் [5]முத்தங் [6]கனல்திரு மேனியாய்ப்
பண்டமர் சோதிப் படரித [7]ழானவள்
உண்டங் கொருத்தி [8]உணரவல் லாருக்கே. ௫௪

1373 உணர்ந்திருந் துள்ளே ஒருத்தியை நோக்கிற்
கலந்திருந் [9]தெங்குங் கருணை பொழியும்
[10]மணந்தெழும் [11]ஓசை [12]வொளியது காணுந்
[13]தணந்தெழு சக்கரந் தான்தரு வாளே. ௫௫

1374 [14]தருவழி யாகிய தத்துவ ஞானங்
குருவழி [15]யாகுங் [16]குணங்களுள் நின்று
கருவழி [15]யாகுங் கணக்கை யறுத்துப்
[17]பெருவழி [18]யாக்கும் பேரொளி தானே. ௫௬

1375 பேரொளி யாய பெரிய [19]பெருஞ்சுடர்
சீரொளி [20]யாகித் திகழ்தரு நாயகி
[21]காரொளி யாகிய கன்னிகை பொன்னிறம்
பாரொளி யாகிப் [22]பரந்துநின் றாளே. ௫௭

1376 பரந்த [23]கரம்இரு பங்கயம் ஏந்திக்
குவிந்த கரமிரு [24]கொய்தளிர்ப் பாணி
[25]பரிந்தருள் கொங்கைகண் முத்தார் பவளம்
[26]இருந்தநல் லாடை மணிபொதிந் [27]தன்றே. ௫௮

பா - ம்—[1]சத்தி. [2]காமாய். [3]கரமது ; கரமிது. [4]கனங்குழைகோமுடி. [5]மூர்த்தங். [6]கனல்தரு. [7]ழானவை. [8]உணர்ந்துகொள்வார்க்கே. [9]தங்கே. [10]மலர்ந்தெழு. [11]ஓமை. [12]யொளியது. [13]தளர்ந்தெழு. [14]தரும்வழி. [15]யாய. [16]குணங்களில். [17]பெருவெளி. [18]யாகிய ; பேருள்காணே. [19]மலர்நடுச். [20]யாயதிகழதின். [21]தாரொளியாயவள் தன்னிறம் பொன்மையாய்ப். [22]பரிந்துநின். [23]கரமிது. [24]கொய்தமர். [25]மலர்ந்தணி ; பரிந்தன. [26]இருந்தல்கு. [27]தின்றே.

1377 மணிமுடி [1]பா தஞ் சிலம்பணி மங்கை
[2]அணிபவ ளன் றி யருளில்லை யாருந்
[3]தணிபவர் நெஞ்சினுள் தன்னரு ளாகிப்
[4]பணிபவர்க் கன்றே பரகதி யாமே. ௫௯

1378 பாரந்திருந் துள்ளே அறுபது சத்தி
கரந்தன கன்னிகள் அப்படி சூழ
மலர்ந்திரு கையின் மலரவை [5]ஏந்தச்
சிறந்தவர் ஏத்துஞ் [6]சிறீம்தன மாமே. ௬0

1379 தனமது வாகிய தையலை நோக்கி
மனமது வோடி [7]மரிக்கிலோ ராண்டிற்
[8]கனமவை யற்றுக் கருதிய நெஞ்சந்
தினகர [9]ஞரிட செய்திய தாமே. ௬௧

1380 ஆகின்ற மூலத் தெழுந்த முழுமலர்
போகின்ற பேரொளி [10]யாய மலரதாய்ப்
போகின்ற பூரண மாக நிறைந்தபின்
சேர்கின்ற செந்தழல் மண்டல மானதே. ௬௨

1381 ஆகின்ற மண்டலத் துள்ளே [11]அமர்ந்தவள்
ஆகின்ற [12]ஐம்பத் தறுவகை யானவள்
ஆகின்ற ஐம்பத் தறுசத்தி [13]நேர்தரு
ஆகின்ற ஐம்பத் [14]தறுவகை சூழவே. ௬௩

1382 சூழ்ந்தெழு சோதி சுடர்முடி பாதமாய்
ஆங்கணி முத்தம் அழகிய மேனியுந்
[15]தாங்கிய கையவை [16]தார்கிளி [17]ஞானமாய்
[18]ஏந்து கரங்கள் எடுத்தமர் பாசமே. ௬௪

1383 பாசம தாகிய வேரை யறுத்திட்டு
நேசம தாக [19]நினைத்திரு மும்முளே

பா - ம்—[1]பாத. [2]அணிந்தவர்க்கன்றி. [3]தணிந்தவர் ; தணியவா. [4]பணிந்தவர்க்கன்றே. [5]ஏந்திச். [6]சிரீம்தன ; சிறீதன. [7]மறிக்கிலோ. [8]கனமிவை. [9]ஞரிசஞ் ; ஞரிடச். [10]யாயலர் சாயப் ; யாயமலர்த்தாய். [11]அமைந்தவள். [12]வத்தனி நாயகி. [13]நேரமர். [14]தறுவகைச்சூழலே. [15]தாங்கிரு. [16]தார்கிரி. [17]ஞானம். [18]ஏந்துங். [19]நினைந்திடு.

நாசம தெல்லாம் நடந்திடும் ஐயாண்டிற்
காசினி [1]மேலமர் கண்ணுத [2]லாகுமே. ௬௫

1384 கண்ணுடை நாயகி [3]தன்னரு ளாம்வழி
[4]பண்ணுறு நாதம் பகையற நின்றிடில்
விண்ணமர் சோதி [5]விளங்க [6]ஹ்றீங்கார
மண்ணுடை நாயகி மண்டல மாகுமே. ௬௬

1385 மண்டலத் துள்ளே மலர்ந்தெழு தீபத்தைக்
[7]கண்டகத் துள்ளே கருதி யிருந்திடும்
விண்டகத் துள்ளே விளங்கி வருதலால்
தண்டகத் துள்ளவை தாங்கலு மாமே. ௬௭

1386 தாங்கிய [8]நாபித் தடமலர் மண்டலத்
தோங்கி எழுங்கலைக் குள்ளுணர் [9]வானவள்
ஏங்க வரும்பிறப் பெண்ணி யறுத்திட
[10]வாங்கிய நாதம் வலியுட னாகுமே. ௬௮

1387 நாவுக்கு நாயகி [11]நன்மணி பூணாரம்
பூவுக்கு நாயகி பொன்முடி [12]யாடையாம்
பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்தள்
[13]ஆவுக்கு நாயகி அங்கமர்ந் தாளே. ௬௯

1388 அன்றிரு கையில் அளந்த பொருள்முறை
இன்றிரு கையில் எடுத்தவெண் குண்டிகை
மன்றது காணும் வழியது வாகவே
கண்டங் [14]கிருந்தவர் காரணி காணுமே. ௭0

1389 காரணி சத்திகள் ஐம்பத் [15]திரண்டெனக்
காரணி கன்னிகள் ஐம்பத் திருவராய்க்
காரணி சக்கரத் துள்ளே [16]கரந்தெங்குங்
காரணி தன்னரு ளாகிநின் றாளே. ௭௧

பா - ம்—[1]மேலவர். [2]லாளுதே. [3]கண்ணரு. [4]பன்னுயர்நாதப். [5]விளங்கிடில். [6]விருங்கார; வீரூங்கார; றீங்கார. [7]கண்டசத். [8]நாவித். [9]வானவன். [10]வாங்கி. [11]நன்மணிப். [12]யாடையாள். [13]ஆவிக்கு. [14]கிருந்தவக். [15]திரண்டுடன். [16]கலந்தெங்கும்.

1390 நின்றஇச் சத்தி நிலைபெற [1]நின்றிடிற்
[2]கண்டஇவ் வன்னி கலந்திடும் ஓராண்டிற்
கொண்ட விரதநீர் குன்றுமல் நின்றிடின்
[3]மன்றினி லாடு மணியது காணுமே. எஉ

1391 கண்டஇச் சத்தி இருதய பங்கயங்
கொண்டஇத் தத்துவ நாயகி யானவள்
[4]பண்டையவ் வாயுப் பகையை யறுத்திட
இன்றென் மனத்துள் இனிதிருந் தாளே. எங

1392 இருந்தவிச் சத்தி இருநாலு கையிற்
[5]பரந்தஇப் [6]பூங்கிளி பாச மழுவாள்
[7]கரந்திடு கேடகம் வில்லம்பு கொண்டங்
குரந்தங் கிருந்தவள் கூத்துகந் தாளே. எச

1393 உகந்தனள் பொன்முடி முத்தார மாகப்
பரந்த பவளமும் பட்டாடை சாத்தி
மலர்ந்தெழு கொங்கை மணிக்கச் சணிந்து
தழைந்தங் கிருந்தவள் தான்பச்சை யாமே. எரு

1394 பச்சை இவளுக்குப் பாங்கிமார் [8]ஆறெட்டு
கொச்சையார் எண்மர்கள் கூடி வருதலாற்
கச்சணி கொங்கைகள் கையிரு காப்பதாய்
எச்ச விடைச்சி இனிதிருந் தாளே. எசு

1395 தாளதி னுள்ளே [9]தாங்கிய சோதியைக்
காலது வாகக் [10]கலந்துகொள் என்று
மாலது வாக வழிபாடு [11]செய்துநீ
பாலது போலப் பரந்தெழு விண்ணிலே. எஎ

1396 விண்ணமர் நாபி இருதய மாங்கிடைக்
கண்ணமர் கூபங் கலந்து வருதலாற்

பா - ம்—[1]வேண்டிடிற். [2]கண்டபின். [3]மன்றதுகாணு. [4]பண்டைய வாவுப். [5]பரந்தவப். [6]பூக்கிளி. [7]கரந்தகடகுடன ; கரந்தகாகுடன். [8]ஆறெட்டுக். [9]தயங்கிய. [10]கலந்து கம்ஜம். [11]செய்துநீர்.

பண்ணமர்ந் [1]தாதித்த மண்டல மானது
தண்ணமர் கூபந் [2]தழைத்தது காணுமே. எஅ

1397 கூபத்துச் சத்தி குளிர்முகம் பத்துள
தாபத்துச் சத்தி தயங்கி வருதலால்
[3]ஆபத்துக் கைகள் அடைந்தன நாலைந்து
பாசம் அறுக்கப் பரந்தன [4]சூலமே. எகூ

1398 சூலந்தண் [5]டொள்வாள் [6]சுடர்பறை ஞானமாய்
[7]வேலம்பு தமருக மாகிளி விற்கொண்டு
[8]காலம்பூப் பாசம் மழுகத்தி [9]கைக்கொண்டு
கோலஞ்சேர் சங்கு குவிந்தகை எண்ணதே. அ0

1399 எண்ணமர் சத்திகள் நாற்பத்து நாலுடன்
எண்ணமர் [10]சத்திகள் நாற்பத்து நால்வராம்
எண்ணிய பூவித ழுள்ளே [11]யிருந்தவள்
எண்ணிய எண்ணங் கடந்துநின் றாளே. அக

1400 கடந்தவள் பொன்முடி மாணிக்கத் தோடு
தொடர்ந்தணி முத்து பவளங்கச் சாகப்
படர்ந்தல்குற் பட்டாடை [12]பாதச் சிலம்பு
மடந்தை [13]சிறியவள் வந்துநின் றாளே. அஉ

1401 [14]நின்றஇச் [15]சத்தி நிரந்தர [16]மாகவே
கண்டிடு மேரு [17]வணிமாதி தாஞகிப்
பண்டைய [18]வானின் பகட்டை [19]யறுத்திட்
டொன்றிய தீபம் உணர்ந்தார்க் [20]குண்டாமே. அங

1402 [21]உண்டோர் அதோமுகம் உத்தம மானது
கண்டஇச் சத்தி சதாசிவ நாயகி

பா - ம்—[1]தாதி. [2]தழைந்தது. [3]ஆர்பத்துக். [4]சூழவே. [5]டேர் வாள். [6]சுடர்படை. [7]தாலங்கொம்புதர மாஞகு ; கோலம்புதமரக. [8]கோலம்பு. [9]யைக்கொண்டு. [10]நன்னிகள். [11]யிருநதிவள். [12]பாதஞ் சிலம்பு. [13]குமிறீயில் ; கமீறீயில். [14]நின்றவள். [15]சத்திகள். [16]மாகி யே ; மாக. [17]வணுவாதி. [18]வாளின். [19]யறுத்திட வொன்றிய. [20]குண் டாகுமே. [21]உண்டாமதோ முகம்.

கொண்ட [1]முகமைந்து கூறுங் கரங்களும்
ஒன்றிரண் டாகவே மூன்றுநா லானதே. ௮௪

1403 நன்மணி சூலங் கபாலங் கிளியுடன்
பன்மணி [2]நாகம் மழுகத்தி பந்தாகுங்
கன்மணி [3]தாமரைக் கையில் [4]தமருகம்
பொன்மணி பூணாரம் பூசனை யானதே. ௮௫

1404 பூசனைச் சத்திகள் எண்ணைவர் சூழவே
[5]நேசவள் [6]கன்னிகள் [7]நாற்பத்து [8]நேரதாய்க்
காசினிச் [9]சக்கரத் துள்ளே [10]கலந்தவள்
[11]மாசடை யாமல் மகிழ்ந்திருந் தார்களே. ௮௬

1405 தாரத்தி னுள்ளே [12]தங்கிய சோதியைப்
பாரத்தி னுள்ளே பரந்துள் எழுந்திட
[13]வேரது வொன்றின் றெண்ணு மனுமையங்
காரது போலக் கலந்தெழு மண்ணிலே. ௮௭

1406 மண்ணில் [14]எழுந்த [15]அகார உகாரங்கள்
விண்ணில் எழுந்து சிவாய நமவென்று
[16]கண்ணில் எழுந்தது [17]காண்பரி [18]தன்றுகொல்
கண்ணில் [19]எழுந்தது காட்சி தரஎன்றே. ௮௮

1407 என்றங் கிருந்த [20]அமுத கலையிடைச்
சென்றங் கிருந்த [21]அமுத பயோதரி
[22]கண்டங் கரிமிரு வெள்ளிபொன் [23]மண்ணடை
கொண்டங் கிருந்தது [24]வண்ணம் அமுதே. ௮௯

1408 அமுதம [25]தாக அழகிய மேனி
படிகம தாகப் பரந்தெழு [26]முள்ளே

பா - ம்—[1]முகமைந்துங். [2]நாதம். [3]தாமரை. [4]தமரகம். [5]நேசவன். [6]கன்னி. [7]நாற்பது. [8]நேரதாக். [9]சத்தரத். [10]கலந்தவர். [11]மாசுடை ; மாகடை. [12]தயங்கிய. [13]வோதுவ. [14]எழுந்து. [15]மகரவுகாரங்கள். [16]தண்ணில். [17]காணவரிதால். [18]தென்றுதான் ; தென்றுகால். [19]எழுந்து. [20]அமுதக் ; அமுதத் தலையிடை. [21]அமுதப். [22]கண்ட. [23]மண்டையாய் ; மண்டைவாய். [24]வண்ண. [25]ழகே ; த்தாக. [26]மும். முன்.

குமுதம தாகக் [1]குளிர்ந்தெழு முத்துக்
[2]கெழுதம தாகிய கேடிலி தானே. ௬0

1409 கேடிலி [3]சத்திகள் முப்பத் தறுவரும்
நாடிலி கன்னிகள் நாலொன் பதின்மரும்
[4]பூவிலி பூவிதழ் உள்ளே [5]யிருந்திவர்
நாளிலி தன்னை [6]நணுகிநின் றார்களே. ௬௧

1410 நின்றது புந்தி நிறைந்திடும் வன்னியுங்
கண்டது சோதி கருத்துள் [7]இருந்திடக்
கொண்டது வோராண்டு கூடி வருகைக்கு
[8]விண்ட வெளகாரம் விளங்கின [9]அன்றே. ௬௨

1411 விளங்கிடு வானிடை [10]நின்றவை யெல்லாம்
வணங்கிடு மண்டலம் மன்னுயி ராக
நலங்கிளர் நன்மைகள் நாரண னொத்துச்
சுணங்கிடை [11]நின்றிவை சொல்லலு மாமே. ௬௩

1412 ஆமே அதோமுக மேலே அமுதமாய்த்
[12]தாமே யுகாரந் தழைத்தெழுஞ் சோமனுங்
காமேல் வருகின்ற கற்பக மானது
பூமேல் வருகின்ற பொற்கொடி யானதே. ௬௪

1413 பொற்கொடி [13]யாளுடைப் பூசனை செய்திட
[14]அக்களி யாகிய ஆங்காரம் [15]போயிடும்
[16]மற்கட மாகிய மண்டலந் தன்னுளே
பிற்கொடி யாகிய பேதையைக் காணுமே. ௬௫

1414 பேதை [17]யிவளுக்குப் பெண்மை அழகாகுந்
தாதை யிவளுக்குத் தாணுவு மாய்நிற்கும்
மாதை [18]யவளுக்கு மண்ணுந் திலகமாய்க்
கோதையர் சூழக் [19]குவிந்திடங் காணுமே. ௬௬

பா - ம்—[1]குணர்ந்தெழு; கொணர்ந்தெழு. [2]கெழுமுதம. [3]ருத்திகள். [4]பூவிரி. [5]யிருந்தவர். [6]யணுகி நின்றார்க்கே. [7]இருத்திடக். [8]விண்டது. [9]வென்றே. [10]நின்றவரெல்லாம். [11]நின்றவை. [12]தானே. [13]யாளுடன் ; யாளிடை. [14]அக்கினி. [15]போய்விடும். [16]மற்கடியாகிய. [17]யவளுக்கு. [18]யிவளுக்கு. [19]குவிந்தடங்.

1415 குவிந்தனர் சத்திகள் முப்பத் திருவர்
நடந்தனர் [1]கன்னிகள் நாலெண்மர் [2]சூழப்
பரந்தித மாகிய பங்கயத் [3]துள்ளே
[4]இருந்தனள் காணும் இடம்பல கொண்டே. ௯௭

1416 கொண்டங் கிருந்தனர் கூத்தன் ஒளியினைக்
கண்டங் கிருந்தனர் காரணத் துள்ளது
பண்டை மறைகள் பரந்தெங்குந் [5]தேடுமாம்
இன்றென் மனத்துளே இல்லடைந் தானுமே. ௯௮

1417 இல்லடைந் [6]தானுக்கும் இல்லாத தொன்றில்லை
இல்லடைந் தானுக் கிரப்பது தானில்லை
இல்லடைந் தானுக் கிமையவர் [7]தாமொவ்வார்
இல்லடைந் தானுக்கு [8]இல்லாதில் லானையே. ௯௯

1418 [9]ஆனை மயக்கும் அறுபத்து நாற்றறி
[9]ஆனை யிருக்கும் அறுபத்து நாலொளி
[9]ஆனை யிருக்கும் அறுபத்து நாலறை
[10]ஆனையுங் கோடும் அறுபத்து நாலிலே. ௧00

நாலாந்தந்திரம் முற்றிற்று.

பா - ம்—[1]சத்திகள். [2]சூறிப். [3]துள்ளென். [4]இருந்தனர்: அருந்தனீர். [5]தேடுமால். [6]தானுக்கும். [7]தானெவ்வார். [8]இல்லாததில். [9]யானை. [10]யானையங்.

ஐந்தாந் தந்திரம்

௧. *சுத்த சைவம்

1419 ஊரும் உலகமும் ஒக்கப் [1]படைக்கின்ற
பேரறி வாளன் பெருமை குறித்திடின்
மேருவும் மூவுல [2]காளி [3]யிலங்கெழுந்
தாரணி நால்வகைச் சைவமு மாமே. ௧

1420 சத்தும் அசத்துஞ் சதசத்துந் தான்கண்டு
சித்தும் [4]அசித்துஞ் [5]சேர்வுறா [6]மேநீத்த
சுத்தம் [7]அசுத்தமுந் தோய்வுறா மேநின்று
நித்தம் [8]பராஞ்சுத்த சைவர்க்கு நேயமே. ௨

1421 கற்பன கற்றுக் கலைமன னுமெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
[9]சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே. ௩

1422 வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்த
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற [10]காட்சியர்
பூதாந்த போதாந்த மாகப் [11]புனஞ்செய்ய
நாதாந்த [12]பூரணர் ஞானநே யத்தரே. ௪

௨. அசுத்த சைவம்

1423 இணையார் திருவடி [13]ஏத்துஞ் சீராங்கத்
திணையார் [14]இணைக்குழை யீரணை முத்திரை
[15]குணமா ரிணைக்கண்ட மாலையுங் குன்று
[16]தணைவாஞ் [17]சரியை கிரியையி [18]ஞர்க்கே. ௧

*இரண்டு பிரதிகளில் இத்தலைப்பு ‘சைவம் நால்வகைப்படும் அதிற் சுத்த சைவம்’ என்றுள்ளது.

பா - ம்—[1]பணைக்கின்ற. [2]காணி. [3]விலங்கெழுந. [4]அசித்தையுஞ். [5]சித சித்துந்தோராமற். [6]மேநீதரும். [7]அசுத்தமுஞ் சுத்தத்தந் தோய்வுறா. [8]பரசுத்த. [9]தொற்பத. [10]காட்சியோர். [11]புனஞ்செய. [12]பூரணனே. [13]யேத்துஞ் சிராங்கம். [14]இழைக்குழை; அணிகுழை. [15]இணையா ரிணைக்கண்ட. [16]யணைவாஞ். [17]சரிதை கிரிகையி. [18]ஞதனே.

820 பையினி னுள்ளே [1]படிக்கத வொன்றிடின்
மெய்யினி னுள்ளே விளங்கும் ஒளியதாங்
கையினுள் வாயுக் கதித்தங் கெழுந்திடின்
மையணி கோயில் மணிவிளக் காமே. உஉ

821 விளங்கிடும் வாயுவை மேலெழ உன்னி
நலங்கிடுங் [2]கண்டத்து [3]நாபியி னுள்ளே
வணங்கிடு மண்டலம் [4]வாய்த்திடக் கும்பிச்
[5]சுணங்கிட நின்றவை சொல்லலு மாமே. உங

822 சொல்லலு மாயிடு [6]மாகத்து வாயுவுஞ்
சொல்லலு மாகு [7]மண்ணீர்க் கடினமுஞ்
சொல்லலு மாகும் இவையஞ்சுங் [8]கூடிடிற்
சொல்லலு மாந்தூர [9]தெரிசனந் தானே. உச

823 தூர தரிசனஞ் சொல்லுவன் காணலாங்
[10]காராருங் கண்ணி கடைஞான [11]முட்பெய்தி
[12]ஏராருந் தீபத் [13]தெழிற்சிந்தை வைத்திடிற்
பாரா ருலகம் பகன்முன்ன தாமே. உரு

824 முன்னெழு [14]நாபிக்கு முந்நால் விரற்கீழே
பன்னெழு வேதப் பகலொளி யுண்டென்னும்
நன்னெழு நாதத்து நற்றீபம் வைத்திடத்
தன்னெழு கோயில் தலைவனு மாமே. உசு

கக. [15]பரியங்க யோகம்

825 பூசு வனவெல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறுங்குழல் மாலையுஞ் சாத்திக்
காயக் குழலி கலவி யொடுங்கலந்
[16]தூசித் [17]துலையுறத் தூங்காது [18]போகமே. க

பா - ம்—[1]படிகத ; படிந்த. [2]காமத்து. [3]நாடியி. [4]வாய்த்திட்டுக் கும்பி. [5]சுணங்கிடை. [6]மாம்பத்து. [7]மன்னீர் கடினமுஞ் ; மனல்நீர்க் கடினமுஞ். [8]கூட்டிடிற். [9]தெரிசனமாமே. [10]காருருங் ; காராரு. [11]முட்பெய்து ; முட்செய்தி. [12]தேராருங். [13]தெளிசிந்தை. [14]நாபி. [15]பரியங்கியோகம். [16]தூசதுணையறத் தூங்காது யோகமே. [17]துலையற. [18]போதமே ; மோகமே.

1424 காதுப்பொ ணூர்ந்த கடுக்கன் [1]இரண்டுசேர்த்
தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன்
சோதனை செய்து [2]துவாதெச [3]மார்க்கராய்
ஓதி யிருப்பார் ஒருசைவ ராகுமே. உ

1425 கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டனர்
கண்டங்கள் ஒன்பதுங் கண்டாய் அரும்பொருள்
கண்டங்கள் ஒன்பதுங் [4]கண்டவர் கண்டமாங்
கண்டங்கள் கண்டோர் கடுஞ்சுத்த சைவரே. ௩

1426 ஞானி புவியெழு [5]நன்னூ லனைத்துடன்
மோன திசையும் முழுஎண்ணெண் சித்தியும்
ஏனை நிலமும் எழுதா மறையீறுங்
கோனொடு தன்னையுங் காணுங் [6]குணத்தனே. ச

௩. மார்க்க சைவம்

1427 பொன்னுற் [7]சிவசாத னம்பூதி சாதனம்
[8]நன்மார்க்க சாதனம் [9]மாஞான சாதனந்
துன்மார்க்க [10]சாதனந் தோன்றுத சாதனஞ்
சன்மார்க்க சாதன [11]மாஞ்சுத்த சைவர்க்கே. க

1428 கேடறு ஞானி [12]கிளர்ஞான பூபதி
பாடறு வேதாந்த சித்தாந்த [13]பாகத்தின்
ஊடுறு ஞானோ [14]தயனுண்மை முத்தியோன்
பாடுறு சுத்தசை [15]வப்பத்த நித்தனே. உ

1429 ஆகமம் ஒன்பா னதிலான நாலேழு
மோகமி ல்லேழு [16]முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்மையொன்
றாக முடிந்த [17]வருஞ்சுத்த சைவமே. ௩

பா - ம்—[1]இரண்டு கோத். [2]உபதேச. [3]மார்க்கா மோதி. [4]கண்டவக் கண்டமா. [5]ஞானநூ. [6]குணத்தரே ; கணத்தரே. [7]சிவ தானே பூசி. [8]நன்னுற் பதசாதனஞான. [9]நல்ஞான. [10]மானவை. [11]மாகுஞ் சன்மார்க்கியே. [12]களாஞான. [13]பாதத்தின் ; பாவத்தின். [14]தயத்துண்மை முத்தியொண். [15]வப்பதன் சித்தனே ; வபத்தன். [16]பேதமு. [17]ருளுஞ்சுத்த சைவனே ; தருஞ்சுத்த.

1430 சுத்தம் அசுத்தந் துரியங்கள் ஒரேழுஞ்
[1]சத்தும் அசத்துந் தணந்த பராபரை
உய்த்த பராபரை [2]யுள்ளாம் பராபரை
அத்தன் அருட்சத்தி யாயெங்கு மாமே. ௪

1431 [1]*சத்தும் அசத்துந் [3]தணந்தவர் தானாகிச்
சித்தும் அசித்துந் [4]தெரியாச் சிவோகமாய்
[5]முத்தியுள் ஆனந்த சத்தியுள் மூழ்கினார்
சித்தியு மங்கே [6]சிறந்துள தானே. ௫

1432 தன்னைப் பரனைச் [7]சதாசிவன் என்கின்ற
மன்னைப் [8]பதிபசு பாசத்தை [9]மாசற்ற
முன்னைப் [10]பழமல [11]முன்கட்டை வீட்டினை
உன்னத் தகுஞ்சுத்த சைவர் உபாயமே. ௬

1433 பூரணந் [12]தன்னிலே வைத்தற்ற [13]வப்போதே
மாரண [14]மந்த மதித்தானந் தத்தோடு
நேரென ஈராறு [15]நீதி நெடும்போகங்
காரண மாஞ்சுத்த சைவர்க்குக் காட்சியே. ௭

1434 [16]மாறாத [17]ஞான மதிப்பற மாயோகந்
தேறாத சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்
பேறான [18]பாவனை பேணி நெறிநிற்றல்
கூறாகு [19]ஞானி சரிதை [20]குறிக்கிலே. ௮

1435 வேதாந்தங் கண்டோர் [21]பிரமவித் தியாதரர்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்

---

*ஒரு பிரதியில் இச்செய்யுளும் அடுத்ததும் பின் முன்னாக வந்துள்ளன.

பா-ம்—[1]சத்தம சத்துந். [2]யுள்ளம். [3]தணந்தவன். [4]தெளியாச். [5]முத்தியுணர்ந்த. [6]சிறந்தது. [7]சதாசிவமாகின்ற. [8]பசுபதி. [9]மாசுத்த. [10]பழமலே; பழமேல். [11]மூலதனை; மூழ்கட்டை; மூழ்தட்டை. [12]தன்னில். [13]வப்போதகம்; வப்போதம். [14]வந்தமதி சித்தாந்தத் தொடு. [15]நீடுநெடும் போதங். [16]மாறாதியோகி ஞானிபா.. [17]ஞானிமதிபா. [18]பாலனைப். [19]மஞ்ஞானி; ஞான. [20]குறிப்பிலே. [21]பரமித்.

வேதாந்த [1]மல்லாத சித்தாந்தங் கண்டுளோர்
சாதா ரணமன்ன சைவர் உபாயமே. சு

1436 விண்ணினைச் [2]சென்றணு காவியன் [3]மேகங்கள்
கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள்
எண்ணினைச் சென்றணு காம லெணப்படும்
அண்ணலைச் சென்றணு காபசு பாசமே. க0

1437 ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றாக
நின்று சமய நிராகார நீங்கியே
நின்று பராபரை நேயத்தைப் [4]பாதத்தாற்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே. கக

ச. கடுஞ்சுத்த சைவம்

1438 வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேவி
ஆடம் பரமின்றி ஆசாபா சஞ்செற்றுப்
பாடொன்று [5]பாசம் பசுத்துவம் பாழ்படச்
சாடுஞ் சிவபோ தகர்சுத்த சைவரே. க

1439 உடலான [6]ஐந்தையும் [7]ஓராறும் [8]ஐந்து
மடலான மாமாயை மற்றுள்ள [9]நீவப்
படலான கேவல பாசந் துடைத்துத்
திடமாத் தனையுற்றல் சித்தாந்த மார்க்கமே. உ

1440 [10]சுத்தச் சிவனுரை [11]தான தில் தோயாமல்
முத்தர் [12]பதப்பொருள் முத்திவித் [13]தாமூலம்
அத்தகை [14]யான்மா அரனை [15]அடைந்தற்றாற்
சுத்தச் சிவமாவ ரேசுத்த சைவரே. ந

1441 நானென்றுந் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று [16]நானென் றிரண்டிலாத் [17]தற்பதந்

பா - ம்—[1]மில்லாத. [2]சென்றது. [3]போகங்கள். [4]பார்த்தத்தாற். [5]பாசப். [6]வையைந்தும். [7]ஒரொன்றும். [8]ஐந்துடலான. [9]நீலப். [10]சுத்தஞ். [11]தானதுள்; தானத்துள். [12]பதம்பொருள். [13]தார்மூலம்; தாமூலன். [14]யானமர்வானே. [15]அடைந்தற்றார். [16]நானென்று மிரண்டில்லா. [17]தற்பரந்.

தானென்று நானென்ற தத்துவ நல்கலால்
தானென்று [1]நானென்றுஞ் சாற்றகில் லேனே. ச

1442 சாற்றரி தாகிய தத்துவஞ் சித்தித்தால்
ஆற்றரி தாகிய ஐந்தும் அடங்கிடும்
மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே. ரு

ரு. சரியை

1443 நேர்ந்திடு [2]மூல சரியை நெறியிதென்
றாய்ந்திடுங் காலாங்கி [3]கஞ்ச மலையமான்
ஓர்ந்திடுங் [4]கந்துரு கேண்மின்கள் பூதலத்
தோர்ந்திடுஞ் சுத்த சைவத் [5]துயிரதே. க

1444 *உயிர்க்குயி ராய்நிற்றல் ஒண்ஞான பூசை
உயிர்க்கொளி [6]நோக்கல் மகாயோக பூசை
உயிர்ப்பெறு மாவா [7]கனம்புறப் பூசை
[8]செயிற்கடை நேசஞ் சிவபூசை [9]யாமே. உ

1445 நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே. ங

1446 பத்தர் சரிதை [10]படுவோர் [11]கிரியையோர்
அத்தகு [12]தொண்டர் அருள்வேடத் தாகுவோர்
சுத்த வியமாதி [13]சாதகர் தூயோகர்
[14]சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே. ச

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் 1446-ம் செய்யுளுக்குப் பின் வந்துளது.

பா - ம்—[1]நானென்று. [2]மூலன் சரிதை. [3]கஞ்சன். [4]கந்துருக். [5]துயிராவதே ; துக்குயிரதே. [6]நோக்கின். [7]கனம்பிறப் ; கனம்பிறம. [8]செயற்கடை ; செயற்கிடை ; செயறமை நெஞ்சஞ். [9]தானே. [10]படுவார். [11]கிரிகை. [12]தொண்டருள வேடத்த ராகுவோர். [13]சாத்தர் ; சாக்கரத். [14]சித்த.

1447 சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவ [1]னயினோர்
சேர்ந்தவெண் யோகத்தர் [2]சித்தர் சமாதியோர்
ஆய்ந்த கிரியையோர் அருச்சனை தப்பாதோர்
நேர்ந்த சரியையோர் நீள்நிலத் [3]தோரே. ரு

1448 [4]கிரியை யோகங்கள் கிளர்ஞான பூசை
அரிய சிவனுரு [5]அமரும் அரூபந்
[6]தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை
உரியன நேயத் துயர்பூசை யாமே. கூ

1449 [7]சரியாதி நான்குந் தருஞான நான்கும்
விரிவான வேதாந்த சித்தாந்த மாறும்
பொருளா னதுநந்தி பொன்னகர் போந்து
மருளாகு மாந்தர் வணங்கவைத் தானே. எ

1450 *[8]சமையம் பலசுத்தித் தன்செயல் அற்றிடும்
அமையும் [9]விசேடமும் அரன்மந் திரசுத்தி
சமைய நிருவாணங் கலாசுத்தி யாகும்
அமைமன்னு [10]ஞானமார்க் கம்அபி டேகமே. அ

கூ. †கிரியை

1451 பத்துத் [11]திசையும் பரமொரு தெய்வமுண்
[12]டெத்திக் கிலரில்லை [13]என்பதின் அமலர்க்
கொத்துத் திருவடி நீழல் [14]சரணெனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே. க

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

† ஒரு பிரதியில் இத்தலைப்பு 'கிரிகை' யென்றுளது.

பா - ம்—[1]னயற்றோர். [2]சித்தி ; சித்தச். [3]தோர்களே. [4]கிரிகையில் யோகங் ; கிரியை யோகங். [5]வமாகும் பருவந் ; வாமரூபம் ; பமாமல ரூபந். [6]தெரியுமருவத்துச் சேர்ந்திடும். [7]சரிதாதி. [8]சமையமலசுத்தி. [9]விசேடமு மானமந். [10]ஞானு மானுர்க்கபி. [11]திசைக்கும். [12]டெத்துக். [13]என்ப தின்மலர்க் ; என்பதி மாலாய க். [14]சரணெனக் கத்தும்.

1452 கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
[1]வானுறு மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் [2]பூங்கழல் சேரவொண் ணாதே. ௨

1453 கோனக்கன் றாயே குரைகழல் ஏத்துமின்
ஞானக்கன் [3]றாகிய நடுவே [4]யுழிதரும்
வானக்கன் றாகிய வானவர் கைதொழு
[5]மானக்கன் றீசன் [6]அருள்வள்ள மாமே. ௩

1454 இதுபணிந் தெண்டிசை மண்டலம் எல்லாம்
அதுபணி செய்கின் [7]றவளொரு கூறன்
இதுபணி [8]மானுடர் செய்பணி யீசன்
[9]பதிபணி செய்வது பத்திமை காணே. ௪

1455 பத்தன் கிரியை [10]சரியை பயில்வுற்றுச்
சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்
[11]உய்த்த [12]நெறியுற் றுணர்கின்ற [13]ஞானத்தாற்
சித்தங் குருவரு ளாற்சிவ மாகுமே. ௫

1456 அன்பின் உருகுவ னாளும் பணிசெய்வன்
செம்பொன்செய் மேனி கமலத் திருவடி
முன்புநின் றாங்கே மொழிவ தெனக்கருள்
என்பினுட் சோதி [14]இலங்குகின் றானே.* ௬

எ. யோகம்

1457 நெறிவழி யேசென்று [15]நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்போல் தம்மை யிருத்திச்

* இரண்டு பிரதிகளில் இதனை யடுத்து 1508-ம் செய்யுள் எழுதப்பட்டுள்ளது.

பா - ம்—[1]வானுற. [2]பூங்குழல். [3]றாயே. [4]யுமிழ்தரு. [5]மானைக்கன். [6]அருள்பள்ள. [7]றவாளொரு; றவாளது கூறின். [8]மானிடர். [9]அதுபணி; பணி. [10]சரிதை. [11]உற்ற. [12]நெறியற். [13]ஞானத்தார். [14]யிலிங்குகின் றானே. [15]நேர்மையின்.

சொறியினுந் தாக்கினுந் துண்ணெனன் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே. க

1458 ஊழிதோ றாழி [1]உணர்ந்தவர்க் கல்லால்
[2]ஊழிதோ றாழி [3]யுணரவுந் [4]தானொட்டான்
ஆழி [5]அமரும் அரியயன் [6]என்றுளார்
ஊழி [7]முயன்றும் ஒருச்சியு ளானே. உ

1459 பூவினிற் [8]கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி [9]யணைந்த நடுதறி யாமே. ந

1460 உய்ந்தனம் [10]என்பீர் உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரிற் [11]கலக்கின்ற நந்தியைச்
சிந்தை யுறவே தெளிந்திருள் நீங்கினால்
முந்தைப் பிறவிக்கு மூலவித் [12]தாமே. ச

1461 எழுத்தொடு பாடலும் எண்ணெண் கலையும்
பழித்தலைப் பாசப் பிறவியும் [13]நீங்கா
வழித்தலைச் சோமனோ டங்கி யருக்கன்
[14]வழித்தலைச் செய்யும் வகையுணர்ந் தேனே. ரு

1462 விரும்பிநின் றேசெய்யில் மெய்த்தவ ராகும்
விரும்பிநின் றேசெய்யின் [15]மெய்யுரை யாகும்
விரும்பிநின் றேசெய்யின் மெய்த்தவ மாகும்
விரும்பிநின் றேசெய்யில் விண்ணவ னாகுமே. சு

1463 [16]பேணிற் பிறவா உலகருள் செய்திடுங்
காணில் தனது [17]கலவியு ளேநிற்கும்
நாணில் நரக நெறிக்கே வழிசெயும்
[18]ஊனிற் சுடுமங்கி யுத்தமன் றானே. எ

பா - ம்—[1]தவஞ்செய்தோர்க். [2]ஊழிமுதல்வன். [3]யுணர்வு. [4]தா னொட்டான். [5]அயன்மாலுக் கன்றியன் றுள்ளிட்ட. [6]என்றுளோர். [7]யார்க்கென்னு முணர்ச்சியுள். [8]கெந்தம். [9]யணந்த நடுத்தறி. [10]என் றீர். [11]கரக்கின்ற. [12]தாகுமே. [13]நீங்கார் வழித்தலைச். [14]வழித்துலை. [15]மெய்யுணர் வாகும். [16]பேணிப். [17]கலவி புள். [18]ஊணிற்.

1464 ஒத்தசெங் [1]கோலார் உலப்பிலி மாதவர்
எத்தனை யாயிரம் [2]வீழ்ந்தனர் எண்ணிலி
சித்தர்கள் தேவர்கள் மூவர் பெருமையாய்
அத்த னிவனென்றே அன்புறு வார்களே. அ

1465 [3]யோகிக்கு யோகாதி மூன்றுள [4]கொண்டுற்றோர்
ஆகத் தருகிரி யாதி [5]சரியையாந்
தாகத்தை விட்ட [6]சரியையொன் [7]றாம்ஒன்றுள்
[8]ஆதித்தன் பத்தியுள் அன்புவைத் [9]தேனே. கூ

1466 யோகச் சமயமே யோகம் பலவுன்னல்
யோக விசேடமே அட்டாங்க [10]யோகமாம்
யோகநிர் வாணமே யுற்ற பரோதயம்
யோக [11]அபிடேகமே [12]ஒண்சித்தி யுற்றலே. க0

அ. ஞானம்

1467 ஞானத்தின் மிக்க [13]அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை [14]நன்முத்தி [15]நல்காவா
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே. க

1468 சத்தமுஞ் சத்த மனனுந் [16]தகுமனம்
உய்த்த வுணர்வு முணர்த்தும் [17]அகந்தையுஞ்
சித்தமென் றிம்மூன்றுஞ் சிந்திக்குஞ் செய்கையுஞ்
சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே. உ

1469 தன்பால் உலகுந் தனக்கரு [18]காவதும்
அன்பா [19]லெனக்கரு ளாவது மாவன

பா - ம்—[1]கொல்லர். [2]வீழ்ந்தவர் ; வீழ்ந்ததென் றெண்ணிலீர். [3]யோகிக்கும். [4]தொன்றுற்றோர். [5]சரிதாதி யாகத்தை ; சரிதாதியாங். [6]சரிதையொன். [7]றாஒன்றுள்; றொன்றுள. [8]ஆகித்தன். [9]தோனே. [10]யோகம். [11]பிடேகமே ; விசேடமே. [12]ஒண்சத்தி. [13]அறனது ; அறிநெறி. [14]முத்தி. [15]நல்காவால். [16]தகுமன னுய்த்த. [17]கரந்தையுஞ். [18]கானது ; ளாவது. [19]லினக்கரு.

என்பார்கள் ஞானமும் எய்துஞ் [1]சிவோகமும்
[2]பின்பாவின் நேயமும் பெற்றிடுந் தானே. ௩

1470 இருக்குஞ் [3]சேம இடம்பிரம [4]மாகும்
வருக்கஞ் சராசர மாகும் உலகந்
தருக்கிய ஆசார மெல்லாந் [5]தருமே
[6]திருக்கமில் ஞானத்தைத் தேர்ந்துணர்ந் தோர்க்கே.

1471 அறிவும் அடக்கமும் [7]அன்பும் உடனே
பிறியா [8]நகர்மன்னும் பேரரு ளாளன்
குறியுங் குணமுங் குரைகழல் நீங்கா
[9]நெறியறி வார்க்கிது [10]நீர்த்தொணி யாமே. ௫

1472 ஞானம் [11]விளந்தெழு கின்றதோர் சிந்தையுள்
ஏனம் [12]விளந்தெதி [13]ரேகாண் வழிதொறுங்
கூனல் மதிமண் [14]டலத்தெதிர் [15]நீர்கண்டு
ஊனம் அறுத்துநின் றொண்சுட ராகுமே. ௬

1473 ஞானிக் குடன்குண ஞானத்தில் நான்குமா
மோனிக் [16]கிவையொன்றுங் கூடாமுன் மோகித்து
மேனிற்ற லாஞ்சத்தி [17]வித்தை விளைத்திடுந்
தானிக் குலத்தோர் சரியை கிரியையே. ௭

1474 ஞானத்தின் ஞானாதி [18]நான்குமா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நாமென தென்னுமல்
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே. ௮

1475 நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணுவோன்
புண்ணிய பாவங் [19]கடந்த [20]பிணக்கற்றோன்

பா - ம்—[1]சிவயோகமும். [2]இன்பாலின். [3]செம்மி ; சேமயிடம் பிரம ; சேமயிடம் பிரமமு. [4]மாகு மருக்கஞ். [5]தருமே. [6]திருக்கிலா. [7]அன்பி னுடனே. [8]ந்தா மன்னும். [9]நெறியறு. [10]நீர்த்தோணி ; நீற்றோணி. [11]விழைந்தெழு. [12]விழைந்தெதி. [13]ர்கான. [14]டலத்தினில். [15]நீர்தண் டூனம். [16]இவையென்றுங். [17]வித்து விளைந்திடுந். [18]நான்கு மஞ். [19]கடந்து. [20]பிணக்கற்றோர்.

கண்ணிய நேயங் கரைஞானங் [1]கண்டுளோன்
திண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே. ௯

1476 ஞானச் சமயமே நாடுந் தனைக்காண்டல்
ஞான விசேடமே [2]நாடு பரோதய
ஞானநிர் வாணமே [3]நன்றறி வானருள்
[4]ஞானாபி டேகமே நற்குரு பாதமே. ௧௦

---

௯. சன்மார்க்கம்

1477 *சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ [5]தத்துவத்
தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே. ௧

1478 சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி
உய்ய [6]வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்துள் ளார்க்கு வகுத்துவைத் தானே. ௨

1479 தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் [7]பாதுகஞ் சூடக்
குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்
[8]தருமுத்திச் சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே. ௩

1480 தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவறி யாதார் [9]சீவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் [10]தீரார் பிறப்பே. ௪

---

* ஒரு பிரதியில் இதுவும் அடுத்த செய்யுளும் இல்லை. 1527-ம், 1528-ம் இங்கு எழுதப்பட்டுள்ளன.

பா - ம்—[1]கண்டுளோர். [2]நாடும். [3]நன்னெறி வன்னருள். [4]ஞானாபி. [5]தத்துவம். [6]வேவைத்த. [7]பாதுகை. [8]தருபுத்தி. [9]சிவனு. [10]தீராப்.

826 [1]போகத்தை யுன்னவே போகாது வாயுவு
[2]மோகத்தை வெள்ளியு மீளும் வியாழத்தில்
கூதொத்த மென்முலை யாளுநற் சூதனுந்
தாதிற் குழைந்து தலைகண்ட வாறே. ௨

827 கண்டனுங் கண்டியுங் காதல்செய் [3]யோகத்து
மண்டலங் கொண்டிரு பாலும் [4]வெளிநிற்கும்
[5]வண்டியை மேற்கொண்டு வானீர் [6]உருட்டிடத்
தண்டொரு காலுந் [7]தளராது [8]அங்கமே. ௩

828 [9]அங்கப் புணர்ச்சியு மாகின்ற தத்துவ
மங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமற் பரிகரித் துத்தம்மைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனு மாமே. ௪

829 தலைவனு மாயிடுந் தன்வழி [10]ஞானந்
தலைவனு மாயிடுந் தன்வழி போகந்
தலைவனு மாயிடுந் தன்வழி யுள்ளே
தலைவனு மாயிடுந் தன்வழி அஞ்சே. ௫

830 அஞ்சு [11]கடிகைமேல் ஆறுங் [12]கடிகையில்
துஞ்சுவ [13]தொன்றத் துணைவி துணைவன்பால்
நெஞ்சு நிறைந்தது வாய்கொளா தென்றது
பஞ்ச கடிகை [14]பரியங்க யோகமே. ௬

831 [14]பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை
[15]அரியஇவ் வியோகம் அடைந்தவர்க் கல்லது
[16]சரிவளை முன்கைச்சி [17]சந்தனக் கொங்கை
[18]உருவித் தழுவ [19]ஒருவற்கொண் ணாதே. ௭

832 ஒண்ணாத யோகத்தை உற்றவ ராரென்னில்
விண்ணார்ந்த கங்கை விரிசடை வைத்தவன்

பா - ம்—[1]போதத்தை. [2]மேகத்த. [3]போகத்து. [4]வழி நிற்கும்; வளி நிற்கும். [5]வண்டிகை மேல்கொண்டு. [6]ஊட்டிடத். [7]தள்ளாது. [8]வங்கமே. [9]அங்கம். [10]ஞாலந். [11]கடிகையில். [12]கடிகைமேல். [13]தோன்றத். [14]பரியங்க. [15]அரிய. [16]சுரிவளை முன்கச்சு. [17]ந்தனகொங்கை. [18]உருக. [19]ஒருவர்க்.

1481 தானவ னாகித் தானைந்தா மலஞ்செற்று
மோனம தாமொழிப் பான்முத்த ராவது
[1]மீனமில் ஞானானு பூதியில் இன்பமுந்
தானவ [2]னையற்ற லானசன் மார்க்கமே. ௫

1482 சன்மார்க்கத் தார்க்கு முகத்தொடு பீடமுஞ்
சன்மார்க்கத் தார்க்கும் இடத்தொடு தெய்வமுஞ்
சன்மார்க்கத் [3]தார்க்கு வருக்கந் தரிசனம்
[4]எம்மார்க்கத் தார்க்கும் இயம்புவன் கேண்மினே. ௬

1483 சன்மார்க்க சாதனந் தான்ஞான [5]ஞேயமாம்
பின்மார்க்க சாதனம் [6]பேதையர்க் காய்நிற்கும்
துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றார்
[7]சன்மார்க்கந் தானவ னாகுஞ்சன் மார்க்கமே. ௭

1484 சன்மார்க்க [8]மெய்த [9]வருமருஞ் சீடர்க்குப்
பின்மார்க்க மூன்றும் [10]பெறவியல் பாமென்றால்
நன்மார்க்கந் [11]தானே சிவனொடு [12]நாடலே
சொன்மார்க்க மென்னச் சுருதிகைக் கொள்ளுமே.

1485 *அன்னிய பாசமும் ஆகுங் கருமமும்
முன்னும் அவத்தையும் மூலப் பகுதியும்
பின்னிய ஞானமும் பேதாதி பேதமுந்
தன்னொடுங் கண்டவர் சன்மார்க்கத் தோரே. ௯

1486 பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சங் கசியக் [13]கசிவித்
[14]தொசியாத வுண்மைச் சொரூபோ [15]தயத்துற்
றசைவான தில்லாமை யானசன் மார்க்கமே. ௰

---

* மூன்று பிரதிகளில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]வீனமில். [2]மூத்த லான்சன் மார்க்க மாமே. [3]தார்க்கும். [4]மெய்ம்மார்க்கத். [5]நேயம். [6]பேதைய தாய்நிற்கும். [7]சன்மார்க்க னானவ. [8]மேத்த. [9]வரும்பெருஞ் சீடர்க்கும். [10]பிறவியற் ; பெறவியற். [11]தான்சிவ னொடுநா டுடையாலே. [12]நாடிலா. [13]கசிவித்தே ; கசிவித்தோர். [14]சுசியாத ; அசியாத ; இசியாத. [15]தயத்துற்றுத் தசைவான.

1487 மார்க்கஞ்சன் [1]மார்க்கிகள் [2]கிட்ட வகுப்பது
மார்க்கஞ்சன் மார்க்கமே யன்றிமற் றொன்றில்லை
மார்க்கஞ்சன் மார்க்க மெனுநெறி வைகாதோர்
மார்க்கஞ்சன் மார்க்க [3]மாஞ்சித்த யோகமே. ௧௧

௧௦. சகமார்க்கம்

1488 சன்மார்க்கந் தானே சகமார்க்க மானது
மன்மார்க்க [4]மாமுத்தி [5]சித்திக்குள் வைப்பதாம்
பின்மார்க்க [6]மானது [7]பேராப் பிறந்திறந்
துன்மார்க்க ஞானத் துறுதியு மாமே. ௧

1489 மருவுந் [8]துவாதச [9]மார்க்கமில் லாதார்
குருவுஞ் சிவனுஞ் சமயமுங் [10]கூடார்
வெருவுந் திருமகள் வீட்டில்லை யாகும்
உருவுங் கிளையும் ஒருங்கிழப் பாரே. ௨

1490 [11]யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்
[11]யோகச் சமாதியின் உள்ளே [12]யுளரொளி
[11]யோகச் சமாதியின் உள்ளே யுளசத்தி
[11]யோகச் சமாதி யுகந்தவர் [13]சித்தரே. ௩

1491 யோகமும் போகமும் [14]யோகியர்க் காகுமால்
யோகஞ் சிவரூபம் உற்றிடும் உள்ளத்தோர்
போகம் புவியிற் [15]புருடார்த்த [16]சித்திய
[17]தாகும் இரண்டும் அழியாத யோகிக்கே. ௪

1492 *ஆதார சோதனை யானடி சுத்திகள்
மேதாதி யீரெண் [18]கலாந்தத்து விண்ணொளி

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]மார்க்கிகட். [2]கட்ட. [3]மதுசித்த ; மதிசித்த. [4]மானது முத்திக்கு வைப்பதாம். [5]சித்திக்கும். [6]மாவது. [7]பேணைப். [8]துவாதெச. [9]மார்க்க மிலான. [10]கூட்டா. [11]யோக. [12]புள்ளொளி. [13]சத்தரே. [14]யோகிகட் காகுமாம். [15]புருடர்க்குச் ; புருடாதி. [16]சித்தியாம். [17]ஆகும் ; ஆக. [18]கலந்தது.

போதா [1]லயத்துப் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே. ரு

1493 பிணங்கிநிற் கின்றவை ஐந்தையும் பின்னை
அணங்கி யெறிவ [2]னயிர்மன வாளாற்
கணம்பதி னெட்டுங் கருதும் ஒருவன்
வணங்கவல் லான்சிந்தை வந்துநின் றானே. சு

1494 வளங்கனி யொக்கும் வளநிறத் தார்க்கும்
வளங்கனி [3]யொப்பதோர் [4]வாய்மைய னாகும்
[5]உளங்கனிந் துள்ள முகந்திருப் [6]பார்க்குப்
பழங்கனிந் துள்ளே [7]பகுந்துநின் றானே. எ

கக. சற்புத்திர மார்க்கம்

1495 மேவிய சற்புத்திர [8]மார்க்க மெய்த்தொழில்
தாவிப்ப தாஞ்சக மார்க்கஞ் சகத்தொழில்
ஆவ திரண்டும் அகன்று சகமார்க்கத்
தேவியோ டொன்றல் சன்மார்க்கத் [9]தெளிவதே. க

1496 பூசித்தல் வாசித்தல் போற்றல செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
[10]நேசித்திட் டன்னமும் [11]நீசுத்தி [12]செய்தன்மற்
[13]றாசற்ற சற்புத் திரமார்க்க [14]மாகுமே. உ

1497 அறுகாற் பறவை அலர்தேர்ந் துழலும்
மறுகா நரையன்னந் தாமரை நீலங்
[15]குறுகா நறுமலர் கொய்வன [16]கண்டுஞ்
சிறுகால் [17]அறநெறி [18]சேரகி லாரே. ங

பா - ம்—[1]லயத்துள். [2]னயிர்மான ; னயிர்வன. [3]யொப்பதா ராமைய. [4]வாய்மையி. [5]உளங்கனி யுள்ளே. [6]பார்க்கு முளங்கனிந். [7]புகுந்துநின். [8]மார்க்கமே யத்தொழில். [9]தெளிவே. [10]நேசத்தே நற்கரும நீடுசுத்தி செயாசற்ற. [11]நீர்சுத்தி. [12]செய்தலு மாசற்ற. [13]றாசற்றல். [14]மாமே. [15]குறுகார். [16]கண்டு. [17]அரனெறி. [18]செல்லுகி ; பேரகி.

1498 அருங்கரை யாவது ஆவ்வடி நீழற்
பெருங்கரை யாவது பிஞ்ஞக னாணை
வருங்கரை யேகின்ற மன்னுயிர்க் கெல்லாம்
ஒருங்கரை [1]யாயுல கேழினொத் தானே. ச

1499 உயர்ந்தும் பணிந்தும் முகந்துந் தழுவி
வியந்தும் அரனடிக் [2]கேமுறை [3]செய்மின்
பயந்தும் பிறவிப் பயனது [4]வாகும்
[5]பயந்து [6]பரிக்கிலப் பான்மைய னாமே. ரு

1500 நின்று தொழுவன் கிடந்தெம் பிரான் றன்னை
என்றுந் தொழுவன [7]எழிற்பரஞ் சோதியைத்
துன்று மலர்தூவித் தொழுமின் தொழுந்தோறுஞ்
சென்று வெளிப்படுந் தேவர் பிரானே.* சா

1501 †திருமன்னுஞ் சற்புத்திர மார்க்கச் [8]சரியை
உருமன்னி வாழும் உலகத்தீர் கேண்மின்
கருமன்னு பாசங் கைகூம்பத் தொழுது
[9]இருமன்னு நாடோறும் [10]இன்புற் றிருந்தே. எ

கஉ. தாசமார்க்கம்

1502 எளியனல் தீப [11]மிடல்மலர் கொய்தல்
[12]அளிதின் மெழுக [13]லதுதூர்த்தல் வாழ்த்தல்
[14]பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி
தளிதொழில் செய்வது [15]தான்தாச மார்க்கமே. க

---

* ஒரு பிரதியில் இதனை யடுத்துத் தாசமார்க்கம் என்னுந்தலைப்புக் காணப்படுகிறது.

†ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]வாயுல. [2]கைமுறை. [3]செய்யின். [4]வாகப். [5]பயந்தும் பரிக்கிற்பான் நன்மையி னருமே. [6]பரிக்கிலர் பானவை யாகுமே. [7]இயற்பரஞ். [8]சரிதை. [9]உயிர்மன்னு. [10]மின்பத் திருந்ததே. [11]மிட லலர். [12]அளியின். [13]லலதுள்கல். [14]பளிபணி. [15]தான்தாத.

1503 அதுவிது [1]வாதிப் பரமென் [2]றகல்வர்
இதுவழி யென்றங் கிறைஞ்சின ரில்லை
விதிவழி யேசென்று வேந்தனை நாடு
[3]மதுவிது நெஞ்சில் [4]தணிக்கின்ற வாறே. ௨

1504 அந்திப்பன் திங்க ளதன்பின்பு [5]ஞாயிறு
சிந்திப்பன் என்றும ஒருவன் செறிகழல்
[6]வந்திப்ப வானவர் தேவனை நாடோறும்
வந்திப்ப தெல்லாம் வகையின் [7]முடிந்ததே. ௩

1505 அண்ணலை வானவர் ஆயிரம் பேர்சொல்லி
[8]உன்னுவர் உள்மகிழ்ந் துண்ணின் றடிதொழக்
[9]கண்ணவ னென்று கருது மவர்கட்குப்
பண்ணவன் பேரன்பு [10]பற்றிநின் றானே. ௪

1506 வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்
பாசிக் குளத்தில்வீழ் கல்லாம் மனம்பார்க்கின்
மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை
[11]நேசத் [12]திருந்த நினைவறி [13]யாரே. ௫

---

௧௩. *சாலோகம்

1507 சாலோக [14]மாதி [15]சரியாதி யிற்பெறுஞ்
சாலோகஞ் சாமீபந் தங்குஞ் சரியையால்
மாலோகஞ் [16]சேரில் [17]வழியாகுஞ் சாரூபம்
பாலோகம் இல்லாப் பரனுரு வாமே. ௧

---

* இதுமுதல் நான்கு பகுதிகளும் சிலபிரதிகளில் **சாலோகமாதி சாமீபம், சாலோக சாமீப சாரூப சாயுச்சியம்** என்ற தலைப்புக்களுடன் காணப்படுகின்றன. தனித்தனித் தலைப்பில்லை.

பா - ம்—[1]வாகிப். [2]றகல. [3]மதுவிதி. [4]தணிகின்ற ; தளிகின்ற ; தழிகின்ற. [5]நாயறு. [6]வந்திப்பர் ; வந்திப்பன். [7]முடிந்தே. [8]உன்னுவார். [9]கண்ணுவ ; கண்ணனுவ. [10]பற்றநின். [11]நேசித். [12]திருக்க ; திருத்த. [13]வாரே. [14]மாகிச் சரிதையிற் பேறுகும். [15]சரித்தாதியிற் பேறுகும். [16]சேரல். [17]வழியாஞ்.

1508 *[1]சமயங் கிரியையிற் றன்மனங் கோயில்
சமய மனுமுறை தானே விசேடஞ்
சமயத்து மூலந் தனைத்தேறன் மூன்றுஞ்
[2]சமயாபி டேகந் தானுஞ் சமாதியே. ௨

---

௧௪. சாமீபம்

1509 பாசம் பசுவான தாகும்இச் சாலோகம்
பாச மருளான தாகும்இச் சாமீபம்
பாசஞ் சிரமான தாகும்இச் சாரூபம்
பாசங் கரைபதி சாயுச் [3]சியமே. ௧

---

௧௫. சாரூபம்

1510 தங்கிய சாரூபந் தானெட்டாம் யோகமாந்
தங்குஞ் சன்மார்க்கந் தனிலன்றிக் கைகூடா
அங்கத் துடல்சித்தி சாதன ராகுவர்
இங்கிவ ராக விழிவற்ற [4]யோகமே. ௧

1511 சயிலலோ கத்தினைச் சார்ந்த பொழுதே
சயிலம தாகுஞ் சராசரம் போலப்
பயிலுங் குருவின் பதிபுக்க போதே
கயிலை இறைவன் கதிர்வடி வாமே. ௨

---

௧௬. சாயுச்சியம்

1512 [5]சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது
சைவந் தனையறிந் [6]தேசிவஞ் சாருதல்
[7]சைவஞ் சிவந்தன்னைச் சாராமல் நீவுதற்
சைவஞ் சிவானந்தஞ் சாயுச் [8]சியமே. ௧

---

* இரண்டு பிரதிகளில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]சமையக். [2]சமைய மபிடேகந் ; சமயாபி டேகமே. [3]சியமாகுமே. [4]யோகரே. [5]சைவச். [6]தேசிவன் பாற்சார்தல். [7]சைவம் பசுபாசஞ் சாராமல் நீங்குதல். [8]சியமாகுமே.

1513 *சாயுச் சியஞ்சாக் கிராதிதஞ் சாருதல்
சாயுச் சியமுப சாந்தத்துத் தங்குதற்
சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவிலாச்
சாயுச் சியமனத் தானந்த சத்தியே. உ

கஎ. சத்திநிபாதம் - மந்தம்

1514 இருட்டறை [1]மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை [2]மணம்புரிந் தாளே. க

1515 [3]தீம்புல னான [4]திசையது சிந்திக்கில்
[5]ஆம்புல னாயறி வார்க்கமு தாய்நிற்குந்
[6]தேம்புல னான [7]தெளிவறி வார்கட்குக்
[8]கோம்புல னாடிய கொல்லையு மாமே. உ

1516 இருள்நீக்கி எண்ணில் பிறவி கடத்தி
அருள்நீங்கா வண்ணமே யாதி யருளும்
மருள்நீங்கா வானவர் கோனொடுங் கூடிப்
பொருள்நீங்கா இன்பம் [9]புலம்பயில் தானே. ௩

1517 [10]இருள்சூ ழறையில் இருந்தது நாடிற்
பொருள்சூழ் [11]விளக்கது புக்கெரிந் தாற்போல்
மருள்சூழ் மயக்கத்து மாமலர் நந்தி
அருள்சூழ் [12]இறைவனும் அம்மையு மாமே. ச

கஅ. மந்ததரம்

1518 மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி
வெருட்டி வினையறுத் தின்பம் விளைத்துக்

---

* இரண்டு பிரதிகளில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]தன்னிலிருந்த. [2]மணம்புணர்ந். [3]தீம்புனலான திசையது. [4]தெசையது. [5]ஆம்புன லாயறி. [6]தேம்புன லான. [7]தெளியறி. [8]கோம்புன லாடிய. [9]புலம்பது. [10]இருள்சூழ் மறையில். [11]விளக்கத்து. [12]இவையினு மப்பரி சாமே.

குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
[1]அருட்டிகழ் ஞான மதுபுரிந் தானே. ௧

1519 கன்னித் துறைபடிந் தாடிய [2]ஆடவர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்திலர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்துண்டேற்
பின்னைப் பிறவி பிறிதில்லை தானே. ௨

1520 செய்யன் கரியன் [3]வெளியன்நற் பச்சையன்
எய்த வுணர்ந்தவர் [4]எய்வர் இறைவனை
[5]மைவென் றகன்ற [6]பகடுரி போர்த்தவெங்
கைய னிவனென்று [7]காதல்செய் [8]வீரே. ௩

1521 எய்திய காலங்கள் எத்தனை யாயினுந்
தையலுந் தானுந் தனிநா யகமென்பர்
வைகலுந் தன்னை வணங்கு மவர்கட்குக்
கையிற் கருமஞ்செய் [9]காட்டது வாமே. ௪

1522 கண்டுகொண் டோமிரண் டுந்தொடர்ந் தாங்கொளி
[10]பண்டுபண் டோயும் பரமன் பரஞ்சுடர்
வண்டுகொண் [11]டாடு [12]மலர்வார் சடையண்ணல்
[13]நின்றுகண் டார்க்கிருள் நீக்கிநின் [14]றானே. ௫

௧௧. தீவிரம்

1523 அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனார் [15]தோட்டத்தில்
எண்ணிக்கும் ஏழேழ் பிறவி யுணர்விக்கும்
உண்ணிற்ப தெல்லாம் ஒழிய முதல்வனைக்
கண்ணுற்று நின்ற [16]கனியது வாகுமே. ௧

பா - ம்—[1]அருட்டிரு. [2]வானவர். [3]வெளியன் பசியனென் றெய்த. [4]எய்தும். [5]மையன கண்ணாற். [6]கிரிபோர்த்த வேம. [7]காவல்செய். [8]யீரே. [9]கொட்டது. [10]பண்டுகண். [11]டோடு. [12]வளர்சடையண்ணலே. [13]கண்டுகொண் ; நின்றுகொண். [14]றானே. [15]கொட்டத்தில். [16]கணி ; களி.

1524 பிறப்பை யறுக்கும் பெருந்தவம் நல்கும்
மறப்பை யறுக்கும் [1]வழிபட வைக்குங்
குறப்பெண் குவிமுலை கோமள வல்லி
சிறப்பொடு பூசனை செய்யநின் [2]றோர்க்கே. ௨

1525 தாங்குமின் எட்டுத் திசைக்குந் [3]தலைமகன்.
[4]பூங்கமழ் [5]கோதைப் புரிகுழ லாளொடும்
ஆங்கது சேரும் அறிவுடை [6]யார்கட்குத்
தூங்கொளி நீலந் தொடர்தலு மாமே. ௩

1526 நணுகினு ஞானக் கொழுந்தொன் றுநல்கும்
பணிகிலும் பன்மலர் தூவிப் பணிவன்
அணுகிய [7]தொன்றறி யாத வொருவன்
அணுகும் உலகெங்கு மாவியு மாமே. ௪

௨௰. தீவிரதரம்

1527 இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து [8]குணம்பல நீக்கித்
[9]தருமெனு ஞானத்தால் தன்செய லற்றால்
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. ௧

1528 இரவும் பகலும் [10]இலாத இடத்தே
[11]குரவஞ் செய்கின்ற குழலியை [12]உன்னி
அரவஞ்செய் யாமல் அவளுடன் சேரப்
பரிவொன் றிலாளும் [13]பராபரை தானே. ௨

1529 *மாலை விளக்கும் மதியமும் [14]ஞாயிறுஞ்
சால [15]விளக்குந் தனிச்சுடர் [16]அண்ண லுள்
[17]ஞானம் விளக்கிய நாதன்என் உள்புகுந்
தூனை விளக்கி யுடனிருந் தானே. ௩

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]வடிபட ; வடிவுபட. [2]றோளே. [3]தலைமகள். [4]பூங்குழல். [5]பொய்கைப். [6]யாளர்க்குத். [7]லொன்றறி. [8]குணமல. [9]தருவெனு. [10]இறந்த. [11]குரவன். [12]உன்ன. [13]பரிபவர். [14]நாயறுஞ். [15]விளக்குத. [16]அண்ணலும். [17]ஞாலம்.

உக. *புறச்சமய தூஷணம்

1530 ஆயத்துள் நின்ற அறுசம யங்களுங்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா
மாயக் குழியில் விழுவர் மனைமக்கள்
[1]பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற வாறே. க

1531 உள்ளத்து ளேதான் [2]கரந்தெங்கும் நின்றவன்
வள்ளல் தலைவன் மலருறை மாதவன்
[3]பொள்ளற் குரம்பைப் புகுந்து புறப்படுங்
கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே. உ

1532 உள்ளத்தும் உள்ளன் [4]புறத்துள்ளன் என்பவர்க்
குள்ளத்தும் உள்ளன் [4]புறத்துள்ளன் எம்மிறை
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்
குள்ளத்தும் இல்லை புறத்திலை தானே. ௩

1533 ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் அவனலன்
தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்
மாறுதல் இன்றி மனைபுக லாமே. ச

1534 சிவமல்ல தில்லை [5]யறையே சிவமாந்
தவமல்ல தில்லை தலைப்படு [6]வார்க்கிங்கு
அவமல்ல தில்லை அறுசம யங்கள்
[7]தவம்வல்ல நந்திதாள் [8]சார்ந்துய்யு நீரே. ரு

1535 அண்ணலை நாடிய ஆறு சமயமும்
விண்ணவ ராக [9]மிகவும் விரும்பியே
முண்ணின் [10]றழியு முயன்றில ராதலான்
மண்ணின் றொழியும் வகையறி யார்களே. சு

* ஒரு பிரதியில் இத்தலைப்பு பரசமய தூஷணம் என்றுளது.

பா - ம்—[1]பாசத்துட் பட்டுப். [2]உகந்தெங்கும். [3]பொள்ளக். [4]புறத்துளன். [5]யிறையோ ; யறையோஞ். [6]வோர்கட் கவமல்ல. [7]தவ மல்ல. [8]சார்ந்துய்ம்மி னீரே ; சார்ந்துய் யீரே. [9]விரும்புவர் வேட் கையை. [10]றெழியு.

பண்ணார் [1]அமுதினைப் பஞ்ச [2]கடிகையில்
எண்ணா மெனஎண்ணி இருந்தான் [3]இருந்தே. அ

833 ஏய்ந்த பிராயம் இருபது முப்பதும்
வாய்ந்த குழலிக்கு மன்னர்க்கு மானந்தம்
[4]வாய்ந்த குழலியோ டைந்து [5]மலர்ந்திடச்
[6]சோர்ந்தன சித்தமுஞ் சோர்வில்லை வெள்ளிக்கே. கூ

834 வெள்ளி [7]யுருகிப் பொன்வழி [8]ஓடாமே
கள்ளத் தட் [9]டாணார் கரியிட்டு [10]மூடினார்
கொள்ளி பறியக் குழல்வழி யேசென்று
[11]வள்ளியுண் ணாவில் அடக்கிவைத் [12]தாரே. க0

835 வைத்த இருவருந் தம்மின் [13]மகிழ்ந்துடன்
சித்தங் கலங்காது [14]செய்கின்ற ஆனந்தம்
பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும்
வித்தக [15]ணாய்நிற்கும் வெங்கதி ரோனே. கக

836 வெங்கதி ருக்குஞ் சனிக்கும் இடைநின்ற
[நங்கையைப் [16]புல்லிய நம்பிக்கோ ரானந்தந்
தங்களிற் பொன்னிடை வெள்ளிதா ழாமுனந்
திங்களிற் செவ்வாய் [17]புதைத்திருந் [18]தாரே. கஉ

837 திருத்திப் புதனைத் [19]திருத்தல்செய் வார்க்குக்
[20]கருத்தழ [21]காலே கலந்தங் கிருக்கில்
வருத்தமு மில்லையா மங்கை பங்கற்குந்
[22]துருத்தியில் வெள்ளியுஞ் சோரா தெழுமே. கங

838 எழுகின்ற [23]தீயைமுன் [24]னேகொண்டு சென்றிட்டால்
[25]மெழுகுரு கும்பரி செய்திடும் [26]மெய்யே

பா - ம்—[1]அமிர்தினை. [2]கடிகையை. [3]இருந்ததே. [4]ஆய்ந்த. [5]மலர்திட. [6]சேர்ந்தன. [7]யுருக்கிப். [8]ஓடாமுன். [9]டாணோர். [10]மூட்டினார். [11]அள்ளியுண். [12]தானே. [13]மகிழ்ந்திடச். [14]செல்கின்ற. [15]ணார்நிற்கும். [16]புல்கிய. [17]புதனிருந் ; புகைத்திருந். [18]தானே. [19]திருந்தல் செய். [20]கருத்தழல். [21]லாலே. [22]துருத்தியுள். [23]தீயின்முன். [24]கொண்டு. [25]மெழுகுவலிவலி ; மெழுகுருகும்வலி. [26]மெய்யை ; மெய்மை.

1536 சிவகதி யேகதி மற்றுள்ள [1]எல்லாம்
பவகதி பாசப் பிறவியொன் றுண்டு
தவகதி தன்னொடு [2]நேரொன்று தோன்றில்
அவகதி மூவரும் [3]அவ்வகை யாமே. எ

1537 நூறு சமயம் உளவா [4]நுவலுங்கால்
ஆறு [5]சமயமவ் வாறுட் படுவன
கூறு சமயங்கள் கொண்ட நெறிநில்லா
[6]ஈறு [7]பரநெறி யில்லா [8]நெறியன்றே. அ

1538 [9]கத்துங் கழுதைகள் போலுங் [10]கலதிகள்
[11]சுத்த சிவனெங்குந் [12]தோய்வுற்று நிற்கின்றான்
குற்றந் [13]தெளியாதார் குணங்கொண்டு கோதாட்டார்
பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே. கூ

1539 மயங்குகின் றாரு [14]மதிதெளிந் தாரும்
முயங்கி யிருவினை [15]முழைமுகப் பாச்சி
[16]இயங்கிப் [17]பெறுவரே [18]சீறறு [19]காட்டிற்
[20]பயங்கெட் டவர்க்கோர் பரநெறி யாமே. கO

1540 சேயன் அணியன் [21]பிணியிலன் பேர்நந்தி
தூயன் துளக்கற நோக்கவல் லார்கட்கு
மாயன் மயக்கிய [22]மானுட [23]ராமவர்
காயம் விளக்குங் கருத்தறி யார்களே. கக

1541 வழியிரண் டுக்குமோர் வித்தது வான
[24]பழியது பார்மிசை வாழ்தல் உறுதல்
சுழியறி வாளன்றன் சொல்வழி முன்னின்
[25]றழிவறி வார்நெறி நாடநில் லாரே. கஉ

பா - ம்—[1]தெல்லாம். [2]தேரொன்று. [3]ஐவகை. [4]னுவலுங்கால். [5]சமயமுமங். [6]நீறு. [7]பாழெறி. [8]நெறிநின்றே. [9]கற்றுங். [10]கலாதிகள். [11]கத்தச். [12]தொறுவுற்று. [13]தெரியார். [14]மதைத்தெளிந். [15]மூளை முகப் ; முழைபுகப். [16]இயங்கப். [17]பெறுவீரே. [18]லீறறக் ; ல்வீறறக். [19]காடிப். [20]பயங்கொண். [21]பிணியலன். [22]மானிட. [23]மாமவர். [24]வழி யது ; கழியது. [25]றழிவா ரவர்நெறி நாடகில்.

1542 [1]மாதவர் எல்லாம் [2]மாதேவன் பிரான்என்பர்
நாதம தாக அறியப் படுநந்தி
பேதஞ்செய் யாதே பிரான்என் றுகைதொழில்
ஆதியும் அந்நெறி யாகிநின் றானே. கந

1543 அரனெறி யப்பனை யாதிப் பிரானை
உரநெறி [3]யாகி யுளம்புகுந் தானைப்
பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம்
பரனறி யாவிடிற் பல்வகைத் தூரமே. கச

1544 [4]பரிசறி [5]வானவன் பண்பன் பகலோன்
[6]பெரிசறி வானவர் [7]பேற்றில் திகழுந்
துரிசற நீநினை தூய்மணி வண்ணன்
அரிதவன் வைத்த [8]அறநெறி தானே. கரு

1545 ஆன சமயம் அதுஇது நன்றெனும்
மாய மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த வுருவது வாமே. கசு

1546 அந்நெறி [9]நாடி அமரர் முனிவருஞ்
[10]செந்நெறி கண்டார் [11]சிவனெனப் பெற்றார்பின்
முன்னெறி நாடி முதல்வன் அருளிலார்
[12]சென்னெறி செல்லார் திகைக்கின்ற வாறே. கஎ

1547 *உறுமா றறிவதும் உள்நின்ற சோதி
பெறுமா றறியிற் பிணக்கொன் றும் இல்லை
[13]அறுமா றதுவான [14]வங்கியு ளாங்கே
இறுமா றறிகிலர் ஏழைகள் தாமே. கஅ

1548 வழிநடக் கும்பரி சொன் றுண்டு வையங்
கழிநடக் குண்டவர் கற்பனை [15]கேட்பர்

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]மாதவர்க் கெல்லா. [2]மாதேவர். [3]யாதிவர் துள்ளம் புகுந்தான். [4]பரிசற. [5]வானவர். [6]பெரிசெறி. [7]பேறில்; பேரில்; பேறிற் றகளந். [8]அரநெறி. [9]நாடிய. [10]சென்னெறி. [11]சிவநெறி பெற்றபின். [12]செந்நெறி. [13]உறுமா. [14]தங்கியு. [15]கேட்பவர்.

சழிநடக் குந்துய ரம்மது நீக்கிப்
பழிநடப் பார்க்குப் பரவலு மாமே. கசு

1549 *[1]வழிசென்ற மாதவம் [2]வைகின்ற போது
[3]பழிசெல்லும் [4]வல்வினைப் பற்றறுத் தாங்கே
[5]வழிசெல்லும் வல்வினை யார்திறம் விட்டிட்
டுழிசெல்லில் உம்பர் [6]தலைவன்முன் னாமே. உ0

உஉ. †நிராகாரம்

1550 இமையங்க ளாய்நின்ற தேவர்கள் ஆறு
சமையங்கள் பெற்றனர் சாத்திரம் [7]ஓதி
யமையறிந் தோமென்ப ராதிப் [8]பிரானுங்
கமையறிந் தாருட் கலந்துநின் றானே. க

1551 ‡பாங்கமர் கொன்றைப் படர்சடை யானடி
தாங்கு மனிதர் தரணியில் நேரொப்பர்
நீங்கிய வண்ணம் நினைவுசெய் யாதவர்
ஏங்கி உலகில் இருந்தழு வாரே. உ

1552 [9]இருந்தழு வாரும் இயல்புகெட் டாரும்
அருந்தவ [10]மேற்கொண்டங் கண்ணலை எண்ணில்
[11]வருந்தா வகைசெய்து வானவர் கோனும்
பெருந்தன்மை நல்கும் [12]பிறப்பிலி தானே. ந

1553 தூரறி வாளர் துணைவர் [13]நினைப்பிலர்
பாரறி வாளர் படுபயன் றுண்பர்

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

† இரண்டு பிரதிகளில் இத்தலைப்பு இல்லை.

‡ ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]வழிசென்று. [2]வைக்கின்ற. [3]வழிசெல்லும். [4]வல்வினை ; வல்வினை மாற்றறுத். [5]வழிசெல்ல. [6]தலைவர்முன். [7]ஓத வமையறிந். [8]பிரானைக். [9]இருந்தழி. [10]மேல்கொண்டங் ; மேல்கொண்டண்ணலை. [11]வருந்தார் பகைசெய்து. [12]பிறப்பில்லை. [13]நினைப்பிலாப்.

காரறி வாளர் [1]கலந்து பிறப்பர்கள்
நீரறி [2]வார்நெடு மாமுகி லாமே. ௪

1554 அறிவுடன் கூடி [3]அழைத்ததோர் [4]தோணி
பறியுடன் பாரம் பழம்பதி சிந்துங்
குறியது கண்டுங் கொடுவினை [5]யாளர்
செறிய நினைக்கிலர் சேவடி தானே. ௫

1555 மன்னும் ஒருவன் மருவு மனோமயன
[6]என்னின் மனிதர் [7]இகழ்வரிவ் வேழைகள்
[8]துன்னி மனமே தொழுமின் துணையிலி
தன்னையும் அங்கே தலைப்பட லாமே. ௬

1556 ஓங்காரத் [9]துள்ளொளி உள்ளே உதயமுற்
றாங்கார [10]மற்ற அனுபவங் கைகூடார்
சாங்கால முன்னார் [11]பிறவாமை சார்வுறார்
[12]நீங்காச் [13]சமயத்துள் நின்றொழிந் தார்களே. ௭

௨௫. உட்சமயம்

1557 இமையவர் தம்மையும் எம்மையும் முன்னம்
அமைய [14]வகுத்தவன் ஆதி புராணன்
சமையங்க ளாறுந்தன் [15]றாளிணை [16]நாட
அமையங் [17]குழல்கின்ற ஆதிப் பிரானே. ௧

1558 [18]ஒன்றது பேரூர் வழியா றதற்குள
[19]என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை [20]யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் [21]தார்களே. ௨

பா - ம்—[1]காந்து பிறப்பார்கள். [2]வாளர்நெடு. [3]அனைத்ததோர். [4]ஆணி; தோளி. [5]யாளி. [6]எண்ணின். [7]இகழாவரவ்; இகல்வரில் வேளைகள். [8]தனனின். [9]துள்ளொளிக் குள்ளே. [10]மறறு; மற்று மமைவதுங். [11]பிறவாமைசார்வுற்றார் [12]நீங்கார். [13]சமயதது. [14]வகுத்த வனாதி. [15]றெழினாட. [16]நாடிட. [17]கழல்கின்ற; கழல்நின்ற. [18]ஒன்றதே. [19]தென்றதே போலு மிருமுச் சமயங்கள்; என்றன காணும் [20]நீதர்கள்; மாந்தர்கள். [21]தாரே.

1559 சைவப் பெருமைத் தனிநா யகன்தன்னை
உய்ய வுயிர்க்கின்ற ஒண்சுடர் நந்தியை
[1]மெய்ய பெருமையர்க் கன்பனை இன்பஞ்செய்
வையத் தலைவனை வந்தடைந் துய்மினே. ௩

1560 சிவனவன் [2]வைத்ததோர் தெய்வ நெறியிற்
பவனவன் வைத்த பழவழி நாடி
இவனவன் என்ப தறியவல் லார்கட்
கவனவ னங்குள [3]தாங்கட னாமே. ௪

1561 ஆமா றுரைக்கும் அறுசம யாதிக்குப்
போமா று தானில்லை புண்ணிய மல்லதங்
[4]காமாம் [5]வழியாக்கும் அவ்வே றுயிர்கட்கும்
[6]போமாறவ் [7]வாதாரப் பூங்கொடி யாளே. ௫

1562 அரனெறி யாவ தறிந்தேனும் நானுஞ்
[8]சிலநெறி தேடித் திரிந்தஅந் நாளும்
[9]உரநெறி யுள்ளக் கடல்கடந் தேறுந்
தரனெறி [10]நின்ற தனிச்சுடர் தானே. ௬

1563 [11]தேர்ந்த [12]அரனை அடைந்த சிவநெறி
போர்ந்தவர் உன்னிப் பெயர்ந்த [13]பெருவழி
[14]ஆர்ந்தவர் [15]அண்டத்துப் [16]புக்க அருள்நெறி
போந்து [17]புனைந்து [18]புணர்நெறி யாமே. ௭

1564 ஈரு மனத்தை யிரண்டற வீசுமின்
ஊருஞ் சகாரத்தை ஓதுமின் [19]ஞேதியே
வாரு மரனெறி மன்னியே முன்னியத்
தூருஞ் சுடரொளி தோன்றலு மாமே. ௮

1565 [20]மினற்குறி யாளனை வேதியர் வேதத்
[21]தனற்குறி யாளனை ஆதிப் பிரான்தன்னை

பா - ம்—[1]மெய்யப். [2]வையததோர். [3]ஞங்கட. [4]காமா ; காமார். [5]வழியார்க்கும். [6]போமாற. [7]வாறதாம் ; வாறதார். [8]சிவநெறி. [9]உரை செறி. [10]யாய். [11]சேர்ந்த. [12]அவர்தன்னை. [13]வழியார. [14]ஆய்ந்தவர். [15]அண்டத்துக் கவருநெறி. [16]புக்கவ் வருணெறி. [17]பிணைந்து ; விணைந்து. [18]புரைநெறி. [19]ஞேதியை. [20]மினக்குறி. [21]தினக்குறி.

நினைக்குறி யாளனை ஞானக் கொழுந்தி
னயக்குறி காணில் அரனெறி யாமே. கூ

1566 ஆய்ந்துணை [1]ரார்களின் ஆன்மாச் சதுர்பல
வாய்ந்துண ராவகை நின்ற அரனெறி
பாய்ந்துணர் வார்அரன் சேவடி கைதொழு
[2]தேர்ந்துணர் செய்வதோர் இன்பமு மாமே. கO

1567 *சைவ சமயத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த [3]குருநெறி ஒன்றுண்டு
[4]தெய்வச் [5]சிவநெறி சன்மார்க்கஞ் [6]சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே. கக

1568 இத்தவம் அத்தவம் என்றிரு பேரிடும்
பித்தரைக் [7]காணின் நகுமடங்கள் பேர்நந்தி
எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கொல்லை யூர்புக லாமே. கஉ

1569 ஆமே பிரான்முகம் ஐந்தொடு மாருயிர்
ஆமே பிரானுக் கதோமுக [8]மாறுள
[9]தாமே [10]பிரானுக்குந் தன்சிர மாலைக்கும்
[11]நாமே பிரானுக்கு காரியல் பாமே. கங

1570 ஆதிப் பிரானுல கேழும் அளந்தவன்
ஓதக் கடலும் [12]உயிர்களு மாய்நிற்கும்
பேதிப் பிலாமையின் நின்ற பராசத்தி
ஆதிக்கட் டெய்வமும் அந்தமு மாமே. கச

1571 ஆய்ந்தறி வார்கள் அமரர்வித் தியாதரர்
ஆய்ந்தறி யாவண்ணம் நின்ற அரனெறி

---

* இச்செய்யுளை முன் வந்த 1478-ம் செய்யுளோ டொப்பு நோக்குக.

பா - ம்—[1]ர்வார்க ளரன்சாத் திரம்பல; ரவர்கள். [2]தேய்ந்துணர். [3]தொருநெறி. [4]தெய்வ வரனெறி. [5]சிவனெறி. [6]சேர்ந்தது. [7]காணி லன் நாமெங்கள். [8]மானதாம். [9]ஆமே ; தாமெம் பிரானுக். [10]பிரா னுக்குத தன்சிர மாலைக்கும்· [11]நாமெம் பிரானுக்கு நாரியல். [12]உயிர்க்கு.

ஆய்ந்தறிந் தேனவன் சேவடி [1]கைதொழ
ஆய்ந்தறிந் தேனிம்மை அம்மைகண் டேனே. கரு

1572 அறியவொண் [2]ணாதவ் வுடம்பின் பயனை
அறியவொண் [3]ணாத அறுவகை யாக்கி
அறியவொண் ணாத [4]அறுவகைக் கோசத்
தறியவொண் ணாததோர் அண்டம் [5]பதிந்ததே.* கசு

ஐந்தாந்தந்திர முற்றிற்று

---

* இரண்டு பிரதிகளில் தந்திரப் பகுப்பில்லை. இத் தந்திரத்துக் காணும் செய்யுள்கள் முறை மாறி வந்தன. 1443 - 1456, 1508, 1456 - 1476, 1514 - 1528, 1479 - 1500, 1502 - 1507, 1509-1512, 1419 - 1442, 1530 - 1572. தலைப்புக்கள் : சரிதையாதி கிரியை, யோகம், ஞானம், மந்தமாதி மந்ததரம், தீவிரம், தீவிரதரம், சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புததிரமார்க்கம், தாசமார்க்கம், சாலோக மாதி சாமீபம், சாரூபம், சாயுச்சியம், சைவம் நாலுவகைப்படும்: சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம், உட்சமையம்.

பா - ம்—[1]கைதொழக் காய்ந்தறிந். [2]ணாத. [3]ணாதவ் வறுவகை. [4]அறுபகை கோசத். [5]பதித்தே.

ஆறாந் தந்திரம்

க. *சிவகுரு தரிசனம்

1573 [1]பத்திப் பணித்துப் [2]பரவு மடிநல்கிச்
சுத்த வுரையால் துரிசறச் சோதித்துச்
சத்தும் அசத்துஞ் சதசத்துங் [3]காட்டலாற்
சித்தம் இறையே சிவகுரு [4]வாமே. க

1574 பாசத்தைக் கூட்டியே [5]கட்டிப் பறித்திட்டு
[6]நேசித்த காயம் விடுவித்து [7]நேர்நேரே
கூசற்ற முத்தியிற் [8]கூட்டலா [9]நாட்டத்த
தாசற்ற சற்குரு,[10]அம்பல மாமே. உ

1575 [11]சித்திகள் எட்டொடுந் திண்சிவ [12]மாக்கிய
சுத்தியும் [13]எண்சத்தித் தூய்மையும் யோகத்துச்
சத்தியும் மந்திர சாதக [14]போதமும்
பத்தியும் நாதன் அருளிற் பயிலுமே. ந

1576 எல்லா வுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் [15]உள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லாரும் உய்யக்கொண் டிங்கே [16]அளித்தலாற்
சொல்லார்ந்த நற்குருச் சுத்த [17]சிவமே. ச

1577 தேவனுஞ் [18]சுத்த குருவும் உபாயத்துள்
[19]யாவையும் மூன்று யுணக்கண் டுரையாலே

---

* 1573 - 1613 செய்யுள்களைக் கொண்ட சிவகுருதரி சனம் முதலிய மூன்று பகுதிகளும் ஒரு பிரதியில் 2953-ம் செய்யுளை யடுத்துக் காணப்படுகின்றன.

பா - ம்—[1]பததி. [2]பரவும் படிநல்கிச். [3]காட்டாமற். [4]வாகுமே. [5]காட்டிப் பழித்திட்டு. [6]நேசத்தே சாயம. [7]நேரே. [8]கூட்டலால். [9]நாட்டகத். [10]அப்பா. [11]சித்திக்கள் [12]மாக்கிச். [13]எண்முத்தித். [14]போதகம். [15]உளத்து. [16]அளத்தலாற். [17]சிவமாகுமே. [18]சத்த ;. சித்த. [19]ஆயவையின் மூன்றுய்க்கண்.

மூவாப் பசுபாச [1]மாற்றியே [2]முத்திப்பால்
[3]யாவையும் நல்குங் குருபரன் [4]அன்புற்றே. ரு

1578 [5]சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்
தத்தனை நல்கருள் காணு அதிமூடர்
பொய்த்தகு கண்ணுன் நமரென்பர் புண்ணியர்
அத்தன் இவனென் றடிபணி வாரே. சு

1579 [6]உண்மையிற் பொய்மை [7]ஒழித்தலும் [8]உண்மைப்பார்
திண்மையும் ஒண்மைச் சிவமாய [9]அவ்வரன்
வண்மையும் எட்டெட்டுச் [10]சித்தி [11]மயக்கமும்
அண்ணல் [12]அருளன்றி யாரறி வாரே. எ

1580 சிவனே சிவஞானி யாதலாற் சுத்த
சிவனே யெனஅடி சேரவல் லார்க்கு
நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே. அ

1581 குருவே [13]சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே [14]சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. கூ

1582 சித்தம் யாவையுஞ் சிந்தித் [15]திருந்திடும்
அத்தம் உணர்த்துவ [16]தாகும் அருளாலே
சித்தம் யாவையுந் திண்சிவ [17]மானக்கால்
அத்தனும் அவ்விடத் தேயமர்ந் தானே. க0

1583 தானந்தி [18]சீர்மையுட் சந்தித்த சீர்வைத்த
கோனந்தி யெந்தை குறிப்பறி வாரில்லை
வானந்தி யென்று மகிழும் ஒருவற்குத்
தானந்தி யங்கிச் தனிச்சுட [19]ராமே. கக

பா - ம்—[1]மாற்றிய. [2]முத்திப்பா லாவையி னல்குங். [3]ஆவை யும். [4]காடிப் பாரே. [5]சுத்தி. [6]உண்மையும். [7]ஒளிததலும். [8]உண் மைப்பாற் றிண்மையும். [9]னல்வரன் ; லவான. [10]சித்த. [11]மயக்கவர் தண்ணல். [12]அறிவன்றி. [13]சிவமென்னக் கூறினன். [14]சிவமாக ; சிவ மாகிக். [15]ததாரும் ; திருந்நீரும் மத்தன். [16]ளுகும். [17]மாண்டக்கால். [18]நீர்மையுட். [19]தாகுமே.

1584 [1]திருவாய சித்தியும் முத்தியும் சீர்மை
மருளா தருளும் மயக்கறும் வாய்மைப்
[2]பொருளாய வேதாந்த போதமும் நாதன்
[3]உருவாய் வரவிடி லோராஒண் ணாதே. கஉ

1585 பத்தியும் ஞானவை [4]ராக்கிய மும்பார
சித்திக்கு வித்தாஞ் சிவோகமே சேர்தலான்
முத்தியின் ஞான முளைத்தலால் [5]அம்முளை
சத்தி யருள்தரில் தானௌி தாமே. கங

1586 [6]பின்னெய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த [7]முதல்வனை எம்மிறை
தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படு
மன்னெய்த வைத்த மனமது தானே. கச

1587 சிவமான ஞானந் [8]தெளியவொண் சித்தி
சிவமான ஞானந் [9]தெளியவொண் முத்தி
சிவமான ஞானஞ் [10]சிவபரத்தே யேகச்
சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே. கரு

1588 அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றுஞ்
செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்
மறந்தொழிந் தேன்மதி [11]மாண்டவர் வாழ்க்கை
பிறிந்தொழிந் தேனிப் பிறவியை நானே. க௬

1589 தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்
பிரிக்கின்ற இந்தப் பிணக்கறுத் தெல்லாங்
[12]கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண் டேனே. கள

பா - ம்—[1]திருவாகிச் ; திருவாக்கிச் சத்தியும். [2]பொருளார்ந்த. [3]உருவா யருளாவிடி ; உருவரு ளாவிடி. [4]ராக்க மும்பேர். [5]அம் முளைச். [6]இன்னெய்த. [7]முதல்வனே. [8]தெய்வவொண். [9]தெளியவு. [10]சிவபர தேகம் ; சிவபாத் தேகச். [11]மானிடர். [12]கருக்கொன்ற ; குருக்கொண்ட.

[1]உழுகின்ற தில்லை ஒளியை அறிந்தபின்
விழுகின்ற தில்லை வெளியறி வார்க்கே. க௪

839 வெளியை அறிந்து வெளியி னடுவே
[2]ஒளியை அறியி னுளிமுறி யாமே
தெளிவை அறிந்து செழுநந்தி யாலே
வெளியை அறிந்தனன் மேலறி யேனே. க௫

840 மேலாந் தலத்தில் [3]விரிந்தவ ராரெனின்
மாலாந் திசைமுகன் [4]மாநந்தி யாயவர்
நாலா நிலத்தி னடுவான [5]வப்பொருள்
மேலா [6]யுரைத்தனர் மின்னிடை [7]யாளுக்கே. க௬

841 மின்னிடை [8]யாளுமின் னாளனுங் கூட்டத்துப்
பொன்னிடை வட்டத்தின் உள்ளே புகப்பெய்து
தன்னொடு தன்னைத் தலைப்பெய்ய [9]வல்லாரேன்
மண்ணிடைப் பல்லூழி வாழலு [10]மாமே. க௭

842 வாங்க [11]லிறுதலை வாங்கலில் வாங்கிய
[12]வீங்க வலிக்கும் விரகறி வாரில்லை
வீங்க வலிக்கும் விரகறி [13]வாளரும்
[14]ஓங்கிய தன்னை [15]உதம்பண்ணி னாரே. க௮

843 உதமறிந் தங்கே [16]ஒருசுழிப் பட்டாற்
கதமறிந் தங்கே கபாலங் கறுக்கும்
இதமறிந் தென்றும் இருப்பாள் ஒருத்தி
பதமறிந் தும்முளே பார்கடிந் [17]தாளே. க௯

844 பாரில்லை நீரில்லைப் பங்கயம் ஒன்றுண்டு
தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது

பா - ம்—[1]வழுகின. [2]உளியை. [3]விரிநதகன்றாரெனின். [4]வானந்தியாமிவர். [5]ப்பேரருள். [6]யுரைத்தனன். [7]யாருக்கே. [8]யாளுமணாளனுங். [9]வல்லீரேல். [10]மாங்கே. [11]லறுதலை. [12]வீங்கி. [13]வாளர்க்கு, [14]ஓங்கியதனை. [15]யுகம்பண்ணி. [16]ஒருவழிப். [17]தானே.

உ. திருவடிப் பேறு

1590 இசைந்தெழும் அன்பில் எழுந்த [1]படியே
[2]பசைந்தெழும் ஈசரைப் பாசத்துள் ஏகச்
சிவந்த குருவந்து சென்னிகை வைக்க
[3]உவந்த குருபதம் உள்ளத் [4]துவந்ததே. க

1591 தாடந்த போதே [5]தலைதந்த எம்மிறை
[6]வாடந்த ஞான வலியையுந் தந்திட்டு
வீடந்த [7]மின்றியே யாள்கென [8]விட்டருட்
[9]பாடின் முடிவைத்துப் [10]பார்வந்து தந்ததே. உ

1592 தானவ [11]னாகிச் சொரூபத் துவந்திட்டு
[12]ஆன சொரூபங்கள் நான்கும் [13]அகற்றின
வினைய முத்திரை [14]மீந்தாண்ட நன்னந்தி
தானடி முற்சூட்டித் தாபித்த துண்மையே. ங

1593 உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்
திரையற்ற நீர்போல் சிவமாதல் [15]தீர்த்துக்
கரையற்ற [16]சத்தாதி நான்குங் கடந்த
சொரூபத் [17]திருத்தினன் சொல்லிறந் தோமே. ச

1594 குரவன் உயிர்முச் சொரூபமுங் கைக்கொண்
டரிய பொருள்முத் திரையாகக் [18]கொண்டு
பெரிய பிரானடி நந்தி பேச்சற்
றுருகிட என்னையங் குய்யக்கொண் டானே. ரு

1595 பேச்சற்ற இன்பத்துப் பேரானந் தத்திலே
[19]மாச்சற்ற என்னைச் [20]சிவமாக்கி மாள்வித்துக்
காச்சற்ற சோதி கடன்மூன் றுங் கைக்கொண்டு
[21]வாச்ச புகழ்மாளத் தாள்தந்து மன்னுமே. சு

பா - ம்—[1]படியிற். [2]பசைந்திடு மீசனார். [3]உயர்ந்த குருபரம். [4]துவந்தே. [5]தனைத்தந்த. [6]வாடந்து. [7]மன்றியே. [8]விட்டருள். [9]பாலின். [10]பார்வேந்து ; பார்வேந்துந். [11]னாதிச் சொருபத்துள். [12]வான ; வானச். [13]அகன்றற ; அகன்றற்ற. [14]மீரூண் டனனந்தி. [15]தீர்வு ; தீர்வுற்றுக். [16]சத்தியாதி. [17]திருத்தினற். [18]கைகொண்டு. [19]மாச்சற்று. [20]சிவமாக ; சிவமாக்கு. [21]வாச்சப்.

1596 இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்
[1]பதிவித்த [2]பாதப் [3]பராபரன் நந்தி
கதிவைத்த வாறும் [4]மெய்காட் டியவாறும்
விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே. எ

1597 திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடி [5]விற்கண்ட கோனையெங் கோவைக்
[6]கருவழி [7]வாற்றிடக் கண்டுகொண் டேனே. அ

1598 திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல [8]மீட்குந்
திருவடி ஞானமே [9]திண்சித்தி முத்தியே. கூ

1599 மேல்வைத்த வாறுசெய் யாவிடின் மேல்வினை
மால்வைத்த சிந்தையை மாயம தாக்கிடும்
பால்வைத்த சென்னிப் படரொளி [10]வானவன்
தாள்வைத்த வாறு தரிப்பித்த வாறே. க0

1600 கழலார் [11]கமலத் திருவடி என்னும்
நிழல்சேரப் பெற்றேன் நெடுமால் அறியா
அழல்சேரும் அங்கியுள் ஆதிப் பிரானுங்
குழல்சேரும் [12]என்னுயிர்க் கூடுங் [13]குலைத்ததே. கக

1601 முடிமன்ன [14]ராகிமூ வுலகம தாள்வர்
அடிமன்னர் இன்பத் தளவில்லை கேட்கின்
முடிமன்ன ராய்நின்ற தேவர்கள் ஈசன்
குடிமன்ன ராய்க்குற்ற மற்றுநின் றாரே. க௨

1602 வைத்தேன் [15]அடிகள் மனத்தினுள் ளேநான்
பொய்த்தே யெரியும் புலன்வழி போகாமல்

பா - ம்—[1]பதியித்த. [2]பாதம்; வந்தப். [3]பாரபர. [4]மெய்க்காட். [5]யிற்கண்ட. [6]கருவடி. [7]மாற்றிக்; மாற்றிடக். [8]நீக்குந். [9]திண்சத்தி. [10]யானவன். [11]கருமத். [12]இன்னுயிர்க். [13]குலைத்தே; குலைந்ததே. [14]ராகின்மூ; ராய்மூ. [15]அடிக்கண்.

எய்த்தேன் உழலும் [1]இருவினை மாற்றிட்டு
மெய்த்தேன் அறிந்தேனவ் வேதத்தின் அந்தமே.

1603 அடிசார லாம்அண்ணல் பாத மிரண்டும்
முடிசார வைத்தனர் முன்னை முனிவர்
படிசார்ந்த இன்பப் பழவடி [2]வெள்ளக்
குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே. ௧௪

1604 மந்திர மாவதும் மாமருந் தாவதுந்
தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்
சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே. ௧௫

---

௩. ஞாதுரு ஞானஞேயம்

1605 [3]நீங்காச் சிவானந்த [4]ஞேயத்தே [5]நின்றிடப்
பாங்கான பாசம் படரா படரினும்
ஆங்கார நீங்கி யதனிலை நிற்கவே
நீங்கா அமுத நிலைபெற லாமே. ௧

1606 ஞேயத்தே நின்றோர்க்கு ஞானாதி [6]நின்றிடும்
ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும்
ஞேயத்தின் ஞேயத்தை ஞேயத்தை யுற்றவர்
ஆயத்தில் நின்ற அறிவறி [7]வாரே. ௨

1607 தானென் றவனென் றிரண்டாகுந் தத்துவந்
தானென் றவனென் றிரண்டுந் [8]தனிற்கண்டு
தானென்ற பூவை யவனடி சாத்தினால்
நானென் றவனென்கை நல்லதொன் றன்றே. ௩

1608 வைச்சன [9]வாறாறு [10]மாற்றி யெனைவைத்து
மெச்சப் [11]பரன்றன் வியாத்துவ மேலிட்டு

பா - ம்—[1]அருவினை மாற்றிடு. [2]வெள்ளங். [3]நீங்கார். [4]நேயத்தே. [5]நிற்கப். [6]நீங்கிடும். [7]வோரே. [8]தனிக்கண்டு. [9]வாறு. [10]மகற்றியே வைத்து. [11]பரமன்றன்.

நிச்சய [1]மாக்கிச் சிவமாக்கி ஞேயத்தால்
அச்சங் கெடுத்தென்னை யாண்டனன் நந்தியே. ச

1609 முன்னை யறிவறி [2]யாதஅம் மூடர்போற்
பின்னை யறிவறி யாமையைப் பேதித்தான்
தன்னை யறியப் பரனாக்கித் தற்சிவத்
தென்னை யறிவித் திருந்தனன் நந்தியே. ரு

1610 [*]காணாத கண்ணுடன் கேளாத கேள்வியுங்
கோணாத [3]போகமுங் கூடாத கூட்டமும்
நாணாத [4]நாணமும் நாதாந்த போதமுங்
காணா யெனவந்து காட்டினன் நந்தியே. சு

1611 மோனங்கை வந்தோர்க்கு முத்தியுங் கைகூடும்
மோனங்கை வந்தோர்க்குச் சித்தியும் முன்னிற்கும்
மோனங்கை வந்தூமை யாமொழி [5]முற்றுங்காண்
மோனங்கை வந்தைங் கருமமும் முன்னுமே. எ

1612 முத்திரை மூன்றின் முடிந்தது மூன்றன்பால்
வைத்த [6]கலைகால் நான்மடங் கான்மாற்றி
[7]உய்த்தவத் தானந்தத் தொண்குரு பாதத்தே
பெத்த மறுத்தோர் [8]பிறந்திற வாரே. அ

1613 மேலைச் சொரூபங்கள் மூன்று மிகுசத்தி
பாலித்த முத்திரை பற்றும் [9]பரஞானி
[10]ஆலித்த நட்டமே ஞேயம் [11]புகுந்தற்ற
மூலச் சொரூபன் [12]மொழிஞா துருவனே. கூ

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]மாகச். [2]யாதவர். [3]போதமுங். [4]நாதமும். [5]முற்றுங் கான். [6]கலைகாலை. [7]உய்த்தக வைத்தாந்தத ; உய்த்த தவத்தாந்தத். [8]பிறந்திசுழ். [9]பரஞானம். [10]பாலித்த. [11]பகுந்தந்த ; பகுத்தற்ற. [12]மொழியா.

ச. துறவு

1614 இறப்பும் பிறப்பும் இருமையும் நீங்கித்
துறக்குந் தவங்கண்ட சோதிப் பிரானை
மறப்பில ராய்நித்தம் வாய்மொழி வார்கட்
கறப்பதி காட்டும் அமரர் பிரானே. க

1615 பிறந்தும் இறந்தும்பல் பேதைமை யாலே
[1]மறந்து மலஇருள் நீங்க [2]மறைந்து
சிறந்த சிவனருள் சேர்பரு வத்துத்
[3]துறந்த [4]வுயிர்க்குச் சுடரொளி [5]யாமே. உ

1616 அறவன் பிறப்பிலி யாரும் [6]இலாதான்
உறைவது காட்டகம் உண்பது பிச்சை
[7]துறவனுங் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே. ௩

1617 நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவின் நெருஞ்சில் முட்பாயும்
நெறியில் வழுவா தியங்கவல் [8]லார்க்கு
நெறியின் நெருஞ்சில்முட் [9]பாயகி லாவே. ச

1618 கேடுங் [10]கடமையுங் கேட்டுவந் தைவரும்
நாடி வளைந்தது [11]நான்கட [12]வேனலேன்
ஆடல் விடையுடை அண்ணல் திருவடி
கூடுந் தவஞ்செய்த [13]கொள்கையன் றானே. ரு

1619 உழவன் [14]உழவுழ வானம் வழங்க
உழவன் உழவினிற் [15]பூத்த குவளை
உழவன் உழத்தியர் [16]கண்ணெக்கும் என்றிட்
டுழவன் அதனை [17]யுழவொழிந் தானே. சு

பா - ம்—[1]மறந்த. [2]மறைத்துச். [3]துறநதது முயிர்க்குச். [4]வுயிர்க்குட். [5]யாகுமே [6]இலாதவன். [7]துறவெனுங். [8]லார்கட்கு. [9]பாயகில். [10]கடிமையுங். [11]நான்கடை. [12]வேனலன் ; வேனல்லன். [13]கொள்கையாந்தானே ; தொகையந்தானே. [14]உளவுழ. [15]பூத்தது வேளை. [16]கண்ணேக்கும். [17]யுழலொழிந்.

1620 மேல்துறந் தண்ணல் விளங்கொளி [1]கூற்றுவன்
நாள்துறந் தார்க்கவன் [2]நண்ப னவாவிலி
கார்துறந் தார்க்கவன் கண்ணுத லாய்நிற்கும்
பார்துறந் தார்க்கே பதஞ்செய லாமே. எ

1621 [3]நாகமும் ஒன்று [4]படம்ஐந்து நாலது
[5]போகமுட் புற்றிற் பொருந்தி நிறைந்தது
ஆக மிரண்டும் [6]படம்விரித் தாட்டொழிந்
[7]தேகப் படஞ்செய் துடம்பிட [8]மாமே. அ

1622 அகன்றார் வழிமுதல் ஆதிப் பிரானும்
இவன்றா னெனநின் றெளியனும் அல்லன்
[9]சிவன்றாள் பலபல சீவனு [10]மாகும்
[11]நயன்றான் வரும்வழி நாமறி யோமே. கூ

1623 [12]தூம்பு திறந்தன ஒன்பது [13]வாய்தலும்
ஆம்பற் [14]குழலியின் [15]கஞ்சுளிப் பட்டது
[16]வேம்பேறி நோக்கினன் மீகாமன் கூரையிற்
[17]கூம்பேறிக் [18]கோயிலிற் பூக்கின்ற [19]வாறே. கO

ரு. தவம்

1624 [20]ஒடுங்கி நிலைபெற்ற வுத்தமர் உள்ளம்
[21]நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
[22]இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை
[23]படும்பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே. க

1625 எம்மா ருயிரும் இருநிலத் தோற்றமுஞ்
செம்மா தவத்தின் செயலின் பெருமையும்

பா - ம்—[1]கூறுவன். [2]நண்பனல்லாவிலி ; நண்பண் வாவிக். [3]நாகமதொன்று. [4]படமைந்துலது. [5]போகமும் ; போகமாள். [6]படவிரித் ; படம் விரிந். [7]தேத ; தேக ; தேகம். [8]லாமே. [9]சிவன்றான். [10]மாகி. [11]நவின்றான். [12]காம்பு. [13]வாய்த்தும். [14]குழியின். [15]கஞ்சுழிப். [16]வேம்பொறி நோக்கினேன். [17]றாம்பேறிக். [18]கோயில் பழுக்கின்ற. [19]வாமே. [20]ஒடுங்கு. [21]நடுங்கும. [22]இடும்பைகள். [23]படும் யழிபாவம் பயமில்லை தானே ; கடும்பசியில்லை கற்றுவிட்.

[1]அம்மான் திருவருட் பெற்றவர்க் கல்லா(து)
[2]இம்மா தவத்தின் இயல்பறி யாரே. உ

1626 *[3]பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்
மறப்பில ராகிய மாதவஞ் [4]செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே. ங

1627 இருந்து வருந்தி எழிற்றவஞ் செய்யும்
பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே
இருந்திந் திரனே யெவரே வரினுந்
[5]திருந்துந் தஞ் சிந்தை சிவனவன் பாலே. ச

1628 கரந்துங் கரந்திலன் [6]கண்ணுக்குந் தோன்றான்
பரந்த சடையன் பசும்பொன் நிறத்தன்
அருந்தவர்க் கல்லால் அணுகலு மாகான்
விரைந்து தொழப்படும் வெண்மதி யானே. ரு

1629 †பின்னெய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த [7]முதல்வனை எம்மிறை
தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படும்
மன்னெய்த வைத்த மனமது தானே. சா

1630 அமைச்சரும் ஆனைக் குழாமும் [8]அரசும்
[9]பகைத்தெழும் பூசலுட் [10]பட்டார் நடுவே
அமைத்ததோர் [11]ஞானமும் ஆத்தமும் நோக்கி
இமைத்தழி [12]யாதிருந் தார்தவத் தாரே. எ

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

† இச்செய்யுளே முன் 1586-ம் செய்யுளாக வந்துளது.

பா - ம்—[1]அம்மா வவாருள் பெற்றவ ரல்லாதிம்மா ; அம்மா யவனருள் பெற்றவர்க். [2]இம்மால். [3]பிறப்பழியாமற் ; பிறப்பறியாமற். [4]செய்வர். [5]திருந்துதன் ; திருந்தூந்தன் ; திருநதுஙஞ். [6]கண்ணகத் தொன்றான். [7]முதல்வனெம்மிறை. [8]அரைபசும். [9]பதைத்தெழும்; பகைத்தெழு. [10]பட்டனன். [11]மார்க்கமு மாக்கமும் ; ஞானமும் மார்க்கமும். [12]யாதிருப் பாரவர் தாமே ; யாதிருப் பார்தவத் தோரே.

1631 சாத்திரம் ஓதுஞ் சதுர்களை [1]விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே. ௮

1632 *தவம்வேண்டு ஞானந் தலைப்பட வேண்டில்
தவம்வேண்டா ஞான சமாதிகை கூடில்
தவம்வேண்டா மச்ச [2]கசமார்க்கத் தோர்க்குத்
[3]தவம்வேண்டா மாற்றந் [4]தனையறி யாரே. ௯

௯. †தவதூடணம்

1633 ஓதலும் [5]வேண்டாம் உயிர்க்குயி ருள்ளுற்றாற்
[6]காதலும் வேண்டாமெய்க் காய மிடங்கண்டாற்
சாதலும் [7]வேண்டாஞ் சமாதிகை கூடினாற்
போதலும் [5]வேண்டாம் புலன்வழி [8]போகார்க்கே. ௧

1634 கத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறினாற்
சத்தமும் வேண்டாஞ் [9]சமாதிகை கூடினாற்
சுத்தமும் வேண்டாந் [10]துடக்கற்று நிற்றலாற்
சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே. ௨

1635 விளைவறி வார்பண்டை மெய்த்தவஞ் செய்வார்
விளைவறி வார்பண்டை மெய்யுரை [11]செய்வார்
விளைவறி வார்பண்டை [12]மெய்யுறஞ் செய்வார்
விளைவறி வார்விண்ணின் மண்ணின்மிக் காரே. ௩

1636 கூடித் தவஞ்செய்து கண்டேன் குரைகழல்
தேடித் தவஞ்செய்து கண்டேன் சிவகதி

* மூன்று பிரதிகளில் இச்செய்யுள் இல்லை.

† ஒரு பிரதியில் இத்தலைப்பு சமாதி தூடணம் என்றுளது.

பா - ம்—[1]விட்டு. [2]கசன்மார்க்கத். [3]தவம் வேண்டு. [4]தனையுணராரே. [5]வேண்டா. [6]காய்தலும். [7]வேண்டா சமாதியைக். [8]போதார்க்கே. [9]சமாதியைக். [10]தொடக்கற்று. [11]செய்யார். [12]மெய்யர்க்குச்.

வாடித் [1]தவஞ்செய்வ தேதவம் இவைகளைந்
தூடிற் பலவுல [2]கோரெத் தவரே. ௪

1637 மனத்துறை மாகடல் ஏழுங் [3]கைநீந்தித்
தவத்திடை யாளர்தஞ் சார்வத்து வந்தார்
பவத்திடை [4]யாளர் அவர்பணி கேட்கின்
முகத்திடை நந்தியை முந்தலு மாமே. ௫

1638 மனத்திடை நின்ற மதிவாள் உருவி
இனத்திடை நீக்கி இரண்டற [5]வீர்த்துப்
புனத்திடை [6]அஞ்சும் போகாமல் [7]மறித்தால்
தவத்திடை யாரொளி தன்னொளி [8]யாமே. ௬

1639 ஒத்து மிகவு நின்றானை யுரைப்பது
பத்தி கொடுக்கும் பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுக்கும் முனிவ [9]னெனும்பதஞ்
சத்தான [10]செய்வது [11]தான் தவந் தானே. ௭

1640 [12]இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக்கென் றெண்ணி
மலர்தொட்டுக் [13]கொண்டேன் [14]வரும்புனல் காணேன்
[15]தலைதொட்ட நூல்கண்டு [16]தாழ்ந்ததென் உள்ளந்
தலைதொட்டுக் கண்டேன் தவங்கண்ட வாறே. ௮

1641 படர்சடை மாதவம் [17]பற்றிய பத்தர்க்
கிடரடை யாவண்ணம் ஈசன் அருளும்
[18]இடரடை செய்தவர் மெய்த்தவ நோக்கில்
உடரடை [19]செய்வ தொருமனத் தாமே. ௯

1642 ஆற்றிற் கிடந்த முதலைகண் டஞ்சிப்போய்
ஏற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட [20]தன்னொக்கும்

பா - ம்—[1]தவஞ் செய்த தேதம். [2]கோரொத்தவமாமே. [3]கைநீங்கித். [4]யாகார்; யாள்வர் பழி கெடவே. [5]வீர்ந்து. [6]அஞ்சையும் போக மறிநதால். [7]மதித்தால். [8]யாகுமே. [9]ரெனும்பதஞ்; னெனும் பதச். [10]செய்வதுந். [11]தானவந். [12]இறைதொட்டுப். [13]கண்டேன்; கொண்டே. [14]வரும்புலன்; வரும்பலன். [15]தலைகெட்ட [16]தாழ்ந்தே னென். [17]பத்திய. [18]விடரடை. [19]செய்தோ ருனமத்த மாமே; செய்வதோருன் மத்தமாமே. [20]தனொக்கும்; வாரொக்கும்.

ஊரில்லைக் காணும் ஒளியது [1]ஒன்றுண்டு
கீழில்லை மேலில்லைக் கேள்வியிற் [2]பூவே. உ0

உ0. அமுரிதாரணை

845 உடலிற் கிடந்த வுறுதிக் குடிநீர்க்
கடலிற் சிறுகிணற் றேற்றமிட் டாலொக்கும்
[3]உடலில் ஒருவழி ஒன்றுக் கிறைக்கில்
நடலைப் படாதுயிர் [4]நாடலு மாமே. க

846 தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரு மோராண்டில் ஊனமொன் றில்லை
வளியுறும் எட்டின் மனமும் ஒடுங்குங்
களிதருங் காயங் கனகம தாமே. உ

847 நூறு மிளகு [5]நுகருஞ் சிவத்தினீர்
மாறும் இதற்கு மருந்தில்லை [6]மாந்தர்கள்
தேறில் இதனைத் [7]தெளியுச்சி கப்பிடின்
மாறும் இதற்கு [8]மறுமயி [9]ராமே. ந

848 கரையரு கேநின்ற கானல் [10]உவரி
வரைவரை என்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு
நரைதிரை [11]மாறு நமனுமங் கில்லையே. ச

849 [12]அளக நன்னுத லாயோ ரதிசயங்
களவு காயங் [13]கலந்தஇந் நீரிலே
மிளகு [14]நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
[15]இளகும் மேனி இருளுங் கபாலமே.* ரு

---

*ஒரு பிரதியில் இதனை யடுத்து 855-ம் செய்யுளின் முதலடியும், 856-ம் செய்யுளின் பின் மூன்றடியும் ஒரு செய்யுளாக எழுதப் பட்டுள்ளன.

பா - ம்—[1]ஒன்றில்லை. [2]ரூவே. [3]முடிவில். [4]நாட்டலு. [5]நுவலுஞ். [6]மாந்தர்காள். [7]தெளியச் சிதைப்பிடின். [8]மறுமறுமயிராமே. [9]ராகுமே. [10]அமுரி. [11]யில்லை. [12]அழகிய நன்னுதல் கேளோ. [13]கலந்த விண்ணீரிலே. [14]மஞ்சளும் நெல்லியும் வெம்பிடில். [15]இளகிடு.

நோற்றுத் [1]தவஞ்செய்யார் நூலறி யாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே. க0

1643 பழுக்கின்ற வாறும் பழமுண்ணு மாறுங்
குழக்கன்று துள்ளியக் கோணியைப் [2]புல்காற்
குழக்கன்று கொட்டிலிற் கட்டவல் லார்க்குள்
இழுக்காது நெஞ்சத் திடவொன்று மாமே. கக

1644 சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்
சித்தஞ் சிவானந்தஞ் [3]சேர்ந்தோர் [4]உறவுண்டால்
சித்தஞ் சிவமாக வேசித்தி முத்தியாஞ்
சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே. கஉ

எ. *அருளுடைமையின் ஞானம் வருதல்

1645 பிரானருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்
பிரானருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையும் உண்டு
பிரானரு [5]ளிற்பெருந் தெய்வமு மாமே. க

1646 தமிழ்மண் டலம்ஐந்துந் தாவிய ஞானம்
[6]உமிழ்வது போல [7]உலகந் [8]திரிவர்
[9]அவிழு மனமும்எம் ஆதி யறிவுந்
தமிழ்மண் டலம்ஐந்துந் தத்துவ [10]மாமே. உ

1647 புண்ணிய பாவம் [11]இரண்டுள பூமியில்
நண்ணும் பொழுதறி [12]வார்சில ஞானிகள்
எண்ணி இரண்டையும் [13]வேராறுத் தப்புறந்
தண்ணல் [14]இருப்பிடம் ஆய்ந்துகொள் [15]வீரே. ந

---

* சில பிரதிகளில் இத்தலைப்பு அருளுடைமையின் ஞானமெய்தல், அருளுடைமையினாலே ஞானம் வருதல் என்று பேதமாகக் காணப்படுகிறது.

பா - ம்—[1]தவஞ் செய்வார். [2]புக்காற்; பல்காற். [3]சேர்ந்துற வுண்டான. [4]அறவுண்டாம். [5]ளாற்பெருந். [6]உழுவது. [7]உலகர். [8]திரிவார். [9]அவிழ மனமுமேயாக வறிவுந். [10]ஞமே; ஞானமே. [11]இரண்டுமிப். [12]வார்சில. [13]வெறுத். [14]இருந்திடம். [15]வீரே.

1648 முன்னின் றருளு [1]முடிகின்ற காலத்து
[2]நன்னின் றுலகில் நடுவுயி ராய்நிற்கும்
பின்னின் றருளும் பிறவியை நீக்கிடும்
முன்னின் றெனக்கொரு முத்திதந் தானே. ௪

1649 சிவனரு [3]ளாற்சிலர் தேவரு மாவர்
சிவனரு [3]ளாற்சிலர் தெய்வத்தோ டொப்பர்
சிவனரு ளால்வினை சேரகி லாமை
சிவனருள் [4]கூறில்அச் சிவலோக மாமே. ௫

1650 புண்ணியன் எந்தை புனிதன் இணையடி
நண்ணி விளக்கென ஞானம் விளைந்தது
மண்ணவ ராவதும் வானவ ராவதும்
அண்ணல் இறைவன் அருள்பெற்ற போதே. ௬

1651 காயத்தே ரேறி மனப்பாகன் கைகூட்ட
மாயத்தே ரேறி மயங்கு [5]மவையுணர்
நேயத்தே ரேறி நிமலன் அருள்பெற்றால்
ஆயத்தே ரேறி யவனிவ னாமே. ௭

1652 அவ்வுல கத்தே பிறக்கில் உடலொடும்
அவ்வுல கத்தே [6]யருந்தவர் நாடுவர்
அவ்வுல கத்தே [7]யரனடி [8]கூடுவர்
அவ்வுல கத்தே யருள்பெறு வாரே. ௮

1653 [9]கதிர்கண்ட காந்தங் கனலின் [10]வடிவாம்
மதிகண்ட காந்தம் மணிநீர் வடிவாஞ்
[11]சதிகொண்ட [12]சாக்கி யெரியின் வடிவாம்
எரிகொண்ட ஈசன் எழில்வடி வாமே. ௯

1654 நாடும் உறவுங் [13]கலந்தெங்கள் நந்தியைத்
தேடுவன் தேடிச் சிவபெரு மான்என்று

பா - ம்—[1]முடிகின்ற ; முடிக்கின்ற. [2]நண்ணின். [3]ளாற்சில. [4]கூறிற். [5]மவை யுணர்ந்து. [6]யருந்தவம். [7]யவனடி. [8]கூடுவார். [9]க்திர் கொண்ட. [10]வடிவமாம். [11]சதிகொண்டு. [12]தாக்கி. [13]கவர்ந்தெங்கள்.

கூடுவன் கூடிக் குறைகழற் கேசெல்ல
வீடு மளவும் விடுகின் றிலேனே. ௧௦

அ. அவவேடம்

1655 ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்
ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்
தேடியுங் காணீர் சிவனவன் [1]தாள்களே. ௧

1656 ஞானமில் லார்வேடம் பூண்டிந்த நாட்டிடை
ஈனம [2]தேசெய் திரந்துண் டிருப்பினும்
மான நலங்கெடும் அப்புவி யாதலால்
ஈனவர் வேடங் கழிப்பித்தல் இன்பமே. உ

1657 இன்பமுந் துன்பமும் நாட்டா [3]ரிடத்துள்ள
நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்
என்ப இறைநாடி நாடோறும் நாட்டினின்
மன்பதை செப்பஞ் செயின்வையம் வாழுமே. ௩

1658 இழிகுலத் தோர்வேடம் பூண்பர் மேலெய்த
வழிகுலத் தோர்வேடம் பூண்பர் தேவாகப்
பழிகுலத் தாகிய பாழ்சண்ட ளானர்
கழிகுலத் தோர்கள் [4]களையப்பட் டோரே. ௪

1659 பொய்த்தவஞ் செய்வார் [5]புகுவர் நரகத்துப்
பொய்த்தவஞ் [6]செய்தவர் புண்ணிய [7]ராகாரேற்
பொய்த்தவம் மெய்த்தவம் போகத்துட் போக்கியஞ்
சத்திய ஞானத்தால் [8]தங்குந் தவங்களே. ௫

1660 பொய்வேடம் பூண்பர் பொசித்தல் பயனாக
மெய்வேடம் பூண்போர் [9]மிகுபிச்சை [10]கைக்கொள்வர்

பா - ம்—[1]தாளே. [2]தென்செய். [3]றிடத்துள. [4]கழியப்பட் [5]புகுவார். [6]செய்வார். [7]ராகார். [8]தாங்குந். [9]மிகுமிச்சை. [10]யைக் கொள்வர்.

பொய்வேடம் மெய்வேடம் போலவே பூணினும்
உய்வேட மாகும் உணர்ந்தறிந் தோர்க்கே. ௯

---

௯. தவவேடம்

1661 தவமிக் கவரே தலையான வேடர்
அவமிக் கவரே யதிகொலை வேடர்
அவமிக் கவர்வேடத் தாகாரவ் வேடந்
தவமிக் கவர்க்கன்றித் தாங்கவொண் ணாதே. ௧

1662 பூதி [1]யணிவது சாதன மாதியிற்
காதணி [2]தாம்பிர குண்டலங் கண்டிகை
ஓதி யவர்க்கும் உருத்திர சாதனந்
தீதில் சிவயோகி சாதனந் [3]தேரிலே. ௨

1663 யோகிக் கிடுமது வுட்கட்டுக் கஞ்சுளி
தோகைக்குப் [4]பாசத்துச் சுற்றுஞ் [5]சடையதொன்
றாகத்து நீறணி [6]யாங்கக் [7]கபாலஞ்
[8]சீகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே. ௩

1664 காதணி குண்டலங் கண்டிகை [9]நாதமும்
[10]ஊதுநற் சங்கும் [11]உயர்கட்டி கப்பரை
ஏதமில் பீர்துகம் யோகாந்த மாதனம்
ஏதமில் [12]யோகபட் டந்தண்டம் ஈரைந்தே. ௪

---

௧௦. திருநீறு

1665 *நூலுஞ் சிகையும் [13]உணரார்நின் மூடர்கள்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்

---

* இரண்டு பிரதிகளில் இதுவும் அடுத்த செய்யுளும் பின் முன்னாக வந்துள்ளன. ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]யணிந்து. [2]தாம்பிரங். [3]தேர்கிலே. [4]பாசற்றுச்; பாகத்துச்; பாகஞ். [5]சடையொன்; சடையொன்று வாகத்து [6]யாகுங். [7]கப்பாளஞ்; கப்பாளமுஞ். [8]சீதத்த. [9]நாகமும். [10]ஊதின. [11]உயர்கட்டிக். [12]யோகப்ப. [13]உணரார்நுண் மூண்டர்கள்; உணரா நுண்.

பாலொன்றும் அந்தணர் பார்ப்பார் பரமுயிர்
ஓரொன் [1]றிரண்டெனில் ஓங்காரம் ஓதிலே. க

1666 கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் [2]பூசி [3]மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் [4]சிவகதி
சிங்கார மான திருவடி [5]சேர்வரே. உ

1667 *அரசுட [6]ணலத்தி யாகும்அக் [7]காரம்
விரவு கனலில் வியனுரு மாறி
[8]நிரவயன் நின்மலன் [9]தாள்பெற்ற நீதர்
உருவம் பிரமன் உயர்குல மாமே. ங

கக. †ஞானவேடம்

1668 ஞானமி லார்வேடம் பூண்டும் நரகத்தர்
[10]ஞானமுள் ளார்வேடம் [11]இன்றெனில் நன்முத்தர்.
ஞானமுள தாக [12]வேண்டுவோர் நக்கன்பால்
ஞானமுள வேட நண்ணிநிற் போரே. க

1669 புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனில்லை
நன்ஞானத் தோர்வேடம் பூணார் அருள்நண்ணித்
துன்ஞானத் தோர்சம யத்துரி [13]சுள்ளோர்
பின்ஞானத் தோரொன்றும் பேசகில் லாரே. உ

1670 சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கும்
அவமான சாதனம் [14]ஆகாது [15]தேரில்

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

† ஒரு பிரதியில் இப்பகுதியும் அடுத்த பகுதியும் பின் முன்னாக வந்துள்ளன.

பா - ம்—[1]றிரண்டும்; றிரண்டினில். [2]பூசமகிழ்விரே. [3]மகிழ்வீரே லாமாகில். [4]சிவநெறி. [5]சேரவே. [6]ணல்கத்தி. [7]காம். [8]நிரவிய நின்மலந்தான் பெற்ற நீறுதார். [9]அருள பெற்ற. [10]ஞானமுளோர் வேடம்; ஞானமுளவோர் வேடம். [11]உண்டெனில். [12]வேண்டு மோரந்தன்பால். [13]யத்துள்ளோர். [14]ஆகாததாகி. [15]காதில்.

அவமா மவர்க்கது சாதன நான்கும்
உவமான மில்பொருள் [1]உள்ளுற லாமே. ௩

1671 கத்தித் திரிவர் [2]கழுவடி [3]நாய்போற்
கொத்தித் திரிவர் [4]குரக்களி ஞானிகள்
ஒத்துப் [5]பொறியும் உடலும் இருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானி [6]யோர்களே. ௪

1672 அடியா ரவரே [7]யடியா ரலாதார்
அடியாரு [8]மாகாரவ் வேடமு [9]மாகார்
அடியார் சிவஞான மானது [10]பெற்றோர்
அடியா [11]ரலாதார் [12]அடியார்கள் அன்றே. ௫

1673 ஞானிக்குச் சுந்தர வேடமும் நல்லவாந்
தானுற்ற வேடமுந் தற்சிவ யோகமே
[13]ஆனவவ் வேடம் அருண்ஞான சாதனம்
ஆனது மாமொன்றும் ஆகா தவனுக்கே. ௬

1674 ஞானத்தி னுற்பத நண்ணுஞ் சிவஞானி
தானத்தில் [14]வைத்த தனியால யத்தனும்
[15]மோனத்த னுதலின் [16]முத்தனுஞ் [17]சித்தனும்
ஏனைத் தவசி இவனென லாகுமே. ௭

1675 தானன்றித் தன்மையுந் தானவ னுதலும்
ஏனைய வச்சிவ மான இயற்கையுந்
தானுறு [18]சாதக முத்திரை சாத்தனு
[19]மோனமும் நந்தி பதமுத்தி [20]பெற்றதே. ௮

பா - ம்—[1]உள்குற. [2]கழுகடி. [3]நாய்போலக். [4]குசக்கறி; குரகறி. [5]புலனும். [6]யார்களே. [7]யடியரல்லாதார். [8]மாகாது; மாகார். [9]மாகா. [10]பெற்ருர். [11] ரல்லாதார். [12]அடியாரும். [13]ஞானவவ். [14]வைத்தல. [15]மோனத்தி. [16]முத்தனை. [17]சித்தன். [18]சாதகர்; சத்தா. [19]மோனமும். [20]பெறலே.

கஉ. சிவவேடம்

1676 [1]அருளால் அரனுக் கடிமைய தாகிப்
[2]பொருளாந் [3]தனதுடற் பொற்பதி நாடி
இருளான [4]தின்றி யிருஞ்செயல் அற்றோர்
தெருளாம் [5]அடிமைச் சிவவேடத் தாரே. க

1677 உடலில் [6]துவக்கிய வேடம் உயிர்க்காகா
உடல்கழன் றால்வேடம் உடனே கழலும்
உடலுயிர் [7]உண்மையென் றோர்ந்துகொள் ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டையொத் தாரே. உ

1678 மயலற் றிருளற்று மாமன மற்றுக்
[8]கயலுற்ற [9]கண்ணியர் [10]கையிணக் கற்றுத்
[11]தயலற் றவரோடுந் தாமே தாமாகிச்
செயலற் [12]றிருப்பார் சிவவேடத் தாரே. ங

1679 ஓடுங் குதிரைக் குசைதிண்ணம் பற்றுமின்
வேடங்கொண் டென்செய்வீர் வேண்டா மனிதரே
நாடுமின் நந்தியை நம்பெரு மான்தன்னைத்
[13]தேடும்இன் பப்பொருள் சென்றெய்த லாமே. ச

கங. அபக்குவன்

1680 குருட்டினை [14]நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை [15]நீக்காக் குருவினைக் [16]கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே. க

1681 மனத்தில் எழுந்ததோர் மாயக்கண் ணாடி
[17]நினைப்பின் அதனின் நிழலையுங் காணார்

பா - ம்—[1]அருளா மானுக். [2]பொரு ளார்க் தன்னுடற் பொற் பதனடி. [3]தனதுடல். [4]தனறி. [5]அடிமை. [6]துலக்கிய. [7]பொருளென்; உள்ளமென்; உள்ளமையொன். [8]கயலற்ற. [9]கண்ணிதன். [10]கைப்பிணக். [11]தயவற். [12]றிருந்தார். [13]தேடுமினப் பொருள்; தேடுமின்பொருள். [14]நீங்குங். [15]நீங்காக். [16]கொள்வோர். [17]நினைக்கில்.

வினைப்பயன் போக விளக்கியுங் கொள்ளார்
[1]புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே. உ

1682 ஏயெனில் [2]என்னென [3]மாட்டார் பிரசைகள்
வாய்முலை பெய்ய [4]மதுரநின் [5]றூறிடுந்
தாய்முலை யாவ தறியார் தமருளோர்
[6]ஊணிலை செய்யும் உருவிலி தானே. ௩

1683 *வாயொன் று [7]சொல்லி மனமொன் று [8]சிந்தித்து
நீயொன் று செய்யல் உறுதி நெடுந்தகாய்
தீயென் றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்
பேயென் றிங் கென்னைப் பிறர்தெளி யாரே. ௪

1684 பஞ்சத் [9]துரோகத்திப் பாதகர் தம்மை
[10]யஞ்சச் சமயத்தோர் வேந்தன் அருந்தண்டம்
விஞ்சச் செய்திப் புவிவேறே விடாவிடிற்
பஞ்சத்து ளாய்புவி முற்றும்பா ழாகுமே. ௫

1685 தவத்திடை நின்றவர் தாமுண்ணுங் கன்மஞ்
[11]சிவத்திடை நின்றது தேவர் அறியார்
தவத்திடை நின்றறி யாதவர் எல்லாம்
பவத்திடை நின்றதோர் பாடது வாமே. ௬

1686 [12]கன்றலுங் [13]கருதலுங் [14]கருமஞ் [15]செய்தலும்
தின்றலுஞ் சுவைத்தலுந் தீமை செய்தலும்
[16]பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்
என்றிவை [17]இறைபால் [18]இயற்கை அல்லவே. ௭

1687 [19]விடிவ தறியார் வெளிகாண மாட்டார்
[20]விடியில் வெளியில் விழிக்கவு மாட்டார்

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]புனக்கடை ; புழக்கடைக்கிச் சித்துப். [2]ஏயென ; ஏனென ; எண்ண. [3]மாட்டா. [4]மாதர்நின். [5]றூட்டுங். [6]ஊணிலி. [7]சொல்ல. [8]சிந்திக்க. [9]துரோதப். [10]பஞ்சச். [11]சினத்திடை. [12]கன்றல். [13]கருத்துஞ். [14]கருமையஞ். [15]சேர்தலும். [16]பின்றவை யென்றலும் ; பின்றமை யென்றலும். [17]இறைவன்பால். [18]இசைகை. [19]வெடிவ. [20]வெடியில்.

[1]கடியதோ [2]ருண்ணிமை கட்டுமின் காண்மின்
விடியாமை காக்கும் விளக்கது [3]வாமே. அ

1688 வைத்த பசுபாச மாற்று நெறிவைகிப்
பெத்த மறமுத்த ஞகிப் [4]பிறழ்வுற்றுத்
தத்துவ முன்னித் தலைப்படா தவ்வாறு
பித்தான சீடனுக் [5]கீயப் பெருதானே. கூ

1689 மன்னும் [6]மலம்ஐந்தும் மாற்றும் வகையோரான்
துன்னிய காமாதி தோயுந தொழில்நீங்கான்
பின்னிய பொய்யன் பிறப்பிறப் பஞ்சாதான்
அன்னிய ஞவன் அசற்சீட ஞமே. க0

கச. பக்குவன்

1690 [7]தோழிலறி வாளர் [8]சுருதிகண் ஞகப்
பழுதறி யாத பரம குருவை
வழியறி வார்நல் வழியறி வாளர்
அழிவறி வார்மற்றை [9]யல்லா தவரே. க

1691 பதைத்தொழிந் தேன்பர மாவுனை நாடி
யதைத்தொழிந் [10]தேன்இனி [11]யாரொடுங் கூடேன்
சிதைத்தடி யேன்வினை சிந்தனை தீர
உதைத்துடை யாயுகந் தாண்டரு ளாயே. உ

1692 பதைக்கின்ற போதே பரமென்னும் வித்தை
விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்
சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி
இசைக்கின்ற அன்பருக் கீயலு மாமே. ந

1693 கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக
உள்ள [12]பொருளுடல் ஆவி யுடன்ஈக

பா - ம்—[1]கடியதொன்னிமை. [2]ருணிமை; ருள்ளிடை. [3]வாகுமே. [4]பிறவுற்று. [5]கேலப்; செய்தப். [6]வகையைந்தும். [7]தொழுதறி. [8]சுருதிக்கண். [9]யில்லா. [10]தேனணி; தேற்றினி; தென்னினி. [11]யாருடன். [12]வுடல்பொருள்.

850 வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்
[1]ஆதி மருந்தென் றறிவார் அகலிடஞ்
[2]சோதி மருந்திது சொல்லவொண் ணாதே. ௯

௨௧. சந்திர யோகம்

851 எய்து [3]மதிக்கலை சூக்கத்தி லேறியே
[4]எய்துவ தூலம் இருவகைப் பக்கத்துள்
எய்துங் கலைபோல ஏறி இறங்குமாந்
[5]துய்யது சூக்கத்துத் தூலத்த காயமே. ௧

852 ஆகின்ற சந்திரன் சூரியன் அங்கியுள்
ஆகின்ற ஈரெட்டொ டாறிரண் [6]டைந்துள்
ஏகின்ற வக்கலை யெல்லா மிடைவழி
ஆகின்ற யோகி [7]அறிந்த அறிவே. ௨

853 ஆறுற தாங்கலை ஆதித்தன் சந்திரன்
நாறு [8]நலங்கினார் ஞாலங் கவர்கொளப்
பேறுங் கலைமுற்றும் [9]பெருங்கால் ஈரெட்டு
மாறுக் [10]கதிர்கொள்ளு [11]மற்றங்கி கூடவே. ௩

854 பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை
பத்தினொ டாறும் உயர்கலை [12]பான்மதி
[13]ஒத்தநல் அங்கிய தெட்டெட் டுயர்கலை
அத்திறன் நின்றமை ஆய்ந்துகொள் [14]வீரே. ௪

855 எட்டெட் டனலின் கலையாகும் ஈராறுட்
சுட்டப் படுங்கதி [15]ரோனுக்குஞ் சூழ்கலை
கட்டப் படுமீ ரெட்டா மதிக்கலை
ஒட்டப் படாஇவை ஒன்றோடொன் [16]றுவே. ௫

பா - ம்—[1]நாரி. [2]சோர; சோரார். [3]மதிநிலை. [4]ஏய்துமலர் தூவ. [5]துய்யரு சூக்கத்துக் காலத்த தாமே. [6]டைந்தும். [7]அறிந்தன னவவே. [8]நலங்கிநால். [9]பெருங்காலில். [10]கதிகொள்ளு. [11]மாற்றங்கி. [12]யான்மதி. [13]ஒத்தன னங்கிய தொட்டிரண். [14]வானே. [15]ரொன் றுக்குஞ். [16]றுகவே.

எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று
தெள்ளி [1]யறியச் சிவபதந் தானே. ச

1694 சோதி விசாகந் [2]தொடர்ந்திரு தேள்நண்டு
ஓதிய நாளே உணர்வது தானென்று
நீதியுள் நீர்மை நினைந்தவர்க் கல்லது
[3]ஆதியும் ஏதும் அறியகி லானே. ரு

1695 [4]தொழிலார மாமணித் [5]தூய்தான சிந்தை
[6]எழிலால் இறைவன் இடங்கொண்ட [7]போதே
விழலார் [8]விறலாம் வினையது போகக்
கழலார் திருவடி கண்டரு ளாமே. சு

1696 சாத்திக [9]ஞய்ப்பர தத்துவந் தானுன்னி
[10]ஆத்திக பேத நெறிதோற்ற மாகியே
ஆர்த்த [11]பிறவியி [12]னஞ்சி யறநெறி
சாத்தவல் லானவன் சற்சீட னாமே. எ

1697 சத்தும் [13]அசத்துமெவ் வாறெனத் தானுன்னிச்
[14]சித்தை யுருக்கிச் சிவனருள் [15]கைகாட்டப்
பத்தியின் ஞானம் பெறப்பணிந் தானந்தச்
சத்தியில் [16]இச்சைத் தருவோன்சற் சீடனே. அ

1698 அடிவைத் [17]தருளுதி யாசானின் [18]றுன்னு
[19]அடிவைத்த மாமுடி [20]மாயப் பிறவி
அடிவைத்த காய அருட்சத்தி யாலே
அடிபெற்ற ஞானத்த [21]னுசற் றுளோனே. கூ

1699 சீராரு ஞானத்தின் இச்சை செலச்செல்ல
வாராத காதல் குருபரன் பாலாகச்

பா - ம்—[1]யறிகை. [2]துடர்ந்திருந் தேழ்நண்டு. [3]தாதியும். [4]தொழிலான. [5]தூயான. [6]தொழிலார்; எழிலார். [7]போத மழலார். [8]விறகாம். [9]ருய்ப்பல. [10]பாத்திசவேத. [11]பிறவிய லப்பஞ்சி. [12]லஞ்சி; லப்பஞ்சி; ன்ஞசி. [13]அசத்துமவ். [14]சித்த முருக்கி. [15]கைகாட்டிப். [16]இச்சை தருவோன்சற். [17]தருளீதி. [18]றென்னு; னறென்னுல். [19]வடிவைத்த. [20] மாயாப். [21]னஞ்சத்துளானே.

சாராத *சாதக நான்குந்தன் [1]பாலுற்றோன்
[2]ஆராயும் ஞானத்த னாமடி வைக்கவே. ௰

1700 உணர்த்து மதிபக்கு வர்க்கே யுணர்த்தி
[3]இணக்கிற் பராபரத் [4]தெல்லையுள் இட்டுக்
குணக்கொடு தெற்குத் தாபச்சி மங்கொண்
டுணர்த்துமி னாவுடை [5]யாள்தன்னை யுன்னியே. ௧௧

1701 இறையடி தாழ்ந்†தை வணக்கமும் எய்திக்
குறையது கூறிக் குணங்கொண்டு [6]போற்றச்
சிறையுடல் நீயறக் காட்டிச் சிவத்தோ
டறிவுக் [7]கறிவிப்போன் [8]சன்மார்க்கி யாமே. ௧௨

1702. ‡வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்
வாழ்க்கைப் புனல்வழி மாற்றிச்சித் தாந்தத்து
வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே
தாழ்க்குந் தலையினோன் சற்சீட னாமே. ௧௩

1703 ‡சற்குணம் வாய்மை தயாவிவே கந்தண்மை
சற்குரு பாதமே சாயைபோல் நீங்காமே
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தல்
அற்புத மேதோன்ற லாகுஞ்சற் சீடனே. ௧௪

ஆறாந்தந்திரம் முற்றிற்று.

---

* இரண்டு பிரதிகளில் ‘நான்காவன சாந்தி தாந்தி உபரதிதி தீக்ஷை’ என்னுங் குறிப்புக் காணப்படுகிறது.

† இரண்டு பிரதிகளில் ‘ஐவணக்கமாவன அட்டாங்கம் பஞ்சாங்கம் சிட்டாங்கம் விசிட்டாங்கம் சீராங்கம்’ என்னுங் குறிப்புக் காணப்படுகிறது.

‡ மூன்று பிரதிகளில் இச் செய்யுள் இல்லை.

பா - ம்—[1]பாலுற்றார். [2]ஆராத. [3]இணக்கில் பாரற்பரத்; யிணக்கில் லார்பரத். [4]தெல்லை யுன்னிட்டுக். [5]யான்றன்னை. [6]போற்றிச். [7]கறிவிப் போனை. [8]சன்மார்க்கிய மாமே.

ஏழாந் தந்திரம்

க. ஆறுதாரம்

1704 நாலும் இருமூன் றும் ஈரைந்தும் ஈராறுங்
[1]கோவிமேல் நின்ற குறிகள் பதினாறும்
மூலங்கண் [2]டாங்கே [3]முடிந்து முதல்இரண்டுங்
காலங்கண் டானடி காணலு மாமே. க

1705 ஈராறு நாதத்தில் ஈரெட்டாம் [4]அந்தத்தின்
[5]மேதாதி நாதாந்த மீதாம் பராசத்தி
[6]போதா லயத்த [7]விகாரந் தனிற்போத
[8]மேதாதி யாதார மீதான உண்மையே. உ

1706 மேலென் றுங் கீழென் றிரண்டறக் காணுங்கால்
தானென்றும் நானென் றுந் தன்மைகள் ஓராறும்
பாரெங்கு மாகிப் பரந்த பராபரங்
காரொன் று [9]கற்பக மாகிநின் றானே. ஙு

1707 ஆதார சோதனை யானாடி சுத்திகண்
[10]மேதாதி யீரெண் [11]கலாந்தத்து விண்ணொளி
போதா லயத்துப் புலன்கர [12]ணம்புந்தி
சாதா [13]ரணங்கெட்டான் றான்சக மார்க்கமே. ச

1708 மேதாதி யாலே [14]விடாதோ மெனத்தூண்டி
ஆதார சோதனை [15]அத்துவ சோதனை
தாதார மாகவே தானெழச் சாதித்தால்
[16]ஆதாரஞ் [17]செய்போக மாவது காயமே. ரு

1709 ஆறந்த முங்கூடி யாகும் உடம்பினிற்
கூறிய வாதார மற்றுங் குறிக்கொண்மின்

பா - ம்—[1]கோவின்மே. [2]டங்கே. [3]முடிந்த விரண்டுங். [4]மாதத்தின். [5]பேதாதி. [6]யோதாலயந்த; போதாலேயந்த. [7]விதாரங். [8]மேதாரி வாதார. [9]கற்பம தாகிநின். [10]வேதாதி. [11]கலந்தது. [12]ணப்புந்தி. [13]ரணங்கேட் டரன்சக; ரணங்கெட. [14]விடாதே. [15]அத்துவா. [16]வாதாரஞ். [17]செல்போக.

ஆறிய வக்கர [1]மைம்பதின் மேலே
ஊறிய வாதாரத் தோரெழுத் தாமே. ௬

1710 ஆகும் உடம்பும் [2]அழிகின்ற அவ்வுடல்
போகும் உடம்பும் பொருந்திய வாறுதான்
ஆகிய வக்கரம் ஐம்பது தத்துவம்
ஆகும் உடம்புக்கும் ஆறந்த மாமே. ௭

1711 ஆயு மலரின் [3]அணிமலர் மேலது
[4]வாய இதழும் பதினாறும் அங்குள
தூய அறிவு சிவானந்த மாகிப்போய்
மேய அறிவாய் விளைந்தது தானே. ௮

---

௨. அண்ட லிங்கம்

1712 இலிங்கம [5]தாவ தியாரும் அறியார்
இலிங்கம தாவ தெண்டிசை யெல்லாம்
இலிங்கம தாவ தெண்ணெண் கலையும்
இலிங்கம தாக [6]எடுத்த [7]துலகே. ௧

1713 உலகில் எடுத்தது சத்தி [8]முதலா
உலகில் எடுத்தது சத்தி வடிவாய்
உலகில் எடுத்தது சத்தி குணமாய்
[9]உலகம் எடுத்த [10]சதாசிவன் தானே. ௨

1714 போகமும் முத்தியும் புத்தியுஞ் சித்தியும்
ஆகமும் ஆறாறு தத்துவத் தப்பாலாம்
ஏகமும் நல்கி யிருக்குஞ் [11]சதாசிவம்
ஆகம [12]வத்துவா [13]வாறுஞ் சிவமே. ௩

பா - ம்—[1]மை யைம்பதின் ; மாமைந்தின். [2]அழிக்கின்ற அவ்வுடம்பும். [3]அனமலர் மேலதுவு. [4]மாய. [5]தாகுவ. [6]வேத்த வுலகே. [7]துலகமே. [8]முதலாய். [9]உலகில். [10]சதாசிவந். [11]சதாசிவற் காகம. [12]தத்திவா. [13]வாற்சிவ மாமே ; வுயிர்சிவ மாமே.

1715 ஏத்தினர் எண்ணிலி தேவரெம் ஈசனை
வாழ்த்தினர் [1]வாசப் [2]பசுந்தென்றல் வள்ளலென்
றார்த்தனர் அண்டங் கடந்தப் [3]புறநின்று
[4]காத்தனன் என்னுங் கருத்தறி யாரே. ச

1716 ஒண்சுடரோன் அயன் மால்பிர சாபதி
[5]ஒண்சுட ரான இரவியோ டிந்திரன்
கண்சுட ராகிக் கலந்தெங்குந் தேவர்கள்
தண்சுட ராயெங்கும் [6]தற்பர மாமே. ரு

1717 தாபரத் துண்ணின் றருளவல் லான்சிவன்
மாபரத் துண்மை வழிபடு வாரில்லை
மாபரத் துண்மை வழிபடு [7]வாளர்க்கும்
பூவகத் துள்நின்ற பொற்கொடி யாகுமே. சு

1718 தூய விமானமுந் தூலம தாகுமால்
ஆய சதாசிவ மாகுநற் சூக்குமம்
[8]ஆய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய [9]அரனிலை ஆய்ந்துகொள் [10]வார்கட்கே. எ

1719 முத்துடன் மாணிக்கம் மொய்த்த பவளமுங்
கொத்துமக் கொம்பு சிலைநீறு கோமளம்
அத்தன்றன் [11]ஞகம மன்ன மரிசியாம்
[12]உய்த்ததின் சாதனம் பூமண லிங்கமே. அ

1720 துன்றுந் தயிர்நெய் [13]பால்துய்ய மெழுகுடன்
கன்றிய [14]செம்பு [15]கனலிர தஞ்சலம்
வன்திறல் செங்கல்; வடிவுடை வில்லம்பொன்
[16]றென்றியங் கொன்றை [17]தெளிசிவ லிங்கமே. கூ

பா - ம்—[1]வாசம். [2]பசுந் தென்றலென். [3]புறநின்றுங். [4]காத்தன ரென்றுங். [5]எண்சுட. [6]தாபர. [7]வார்க்கொரு; வாளொரு. [8]பாய. [9]வர் வானிலை. [10]வார்க்கே. [11]ஞக; ஞமக. [12]உய்த்ததன்; முத்தன சதானம். [13]பால்துய். [14]செப்புக். [15]கனவிர. [16]றென்றியக். [17]தேமண.

1721 மறையவர் அர்ச்சனை [1]வண்படி கந்தான்
இறையவர் அர்ச்சனை யேயபொன் னாகுங்
குறைவிலா [2]வசியர்க்குக் கோமள மாகுந்
துறையுடைச் சூத்திரர் [3]தொல்வாண லிங்கமே. க௦

1722 அதுவுணர்ந் [4]தோனொரு தன்மையை நாடி
[5]எதுவுண ராவகை நின்றனன் ஈசன்
[6]புதுவுணர் வான புவனங்கள் எட்டும்
இதுவுணர்ந் [7]தென்னுடல் கோயில்கொண் டானே.

1723 அகலிட மாயறி யாமல் அடங்கும்
உகலிட மாய்நின்ற வூனத னுள்ளே
பகலிட [8]மாமுனம் பாவ வினைசன்
புகலிட மாய்நின்ற புண்ணியன் றானே. கஉ

1724 போது புனைகழல் பூமிய தாவது
மாது புனைமுடி வானக மாவது
நீதியுள் ஈசன் உடல்விசும் பாய்நிற்கும்
ஆதி யுறநின்ற [9]தப்பரி சாமே. கங

1725 [10]தரையுற்ற சத்தி தனிலிங்கம் [11]விண்ணாந்
[12]திரைபொரு நீரது [13]மஞ்சன சாலை
வரைதவழ் மஞ்சுநீர் வானுடு மாலை
கரையற்ற [14]நந்தி கலையுந்திக் [15]காமே. கச

ரு. பிண்ட லிங்கம்

1726 [16]மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
[16]மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
[16]மானுட ராக்கை வடிவு சதாசிவம்
[16]மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே. க

பா - ம்—[1]வன்படி. [2]வயிசியர்க்குக். [3]சொல்வாண. [4]தேனொரு. [5]அதுவுணர்ந் தவ்வகை. [6]அதுவுணர். [7]தென்னுளங். [8]மாய்நின்ற; முன்னம் பரவ விரிஞ்சன். [9]தற்பரி. [10]தலையற்ற சத்த. [11]விண்ணாய்த்; விண்ணகந். [12]திரைபெறு நீரது. [13]மஞ்சனஞ். [14]ந்திக்; நந்திதலை யுந்திக். [15]காயமே. [16]மானிட.

1727 [1]உலந்திலர் பின்னும் [2]உளரென நிற்பர்
நிலந்தரு நீர்தெளி [3]யூனவை செய்யப்
[4]புலந்தரு [5]பூதங்கள் ஐந்தும் ஒன்றாக
வலந்தரு தேவரை [6]வந்திசெய் யீரே. ௨

1728 கோயில்கொண் [7]டன்றே குடிகொண்ட ஐவரும்
வாயில்கொண் டாங்கே வழிநின் [8]றருளுவர்
[9]தாயில்கொண் டாற்போல் [10]தலைவனென் னுட்புக
வாயில்கொண் டீசனு [11]மாளவந் தானே. ௩

1729 கோயில்கொண் டானடி கொல்லைப் பெருமறை
வாயில்கொண் டானடி நாடிகள் பத்துள
பூசைகொண் [12]டான்புல னைந்தும் [13]பிறகிட்டு
வாயில்கொண் டானெங்கள் மாநந்தி தானே. ௪

௪. சதாசிவ லிங்கம்

1730 கூடிய பாதம் இரண்டும் படிமிசை
பாடிய கையிரண் [14]டெட்டுப் பரந்தெழுந்
தேடு முகம்ஐந்து [15]செங்கையின் மூவைந்து
நாடுஞ் சதாசிவ நல்லொளி முத்தே. ௧

1731 வேதா நெடுமால் உருத்திரன் மேலீசன்
மீதான ஐம்முகன் விந்துவும் நாதமும்
ஆதார சத்தியு [16]மந்தச் சிவனொடுஞ்
சாதா ரணமாஞ் சதாசிவந் தானே. ௨

1732 ஆகின்ற சத்தியின் உள்ளே [17]கலைநிலை
ஆகின்ற சத்தியின் உள்ளே கதிரெழ
ஆகின்ற சத்தியின் உள்ளே அமர்ந்தபின்
ஆகின்ற சத்தியுள் அத்திசை பத்தே. ௩

பா - ம்—[1]உலர்ந்திலர்; உலகதிலா னேனெனும் [2]உளரெனி. [3]புன்னவை. [4]புலந்தகு. [5]பூதங் கடந்தும். [6]வந்துசெய் வீரே; வந்திசை யீரே. [7]டாரொன்றே. [8]றருளுவீர். [9]தாயல்கொண். [10]தலைவரொன். [11]ம் வாழவந். [12]டானடிபு. [13]புறகிட்டு. [14]டெட்டும். [15]செங்கண்; செங்கயன். [16]மந்திச். [17]பல்கலை.

1733 அத்திசைக் குள்ளே [1]அமர்ந்தன ஆறங்கம்
அத்திசைக் குள்ளே [1]அமர்ந்தன நால்வேதம்
அத்திசைக் குள்ளே அமர்ந்த சரியையோ
டத்திசைக் குள்ளே [2]அமர்ந்த சமயமே. ச

1734 சமயத் தெழுந்த அவத்தையீ [3]ரைந்துள
சமயத் தெழுந்த இராசி [4]ஈராறுள
சமயத் தெழுந்த [5]சதிரீரா றெட்டுள
சமயத் தெழுந்த சதாசிவந் தானே. ரு

1735 நடுவு கிழக்குத் தெற்குத் தரமேற்கு
நடுவு படிகநற் குங்கும வன்னம்
[6]அடைவுள வஞ்சனஞ் செவ்வரத் தம்பால்
[7]அடியேற் கருளிய முகமிவை அஞ்சே. சு

1736 அஞ்சு [8]முகமுள ஐம்மூன் று [9]கண்ணுள
அஞ்சினொ [10]டஞ்சு கரதலந் தானுள
அஞ்சுடன் [11]அஞ்சா யுதமுள நம்பியென்
னெஞ்சு புகுந்து [12]நிறைந்துநின் றானே. எ

1737 சத்தி தராதல [13]மண்டஞ் சதாசிவஞ்
சத்தி [14]சிவமிக்க தாபர சங்கமஞ்
சத்தி யுருவம் அருவஞ் சதாசிவஞ்
சத்தி [15]சிவதத்துவ முப்பத் தாறே. அ

1738 தத்துவ மாவ தருவஞ் சராசரந்
தத்துவ மாவ துருவஞ் சுகோதயந்
தத்துவம் எல்லாஞ் சகலமு மாய்நிற்குந்
தத்துவ மாகுஞ் [16]சதாசிவன் தானே. கூ

1739 [17]கூறுமி னூறு சதாசிவன் எம்மிறை
[18]வேறோர் உரைசெய்து [19]மிகைப்பொரு ளாய்நிற்கு

பா - ம்—[1]அமர்ந்தவன். [2]அமைந்த. [3]ரைந்துட். [4]ஈராறுட். [5]சரீரமா ; சதிரீ ரெட்டே. [6]அடையுள. [7]அடியருக். [8]முகமுளன். [9]கண்ணுளன். [10]டைஞ்சு. [11]ஐஞ்சா. [12]நிறைந்தனன். [13]மண்டவஞ். [14]சிவமிகத். [15]சிவந்தத்துவ ; சிவன்தத்துவ. [16]சதாசிவந். [17]ஊறுமி. [18]வேறுரை செய்து. [19]மிகப்பொரு.

[1]மேறுரை செய்தொழில் வானவர் தம்மொடு
மாறுசெய் [2]வானெனன் மனம்புகுந் தானே. க0

1740 இருளார்ந்த கண்டமும் ஏந்து மழுவுஞ்
சுருளார்ந்த செஞ்சடைச் சோதிப் பிறையும்
அருளார்ந்த சிந்தையெம் ஆதிப் பிரானைத்
தெருளார்ந்தென் உள்ளே தெளிந்திருந் தேனே. கக

1741 சத்திதான் நிற்கின்ற [3]ஐம்முகஞ் சாற்றிடில்
[4]உத்தமம் வாம [5]முரையத் திருந்திடுந்
தத்துவம் [6]பூருவர் தற்புரு [7]டன்சிர
[8]மத்தகு கோர மகுடத்தீ சானனே. கஉ

1742 [9]நாணுநல் லீசான நடுவுச்சி தானாகுந்
தாணுவின் [10]றன்முகந் தற்புருட மாகுங்
காணும் அகோரம் இருதயங் குய்யமா
[11]மாணுற வாமமாஞ் சத்திநற் பாதமே. கங

1743 நெஞ்சு சிரஞ்சிகை [12]நீள்கவ சங்கண்ணும்
வஞ்சமில் விந்து வளர்நிறம் பச்சையாஞ்
[13]செஞ்சுறு செஞ்சுடர் [14]சேகரி மின்னாகுஞ்
செஞ்சுடர் போலுந் தெசாயுதந் தானே. கச

1744 எண்ணில் இதயம் இறைஞான சத்தியாம்
விண்ணிற் [15]பரைசிர மிக்க சிகையாதி
வண்ணக் [16]கவசம் வனப்புடை இச்சையாம்
பண்ணுங் [17]கிரியை பரநேத் திரத்திலே. கரு

1745 சத்திநாற் கோணஞ் [18]சலமுற்று நின்றிடுஞ்
சத்தி அறுகோணஞ் [19]சயனத்தை யுற்றிடுஞ்
[20]சத்திநல் வட்டஞ் சலமுற் றிருந்திடுஞ்
சத்தி யுருவாஞ் [21]சதாசிவன் தானே. கசு

பா - ம்—[1]மேறுகை. [2]வானெனம். [3]ஐவன்முகஞ். [4]உத்தாம். [5]முறையற் றிருந்திடுர். [6]புரவி. [7]டஞ்சிவ ; டன்சீர். [8]மத்தவ. [9]நாணு நல். [10]றன்முகத். [11]வானுறு; வாணுறு ; வாணுற. [12]நீள்வன. [13]செஞ் சிறு. [14]கேசரி. [15]பரசிர ; பிரசிர. [16]கவச. [17]கிரிகை. [18]சகமுற்று. [19]சையத்தை. [20]சத்திநால். [21]சதாசிவர்.

1746 மானந்தி எத்தனை காலம் அழைக்கினுந்
தானந்தி யஞ்சின் தனிச்சுட ராய்நிற்குங்
கானந்தி [1]யுந்தி கடந்து கமலத்தின்
மேனந்தி ஒன்பதின் மேவிநின் றானே. ௧௭

1747 ஒன்றிய வாறும் உடலி னுடன்கிடந்
தென்றுமெம் மீச னடக்கும் [2]இயல்பது
[3]தென்றலைக் கேறத் திருந்து சிவனடி
நின்று [4]தொழுதேனென் னெஞ்சத்தி னுள்ளே. ௧௮

1748 உணர்ந்தேன் [5]உலகினில் ஒண்பொரு ளானைக்
கொணர்ந்தேன் குவலயங் [6]கோயிலென் நெஞ்சம்
புணர்ந்தேன் புனிதனும் [7]பொய்யல்ல மெய்யே
பணிந்தேன் [8]பகலவன் பாட்டு [9]மொழியே. ௧௯

1749 ஆங்கவை மூன்றினும் ஆரழல் வீசிடத்
தாங்கிடும் [10]ஈரேழு [11]தானடு வானதில்
ஓங்கிய ஆதியும் அந்தமு [12]மாமென
ஈங்கிவை தம்முடல் இந்துவு மாமே. ௨௦

1750 தன்மேனி [13]தற்சிவ லிங்கமாய் நின்றிடுந்
தன்மேனி [14]தானுஞ் சதாசிவ மாய்நிற்குந்
தன்மேனி தற்சிவன் தற்சிவா னந்தமாந்
தன்மேனி தானாகுந் [15]தற்பரந் தானே. ௨௧

1751 ஆரும் அறியார் அகார [16]மவனென்று
பாரு முகாரம் [17]பரந்திட்ட நாயகி
தாரம் [18]இரண்டுந் தரணி முழுதுமாய்
மாறி யெழுந்திடும் ஓசைய தாமே. ௨௨

1752 [19]இலிங்கநற் பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்கநற் கண்ட நிறையு மகாரம்

பா - ம்—[1]யுந்திக் கடத்து. [2]இயல்வது. [3]தென்றலைத் தேறத் திருந்துஞ். [4]தொழுதனென். [5]உலகில். [6]கோயிலே. [7]பொய்யலன். [8]பகவன்றன். [9]மொழியுமே. [10]ஈரெழுத் ; ஈரெழுந். [11]தானது. [12]மாமெனில் ; மாமெனல். [13]தான்சிவ ; ற்றற்சிவ. [14]ற்றானுஞ். [15]தற்பரன். [16]மதாவது. [17]பகுந்திட்ட நாடிலந். [18]இரண்டு. [19]இலிங்கப்பா

856 எட்டெட்டும் ஈராறும் [1]ஈரெட்டுந் தீக்கதிர்
[2]சுட்டிட்ட சோமனில் தோன்றுங் [3]கலையெனக்
[4]கட்டப் படுந்தார கைகதிர் நாலுள
கட்டிட்ட தொண்ணூற்றெ [5]டாறுங் கலாதியே. ௬

857 எல்லாக் கலையும் இடையிங் கலைநடுச்
சொல்லா நடுநாடி யூடே தொடர்மூலஞ்
செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்
நல்லோர் திருவடி நண்ணிநிற் [6]போரே. ௭

858 அங்கியிற் சின்னக் கதிரிரண் டாட்டத்துத்
தங்கிய தாரகை யாகுஞ் சசிபானு
[7]வங்கிய தாரகை [8]யாகும் பரையொளி
தங்கு [9]நவசக்ர மாகுந் தரணிக்கே. ௮

859 தரணி சலங்கனல் கால்தக்க வானம்
அரணிய பானு அருந்திங்கள் [10]அங்கி
முரணிய தாரகை முன்னிய ஒன்பான்
பிரணவ மாகும் பெருநெறி தானே. ௯

860 தாரகை மின்னுஞ் சசிதேயும் பக்கத்துத்
தாரகை மின்னு சசிவளர் பக்கத்துத்
தாரகை [11]பூவிற் [12]சகலத்தி யோனிகள்
[13]தாரகைத் தாரகை [14]தானுஞ் சொரூபமே. ௧௦

861 முற்பதி னைஞ்சின் [15]முளைத்துப் [16]பெருத்திடும்
பிற்பதி னைஞ்சிற் பெருத்துச் சிறுத்திடும்
அப்பதி [17]னைஞ்சும் அறியவல் லார்கட்குச்
செப்பரி யான்கழல் [18]சேர்தலு மாமே. ௧௧

862 அங்கி எழுப்பி யருங்கதிர் ஊட்டத்துத்
தங்குஞ் சசியால் [19]தாமம்ஐந் தைந்தாகிப்

பா - ம்—[1]ஈரெட்டுத். [2]கட்டிட்ட. [3]கலையென்ப. [4]சட்டப். [5]டாறு. [6]பாரே. [7]வங்கியத். [8]யாவும். [9]நயக்கர. [10]அங்க. [11]பூவிச்; பூனவிச். [12]சகலத்த யோனிக்குங். [13]தாரகை கடாரங். [14]தானுச். [15]முளைத்துப். [16]பருத்திடும். [17]னைஞ்சை. [18]சேரலு மாகுமே. [19]தாமைந்து மைந்தாகிப்; தாமமைந்து மைந்தங்கிப்.

[1]இலிங்கத்துள் வட்ட [2]நிறையும் உகாரம்
இலிங்க [3]மகார நிறைவிந்து நாதமே. உரு

ரு. ஆத்ம லிங்கம்

1753 அகார முதலா யனைத்துமாய் நிற்கும்
உகார முதலா [4]யுயிர்ப்பெய்து நிற்கும்
அகார வுகாரம் இரண்டு மறியில்
அகார வுகாரம் இலிங்கம தாமே. க

1754 ஆதார [5]மாதேய மாகின்ற விந்துவு
மேதாதி நாதமு மீதே விரிந்தன
ஆதார விந்து அதிபீட நாதமே
போதாவி [6]லிங்கப் புணர்ச்சிய தாமே. உ

1755 சத்தி சிவமாம் இலிங்கமே தாபரஞ்
சத்தி சிவமாம் இலிங்கமே சங்கமஞ்
சத்தி சிவமாம் இலிங்கஞ் சதாசிவஞ்
சத்தி [7]சிவமாகுந் [8]தாபரந் தானே. ங

1756 [9]தானே யெழுகின்ற சோதியைக் காணலாம்
[10]வானே ரெழுகின்ற ஐம்ப [11]தமர்ந்திடம்
[12]பூநே ரெழுகின்ற பொற்கொடி தன்னுடன்
தானே [13]ரெழுகின்ற வகாரம தாமே. ச

1757 விந்துவும் நாதமும் [14]மேவு மிலிங்கமாம்
[15]விந்துவ தேபீட நாதமி [16]லிங்கமாம்
அந்த [17]இரண்டையும் ஆதார [18]தெய்வமாய்
வந்த [19]கருவைந்துஞ் செய்யு மவையைந்தே. ரு

பா - ம்—[1]இலிங்கத்து. [2]மிறையும்; முறையும். [3]வகார. [4]வுயிர்ப்பெய்து [5]மாகிய தெய்வமாம்; மாதெய்வ. [6]லிங்கம். [7]சிவமாக். [8]தற்பரக். [9]கானே. [10]பானே; மானே. [11]தமைக்திடம்; தம்வர்திடிற்; தமர்க்திடப். [12]பூனே. [13]யெழுகின்ற; ரெழுந்த. [14]மேதகு. [15]விந்துப. [16]லிங்கம். [17]மிரண்டையும். [18]தெய்வமாம். [19]கருவைந்துறு.

1758 சத்திநற் பீடந் தகுநலல [1]ஆன்மா
சத்திநற் கண்டந் தகுவித்தை தானுகுஞ்
சத்திநல் லிங்கந் தகுஞ்சிவ தத்துவஞ்
சத்திநல் லான்மாச் சதாசிவந் தானே. சு

1759 மனம்புகுந் தென்னுயிர் மன்னிய வாழ்க்கை
மனம்புகுந் தின்பம் பொழிகின்ற போது
நலம்புகுந் தென்னொடு நாதனை [2]நாடும்
[3]இலம்புகுந் [4]தாதியு [5]மேற்கொண்ட வாறே. எ

1760 பராபரன் எந்தை பனிமதி சூடி
தராபரன் தன்னடி [6]யார்மனக் [7]கோயிற்
சிராபரன் தேவர்கள் சென்னியின் மன்னு
[8]மராமரன் மன்னி மனத்துறைந் தானே. அ

1761 பிரானல்ல நாமெனிற் பேதை யுலகங்
[9]குராலென்னு மென்மனங் [10]கோயில்கொள் [11]ஈசன்
அராநின்ற செஞ்சடை அங்கியும் நீரும்
பொராநின் [12]றவர்செய்யப் [13]புண்ணியன் தானே. கூ

1762 அன்றுநின் றுன்கிடந் தானவன் [14]என்று
சென்றுநின் றெண்டிசை ஏத்துவர் தேவர்கள்
என்றுநின் [15]றேத்துவன் எம்பெரு மான்தன்னை
ஒன்றியென் உள்ளத்தின் உள்ளிருந் தானே. கo

கூ. ஞான லிங்கம்

1763 உருவும் அருவும் [16]உருவோ டருவும்
[17]மருவு பரசிவன் மன்பல் [18]லுயிர்க்குங்
குருவு மெனநிற்குங் கொள்கைய னுகுந்
தருமென நல்குஞ் [19]சதாசிவன் தானே. க

பா - ம்—[1]ஆற்மாச்; ஆற்றுமாச். [2]நாமே. [3]நிலம்புகுந்; விலம்புகுந். [4]தாதி. [5]மேல்கொண்ட. [6]யார்மனங்; யாமனங். [7]கோயில். [8]பராமரன்; மராபரன். [9]குராலென்று. [10]கோயில்கொண் டீசன். [11]ஈசர். [12]றவாசெய்யப். [13]புண்ணியந். [14]என்றும். [15]றேத்துவர். [16]அருவோ டுருவும். [17]மருவும். [18]லுயிர்க்குக். [19]சதாசிவந்.

1764 நாலான கீழ துருவ நடுகிற்க
மேலான நான்கு [1]மருவு மிகநாப்பண்
[2]நாலான [3]ஒன்று [4]மருவுரு [5]நண்ணலாற்
பாலா மிவையாம் பரசிவன் தானே. ௨

1765 தேவர் பிரானைத் திசைமுக [6]நாதனை
நால்வர் பிரானை நடுவுற்ற நந்தியை
ஏவர் பிரானென் [7]றிறைஞ்சுவா ரவ்வழி
யாவர் பிரானடி அண்ணலு மாமே. ௩

1766 வேண்டிநின் றேதொழு தேன்வினை [8]போயற
ஆண்டொரு திங்களும் நாளும் அளக்கின்ற
காண்டகை யாளொடுங் கன்னி யுணரினும்
மூண்டகை மாறினும் ஒன்றது வாமே. ௪

1767 ஆதி [9]பரந்தெய்வம் [10]அண்டத்து நற்றெய்வஞ்
சோதி யடியார் தொடரும் பெருந்தெய்வம்
நீதியுள் [11]மாதெய்வ நின்மலன் எம்மிறை
பாதியுள் மன்னும் பராசத்தி யாமே. ௫

1768 சத்திக்கு [12]மேலே [13]பராசத்தி தன்னுள்ளே
[14]சுத்த சிவபதந் தோயாத [15]தூவொளி
அத்தன் திருவடிக் கப்பாலைக் [16]கப்பாலாம்
[17]ஒத்தவு மாமீசன் தானுன [18]வுண்மையே. ௬

1769 கொழுந்தினைக் காணிற் குவலயந் தோன்றும்
[19]எழுந்திடங் காணில் இருக்கலு மாகும்
[20]பரந்திடங் காணிற் [21]பார்ப்பதி மேலே
திரண்டெழக் [22]கண்டவன் சிந்தையு [23]ளானே. ௭

பா - ம்—[1]மருவமிகு நாப்பண். [2]நூலான. [3]தொன்று. [4]மருவரு. [5]வாதலாற். [6]மாதனை. [7]றிறைஞ்சுவ. [8]வேரற. [9]பரதெய்வம். [10]அண்டத்தே. [11]மாத்தெய்வ. [12]மேல். [13]பராசத் தென்னுளே. [14]சுத்தச். [15]தூயொளி ; தூய்வொளி. [16]கப்பாலாய். [17]ஒத்தவு மாவீசர். [18]துண்மையே. [19]எழுந்தடங் ; எழுங்கடங். [20]பரந்தடங். [21]பார்பதி ; பரபதி. [22]கண்டவர். [23]ளாளே.

1770 [1]எந்தை பரமனும் என்னம்மை கூட்டமும்
முந்த வுரைத்து [2]முறைசொல்வின் ஞானமாஞ்
சந்தித் திருந்த விடம்பெருங் கண்ணியை
உந்தியின் மேல்வைத் துகந்திருந் தானே. அ

1771 சத்தி சிவன்விளை [3]யாட்டாம் [4]உயிராகி
ஒத்த இருமாயா கூட்டத் திடையூட்டிச்
[5]சுத்தம தாகுந் துரியம் [6]பிறிவித்துச்
[7]சித்தம் புகுந்து [8]சிவமக மாக்குமே. கூ

1772 சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி
சத்தி சிவமுமாஞ் [9]சிவன்சத் [10]தியுமாகுஞ்
சத்தி சிவமன்றித் தாபரம் வேறில்லை
சத்திதான் என்றுஞ் சமைந்துரு வாகுமே. கO

எ. சிவ லிங்கம்

1773 குரைக்கின்ற [11]வாரிக் குவலய நீரும்
பரக்கின்ற [12]காற்றுப் பயில்கின்ற தீயும்
[13]நிரைக்கின்ற வாறிவை [14]நீண்டகன் றானை
வரைத்து [15]வலஞ்செயு மாறறி யேனே. க

1774 *வரைத்து வலஞ்செய்யு [16]மாறிங்கொன் றுண்டு
நிரைத்து வருகங்கை நீர்மல ரேந்தி
உரைத்தவன் நாமம் உணரவல் லார்க்குப்
புரைத்தெங்கும் போகான் புரிசடை யோனே. உ

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் 1776-ஐ அடுத்துக் காணப்படுகிறது.

பா - ம்—[1]எந்தம் பரனும். [2]முறைசொல்லி ; முறைசொல்லில். [3]யாட்டாகும். [4]உயிராகில் ; உயிராக்கி. [5]சத்தம. [6]பிறவித்துச். [7]சித்த மகிழ்ந்து. [8]சிவமய மாகுமே ; சிவமென தாகுமே. [9]சதசி சிவமாகும். [10]திதானுகுஞ் ; தியாகுஞ். [11]வாரிற் ; வாறே. [12]காற்றும். [13]நிறைக்கின்ற வாயவை. [14]நின்றகன். [15]வலஞ்செய்யு. [16]மாறு மிங்கொன்.

1775 ஒன்றெனக் [1]கண்டேயெம் ஈசன் [2]ஒருவனை
நன்றென் றடியிணை நானவ னைத்தொழ
வென்றைம் புலனு மிகக்கிடந் தின்புற
அன்றென் றருள்செய்யும் ஆதிப் பிரானே. ௩

1776 [3]மலர்ந்த வயன்மால் [4]உருத்திரன் மகேசன்
[5]பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தருஞ் சத்தி சிவன்வடி வாகிப்
[6]பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே. ௪

1777 மேவி யெழுகின்ற செஞ்சுட ரூடுசென்
றாவி [7]எழுமள வன்றே உடலுற
மேவப் படுவதும் விட்டு நிகழ்வதும்
பாவித் தடக்கிற் பரகதி தானே. ௫

௮. சம்பிரதாயம்

1778 உடல்பொருள் ஆவி [8]உதகத்தாற் கொண்டு
[9]படர்வினை பற்றறப் பார்த்துக்கை வைத்து
[10]நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே. ௧

1779 [11]உயிருஞ் சரீரமும் ஒண்பொரு ளான
வியவார் பரமும்பின் [12]மேவும் பிராணன்
செயலார் [13]சிவமுஞ் சிற்சத்தி யாதிக்கே
உயலார் குருபரன் உய்யக்கொண் டானே. ௨

1780 பச்சிம திக்கிலே [14]வைத்தஆ சாரியன்
நிச்சலும் என்னை நினையென்ற வப்பொருள்
[15]உச்சிக்கும் கீழது வுண்ணாக்கு மேலது
வைச்ச பதமிது வாய்திற வாதே. ௩

பா - ம்—[1]கண்டேனெம். [2]ஒருவன். [3]மலர்ந்தயன் மாலும். [4]உருத்திர னீசன். [5]பலந்தெழும். [6]பாந்தரு. [7]எழுமன்றே. [8]உலகத்தார். [9]படர்வினைப். [10]நொடியில். [11]உயிராஞ். [12]மேவு. [13]சிவமுரு. [14]வைச்சவா. [15]உச்சிக்குக்.

1781 [1]பெட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை
[2]யொட்டடித் [3]துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்
றட்டொடாக்க [4]மாறினன் தன்னையும் என்னையும்
வட்டம [5]தொத்தது வாணிபம் வாய்த்ததே. ௪

1782 [6]தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவன்
இருக்கின்ற தன்மையை [7]யேதும் உணரார்
[8]பிரிக்கின்ற [9]விந்து பிணக்கறுத் தெல்லாங்
கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண் [10]டேனே. ௫

1783 கூடும் உடல்பொருள் ஆவி குறிக்கொண்டு
நாடி [11]யடிவைத் [12]தருண்ஞான சத்தியால்
பாடல் உடலினிற் பற்றற நீக்கியே
கூடிய தானவ [13]னுங்குளிக் கொண்டே. ௬

1784 கொண்டா னடியேன் அடிமை [14]குறிக்கொள்ளக்
கொண்டான் உயிர்பொருள் காயக் குழாத்தினைக்
கொண்டான் [15]பலமுற்றுந் தந்தவன் கோடலாற்
கொண்டா [16]னெனவொன் றுங் [17]கூறகி லேனே. ௭

1785 [18]குறிக்கின்ற தேகமுந் தேகியுங் [19]கூடி
நெறிக்கும் பிராணன் நிலைபெற்ற சீவன்
பறிக்கின்ற காயத்தைப் [20]பற்றிய நேர்மை
[21]பிறக்க அறியாதார் பேயுடன் ஒப்பரே. ௮

1786 உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்றும்
உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
உணர்வுடை யார்கள் [22]உணர்ந்தவக் காலம்
உணர்வுடை யார்கள் உணர்ந்துகண் டாரே. ௯

பா - ம்.—[1]பிட்டடித்துப் ; விட்டடித்துப் ; பொட்டடித் தெங்கும். [2]பொட்டடித். [3]துள்ளமால் சொல்லாமல். [4]மாறித். [5]தொத்து. [6]திரிக்கின்ற. [7]யெய்தும். [8]விரிக்கின்ற. [9]விந்துப். [10]டானே. [11]யே வைத் ; யருள்வைத். [12]தவருண் ஞான. [13]னுகுங்குறிக் ; னுகக்குறிக். [14]குறிதனைக். [15]மலமுற்றுந் ; உடன்முற்றுந். [16]னெனவென் றுங். [17]கூடிநில் லானே. [18]குறிக்கொண்ட. [19]கூடில் ; கூறி. [20]பற்றியே. [21]பிறிக்க. [22]உய்ந்தவக்.

1787 காயப் [1]பரப்பில் அலைந்து [2]துரியத்துச்
[3]சால விரிந்து [4]குவிந்து சகலத்தில்
[5]ஆயவவ் வாறு றடைந்து [6]திரிந்தோற்குத்
தூய அருள்தந்த நந்திக்கென் சொல்வதே. ௧௦

1788 [7]நானென நீயென வேறில்லை நண்ணுதல்
ஊனென [8]ஆனுயிர் என்ன வுடனின்று
வானென [9]வானவர் நின்று மனிதர்கள்
தேனென இன்பந் திளைக்கின்ற வாறே. ௧௧

1789 அவனும் அவனும் அவனை யறியார்
அவனை யறியில் [10]அறிவானும் இல்லை
அவனும் அவனும் அவனை யறியில்
அவனும் அவனும் அவனிவ னாமே. ௧௨

1790 நானிது தானென [11]நின்றிவ னாடோறும்
ஊனிது தானுயிர் போலுணர் வானுளன்
வானிரு [12]மாமுகில் போற்பொழி வானுளன்
நானிது வம்பர நாதனு மாமே. ௧௩

1791 [13]பெருந்தன்மை தானென யானென வேறாய்
இருந்தது மில்லைய தீசன் அறியும்
பொருந்தும் உடலுயிர் [14]போலுமை மெய்யே
[15]திருந்தமுன் செய்கின்ற தேவர் பிரானே. ௧௪

௯. திருவருள் வைப்பு

1792 [16]இருபத மாவ திரவும் பகலும்
உருவது வாவ [17]துயிரும் உடலும்
அருளது வாவ தறமுந் தவமும்
பொருளது வுள்நின்ற போகம தாமே. ௧

பா - ம்—[1]பரத்தி லைந்து ; பரத்தி லலைந். [2]துரியற்றுச். [3]சாய. [4]விந்து கலத்தில். [5]ஆயவ வாறு ; ஆய வவ்வா. [6]திரிந்தோர்க்குத். [7]நானே. [8]வுன்னுயிர் ; யானுயிர். [9]வானீவராய். [10]அறிவாரும். [11]நின்றிடி ; நின்றில நாடொறும். [12]மாகில பொழி. [13]பெருந்தண்மை. [14]போலுண்மை. [15]திருந்துமுன். [16]பொருள் பேத மீச னிரவும். [17]துடலு முயிரும்.

1793 காண்டற் கரியன் கருத்திலன் நந்தியுந்
[1]தீண்டற்குஞ் சார்தற்குஞ் [2]சேயனுந் தோன்றிடும்
வேண்டிக் கிடந்து விளக்கொளி [3]யானெஞ்சம்
ஈண்டிக் கிடந்தங் கிருளறு மாமே. ௨

1794 குறிப்பினின் உள்ளே குவலயந் தோன்றும்
வெறுப்பிருள் [4]நீங்கில் விகிர்தனும் நிற்குஞ்
செறிப்புறு சிந்தையைச் [5]சிக்கென நாடில்
[6]அறிப்புறு காட்சி அமரரு மாமே. ௩

1795 தேர்ந்தறி யாமையின் [7]சென்றன காலங்கள்
பேர்ந்தறி வானெங்கள் பிஞ்ஞகன் எம்மிறை
ஆர்ந்தறி வாரறி வேதுணை யாமெனச்
சார்ந்தறி வான்பெருந் தன்மைவல் லானே. ௪

1796 தானே யறியும் வினைகள் [8]அழிந்தபின்
நானே [9]யறிகிலன் நந்தி [10]யறியுங்கொல்
ஊனே [11]யுருகி யுணர்வை யுணர்ந்தபின்
தேனே [12]யனையனந் தேவர் பிரானே. ௫

1797 நானறிந் தன்றே யிருக்கின்ற [13]ஈசனை
வானறிந் தாரறி யாது மயங்கினர்
ஊனறிந் துள்ளே யுயிர்க்கின்ற ஒண்சுடர்
தானறி யான்பின்னை யாரறி வாரே. ௬

1798 அருளெங்கு மான அளவை யறியார்
அருளை [14]நுகராமு [15]தானதுந் தேரார்
[16]அருளெங் கருமத் [17]ததிருக்க முன்னோர்
அருளெங்குங் கண்ணான தாரறி வாரே. ௭

பா - ம்—[1]தீண்டற்குச் சார்தற்குச். [2]செயனாதந். [3]யாய்நேசம்; யானெஞ்சம். [4]நீக்கில். [5]சேவெகன. [6]பறிப்புறு. [7]காலங்கள் போயின. [8]அறிந்தபின். [9]யறிதியென். [10]யறியுங்கோன். [11]யுருக்கி [12]யனைய னந்தி. [13]வீசனே. [14]நுகரா ரமுத முகந்தோர். [15]தானது. [16]அருளுங். [17]திற்றுக்கம.

1799 அறிவில் அணுக அறிவது நல்கிப்
பொறிவழி யாசை புகுத்திப் [1]புணர்ந்திட்
டறிவது வாக்கி [2]அடியருள் நல்குஞ்
செறிவொடு நின்றார் சிவமாயி னாரே. அ

1800 அருளிற் பிறந்திட் டருளில் வளர்ந்திட்
டருளில் [3]அழிந்திளைப் பாறி [4]மறைந்திட்
[5]டருளான ஆனந்தத் தாரமு [6]தூட்டி
[7]அருளால் என்நந்தி யகம்புகுந் தானே. கூ

1801 *அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி
அருளால் அடிபுனைந் [8]தார்வமுந் தந்திட்
டருளான ஆனந்தத் தாரமு தூட்டி
[9]அருளால் என்நந்தி யகம்புகுந் தானே. க0

1802 பாசத்தி விட்ட [10]தருளந்தப் பாசத்தின்
நேசத்தை [11]விட்ட [12]தருளந்த நேசத்திற்
[13]கூசற்ற முத்தி [14]யருளந்தக் கூட்டத்தின்
[15]நேசத்துத் தோன்றா நிலையரு ளாமே. கக

1803 பிறவா நெறிதந்த பேரரு ளாளன்
[16]மறவா [17]அருள்தந்த [18]மாதவன் நந்தி
அறவாழி அந்தணன் [19]ஆதிப் பராபரன்
உறவாகி வந்தென் உளம்புகுந் தானே. கஉ

1804 அகம்புகுந் தானடி யேற்கரு ளாலே
அகம்புகுந் [20]துந்தெரி யானரு [21]ளில்லோர்க்
ககம்புகுந் தானந்த மாக்கிச் [22]சிவமாய்
அகம்புகுந் தானந்தி [23]யானந்தி யாமே. கந

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]புணர்த்தியறியது. [2]லருளது; அடியது. [3]இழிந்திளைப் பாற்றி. [4]மறைந்து. [5]டருள்பொர ; இருள் என ஆயைத். [6]தூட்டிய. [7]அருளாலே நந்தி. [8]தாரமுந். [9]அருளாலே நந்தி. [10]தருள்தந்தப். [11]வட்ட. [12]தருள் தந்த. [13]கூசற்று. [14]யருள்தந்தக். [15]நேர்சற்றுந் ; நேசத்துந். [16]மருவா. [17]தருள்தந்த. [18]மாநந்தியார்க்கு ; மானன். [19]ஆதி. [20]தேதெரி ; தெரி. [21]ளில்லோற், [22]சிவாம். [23]வானந்தி.

1805 [1]ஆயும் அறிவோ டறியாத [2]மாமாயை
[3]ஆய [4]கரணம் படைக்கும்ஐம் பூதமு
[5]மாய பலவின் [6]திரிய மவற்றுடன்
ஆய [7]வருளைந்து மாமருட் செய்கையே. க௪

1806 அருளே [8]சகலமு மாய பவுதிகம்
அருளே சராசர மாய [9]வமலமே
இருளே வெளியே யெனுமெங்கும் ஈசன்
அருளே [10]சகளத்த [11]னன்றியின் றாமே. க௫

1807 சிவமொடு சத்தி [12]திகழ்நாதம் விந்து
[13]தவமான ஐம்முகன் ஈசன் அரனும்
[14]பவமுறு [15]மாலும் பதுமத்தோன் [16]ஈறு
நவமவை யாகி நடிப்பவன் தானே. க௬

1808 அருட்கண்ணி [17]லாதார்க் கரும்பொருள் தோன்றா
அருட்கண்ணு ளோர்க்கெதிர் தோன்றும் அரனே
[18]இருட்கண்ணி னோர்க்கங் கிரவியுந் தோன்றாத்
[19]தெருட்கண்ணி னோர்க்கெங்குஞ் சீரொளி யாமே. க௭

1809 தானே படைத்திடுந் தானே அளித்திடுந்
தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்
தானே யிவைசெய்து தான்முத்தி தந்திடுந்
தானே வியாபித் தலைவனு மாமே. க௮

1810 தலையான [20]நான்குந் தனதரு வாகும்
மலையா [21]வருவுரு வாகுஞ் சதாசிவம்
நிலையான கீழ்நான்கு நீடுரு [22]வாகுந்
துலையா இவைமுற்று மாயல்ல தொன்றே. க௯

பா - ம்—[1]ஆதியும். [2]மாயையும். [3]மாயாக். [4]காணப்படையுமைம். [5]மாயப். [6]தியமு. [7]வனைத்து மவனருட் ; வருடைந்து மாயருட். [8]சகளமு. [9]மலமே ; வகிலம். [10]சகளத்தவ னன்றியாமே. [11]வன்றியின். [12]திகழ்நாத விந்துத். [13]வவமாறுமை முகன். [14]பவமறு. [15]மால்பிரமத்தோன் ; மால்பதுமத்தோன். [16]இறுதி. [17]லாவந்தர்க்கான் தோன்றான். [18]இருட்கண்ணு ளோர்க்கிங். [19]தெருட்கண்ணுளோர்க் கெங்குஞ். [20]மேல் நான்குந் தான் குரு. [21]யருவுரு. [22]வாகுமுலையா.

பொங்கிய தாரகை [1]யாம்புலன் போக்கறத்
திங்கள் கதிரங்கி சேர்கின்ற யோகமே. கஉ

863 ஒன்றிய ஈரெண் கலையும் [2]உடலுற
நின்றது கண்டும் நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் [3]கருத்துழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே.* கங

864 அங்கி மதிகூட [4]வாகும் கதிரொளி
அங்கி கதிர்கூட [4]வாகு மதியொளி
அங்கி [5]சசிகதிர் கூடவத் தாரகை
தங்கி யதுவே சகலமு மாமே. கச

865 ஈராறு பெண்கலை எண்ணிரண் டாண்கலை
பேராமற் புக்குப் பிடித்துக் கொடுவந்து
நேராகத் தோன்றும் [6]நெருப்புற வேபெய்யில்
ஆராத ஆனந்தம் ஆனந்த மானதே. கரு

866 காணும் பரிதியின் காலை இடத்திட்டு
மாணும் மதியதன் காலை வலத்திட்டுப்
பேணியே யிவ்வாறு பிழையாமற் செய்வீரேல்
ஆணி [7]கலங்காதவ் வாயிரத் தாண்டே. கசு

867 பாவிக்கும் நெஞ்சம் [8]பறையோசை ஒன்பதில்
ஆவிக்கும் அங்கே அமரர் பராபரன்
மேலைக்கு முன்னே விளக்கொளி யாய்நிற்குங்
காலைக்குச் சங்கு கதிரவன் தானே. கஎ

868 கதிரவன் சந்திரன் காலம் அளக்கும்
பொதிரவ னுள்ளே பொழிமழை நிற்கும்
[9]அதிரவ னண்டப் புறஞ்சென் [10]றடர்ப்ப
[11]எதிரவ னீச னிடமது தானே. கஅ

---

*ஒரு பிரதியில் இதுவும் அடுத்த செய்யுளும் பின் முன்னாக வுள்ளன.

பா - ம்—[1]யாம்புனல் ; யாலைம்புலன். [2]உடனுற. [3]கழுக்குறி ; கருக்குழி. [4]லாகும். [5]சிவத்தினிற். [6]நெருப்பிற் புகப்பெய்யில். [7]கலங்காது. [8]பரையோசை. [9]கதிரவ. [10]றடிப்ப. [11]பெதிரவ ; பெதிர்புல.

1811 ஒன்றது வாலே உலப்பிலி தானாகி
நின்றது [1]தான்போல் உயிர்க்குயி [2]ராய்நிலை
துன்றி யவையல்ல வாகுந் துணையென்ன
நின்றது தான்விளை [3]யாட்டென்னுள் நேயமே. ௨௦

1812 நேயத்தே நின்றிடும் [4]நின்மலன் சத்தியோ
[5]டாயக் குடிலையுள் நாதம் அடைந்திட்டுப்
போயக் கலைபல [6]வாகப் புணர்ந்திட்டு
வீயத் தகாவிந்து [7]வாக விளையுமே. ௨௧

1813 விளையும் [8]பரவிந்து தானே வியாபி
விளையுந் தனிமாயை மிக்கமா மாயை
கிளையொன்று தேவர் கிளர்மனு வேதம்
அளவொன் [9]றிலாவண்ட [10]கோடிக ளாமே. ௨௨

௧௦. அருளொளி

1814 அருளிற் றலைநின் [11]றறிந்தழுந் தாதார்
அருளிற் றலைநில்லார் ஐம்பாச நீங்கார்
அருளிற் பெருமை யறியார் செறியார்
அருளிற் பிறந்திட் [12]டறிந்தறி வாரே. ௧

1815 வாரா வழிதந்த [13]மாநந்தி பேர்நந்தி
ஆரா அமுதளித் தானந்தி பேர்நந்தி
பேரா யிரமுடைப் பெம்மான்பே ரொன்றினில்
ஆரா அருட்கடல் ஆடுகென் றானே. ௨

1816 ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்
தேடியுங் கண்டேன் [14]சிவன்பெருந் தன்மையைக்
கூடிய வாறே குறியாக் [15]குறிதந்தென்
ஊடுநின் றானவன் தன்னரு ளாற்றே. ௩

பா - ம்—[1]தாம்போல். [2]ராம்நிலை ; ராநிலை. [3]யாட்டெனு. [4]நின்மல. [5]டாயகி குடிலையினாத மடைத்திட்டு. [6]வாகும் புணர்த்திட்டு. [7]வாகி விளைவாமே. [8]பாவிந்துத். [9]றிலாண்ட. [10]மாங்கொடியாளே. [11]றறிந்தழிந்தாரூர். [12]டிறந்தறி. [13]மானந்தி. [14]சிவபெருந். [15]குறித்தேன்.

1817 உற்ற பிறப்பும் உறுமல மானதும்
பற்றிய மாயாப் [1]படல மெனப்பண்ணி
[2]அத்தனை நீயென் றடிவைத்தான் பேர்நந்தி
[3]கற்றன விட்டேன் [4]கழல்பணிந் தேனே. ௪

1818 விளக்கினை யேற்றி வெளியை [5]அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் [6]விளக்கவர் தாமே. ௫

1819 ஒளியும் இருளும் [7]ஒருகாலுந் தீர
ஒளியு [8]ளோர்க்கன்றே [9]ஒழியா தொளியும்
ஒளியிருள் கண்ட [10]கண்போல [11]வேறாயுள்
ஒளியிருள் [12]நீங்க வுயிர்சிவ மாமே. ௬

1820 புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி
நிறமே புகுந்தென்னை நின்மல னாக்கி
அறமே புகுந்தெனக் காரமு தீந்த
[13]திறமேதென் றெண்ணித் திகைத்திருந் தேனே. ௭

1821 அருளது வென்ற அகலிடம் ஒன்றும்
பொருளது வென்ற புகலிடம் ஒன்றும்
மருளது நீங்க மனம்புகுந் தானைத்
[14]தெருளுறும் பின்னைச் சிவகதி யாமே. ௮

1822 [15]கூறுமின் னீர்முன் [16]பிறந்திங் [17]கிறந்தமை
வேறொரு தெய்வத்தின் [18]மெய்ப்பொருள் நீக்கிடும்
பாறணி யும்முடல் வீழவிட் டாருயிர்
தேறணி [19]வோமிது செப்பவல் லீரே. ௯

பா - ம்—[1]படன. [2]அற்றனை. [3]கற்றேன். [4]கழலணிந். [5]மறிமின் ; யறினே. [6]விளக்காவர். [7]ஒருக்காலுந் தீரா. [8]ளவோர்க்கன்றோ; ளவோர்க்கன்றே. [9]ஒளியா. [10]கண்போலே. [11]வேறாயுள்ளம். [12]நீங்கி. [13]திறமேய தெண்ணித். [14]தெருளறும். [15]கூறுமுன். [16]பிறந்தங். [17]கிறந்திடம். [18]மெய்பொருள் நீங்கிடும் ; மெய்ப்பொரு ணிற்கிடும். [19]யும்மிடஞ்.

கக. சிவபூசை

1823 உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் [1]காளா [2]மணிவிளக்கே. க

1824 வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்
[3]காட்டவும் நாமிலங் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன வுள்ளங் குளிர்விக்கும்
பாட்டவி [4]காட்டுதும் [5]பாலவி [6]யாமே. உ

1825 பான்மொழி பாகன் பராபரன் [7]தானாகு
மான சதாசிவன் தன்னையா வாகித்து
[8]மேன்முகம் ஈசான [9]மாகவே கைக்கொண்டு
[10]சீன்முகஞ் செய்யச் சிவனவ [11]னாகுமே. ௩

1826 [12]நினைவதும் வாய்மை மொழிவது மல்லாற்
கனைகழல் ஈசனைக் காண வரிதாங்
கனைகழல் ஈசனைக் காண்குற வல்லார்
புனைமலர் நீர்கொண்டு போற்றவல் லாரே. ௪

1827 மஞ்சன மாலை நிலாவிய வானவர்
நெஞ்சினுள் ஈசன் நிலைபெறு காரணம்
அஞ்சமு தாம்உப சாரம்எட் டெட்டொடும்
அஞ்சலி [13]யோடுங் கலந்தர்ச்சித் தார்களே. ௫

1828 புண்ணியஞ் செய்வார்க்குப் [14]பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே. ௬

பா - ம்—[1]காளை. [2]விளக்கே. [3]காட்டவி; காட்டவிருமலங். [4]காட்டும்; காட்டுறும். [5]பாலனுமாமே. [6]பரமே. [7]தானுகு. [8]மேனை முகம். [9]மாக்கியே. [10]சீனமுகஞ். [11]னமே. [12]நினைவது. [13]யோடுகந் தர்ச்சித். [14]பூவுள நீருள.

1829 அத்த [1]னவதீர்த்த மாடும் பரிசுகேள்
ஒத்தமெய்ஞ் ஞானத் [2]துயர்ந்தார் பதத்தைச்
சுத்தம [3]தாக விளக்கித் தெளிக்கவே
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே. ஏ

1830 [4]மறப்புற்று இவ்வழி மன்னிநின் றாலுஞ்
சிறப்பொடு [5]பூநீர் திருந்தமுன் ஏந்தி
[6]மறப்பின்றி யுன்னை [7]வழிபடும் [8]வண்ணம்
அறப்பெற வேண்டும் அமரர் பிரானே. அ

1831 ஆரா தனையும் அமரர் குழாங்களுந்
தீராக் கடலும் நிலத்தும தாய்நிற்கும்
பேரா யிரமும் பிரான்திரு [9]நாமமும்
[10]ஆரா வழியெங்கள் ஆதிப் பிரானே. கூ

1832 [11]ஆனைந்தும் ஆட்டி அமரர் [12]கணந்தொழத்
தானந்த மில்லாத் தலைவன் அருளது
தேனுந்து மாமலர் உள்ளே [13]தெளிந்ததோர்
பாரைங் குணமும் படைத்துநின் றானே. க0

1833 உழைக்கொண்ட பூநீர் ஒருங்குடன் ஏந்தி
மழைக்கொண்ட மாமுகில் [14]மேற்சென்று வானோர்
தழைக்கொண்ட பாசந் தயங்கிநின் [15]றேத்தப்
பிழைப்பின்றி எம்பெரு மானரு ளாமே. கக

1834 வெள்ளக் கடலுள் விரிசடை [16]நந்திக்கு
உள்ளக் [17]கடற்புக்கு [18]வார்சுமை பூக்கொண்டு
கள்ளக் [19]கடல்விட்டுக் கைதொழ மாட்டாதார்
[20]அள்ளக் கடலுள் அழுந்திநின் றாரே. கஉ

பா - ம்—[1]னதீதத்தனொடும். [2]துயர்ந்தவர் பாதத்தை. [3]தாகி. [4]மறப்புறுத்திவ்வழி மண்ணினின். [5]பூதர். [6]மறப்பன்னெறி. [7]வழிப்படும். [8]வண்ண மறப்பற. [9]நாமமே. [10]ஆராழி யெங்கள். [11]ஆனைஞ்சும். [12]குழாந்தொழத். [13]தெளிந்தோர். [14]மேற்சென்ற. [15]றேத்திப். [16]நந்திக்குள்ளக்கடற் புக்கோர் சுமை. [17]கடல்புக்கு. [18]ஓர் தம்மை; வார்சுமைப். [19]கடல்புக்குக். [20]அள்ளற்.

1835 கழிப்படுந் [1]தண்கடற் கௌவை யுடைத்து
வழிப்படு [2]வார்மலர் [3]மொட்டறி யார்கள்
[4]பழிப்படு வார்பல ரும்பழி வீழ
வெளிப்படு [5]வோருச்சி மேவிநின் றானே. க௩

1836 பயனறி [6]வொன்றுண்டு பன்மலர் தூவிப்
பயனறி [7]வார்க்கரன் தானே பயிலும்
நயனங்கள் மூன்றுடை யானடி சேர
வயனங்க ளாலென்றும் வந்துநின் றானே. க௪

1837 ஏத்துவர் மாமலர் தூவித் தொழுதுநின்
[8]றார்க்கெம தீசன் அருட்சே வடியென்றன்
மூர்த்தியை மூவா [9]முதலுரு வாய்நின்ற
தீர்த்தனை யாருந் [10]துதித்துண ராரே. க௫

1838 தேவர்க ளோடிசை வந்துமண் [11]ணோடுறும்
பூவொடு நீர்சுமந் தேத்திப் புனிதனை
மூவரிற் பன்மை முதல்வனாய் நின்றருள்
நீர்மையை [12]யாவர் நினைக்கவல் லாரே. க௬

1839 [13]உழைக்கவல் [14]லோர்நடு நீர்மல ரேந்திப்
பிழைப்பின்றி யீசன் பெருந்தவம் பேணி
இழைக்கொண்ட பாதத் [15]தினமலர் தூவி
மழைக்கொண்டல் போலவே [16]மன்னிநில் லீரே. க௭

1840 வென்று விரைந்து [17]விரைப்பணி யென்றனர்
நின்று பொருந்த [18]இறைபணி நேர்படத்
துன்று [19]சலமலர் தூவித் தொழுதிடிற்
[20]கொண்டிடு நித்தலுங் கூறிய [21]வன்றே. க௮

பா - ம்—[1]தண்கடல் தௌவை. [2]வோர்மலர். [3]மட்டறிவார்கள். [4]வழிப்படு. [5]வாருச்சி. [6]பொன்றுண்டு. [7]வார்க்கயன். [8]றார்த்ததெம்மீசன். [9]முத்துரு. [10]திகித்துண; திதீதுண. [11]ணோடாறு; ணொடாறும். [12]யாரவர். [13]உழைக்கு முன்னே நெடு. [14]லோர் நெடு. [15]திணைமலர். [16]மண்ணி. [17]விரைபணி யென்றான். [18]விறைப்பணி. [19]கலமலர்; சலமலர்த். [20]கொன்றிடு. [21]தன்றே.

1841 சாத்தியும் வைத்துஞ் சயம்புவென் றேத்தியும்
[1]ஏத்திய நாளு [2]மிறையை [3]யறிகிலார்
ஆத்தி [4]மலக்கிட் [5]டகத்திழுக் கற்றக்கால்
மாத்திக்கே செல்லும் வழியது வாமே. ௧௯

1842 ஆவிக் [6]கமலத்தின் [7]அப்புறத் தின்புற
மேவித் திரியும் விரிசடை [8]நந்தியைக்
கூவிக் [9]கருதிக் கொடுபோய்ச் சிவத்திடைத்
தாவிக்கு மந்திரந் தாமறி யாரே. ௨0

1843 *சாணாகத் துள்ளே அழுந்திய மாணிக்கங்
காணா மளவுங் கருத்தறி வாரில்லை
பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைவோர்க்கு
மாணிக்க மாலை மனம்புகுந் தானே. ௨௧

1844 †பெருந்தன்மை நந்தி [10]பிணங்கிருள் நேமி
இருந்தன்மை யாலுமென் னெஞ்சிடங் கொள்ள
வருந்தன்மை [11]யாளனை வானவர் தேவர்
தருந்தன்மை [11]யாளனைத் தாங்கினின் [12]றாரே. ௨௨

1845 ‡சமைய மலசுத்தி தன்செயல் அற்றிடும்
[13]அமையும் விசேடமு மானமந் திரசுத்தி
சமையநிர் வாணங் கலாசுத்தி யாகும்
[14]அமைமன்னு ஞான [15]மாணார்க் கபிடேகமே. ௨௩

1846 ஊழிதோ றூழி யுணர்ந்தவர்க் [16]கல்லது
ஊழில் உயிரை யுணரவுந் தாமொட்டா

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

† ஒரு பிரதியில் இச்செய்யுள் 1848-ஐ அடுத்துக் காணப்படுகிறது.

‡ ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை ; மற்றவிரண்டு பிரதிகளில் 1840-ஐ அடுத்தும் 1842-ஐ அடுத்தும் காணப்படுகிறது.

பா - ம்—[1]ஆத்தியை. [2]மறையை. [3]யறிகிலர். [4]மலர்கிட்டதற் கழுக். [5]டகத்திக்கழுக் ; டழுக்கற்றகாலை. [6]கமலத்தினைப்புறத். [7]புறத் திப்புற. [8]நந்திக்குக். [9]குதிக்கொடு போயச். [10]பிணக்கிருள். [11]யான் றனை. [12]றானே. [13]அமையம். [14]அமைமின்னு ; அமையென்னு. [15]மாணாரபிடேகமே ; மாணார்க்கடமக்கே. [16]கல்லதூழி.

ஆழி யமரும் அரியயன் என்றுளோர்
ஊழி கடந்துமோ ருச்சியு ள்ளானே. உச

௧௨. குருபூசை

1847 *ஆகின்ற நந்தி யடித்தா மரைபற்றிப்
போகின் றுபதேசம் பூசிக்கும் பூசையும்
ஆகின்ற ஆதார மாறு றதனின்மேற்
போகின்ற பொற்பையும் போற்றுவன் யானே. க

1848 †கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
[1]வானுற மாமல ரிட்டு வணங்கினும்
[2]ஊனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது
[3]தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே. உ

1849 ‡மேவிய ஞானத்தின் [4]மிக்கிடின் மெய்ப்பரன்
[5]ஆவயின் ஞான நெறிநிற்றல் அர்ச்சனை
[6]ஓவற வுட்பூ [7]சனைசெய்யில் உத்தமஞ்
சேவடி [8]சேரல் [9]செயலறல் தானே. ௩

1850 உச்சியுங் காலையும் மாலையும் ஈசனை
நச்சுமின் னச்சி [10]நமவென்று நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்
நச்சுமின் பேர்நந்தி நாயக [11]னுருமே. ச

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் 1844-ஐ அடுத்துக் காணப்படுகிறது.

† இச்செய்யுள் முன் 1452-ஆஞ் செய்யுளாக வந்தது. இரண்டு பிரதிகளில் இச்செய்யுள் இல்லை. ஒரு பிரதியில் 1846-ஐ அடுத்துக் காணப்படுகிறது.

‡ ஒரு பிரதியில் இச்செப்புள் 1847-ஐ அடுத்துக் காணப்படுகிறது.

பா - ம்—[1]வானுறு. [2]ஊனற நோக்கி. [3]வானவர்நாடு வழி திறவாதே. [4]மெய்கண்டன். [5]ஆவையின் ; ஆவயுண். [6]ஓவாயுட்பூ. [7]சனைசெய்திடிலுத்தமன். [8]கோலல். [9]செயலற்றல். [10]நமவென்னு. [11]னுமே.

1851 [1]புண்ணிய மண்டலம் பூசைநா ருகுமாம்
[2]பண்ணிய மேனியும் பத்துநா ருகுமாம்
எண்ணிலிக் [3]கைய மிடிற்கோடி யாகுமாற்
பண்ணிடில் ஞானியூண் பார்க்கில் விசேடமே. ரு

1852 இந்துவும் பானுவும் [4]இலங்குந் தலத்திடை
வந்தித்த தெல்லாம் [5]அசுரர்க்கு வாரியாம்
இந்துவும் பானுவும் [6]இலங்காத் தலத்திடை
[7]வந்தித்தல் நந்திக்கு [8]மாபூசை யாமே. சு

1853 இந்துவும் பானுவு மென்றெழு கின்றதோர்
விந்துவும் நாதமு [9]மாகிமீ தானத்தே
சிந்தனை சாக்கிரா தீதத்தே சென்றிட்டு
நந்தியைப் பூசிக்க நற்பூசை யாமே. எ

1854 மனபவ னங்களை மூலத்தான் மாற்றி
அனித வுடற்பூத மாக்கி யகற்றிப்
புனிதன் அருள்[10]தனிற் புக்கிருந் தின்பத்
[11]தனியுறு பூசை [12]சதாசிவற் காமே. அ

1855 பகலும் இரவும் பயில்கின்ற பூசை
[13]இயல்புடை யீசர்க் கிணைமல [14]ராகப்
பகலும் இரவும் பயிலாத பூசை
சகலமுந் தான்கொள்வன் தாழ்சடை யோனே. கூ

1856 [15]இராப்பகல் அற்ற இடத்தே யிருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகி
இராப்பக லற்ற இறையடி யின்பத்
திராப்பகல் மாயை [16]இரண்டிடத் தேனே. க0

பா - ம்—[1]புண்ணியர். [2]எண்ணிய. [3]கையிடிற். [4]இயங்குந். [5]அசுரர்க்கே. [6]இயங்காத். [7]வந்தித்த ; வந்திக்க. [8]அர்ச்சனை யாகுமே; வாசனை ; மாமலராமே. [9]மாதிமீ ; மாகியீசானத்தே. [10]உடலிற். [11]தினியுறு ; தனியூறு. [12]சதாசிவத்தாமே ; சதாசிவமாமே. [13]அயில்புடை. [14]ராகாப். [15]இராப்பகலாற்ற. [16]இரண்டடித்.

கரு. *மகேசுவர பூசை

1857 படமாடக் கோயில் [1]பகவற்கொன் [2]றீயில்
நடமாடக் கோயில் [3]நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் [4]றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே. க

1858 [5]தண்டறு சிந்தை தபோதனர் [6]தாமகிழ்ந்
துண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமுங் [7]கொண்டதென்
றெண்டிசை நந்தி எடுத்துரைத் தானே. உ

1859 மாத்திரை [8]யொன்றினின் மன்னி யமர்ந்துறை
[9]யாத்தனுக் கீந்த அரும்பொரு [10]ளானது
மூர்த்திகள் மூவர்க்கு மூவேழ் குரவர்க்குந்
தீர்த்தம [11]தாமது தேர்ந்துகொள் [12]வீரே. ந

1860 அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு [13]ஞானி பகலூண் [14]பலத்துக்கு
[15]நிகரில்லை என்பது நிச்சயந் தானே. ச

1861 [16]ஆறிடும் வேள்வி அருமறை நூலவர்
கூறிடும் அந்தணர் கோடிபே ருண்பதில்
நீறிடுந் தொண்டர் நினைவின் [17]பயனில்லை
பேறெனில் ஓர்பிடி பேறது வாகுமே. ரு

1862 ஏறுடை யாயிறை வாஎம்பி ரானென்று
நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்கள்

---

* இத்தலைப்புப் பிரதிகளில் மாயேசுரபூசை, மயேசுரபூசை எனப் பேதமாகக் காணப்படுகிறது.

பா - ம்—[1]பரமற்கொன். [2]றீய ; ரீவர் ; றீவீர். [3]நம்பர்க் கொன்றீயீர் ; நம்பர்க் கொன்றீவீர். [4]றீயந்தார். [5]தண்டுறு சிந்தைத். [6]தாமுவந். [7]கொண்ட தெண்டெண்டிசை. [8]தன்னில். [9]யார்த்தனுக். [10]ளானவை. [11]தாமிது. [12]ளீரே. [13]யோகி. [14]பகுர்திடின். [15]நிகரில்லை. [16]ஆறிடு. [17]பயனிலே.

ஆறணி செஞ்சடை யண்ண லிவரென்று
வேறணி வார்க்கு வினையில்லை தானே. ௬

1863 சீர்நந்தி கொண்டு திருமுக மாய்விட்ட
பேர்நந்தி யென்னும் பிறங்கு சடையனை
நாடுனுந் தொந்து வருமள வுஞ்சொல்லப்
பேர்நந்தி யென்னும் பிதற்றொழி யேனே. ௭

1864 [1]அழிதக வில்லா அரனடி யாரைத்
தொழுதகை ஞாலத்துத் தூங்கிருள் நீங்கும்
பழுது படாவண்ணம் [2]பண்பனை நாடித்
தொழுதெழ வையகத் தோரின்ப மாமே. ௮

1865 [3]பகவற்கே தாகிலும் பண்பில ராகிப்
[4]புகுமத்த [5]ராய்நின்று பூசனை செய்யும்
முகமத்தோ டொத்துநின் றூழிதோ றூழி
அகமத்த ராகிநின் றுய்ந்தொழிந் தாரே. ௯

1866 *வித்தக [6]மாகிய வேடத்தர் உண்டவூண்
அத்தன் அயன்மால் அருந்திய வண்ணமாஞ்
சித்தந் தெளிந்தவர் சேடம் [7]பருகிடின்
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே. ௧௰

1867 தாழ்விலர் பின்னும் [8]முயல்வ ரருந்தவம்
ஆழ்வினை [9]யாழ அவர்க்கே அறஞ்செய்யும்
[10]ஆழ்வினை நீக்கி அருவினை [11]தன்னொடும்
[12]போழ்வினை [13]தீர்க்கும்அப் பொன்னுல காமே. ௧௧

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]அழுதக ; அழுதகை ; அழுக்கவில்லா. [2]பண்பினை. [3]பகவற்க. [4]புகுதத்த ; புகழத்த. [5]ராய்நின்ற. [6]வேடத்தர் விரும்பியங் குண்ணல் ; வேடத்தர் விரும்பிய குண்டலம். [7]பருகிட. [8]உயர்வ ; உயர்வா. [9]யாள. [10]வாழ்வினை. [11]கண்ணொடு. [12]போர்வினை. [13]தீர்க் கும்.

869 உந்திக் கமலத் [1]துதித்தெழுஞ் சோதியை
அந்திக்கு மந்திர மாரும் [2]அறிகிலார்
அந்திக்கு மந்திர மாரும் அறிந்தபின்
தந்தைக்கு முன்னே மகன்பிறந் தானே. ௧௯

870 ஊதியம் ஏதும் அறியார் உரைப்பினும்
ஓதியும் ஏதும் [3]அறியாத ஊமர்கள்
ஆதியும் அந்தமும் அந்திக்க வல்லீரேல்
வேதியன் அங்கே வெளிப்படுந் தானே. ௨௦

871 பாம்பு மதியைத் தினலுறும் [4]பாம்பினைத்
தீங்கு [5]கதிரையுஞ் [6]சோதித் [7]தனலுறும்
பாம்பு மதியும் பகைதீர்த் [8]துடன்கொளீஇ
நீங்கல் [9]கொடானே நெடுந்தகை [10]யானே. ௨௧

872 அயின்றது வீழ்வள வுந்துயில் இன்றிப்
பயின்ற சசிவீழ் பொழுதில் துயின்று
[11]நயந்தரு பூரணை [12]உள்ள [13]நடத்தி
[14]வியந்தரு பூரணை மேவுஞ் சசியே. ௨௨

873 சசியுதிக் கும்அள வுந்துயி லின்றிச்
சசியுதித் [15]தானேல் தனதூண் அருந்திச்
சசிசரிக் கின்றள வுநதுயி லாமற்
சசிசரிப் பின்கட்டன் கண்டுயில் [16]கொண்டதே. ௨௩

874 ஊழி [17]பிரியா திருக்கின்ற யோகிகள்
நாழிகை யாக நமனை அளப்பர்கள்
ஊழி [18]முதலாய் உயர்வார் உலகினில்
தாழவல் [19]லார்இச் சசிவன்ன ராமே. ௨௪

பா - ம்—[1]துதிக்கின்ற; துதித்தெழ. [2]அறிந்திலர். [3]அறியார்கள். [4]பாம்பது. [5]கரையுஞ்; கதிர்தன்னை. [6]சோத்; சேறத. [7]தினலுறும். [8]துடன்கொளின். [9]கொடான் எம். [10]தானே. [11]நயந்த; நயன்றரு. [12]உள்ளளவு. [13]நடத்திய. [14]வியன்றரு. [15]ததே; ததாறே. [16]கொண்டே. [17]தரியா. [18]முதலார். [19]லார்இனி வழிச்சைவ; லார் இவ் வழிச்சைவ.

கச. *அடியார் பெருமை

1868 [1]திகைக்குரி யானொரு தேவனை [2]நாடும்
[3]வகைக்குரி யானொரு [4]வாதி யிருக்கிற்
பகைக்குரி யாரில்லைப் பார்மழை பெய்யும்
அகக்குறை கேடில்லை யவ்வுல குக்கே. க

1869 அவ்வுல [5]கத்தே [6]பிறந்தவ் வுடலொடும்
அவ்வுல கத்தே [7]அருந்தவ நாடுவர்
அவ்வுல கத்தே அரனடி [8]கூடுவர்
அவ்வுல கத்தே அருள்பெறு வாரே. உ

1870 கொண்ட [9]குறியுங் குலவரை [10]யுச்சியும்
அண்டரும் அண்டத் தமரரும் ஆதியும்
எண்டிசை யோரும்வந் தென்கைத் [11]தலத்தினுள்
[12]உண்டெனில் நாமினி உய்ந்தொழிந் [13]தோமே. ங

1871 [14]அண்டங்கள் ஏழும் அகண்டமும் ஆவியுங்
கொண்ட சராசர முற்றுங் குணங்களும்
பண்டை மறையும் [15]படைப்பளிப் பாதியுங்
கண்ட சிவனுமென் கண்ணன்றி யில்லையே. ச

1872 பெண்ணல்ல [16]ஆணல்ல பேடல்ல [17]மூடத்துள்
உள்நின்ற சோதி ஒருவர்க் கறிபொணாக்
கண்ணின்றிக் காணுஞ் செவியின்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே. ரு

1873 இயங்கும் உலகினில் ஈசன் அடியார்
மயங்கா [18]வழிசெல்வர் வானுல காள்வர்

---

* ஒருபிரதியில் இத்தலைப்பு அடியார் பெருக்கம் என்றுள்ளது.

பா - ம்—[1]சிகைக்குரி [2]நாடி. [3]நகைக்குரி. [4]ஞானி. [5]குக்கே. [6]பிறக்கிலுலகொடும் ; யிறக்கிலுடலொடும். [7]அருந்தவர் நாடுவார். [8]கூடுவார். [9]குழியுங். [10]யுக்கியும், [11]தலத்திலும். [12]உண்டென [13]தேனே. [14]அண்டமும். [15]படைத்தளிப். [16]ஆணல்லப். [17]மூடத்துண்ணின்ற. [18]வழிச்செல்வர்.

புயங்களு மெண்டிசை [1]போதுபா [2]தாள
[3]மயங்காப் [4]பகிரண்ட மாமுடி தானே. கூ

1874 அகம்படி [5]கின்றநம் ஐயனை யோரும்
அகம்படி கண்டவர் அல்லலிற் சேரார்
அகம்படி [6]யுட்புக் கறிகின்ற நெஞ்சம்
அகம்படி [7]கண்டாம் அழிக்கலும் எட்டே. எ

1875 [8]கழிவு [9]முதலுங் காதற் றுணையும்
அழிவும தாய்நின்ற ஆதிப் பிரானைப்
2076 பிரான்மய மாகப் பெயர்ந்தன எட்டும்
பராமய மென்றெண்ணிப் பள்ளி யுணரார்
[10]சுராமய [11]முன்னிய சூழ்வினை யாளர்
நிராமய மாக நினைப்பொழிந் தாரே. ௧௦

2077 ஒன்றிரண் [12]டாகிநின் றொன்றியொன் [13]றுயினோர்க்
கொன்றும் இரண்டும் ஒருகாலுங் கூடிடா
ஒன்றிரண் [14]டென்றே யுரைதரு வோர்க்கெலாம்
ஒன்றிரண் டாய்நிற்கும் ஒன்றேயொன் றுனதே.

பா - ம்—[1]கற்றார். [2]செய்வர். [3]புன்னை. [4]எண்ணிய. [5]படனமே. [6]தவ்வொளி. [7]தார்களே. [8]உய்த்துத் தோன்று; உய்த்துத் தோன்றும் போல். [9]வளியுந்தன்; விழியந்தன். [10]தராமய. [11]முன்னித்தஞ்; முன்னித்தருஞ். [12]டாய்நின். [13]றுயினார்க்; நீயினுலொன்றும். [14]டொன்றே; டன்றே.

2078 உயிரது [1]நின்றால் உணர்வெங்கு நிற்கும்
[2]அயரறி வில்லையா [3]லாருடல் வீழும்
உயிரும் உடலும் ஒருங்கிக் கிடக்கும்
பயிருங் [4]கிடந்துள்ளப் பாங்கறி யாரே. க௨

2079 *உயிரது வேறா யுணர்வெங்கு மாகும் •
உயிரை யறியில் உணர்வறி வாகும்
[5]உயிரன் றுடலை விழுங்கு முணர்வை
அயரும் பெரும்பொரு ளாங்கறி யாரே. க௩

2080 உலகாணி யொண்சுடர் [6]உத்தம சித்தன்
[7]நிலவாணி [8]ஐந்தினுள் நேருற நிற்குஞ்
[9]சிலவாணி யாகிய தேவர் பிரானைத்
[10]தலைவாணி [11]செய்வது தன்னை [12]யறிவதே. க௪

2081 தானந்த மாமென நின்ற தனிச்சுடர்
ஊனந்த மாயுல காய்நின்ற வொண்சுடர்
தேனந்த மாய்நின்ற சிற்றின்ப [13]நீயொழி
கோனந்த மில்லாக் [14]குணத்தரு ளாமே. க௫

2082 [15]உன்முத [16]லாகிய வூனுயிர் [17]உண்டெனுங்
கன்முத லீசன் கருத்தறி வாரிலை
நன்முத லேறிய நாம [18]மறநின்றால்
தன்முத [19]லாகிய [20]தத்துவ மாமே. க௬

2083 [21]இந்தியம் அந்தக் கரண மிவையுயிர்
வந்தன சூக்க [22]வுடலன்று [23]மானது

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]வென்றால். [2]அறிவில்லையானு ; மருவறி. [3]லாருடன் ; ருமடல். [4]கிடந்துள்ளம். [5]உயிரின். [6]ஆதித்தன் சித்தின். [7]நிலையாணி. [8]ஐந்துடன். [9]சிலையாணி. [10]தலையாணி. [11]செய்து. [12]யறியே ; யறியவே. [13]நீவொழிக் ; நீரொளி. [14]குணந்தரு ; கொணந்த மிலாமே. [15]இன்முத. [16]லாகியூனினுயிர் ; லாகியூனுயிர். [17]உண்டென்னுங் ; கொண்டேனுங். [18]றநின்றலத். [19]லாகித். [20]சத்ததுவாமே. [21]இந்திரியம். [22]முடலன்று. [23]வானது.

தந்திடும் [1]ஐவிதத் தால்தற் புருடனு
முந்துள மன்னு [2]மாறுறு முடிவிலே. ௧௭

௩௭. கேடுகெண்டிரங்கல்.

2084 வித்துப் பொதிவார் [3]விரைவிட்டு நாற்றுவார்
[4]அற்றதம் வாணாள் [5]அறிகிலாப் பாவிகள்
உற்ற [6]வினைத்துயர் ஒன்றும் அறிகிலார்
முற்றொளி [7]தீயின் [8]முணிகின்ற வாறே. ௧

2085 போது [9]சடக்கெனப் போகின் றதுகண்டும்
வாதுசெய் தென்னோ மனிதர் [10]பெறுவது
நீதியு ளேநின்று நின்மலன் [11]தாள்பணிந்
தாதியை அன்பில் அறியகில் லார்களே. ௨

2086 கடன்கொண்டு [12]நெற்குத்துக் கையரை யூட்டி
உடம்பினை யோம்பி [13]உயிராத் திரிவார்
தடங்கொண்ட சாரல் [14]தழல்முரு டேறி
இடங்கொண் டுடலார் கிடக்கின்ற வாறே. ௩

2087 விரைந்தன்று நால்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து
புரந்தகல் வால்நிழற் புண்ணியன் சொன்ன
பரந்தன்னை [15]யோராப் [16]பழிமொழி யாளர்
உரந்தன்மை யாக [17]வொருங்கிநின் றார்களே. ௪

2088 நின்ற புகழும் நிறைதவத் துண்மையும்
என்றுமெம் மீசன் அடியவர்க் கேநல்கும்
அன்றி யுலக மதுவிது [18]தேவென்று
குன்றுகை யாலே [19]குறைப்பட்ட வாறே. ௫

பா - ம்—[1]ஐயவியத். [2]மற்றொற்றொளி. [3]விதைவிட்டு. [4]அற்றத்தம்; அத்தம. [5]அறிகிலர். [6]வினையத்துயர். [7]தீயல். [8]மூளிகின்ற. [9]கடக்கெனப். [10]பெறுமது. [11]தாளணிந். [12]நெற்குற்றுக். [13]உயிரார் திரிவர். [14]தழல்முருட். [15]யோரார்; யோரப். [16]பழமொழி [17]வொருங்குகின்றாரே. [18]வென்று. [19]குறைபட்ட.

890 தராதல மூலைக்குத் [1]தற்பர [2]மாபரன்
தராதலம் வெப்பு நமவா [3]சியவாந்
தராதலஞ் சொல்லிற் றன்வா [4]சியவாகுந்
தராதல யோகந் [5]தயாவாசி யாமே. ௭

891 ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்
ஆமே பரங்கள் அறியா [6]விடம்என்ப
ஆமே திருக்கூத் [7]தடங்கிய சிற்பரம்
ஆமே சிவகதி ஆனந்த மாமே. ௮

892 ஆனந்த மூன்றும் [8]அறிவிரண் டொன்றாகும்
ஆனந்தஞ் [9]சிவாய அறிவார் பலரில்லை
ஆனந்த மோடும் அறியவல் லார்கட்கு
ஆனந்தக் கூத்தாய் அகப்படுந் தானே. ௯

893 படுவ திரண்டும் பலகலை வல்லார்
படுவ தோங்காரம் பஞ்சாக் கரங்கள்
படுவது சங்காரத் [10]தாண்டவப் பத்தி
படுவது கோணம் [11]பரந்திடும் வாறே. ௧௦

894 வாறே சதாசிவ மாறிலா ஆகமம்
வாறே சிவகதி வண்டுறை புன்னையும்
வாறே திருக்கூத்து ஆகம வசனங்கள்
வாறே பொதுவாகு [12]மன்றின் அமலமே. ௧௧

895 [13]அமலம் பதிபசு பாசங்கள் ஆகமம்
[13]அமலந் திரோதாயி யாகுமா னந்தமாம்
[13]அமலஞ்சொல் ஆணவ மாயை காமியம்
[13]அமலந் [14]திருக்கூத்தங் காமிடந் தானே. ௧௨

896 தானே தனக்குத் தலைவனு மாய்நிற்குந்
தானே தனக்குத் [15]தன்மலை யாய்நிற்குந்

பா - ம்—[1]தாபரன். [2]மாவான் ; மான. [3]சியானுந். [4]சியாகுந். [5]**தான்**வாசி. [6]விடமென. [7]துமயங்கிய ; துமடங்கிய. [8]அதிவிரண். [9]**சிவா** ; சிவாயம். [10]தாண்டவம். [11]பரந்திடு மாறே. [12]மன்றம் பலமே. [13]அம்பலம். [14]திருக்கூத் தாடுமிடந் ; திருக்கூத்தங் காடுமிடந். [15]தன மலை.

2089 இன்பத்து ளேபிறந் தின்பத்து ளேவளர்ந்
தின்பத்து ளேநினைக் கின்ற [1]இதுமறந்
[2]துன்பத்து ளேசிலர் சோர்வுறு [3]கூறையென்
[4]துன்பத்து ளேநின்று தூங்குகின் றார்களே. ௬

2090 பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி [5]பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் [6]பேறிழந் தாரே. ௭

2091 ஆர்வ மனமும் அளவில் இளமையும்
ஈரமும் [7]நல்லவென் றின்புறு காலத்துத்
தீர [8]வருவதோர் காமத் தொழில்நின்று
[9]மாதவன் இன்ப மறந்தொழிந் தார்களே. ௮

2092 இப்பரி சேயிள ஞாயிறு போலுரு
அப்பரி சங்கியின் உள்ளுறை [10]யம்மானை
இப்பரி சேகம [11]லத்துறை யீசனை
மெய்ப்பரி [12]சேவின [13]வாதிருந் தோமே. ௯

2093 கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு
நாடகில் [14]லார்நயம் பேசித் திரிவர்கள்
பாடகில் லாரவன் செய்த பரிசறிந்
தாடவல் லாரவர் [15]பேறெது வாமே. ௧௦

2094 நெஞ்சு நிறைந்தங் கிருந்த நெடுஞ்சுடர்
நஞ்செம் பிரானென்று நாதனை நாடொறுந்
துஞ்சு மளவுந் தொழுமின் தொழாவிடில்
[16]அஞ்சற்று விட்டதோர் [17]ஆணையு மாமே. ௧௧

2095 [18]மிருக மனிதர் மிக்கோர் பறவை
ஒருவர்செய் தன்புவைத் துன்னுத தில்லை

பா - ம்—[1]விதுமறந். [2]தின்பத்து. [3]கூறையென்று. [4]றுன்பத்து. [5]சேராப். [6]பேறுகந். [7]நல்லரென். [8]வருவோர். [9]மாதவரின்ப. [10]யம்மனை. [11]னத்துறை. [12]சேயின. [13]வாவிருக். [14]லார்நயமெய்தித். [15]பேறிது ; பேரிது. [16]விஞ்சத்து ; விஞ்சித்து. [17]ஆணையு. [18]விருக.

[1]பருகுவ ரோடுவர் [2]பார்ப்பயன் கொள்வர்
திருமரு மாதவஞ் [3]சேர்ந்துணர்ந் தாரே. கஉ

2096 நீதியி லோர்பெற்ற பொன்போல் இறைவனைச்
சோதியி லாருந் தொடர்ந்தறி [4]வாரில்லை
ஆதி [5]பயனென் றமரர் [6]பிரானென்று
நாதியே [7]வைத்தது [8]நாடுகின் றேனே. கங

2097 இருந்தேன் [9]மலரளைந் தின்புற வண்டு
பெருந்தேன் இழைக்கின்ற பெற்றிமை யோரார்
[10]வருந்தேன் [11]நுகராது [12]வாய்புகு தேனை
அருந்தேனை யாரும் அறியகி லாரே. கச

2098 கருத்தறி யாது கழிந்தன காலம்
அருத்தியுள் ளான்அம ராபதி [13]நாதன்
ஒருத்தனுள் ளானுல கத்துயிர்க் கெல்லாம்
வருத்திநில் லாது வழுக்குகின் றாரே. கரு

2099 குதித்தோடிப் போகின்ற கூற்றமுஞ் [14]சார்வாய்
[15]விதித்தன நாள்களும் வீழ்ந்து கழிந்த
[16]விதிர்த்திருந் தென்செய்தீ [17]ராறுதி ராகிற்
கொதிக்கின்ற கூழில் துடுப்பிட லாமே. கசு

2100 கரையரு [18]காருக் கழனி விளைந்த
திரையரு காமுன்னம் [19]சேர்ந்தின்பம் எய்தும்
வரையரு கூறிய மாதவ [20]நோக்கின்
நரையுரு [21]வாச்செல்லு [22]நாளில வாமே. கஎ

பா - ம்—[1]பருகுவாரோடுவார் ; பருகுவாரோபேர். [2]பால்பயன் கொள்வார். [3]செய்துணராரே ; சேர்ந்துண்பாரே. [4]யாரில்லை. [5]யய னென். [6]பிரானென்றுதியே ; பிரானென்ற. [7]வையக ; வைத்த ; வைகத்து. [8]நாட்டுகின. [9]மலர்சளைந். [10]அருந்தேன். [11]நுகராத. [12]வாய்புகும். [13]நாதனே யொருத்தியுளானுல. [14]சார; சாரா; சாரார். [15]விதித்தான. [16]விதிததிருந்தென் தீராது தீர்கிற். [17]ராறுகிலாக்கிற். [18]காகக். [19]தேர்ந்தின்பம். [20]கோக்கி ; ஞேக்கி. [21]வஞ்செல்லு. [22]நாள்பல.

2101 வரவறி [1]வானை மயங்கிருண் [2]ஞாலத்
திரவறி வானை [3]யெழுஞ்சுடர்ச் [4]சோதியை
[5]அரவறி வார்முன் னொருதெய்வ மென்று
விரவறி [6]யாமலே மேல்வைத்த வாறே. ௧௭

௩௮. *இதோபதேசம்

2102 மறந்தொழி மண்மிசை மன்னுப் பிறவி
இறந்தொழி காலத்தும் ஈசனை உள்கும்
பறந்தல மந்து படுதுயர் தீர்ப்பான்
சிறந்த [8]சிவநெறி சிந்தைசெய் [9]யீரே. ௧

2103 செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் [10]பெரிதுளன் எம்மிறை
நல்ல வரனெறி நாடுமி னீரே. ௨

2104 ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை [11]நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. ௩

2105 [12]போற்றிசெ யந்தண் கயிலைப் பொருப்பனை
நாற்றிசைக் குந்நடு வாய்நின்ற [13]நம்பனைக்
காற்றிசைக் [14]குங்கமழ் ஆக்கையைக் கைக்கொண்டு
[15]கூற்றுதைத் தான்றனைக் கூறிநின் றுய்மினே. ௪

2106 இக்காய நீக்கி யினியொரு [16]காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி [17]நாடுமின்

---

* ஒரு பிரதியில் இத்தலைப்பு இதோ வுபதேசம் என்றும், மற்றொன்றில் இதரவுபதேசம் என்றும் உளது.

பா - ம்—[1]யானை. [2]ஞானத். [3]ச்செழுஞ். [4]சோதி. [5]முரவறி யார்முன் ; முரவறி வானமுன். [6]யாமல். [7]பறந்தலம் வந்து ; பறந்துவம் வந்து ; பிறந்தலம் வந்து. [8]சிவனெறி. [9]வீரே. [10]பெரிதுரை. [11]நாளுமே. [12]போற்றிசைத் தந்தண். [13]நண்பனைக். [14]குங்கடை. [15]கூற்றுகைப் பான்றனைத் ; கூற்றுதைப் பான்றனைத். [16]காயத்தே. [17]தேடுமின்.

எக்காலத் திவ்வுடல் வந்தெமக் [1]கானதென்
[2]றக்கால முன்ன அருள்பெற லாமே. ௫

2107 போகின்ற வாறே புகுகின்ற அப்பொருள்
ஆகின்ற போது மானறி வானுளன்
சாகின்ற போதுந் தலைவனை நாடுமின்
ஆகின்ற அப்பொருள் அக்கரை [3]யாகுமே. ௬

2108 பறக்கின்ற வொன்று பயனுற [4]வேண்டின்
இறக்கின்ற காலத்தும் ஈசனை யுள்குஞ்
[5]சிறப்பொடு சேருஞ் சிவகதி பின்னைப்
பிறப்பொன் றிலாமையும் பேறுல [6]காமே. ௭

2109 கூடியும் [7]நின்றுந் தொழுதெம் [8]மிறைவனைப்
[9]பாடியு ளேநின்று பாதம் பணிமின்கள்
[10]ஆடியு ளேநின் றறிவுசெய் வார்கட்கு
நீடிய வீற்றுப் பசுவது [11]வாமே. ௮

2110 விடுகின்ற சீவனார் மேலெழும் போது
நடுநின்று நாடுமின் நாதன்தன் பாதங்
கெடுகின்ற வல்வினை கேடில் புகழோன்
[12]இடுகின்றான் உம்மை இமையவ ரோடே. ௯

2111 ஏறுடை யாயிறை வாஎம் பிரானென்று
நீறிடு வாரடி [13]யார்நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை யண்ணல் திருவடி
வேறணி வார்க்கு வினையில்லை தானே. ௧௦

2112 இன்புறு வீர்அறிந் [14]தேஎம் இறைவனை
[15]அன்புறு வீர்தவஞ் செய்யுமெய்ஞ் ஞானத்துப்
பண்புறு வீர்பிற வித்தொழி லேநின்று
துன்புறு பாசத் துழைத்தொழிந் தீரே. ௧௧

பா - ம்—[1]கெய்துமென். [2]றக்காலையுன்ன. [3]யாமே. [4]வேண்டில்; வேண்டித் துறக்கின்ற. [5]சிறப்பொடுஞ். [6]கோமே. [7]நின்று. [8]குரவனைப். [9]ஆடியு ளேநின் றறிவுசெய் வாரில்லை. [10]பாடியு. [11]வாகுமே. [12]இடுகின்ற நும்மை; இடுகின்ற தும்பை. [13]யாணிகழ். [14]தேன்என். [15]அன்புற வித்தவஞ்.

2113 [1]மேற்கொள்ள லாவதோர் மெய்த்தவம் ஒன்றுண்டு
[1]மேற்கொள்ள லாவதோர் மெய்த்தாளும் ஒன்றுண்டு
[1]மேற்கொள்ள லாவதோர் மெய்ந்நெறி [2]ஒன்றுண்டு
[1]மேற்கொள்ள லாம்வண்ணம் [3]வேண்டிநின் றோர்க்கே.

2114 *சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்
[4]பேர்ந்தவர்க் கின்னாப் பிறவி கொடுத்திடுங்
கூர்ந்தவர்க் [5]கங்கே குரைகழல் [6]காட்டிடுஞ்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே. கங

2115 [7]முத்தியை [8]ஞானத்தை முத்தமிழ் ஓசையை
எத்தனை காலமும் ஏத்துவர் ஈசனை
நெய்த்தலைப் [9]பால்போல் நிமலனும் அங்குளன்
அத்தகு சோதி [10]யதுவிரும் பாரே. கச

2116 நியமத்த னாகிய நின்மலன் [11]வைத்த
[12]உகமெத் தனையென் [13]றொருவருந் தேறார்
பவமத்தி லேவந்து பாய்கின்ற தல்லாற்
[14]சிவமத்தை யொன்றுந் தெளியகில் லாரே. கரு

2117 [15]இங்கித்தை வாழ்வு மெனைத்தோ [16]ரகிதமுந்
துஞ்சொத்த காலத்துத் [17]தூய்மணி வண்ணனை
[18]விஞ்சத் [19]துறையும் விகிர்தா எனநின்னை
நஞ்சற் [20]றவர்க்கன்றி நாடவொண் ணாதே. கசு

2118 பஞ்சமு மாம்புவி சற்குரு [21]பால்முன்னி
வஞ்சக ரானவர் [22]வைகில் அவர்தம்மை

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் 2116-க்குப்பின் காணப்படுகிறது.

பா - ம்—[1]மேல்கொள்ள. [2]வேண்டுமென். [3]வேண்டுகின் றேற்கே. [4]ஓர்ந்தவர்க் ; சோர்ந்தவர்க். [5]கென்றுங். [6]கூட்டிடுஞ் ; காட்டுஞ். [7]மூத்திரை ; [8]ஞான முழுத்தமிழ். [9]பாலா. [10]யதுவரும். [11]வையத் தகமெத். [12]யுகமெத் தனையென வென்றேருந் தோரார். [13]பெருவருந் தோரார். [14]சிவவித்தை யென்றுந் தெளிகின்றி லீரே. [15]இங்கித்த. [16]ரதிதமுர். [17]தூய்மேனி. [18]விஞ்சித். [19]துரையும். [20]றவர்க் கின்றி. [21]பால்மன்னி. [22]வைகல்.

[1]அஞ்சுவன் நாதன் அருநர [2]கத்திடுஞ்
[3]செஞ்சநிற் [4]போரைத் தெரிசிக்கச் சித்தியே. ௧௭

2119 சிவனை வழிபட்டார் [5]எண்ணிலாத் தேவர்
அவனை வழிபட்டங் [6]காமாறொன் றில்லை
அவனை [7]வழிபட்டங் காமா று காட்டுங்
[8]குருவை வழிபடிற் கூடலு மாமே. ௧௮

2120 நாருஞ் சுரரும் பசுபாச நண்ணிக்
கருமங்க ளாலே [9]கழிதலிற் கண்டு
[10]குருவென் [11]பவன்ஞானி [12]கோதில னாற்
[13]பரமென்றல் அன்றிப் பகர்வொன் று மின்றே. ௧௯

2121 ஆட்கொண் டவர்தனி நாயகன் அன்புற
மேற்கொண் [14]டவர்வினை போயற நாடொறும்
[15]நீர்க்கின்ற செஞ்சடை [16]நீளன் [17]உருவத்தின்
மேற்கொண்ட [18]வாறலை வீவித்து ளானே. ௨௦

ஏழாந் தந்திரம் முற்றிற்று.

பா - ம்—[1]அஞ்சுக. [2]காழ்த்திடுஞ். [3]செஞ்சவேகிற் ; செஞ்சேகிற். [4]போர். [5]எண்ணிலி. [6]கற்றரு மில்லை. [7]வழிபடுமா றறிவித்த. [8]சிவனை வழிபடுவொ ரின்புறுவரே. [9]கழிதலுறக். [10]குருவென வன்ஞானி. [11]பன்ஞானி. [12]கோதிலா. [13]பரமென்ப தன்றிப். [14]டவர் வினைப் பெற்றன. [15]நீற்கின்ற. [16]நீளரு வத்தனின். [17]அருவத்தின். [18]வாறில்லை வித்திர ளோனே ; வாறல்லை இத்திற ஞனே.

எட்டாந் தந்திரம்

க. *உடலிற் பஞ்சபேதம்

2122 காயப்பை யொன்று சரக்குப் பலவுள
[1]மாயப்பை யொன்றுண்டு மற்றுமோர் பையுண்டு
காயப்பைக் குள்நின்ற [2]கள்வன் புறப்பட்டால்
மாயப்பை [3]மண்ணா மயங்கிய வாறே. க

2123 அத்தன் அமைத்த உடலிரு [4]கூறினிற்
சுத்தம [5]தாகிய சூக்குமஞ் சொல்லுங்காற்
[6]சத்த பரிச ரூப ரசகந்தம்
[7]புத்திமா னாங்காரம் புரியட்ட [8]காயமே. உ

2124 [9]எட்டினில் ஐந்தாகும் இந்திரி யங்களுங்
கட்டிய [10]மூன்று கரணமு மாயிடும்
ஒட்டிய பாசம் உணர்வது வாகவே
கட்டி [11]யவிழ்த்திடுங் கண்ணுதல் [12]காணுமே. ௩

2125 இரதம் உதிரம் இறைச்சிதோல் மேதை
மருவிய வத்தி வழும்பொடு மச்சை
பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி
[13]உருவ மாலா லுடல் ஒன்றென [14]லாமே. ச

2126 ஆரே அறிவார் அடியின் பெருமையை
யாரே அறிவார் [15]அங்கவர் நின்றது
யாரே அறிவார் [16]அறுபத்தெட் [17]டாக்கையை
யாரே அறிவார் அடிக்காவ லானதே. ரு

---

* இத்தலைப்பு இரண்டு பிரதிகளில் உடலஞ்சுபேதம் என்றுளது.

பா - ம்—[1]மாயப் படைதனில்; மாயப்பை தன்னிலே. [2]கள்ளன். [3]மண்ணாய்க் கழிகின்ற. [4]கூறிற். [5]தாகுமச் சூக்கஞ். [6]சத்தப். [7]புத்திமன மாங்காரம். [8]கமாமே; கமே. [9]எட்டில். [10]மூன்றுங் காரணம தாயிடும். [11]யவிழ்ப்பன். [12]காணே. [13]உருவா லுடலம். [14]லாகுமே. [15]அருந்தலம்; அருங்கலம். [16]அறுபததோ; அதுபத்தோ. [17]டாக்கைக் காரே.

2127 எண்சா [1]ணளவால் எடுத்த வுடம்புக்குட்
கண்கால் உடலிற் கரக்கின்ற கைகளிற்
[2]புண்கால் அறுபத்தெட் டாக்கை புணர்க்கின்ற
நண்பால் உடம்புதன் [3]னாலுடம் பாமே. ௬

2128 [4]உடம்புக்கும் நாலுக்கும் உயிராய சீவன்
ஒடுங்கும் பரனோ டொழியாப் பிரமங்
கடந்தொறு நின்ற கணக்கது காட்டி
[5]அடங்கியே அற்றது ஆரறி வாரே. ௭

2129 ஆறந்த மாகி நடுவுடன் கூடினால்
தேறிய [6]மூவாறுஞ் சிக்கென் றிருந்திடுங்
கூறுங் கலைகள் பதினெட்டுங் [7]கூடியே
[8]ஊறும் உடம்பை உயிருடம் [9]பெண்ணுமே. ௮

2130 மெய்யினில் தூல [10]மிகுத்த முகத்தையும்
[11]பொய்யினிற் சூக்கம் பொருந்தும் உடலையுங்
கையினில் துல்லியங் காட்டும் உடலையும்
ஐயன் அடிக்குள் அடங்கும் உடம்பே. ௯

2131 காயுங் [12]கடும்பரி கால்வைத்து வாங்கல்போற்
[13]சேய [14]விடமண்மை செல்லவும் [15]வல்லது
[16]காயத் துகிர்போர்வை யொன்றுவிட் [17]டாங்கொன்றிட்
[18]டேயு மவரென்ன ஏய்ந்திடுங் காயமே. ௧௦

2132 நாக [19]முடலுரி போலுநல் லண்டச
மாக [20]நனவிற் கனாமறந் தல்லது

பா - ம்—[1]ணளயா யெடுத்த வுடலுக்குக். [2]புன்கால். [3]னாடலு மாகுமே. [4]உடம்புகள். [5]அடங்கியவற்றது. [6]மூவர். [7]கூடி. [8]ஏறும் [9]பென்றுமே. [10]மிருந்த ; மிகுந்த. [11]பொய்யிற சருக்கம். [12]கடுங்கரி. [13]சேயுமிடஞ் சென்றுலவவும். [14]விடமுண்மை. [15]வல்லாதா யாயுந். [16]காயந் ; ஓயுந் துயிற்போல வொன்றைவிட்டங் கொன்றிலேயு. [17]டாங்கொன் றிரண். [18]டோயும்வாறென்ன எய்திடுங். [19]முடல்விடு மாபோல நல்லுருப் பேரகவுள துடற்போந்து சன்னு வென்ன வேகு மலர்க் கந்தம்போல விருவினைக் கேகு. [20]நனவிற் கனா மறந்தாற் போலும்.

[1]போகலு மாகும் அரனரு ளாலேசென்
[2]றேகு மிடஞ்சென் [3]றிருபயன் உண்ணுமே. ௧௧.

2133 உண்டு நரக சுவர்க்கத்தில் உள்ளன
கண்டு [4]விடுஞ்சூக்கங் காரண மாச்செலப்
பண்டு தொடரப் பரகாய யோகிபோற்
பிண்டம் எடுக்கும் பிறப்பிறப் பெய்தியே. ௧௨.

2134 தானவ னாகிய தற்பரந் [5]தாங்கினேன்
ஆனவை [6]மாற்றிப் [7]பரமத் [8]தடைந்திடும்
ஏனை யுயிர்வினைக் கெய்து [9]மிடஞ்சென்றும்
வானும் நிலனும் [10]புகுந்தும் வருந்துமே. ௧௩.

2135 ஞானிக்குக் காயஞ் [11]சிவமே தனுவாகும்
ஞானிக்குக் காயம் [12]உடம்பே யதுவாகும்
மேனிற்கும் [13]யோகிக்கு விந்துவும் நாதமும்
மோனிக்குக் காயமுப் பாழ்கெட்ட முத்தியே. ௧௪

2136 விஞ்ஞானத் தோர்க்கா ணவமே மிகுதனு
[14]எஞ்ஞானத் தோர்க்குத் தனுமாயை தானென்ப
அஞ்ஞானத் தோர்க்குக் கன்மந் தனுவாகும்
மெஞ்ஞானத் தோர்க்குச் சிவதனு மேவுமே. ௧௫

2137 *மலமென் றுடம்பை மதியாத ஊமர்
[15]தலமென்று வேறு [16]தரித்தமை கண்டீர்
நலமென் றிதனையே நாடி யிருக்கிற்
பலமுள்ள காயத்திற் பற்றுமிவ் வண்டத்தே. ௧௬

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் முதலியன **உடல் விடல்** என்னுந் தலைப்பின் கீழ் வந்தன.

பா - ம்—[1]ஆருமா னருளாலே சென்றங் கங்கு. [2]யோகு முடன்சென். [3]றிடர்பயன். [4]விடுத்துத்தங் காரண னாக்கினை. [5]தங்கினேன். [6]மாறிப் ; மாற்றிய. [7]பிரமத். [8]தடைத்திடும் ; தடைத்திட் டேனை. [9]மிடஞ்சென்று. [10]புகுந்து. [11]சிவமஞ் ஞானிக்கு ஆனிற்குங். [12]உடம்பாகும் யோகிக்கு. [13]காயமே விந்து நாதாந்தமாம். [14]தஞ்ஞானத். [15]தலமென்று. [16]தரித்தவை.

2138 நல்ல வசனத்து வாக்கு மனாதிகள்
மெல்ல விளையாடும் விமலன் அகத்திலே
[1]அல்ல செவிசத்த [2]மாதி மனத்தையும்
மெல்லத் [3]தரித்தார் முகத்தார் பசித்தே. ௧௭

௨. உடல் விடல்

2139 [4]பண்ணாருங் காமம் [5]பயிலும் [6]வசனமும்
விண்ணும் பிராணன் விளங்கிய சத்தமும்
புண்ணும் உடலிற் பொருந்து மனத்தையும்
அண்ணாந்து பார்க்க அழியும் உடம்பே. ௧

2140 அழிகின்ற வோருடம் பாகுஞ் செவிகண்
கழிகின்ற காலவ் [7]விரதங்கள் தானம்
மொழிகின்ற [8]வாக்கு முடிகின்ற நாடி
ஒழிகின்ற ஊனுக் குறுதுணை யில்லையே. ௨

2141 இலையா மிடையில் எழுகின்ற காம
[9]மூலைவாய [10]நெஞ்சத்து மூழ்கும் உளத்துத்
தலையாய மின்னுடல் தாங்கித் திரியுஞ்
சிலையாய சித்தஞ் சிவமுன் னிடைக்கே.* ௩

௩. அவத்தைபேதம் - †கீழாலவத்தை

2142 ஐயைந்து [11]மத்திமை யானது சாக்கிரங்
கைகண்ட [12]பன்னான்கிற் [13]கண்டங் கனவென்பர்
பொய்கண்டி லாத புருட னிதயஞ்சுழுனை
மெய்கண் டவனுந்தி யாகுந் துரியமே. ௧

* இதனை யடுத்து 'உடல் பேதம்: தூலகாயம், சூக்குமகாயம், அகங்காயம், பரகாயம், சிவகாயம்' என்றொரு குறிப்பு மூன்று பிரதிகளிற் காணப்படுகிறது.

† ஒரு பிரதியில் தலைப்பு இச்சொற்றொடரின்றிக் காணப்படுகிறது.

பா - ம்—[1]அல்லல். [2]மாகி. [3]திரித்தார். [4]பன்னாருங். [5]பயில்வ. [6]கனாநனா; வசனாக. [7]விரதங்க ளான. [8]வர்க்கு மொழிகின்ற. [9]மூலை யாய. [10]நேசத்து. [11]மத்திம மானது. [12]வன்னான்கிற். [13]கண்ட.

தானே தனக்குத் தன்மய மாய்நிற்குந்
தானே தனக்குத் தலைவனு மாமே. கங

897 தலைவனு மாய்நின்ற தற்பரக் கூத்தனைத்
தலைவனு மாய்நின்ற சற்பாத் திரத்தைத்
தலைவனு மாய்நின்ற தாதவிழ் [1]ஞானத்
தலைவனு மாய்நின்ற தாளிணை தானே. கச

898 இணையார் திருவடி எட்டெழுத் தாகும்
இணையார் கழலிணை யிரைஞ்ச தாகும்
இணையார் கழலிணை [2]ஐம்பத்தொன் றாகும்
இணையார் கழலிணை ஏழா யிரமே. கரு

899 ஏழா யிரமாய் இருபதாய் முப்பதாய்
ஏழா யிரத்தும் எழுகோடி தானாகி
ஏழா [3]யிரத்துயிர் எண்ணிலா மந்திரம்
ஏழா யிரண்டாய் இருக்கின்ற வாறே. கசு

900 இருக்கின்ற மந்திரம் ஏழா யிரமாம்
இருக்கின்ற மந்திரம் [4]எத்திறம் இல்லை
இருக்கின்ற மந்திரஞ் சிவன்திரு மேனி
இருக்கின்ற மநதிரம் இவ்வண்ணந தானே. கஎ

901 தானே தனக்குத் தகுநட்டந் தானாகுந்
தானே அகார [5]உகாரம தாய்நிற்குந்
தானே [6]ரீங்காரத் [7]தத்துவக் கூத்துக்குத்
தானே உலகில் தனிநடந் தானே. கஅ

902 நடமிரண் டொன்றே நளினம தாகும்
நடமிரண் டொன்றே நமன்செய்யுங் கூத்து
நடமிரண் டொன்றே நகைசெயா மந்திரம்
நடஞ்சிவ லிங்கம் நலஞ்செம்பு பொன்னே. கசு

பா - ம்—[1]ஞானம். [2]யன்பத்தொன். [3]யிரததுயர். [4]இத்திறம். [5]உகாரமாய் நிற்குந். [6]ஹ்ரீங்காரத். [7]தத்துவமாய் நிற்குந்.

2143 முப்பதோ [1]டாறின் [2]முதல்நனு ஐந்தாகச்
[3]செப்பதி ஞன்காய்த் திகழ்ந்திரண் டொன்றாகி
[4]அப்பதி யாகும் நியதி முதலாகச்
[5]செப்புஞ் சிவமீருய்த் தேர்ந்துகொள் ளீரே. ௨

2144 [6]இந்திய மீரைந் [7]தீரைந்து மாத்திரை •
[8]மந்திர மாய்நின்ற மாருதம் ஈரைந்தும்
[9]அந்தக் கரணம் ஒருநான்கும் [10]ஆன்மாவும்
[11]பந்தவச் [12]சக்கரப் பாலது வாகுமே. ௩

2145 [13]பாரது பொன்மை பசுமை யுடையது
நீரது [14]வெண்மை செம்மை நெருப்பது
காரது மாருதங் கறுப்பை யுடையது
வானகந் தூம மறைநதுநின் றாரே. ௪

2146 பூதங்கள் ஐந்தும் பொறியவை [15]ஐந்துளும்
ஏதம் [16]படஞ்செய் திருந்த புறநிலை
ஓது மலங்குண மாகுமா தாரமோ
[17]டாதி யவத்தைக் [18]கருவிதொண் ணூற்றாறே. ௫

2147 இடவகை சொல்லில் இருபத்தஞ் சானை
[19]படுபர சேனையும் பாய்பரி [20]ஐந்தும்
உடையவன் மத்திமை [21]யுள்ளுறு [22]நால்வர்
அடைய நெடுங்கடை ஐங்தொடு நான்கே. ௬

2148 உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்

பா - ம்—[1]டாறாய் முதல்விட் டங்கை யைந்தாய். [2]நனுவிவை யைந்தாய்ச். [3]செப்பத்தி. [4]இப்பத்தி யாய்நிற்கும் நியமங்க ளஞ்சாய். [5]செப்பு சிவமீறாத் ; அப்பத்தி செய்வா ராய்ந்துகொள் வீரே. [6]இந்திரிய. [7]திசைந்தன ; தியைந்ததன். [8]அந்தம தாதிகளை யைந்தயை யுடன் ; மந்திரமாதி... ; அந்தம தாதி தனையைக்.... [9]உந்து ; வந்து. [10]ஆனவும். [11]பந்திந்த. [12]சாக்கிரப். [13]போரது. [14]வெண்செம்மை நெருப்பை யுடையது. [15]ஐந்தும் ; ஐயைந்தும். [16]படச்செய். [17]வாதி. [18]குவிருதொண். [19]படுபரை ; படுபரி ; படுவரை. [20]யாய்ந்து. [21]புள் ளுற. [22]மூவர்.

உடம்பொ டுயிரிடை நட்பறி யாதார்
[1]மடம்புகு நாய்போல் [2]மயங்குகின் றாரே. ௭

2149 இருக்கின்ற வாறென் [3]றறிகிலர் ஏழைகள்
முருக்கு [4]மசபையை மாற்றி முகந்து
கருக்கொண்டு [5]காமாரி [6]சார முகந்தேர்ந்
துருக்கொண்டு தொக்க உடலொழி யாதே. ௮

2150 *ஒளித்திட் டிருக்கும் ஒருபதி னாலை
அளித்தனன் என்னுள்ளே ஆரியன் வந்து
அளிக்குங் கலைகளி னாலறு பத்து
ஒளித்திட்டு வைத்தான் [7]ஒடுங்கிய சித்தே. ௯

2151 மண்ணினில் ஒன்று [8]மலர்நீரு மருங்காகும்
பொன்னினில் அங்கி புகழ்வளி யாகாயம்
மன்னு மனோபுத்தி யாங்காரம் ஓரொன்றாய்
[9]உன்னின் முடிந்த [10]தொருபூத சயமே. ௧௦

2152 †முன்னிக் கொருமகன் [11]மூர்த்திக் கிருவர்
வன்னிக்கு மூவர் வதுவைக்கு நால்வர்
[12]கன்னிக்குப் பிள்ளைகள் [13]ஐவர்மு னாளில்லை
கன்னியைக் கன்னியே காதலித் [14]தானே. ௧௧

2153 கண்ட [15]கனவைந்துங் கலந்தன தானைந்துஞ்சென்
றுண்டன நான்கும் [16]ஒருங்கே உணர்ந்தபின்
பண்டைய தாகிப் பரந்த வியாக்கிரத்
தண்டமுந் தானாய் அமர்ந்துநின் றானே. ௧௨

---

* ஒரு பிரதியில் இச்செய்யுளில்லை.

† ஒரு பிரதியில் இச்செய்யுளில்லை.

பா - ம்—[1]மடம்புக்க. [2]மறைந்துநின். [3]றறிகிலா ரேழை. [4]மசைவை யரற்றி. [5]காமரி. [6]சார்முகந் தேரா ; சாரமுந் தேரா. [7]ஒருங்கிய. [8]மலர்நீர்க் கருங்காகும் ; மலம்நீரு மைங்காகும். [9]உன்னி. [10]துபூதச் செயமே. [11]முத்திக். [12]கன்னிக்கும். [13]ஐவர்முன். [14]தாரே. [15]னவைந் துங். [16]ஒருங்கி.

2154 நின்றவன் [1]நிற்கப் பதினலிற் பத்துநீத்
தொன்றிய அந்தக் கரணங்கள் நான்குடன்
மன்று [2]கலந்த மனைவாழ்க்கை [3]வாதனை
கன்றிய [4]கண்டத்திற் கண்டான் [5]கனவதே. ௧௩

2155 தான மிழந்து தனிபுக் கிதயத்து
மான [6]மழிந்து [7]மதிகெட்டு மாலாகி
ஆன விரிவறி [8]யாவவ் வியத்தத்தின்
மேனி [9]யழிந்து சுழுத்திய தாமே. ௧௪

2156 சுழுனையைச் சேர்ந்துள மூன்றுடன் காட்சி
கெழுமிய சித்தம் பிராணன்றன் [10]காட்சி
[11]ஒழுகக் கமலத்தின் உள்ளே யிருந்து
விழுமப் பொருளுடன் மேவிநின் றானே. ௧௫

2157 தானத் தெழுந்து [12]தருக்குந் [13]துரியத்தின்
வானத் தெழுந்துபோய் வையம் [14]பிறகிட்டுக்
கானத் தெழுந்த கருத்தின் தலையிலே
[15]ஊனத் [16]தவித்தைவிட் டுமேனின் றானே. ௧௬

2158 ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறில்
ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓமய [17]முற்றது வுள்ளொளி பெற்றது
நாமய [18]மற்றது நாமறி யோமே. ௧௭

2159 துரிய [19]மிருப்பதுஞ் சாக்கிரத் துள்ளே
நரிகள் பதினலு [20]நஞ்சுண்டு [21]செத்தன
பரிய புரவியும் [22]பாறிப் பறந்தது
துரிய மிறந்திடஞ் சொல்லவொண் ணாதே. ௧௮

பா - ம்—[1]நிற்பப் ; நீவப் ; நிற்பது நாலிற். [2]லகந்த. [3]யாதனை; வாதனைக். [4]கண்டத்துக். [5]கனவதே. [6]மிழந்து. [7]மதிகெட. [8]யானவை யயதின் ; யாவையை விவீயதின். [9]யறிந்து ; யறிந்துஞ். [10]போதம் ; நற்போதம். [11]எழுமக். [12]தருந். [13]துரியத்தான் ; துரியத்தன் ; துரித்தன். [14]புறகிட்டுக். [15]ஊன்மத் ; ஊமத். [16]தவித்தையிட். [17]மற்றது. [18]மற்றிட. [19]மிருப்பது. [20]நஞ்சுகண்டு. [21]செத்துப் ; சேற்றினு. [22]பாரிற் பார்த்தது.

2160 மாறு மலமைந்தான் மன்னு மவத்தையின்
[1]வேறாய [2]மாயா தநுகர [3]ணாதிக்கிங்
[4]கீறுகா தேளவ் [5]வுயிரும் பிறந்திறந்
[6]தாறுத வல்வினை [7]யாலடி யுண்ணுமே. ௧௯

2161 [8]உண்ணுந்தன் னூடாடா னூட்டிடு மாயையும்
அண்ணல் அருள்பெற்ற [9]முத்திய தாவது
[10]நண்ண விலாவுயிர் ஞானத்தி னற்பிறந்
[11]தெண்ணுறு ஞானத்தின் நேர்முத்தி எய்துமே. ௨௦

2162 [12]அதிமூட [13]நித்திரை யாணவ நந்த
அதனை யுணர்வோ [14]னருங்கன்ம [15]முன்னித்
திதமான கேவல [16]மித்திறஞ் சென்று
[17]பரமாகா வையவத் தைப்படு [18]வானே. ௨௧

2163 [19]ஆசான்முன் னேதுயில் [20]மாண வகரைத்
தேசாய தண்டால் எழுப்புஞ் செயல்போல்
நேசாய வீசனு [21]நீடாண வத்தரை
[22]ஏசாத மாயாடன் றேலே எழுப்புமே. ௨௨

2164 மஞ்சொடு மந்தா கினிகூட மாமென
விஞ்சறி வில்லோன் [23]விளம்பு மிகுமதி
எஞ்சவி லொன்றெனு மாறென இவ்வுடல்
[24]அஞ்சுனு மன்னனன் றேபோ மளவே. ௨௩

2165 [25]படியுடை மன்னவன் பாய்பரி ஏறி
வடிவுடை மாநகர் தான்வரும் போது

பா - ம்—[1]வேறான. [2]மாமாயா. [3]ணாதிமிக். [4]கீறுகவவ்வுயிர்; கீறுகவிவ்வுயிர். [5]வுயிரீங்குப்; வுயிரிங்குப். [6]தாறுக; தாறுதே. [7]யாலடர்ப் புண்ணுமே; யாடலற் றுண்ணுமே. [8]உண்ணுந்தன தூடாடா. [9]முத்தியாவது. [10]நண்ணறியாவுயிர். [11]எண்ணறு. [12]அதிமூட்டுத் திரையான வனந்தல். [13]னித்திரை. [14]னருங்கன. [15]நீதத். [16]மத்திற் சென்றும்பர். [17]பதமாகாதையவத். [18]வோனே. [19]ஆசான்றன்முன். [20]அம்மாண. [21]நீண்டாணவத்தைகா. [22]ஏயாத. [23]விளங்குமிகுதி. [24]ஐஞ்செனு மன்னனன் பொன்னளவே. [25]படையுடை.

[1]அடியுடை ஐவரும் [2]அங்குறை வோருந்
துடியில்லம் பற்றித் துயின்றனர் தாமே. ௨௪

2166 நேரா [3]மலத்தை நீடைந் தவத்தையின்
நேரான [4]வாறுன்னி நீடு [5]நனவினில்
நேரா மலமைந்து நேரே தரிசித்து
நேராம் [6]பரத்துடன் நிற்பது [7]நித்தமே. ௨௫

---

௪. *மத்திய சாக்கிராவத்தை

2167 [8]சாக்கிர சாக்கிரந் தன்னில் திரோதாயி
சாக்கிர சொப்பனந் [9]தன்னிடை மாமாயை
சாக்கிரந் தன்னிற் சுழுத்திதற் [10]காமியஞ்
சாக்கிரந் தன்னில் துரியத்து மாயையே. ௧

2168 மாயை [11]எழுப்புங் கலாதியை மற்றதின்
[12]நேய விராகாதி [13]ஏய்ந்த துரியத்துத்
தோயுஞ் சுழுனை கனாநன வுந்துன்னி
ஆயின னந்தச் [14]சகலத்து ளானே. ௨

2169 மேவிய [15]அந்தகன் விழிகட் [16]குருடனா
மாவயின் முன்னடிக் [17]காணு மதுகண்டு
[18]மேவுந் [19]தடிகொண்டு [20]சொல்லும் விழிபெற
[21]மூவயி னன்மா முயலுங் கருமமே. ௩

2170 மத்திம மொத்த சிலந்தி வலயத்துள்
ஒத்தங் [22]கிருநது உயிருண்ணு மாறுபோல்

---

* ஒரு பிரதியில் இததலைப்பு மத்தியால சாக்கிரவத்தை என்றுளது.

பா - ம்—[1]படியடை. [2]பாங்குறை. [3]மலவவத்தை; மலாவத்தை. [4]வாறுற. [5]நனவினில். [6]பதத்துடன். [7]சித்தமே. [8]சாக்கிரா. [9]தன்னிட மாயையஞ். [10]காரியஞ். [11]எழுப்பக்காலாதியை. [12]ஏயவற்காதி. [13]ஏயத்; ஏதத: மெயத். [14]சகலததனானே. [15]அந்தன். [16]குருடனே யாவையு. [17]கண்டோனது கண்டு; காணமதுகொண்டு. [18]மேவு. [19]தடிகொடு. [20]செல்லும்; செல்வோன் விழி பெற்றோன். [21]கேவல மேய சகலங் கிளர்வோனே. [22]கிருந்தங் குயிருண்ணும் வாறுபோல்.

அத்தனும் ஐம்பொறி [1]யாடகத் துள்நின்று
சத்த முதல்ஐந்துந் தானுண்ணு [2]மாறே. ௪

2171 [3]வைச்சன [4]வச்சு வகையிரு பத்தஞ்சு
[5]முச்சு முடனணை வாமொரு வன்னுளன்
பிச்சன் [6]பெரியன் பிறப்பிலி யென்றென்று
[7]நச்சி யவனருள் நானுய்ந்த வாறே. ரு

2172 நாலா றுடன்புருட [8]னற்றத் துவமுடன்
வேறான ஐயைந்து [9]மெய்ப்புரு டன்பரங்
[10]கூறு வியோமம் [11]பரமெனக் கொண்டனன்
வேறான நாலேழு வேதாந்த [12]தத்வமே. சு

2173 ஏலங்கொண் டாங்கே இடையொடு பிங்கலை
கோலங்கொண் டாங்கே குணத்தி [13]னுடன்புக்கு
மூலங்கொண் டாங்கே முறுக்கிமுக் [14]கோணிலுங்
காலங்கொண் டானடி காணலு மாமே. எ

2174 நாடிகள் பத்தும் நலந்திகழ் வாயுவும்
ஓடிய [15]காலில் ஒடுங்கி யிருந்திடுங்
கூடிய காமங் குளிக்கும் இரதமும்
நாடிய நல்ல மனமும் உடலிலே. அ

2175 ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
[16]ஏவன செய்யும் [17]இலங்கிழை யோனே. கூ

2176 பத்தொடு [18]பத்துமோர் [19]மூன்றும் பகுதியும்
உய்த்த துரியமும் உள்ளுணர் காலமும்

பா - ம்—[1]யாகத். [2]ம்வாறே. [3]வச்சன [4]வைச்சு. [5]முச்சமுடல்மனே. [6]பெரிய ; பெரியான். [7]நச்சவருள்செய்து. [8]னுடன்றத்துவம்; னந்தத்தத்துவம். [9]மெய்புருடனென்பர். [10]கூறுனவி. [11]வரமெனக் ; வாமமெனக். [12]தத்துவமே. [13]னுடம்புக்கு. [14]கோளிலும். [15]காவில். [16]ஏவனெவன். [17]இளங்கிளை. [18]பத்துமொரு. [19]மூன்று.

மெய்த்த வியோமமு [1]மேலைத் தூரியமுந்
தத்துவ நாலே [2]ழெனவுன்னத் தக்கதே. ௰

2177 [3]விளங்கிடு முந்நூற்று முப்பதோ [4]டொருபான்
தளங்கொ [5]ளிரட்டிய தாறு நடந்தால்
[6]வணங்கிடு [7]மைம்மலம் வாயு வெழுந்து
[8]விளங்கிடு மவ்வழி [9]தத்துவ நின்றே. ௧௧

2178 நாலொரு கோடியே நாற்பத்தெண் ணாயிர
மேலுமோ ரைந்நூறு வேறா [10]யடங்கிடும்
[11]பாலவை [12]தொண்ணூறோ டாறுட் படுமவை
கோலிய ஐயைந்து ளாகுங் [13]குறிக்கிலே. ௧௨

2179 ஆகின்ற [14]தொண்ணூறோ டாறும் [15]பொதுஎன்பர்
ஆகின்ற வாறா [16]றருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் [17]வேதாந்தி வயிணவர்க்
காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே. ௧௩

2180 தத்துவ மானது தன்வழி நின்றிடில்
வித்தக னாகி விளங்கி யிருக்கலாம்
பொய்த்தவ [18]மாமவை போயிடு மவ்வழி
தத்துவ [19]மாவ தகார எழுத்தே. ௧௪

2181 அறிவொன் றிலாதன ஐயேழு மொன்றும்
அறிகின்ற என்னை அறியா திருந்தேன்
அறிகின்றாய் நீயென் [20]றருள்செய்தார் நந்தி
அறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே. ௧௫

2182 சாக்கிர சாக்கிர மாதி [21]தனில்ஐந்தும்
ஆக்கு மலாவத்தை யைந்து [22]நனவாதி

பா - ம்—[1]மேலாத். [2]ழெனவுள்ளத். [3]விளங்கிய. [4]டென்பர்; டென்பதாம். [5]டீரீட்டில; டிநீட்டில். [6]வழங்கிடு. [7]மம்மலம். [8]விணங்கிடு. [9]வித்துவ; மதத்துவ. [10]மடங்கிடும். [11]பாலுறு. [12]தொண்ணூற்றோ. [13]குறிப்பிலே. [14]தொண்ணூற்றோ. [15]பொது என. [16]றாஞ்சைவ. [17]வேதாந்த வயிட்டிணவற். [18]மானவை. [19]மாய; மான. [20]றருளானறிந்தே; றருளாலறிந்து. [21]நிலையைந்தும். [22]நனவாதியாய்ப்.

போக்கி யிவற்ருெடும் பொய்யான [1]வாருறு
நீக்கி [2]நெறிநின்ருென் ருகியே நிற்குமே. கசு

2183 ஆணவ மாதி மலமைந் தலரோனுக்
காணவ [3]மாதிநான் காமாற் [4]காரனுக்கு
ஆணவ [5]மாதி மூன் றீசர்க் கிரண்டென்ப
ஆணவ மொன்றே சதாசிவற் காவதே. கஎ

ரு. *அத்துவாக்கள்

2184 †தத்துவம் ஆருறு தன்மனு [6]வேழ்கோடி
மெய்த்தகு வன்னம்ஐம் பானென் றுமேதினி
[7]ஒத்திரு நூற்றிரு பான்நான்கெண் பானென்று
வைத்த பதங்கலை [8]யோரைந்தும் வந்தவே. க

2185 நாடிய மண்டல மூன்று நலந்தெரிந்
தோடு [9]மவரோ [10]டுள்ளிரு பத்தைஞ்சுங்
கூடுவர் கூடிக் குறிவழி யேசென்று
தேடிய [11]பின்னர்த் திகைத்திருந் [12]தார்களே. உ

2186 சாக்கிர சாக்கிர [13]மாதித் தலையாக்கி
ஆக்கிய தூல [14]மளவாக்கி அதீதத்துத்
தாக்கிய வன்பான தாண்டவஞ் சார்ந்தது
தேக்குஞ் [15]சிவமாதல் ஐந்துஞ் [16]சிவாயமே. ங

---

* இத்தலைப்பு ஒரு பிரதியில் **அத்துவா** என்றும், மற்ருென்றில் **சுத்தானவாதிப் பருவம்** என்றும் உளது. பிறிதொரு பிரதியில் இவ்விடத்துத் தலைப்பேயில்லை.

† ஒரு பிரதியில் இச்செய்யுளில்லை.

பா - ம்—[1]வாருருறு. [2]நெறிநின்ருென் ருனகி. [3]மாதி மலநான். [4]காற்காணவ. [5]மாதிமலமூன்றிரண் டீசற்காணவ. [6]கோடி; மாறைந்து. [7]ஒததவிரு. [8]யோரைநது வந்ததே. [9]வரோடிய வுள்ளிரு. [10]டியுள்ளிரு. [11]பின்னைத். [12]தானே. [13]மாதி. [14]ளவாகி; மளவாக்கி. [15]சிவமார்தல். [16]சிவாயவே.

௬. சுத்த நனவாதி பருவம்

2187 *நனவாதி தூலமே சூக்கப் பகுதி
[1]அனதான [2]வைஐந்தும் விந்துவின் சத்தி
தனதா [3]மூயிர்விந்து தானின்று போந்து
கனவா நனவிற் கலந்ததிவ் வாறே. ௧

2188 நனவில் அதீதம் பிறந்தார் கிடந்தார்
நனவில் துரியம் [4]நிகழ்ந்தார் தவழ்ந்தார்
நனவிற் [5]சுழுத்தி நடந்தார் வளர்ந்தார்
நனவிற் கனவோட [6]னன்செய்தி யானதே. ௨

2189 [7]செறியுங் கிரியை சிவதத் [8]துவமாம்
[9]பிறிவிற் சுகயோகம் பேரருள் கல்வி
குறிதற் திருமேனி குணம்பலி வாகும்
அறிவில் சராசரம் அண்டத் [10]தளவே. ௩

2190 ஆதி பரஞ்சிவஞ் சத்தி சதாசிவம்
ஏதமில் ஈசன்நல் [11]வித்தியா தத்துவம்
போதங் கலைகால [12]நியதிமா மாயை
[13]நீதியீ ரூக [14]நிறுத்தினன் என்னே. ௪

2191 தேசு திகழ்சிவஞ் சத்தி சதாசிவம்
[15]ஈசன் அனல்வித்தை இராகங் கலைகால
மாசகல் வித்தை நியதி மகாமாயை
ஆசில் புருடாதி ஆன்மாவீ [16]ரூறே. ௫

2192 ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்
காணு [17]முளைக்குத் தவுடுமி யான்மாவுங்

---

* இரண்டு பிரதிகளில் இவ்விடத்து 'மத்தியாலவத்தை நீக்கி' என்றொரு குறிப்புக் காணப்படுகிறது.

பா - ம்—[1]நனகான ; அனகான. [2]வையைந்து. [3]மூயிர்விந்துத். [4]நகர்ந்தார் ; தளர்ந்தார். [5]சுழுனை. [6]னன்செயலானதே. [7]தெரியுங். [8]துவத்துப் ; துவமும். [9]பிரிவில் சிவபோகம். [10]துளவே. [11]வித்தாதி. [12]நியதிமகா ; நியதிநகர். [13]நீதியிராக ; நீதியாகம். [14]நிலை நிறுத்தினனே. [15]ஈசனல்விதகை. [16]ரூரூறே ; ராறே. [17]முளையத்தா விடுமியா மான்மாத.

[1]தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்
[2]பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே. ௬

2193 பசுக்கள் [3]பலவண்ணம் பாலொரு [4]வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் [5]ஒருவண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன்கோல் போடிற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே. ௭

2194 [6]உடலிந் [7]தியமனம் ஒண்புத்தி சித்தம்
அடலொன் றகந்தை அறியாமை மன்னிக்
கெடுமவ் வுயிர்மயல் மேலுங் கிளைத்தால்
அடைவது தானேழ் நரகத்து ளாயே. ௮

2195 தற்றெரி யாத [8]வதீதந்தற் காணவஞ்
சொற்றெரி கின்ற துரியஞ்சொற் காமியம்
[9]பெற்ற [10]சுழுத்திப்பின் [11]பேசுறுங் காதலா
மற்றது வுண்டிக் கனநன வாதலே. ௯

2196 நனவிற் [12]கனவில்லை ஐந்து நனவிற்
கனவிலாச் [13]சூக்குமங் காணுஞ் சுழுத்தி
[14]தனலுண் பகுதியே தற்கூட்டு மாயை
நனவிற் றுரிய மதீதந் தலைவந்தே. ௧௦

2197 ஆறாறில் ஐயைந் தகல நனாநனா
[15]வாறா மவைவிட வாகு [16]நனாக்கனா
வேறான [17]ஐந்தும் விடவே நனவினில்
ஈறாஞ் [18]சுழுத்தி யிதின்மாயை தானே. ௧௧

2198 மாயையில் வந்த புருடன் துரியத்தில்
[19]ஆய முறைவிட் டதுவந்தா [20]னன்றாகிச்

பா - ம்—[1]தாணுவோ டொவ்வாமுற். [2]பேணுவா மற்றினிப் பாசம் பிறிதலே; பேணுமவற்றுநின்; வேணுவாய்...பாகம் பிறப்பே. [3]பலவன்னம். [4]வன்னம். [5]ஒருவன். [6]உடலுந. [7]திரியமனம். [8]ததீதந்தற்காண. [9]பெற்றவஞ். [10]சுழுத்தியின். [11]பேசுங் காதலால். [12]கனவில்லையை யைந்து. [13]சூக்கமங். [14]தனிநுண்; தனிலுண். [15]வாறாகு. [16]மன்னாநனாக்கனா; மன்நானகன. [17]ஐயைந்து. [18]சுழுனையதின். [19]ஆவ. [20]ன்தானாகிச்; னன்றாகிக்கே வலவிந்துவுடன்செலச்.

903 செம்புபொன் னாகுஞ் சிவாய நமவென்னிற்
செம்புபொன் னாகத் திரண்டது சிற்பரஞ்
செம்புபொன் னாகும் [1]ஸ்ரீயுங் [2]கிரீயுமெனச்
செம்புபொன் னான திருவம் பலமே. உ0

904 திருவம் பலமாகச் சீர்ச்சக் கரத்தைத்
திருவம் பலமாக ஈராறு கீறித்
திருவம் பலமாக இருபத்தைஞ் சாக்கித்
திருவம் பலமாகச் [3]செபிக்கின்ற வாறே. உக

905 வாறே சிவாய [4]நமச்சி வாயநம
வாறே [5]செபிக்கில் [6]வரும்பேர் பிறப்பில்லை
வாறே அருளால் வளர்கூத்துக் காணலாம்
வாறே [5]செபிக்கில் வருஞ்செம்பு பொன்னே. உஉ

906 பொன்னான மந்திரம் புகலவும் ஒண்ணாது
பொன்னான மந்திரம் [7]பொறிகிஞ்சு கத்தாகும்
பொன்னான மந்திரம் புகையுண்டு பூரிக்கிற்
பொன்னாகும் வல்லோர்க் குடம்புபொற் பாதமே. உங

907 பொற்பாதங் காணலாம் [8]புத்திரர் உண்டாகும்
பொற்பாதத் தாணையே செம்புபொன் னாயிடும்
பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
[9]பொற்பாத நன்னடஞ் சிந்தனை சொல்லுமே. உச

908 சொல்லு மொருகூட்டிற் புக்குச் [10]சுகிக்கலாம்
நல்லி மடவார் நயந்துட னேவருஞ்
சொல்லினும் பாசச் [11]சுடர்ப்பாம்பு நீங்கிடுஞ்
சொல்லுந் திருக்கூத்தின் [12]சூக்குமந் தானே. உரு

909 சூக்குமம் எண்ணா யிரஞ்செபித் தாலுமேற்
சூக்கும மான [13]வழியிடைக் காணலாஞ்

பா - ம்—[1]சிறீயுங் கிறீயும். [2]க்ரீயுமென. [3]செவிககின்ற. [4]நமமசி வாயந ; நமசிவாய. [5]செவிக்கில். [6]வரும் ; வரும்போம். [7]போகிக்குஞ் சித்தர்க்கும். [8]புத்திரரும். [9]பொற்பாதந் தன்னடம். [10]சரிக்கலாம். [11]சுடர்பாம்பு. [12]சூக்கமம். [பின் இச்சொல் வருமிடந்தோறும் இங்ஙனமே.] [13]வழியிடை.

[1]சேயகே வலவிந் துடன்செல்லச் சென்றக்கால்
[2]ஆய தனுவின் [3]பயனில்லை யாமே. ௧௨

2199 அதீதத் துரியத் [4]தறிவனும் ஆன்மா
அதீதத் துரிய மதனுற் புரிந்தால்
அதீதத் தெழுந்தறி [5]வாகிய மானன்
முதிய [6]அனலிற் றுரியத்து முற்றுமே. ௧௩

2200 ஐயைந்து பத்துடன் ஆனது சாக்கிரங்
கைகண்ட [7]ஐயைந்திற் [8]கண்டங் கனுஎன்பர்
பொய்கண்ட மூவர் புருடன் சுழுனையின்
மெய்கண் டவனுந்தி [9]மேவல் இருவரே. ௧௪

2201 புரியட் [10]டகமே [11]பொருந்தல் நனவு
புரியட் டகந்தன்னின் மூன்று கனவு
புரியட் டகத்தில் இரண்டு சுழுத்தி
புரியட் டகத்தொன்று [12]புக்கல் துரியமே. ௧௫

2202 நனவின் நனவு [13]புலனில் வழக்கம்
நனவிற் கனவு நினைத்தல் [14]மறத்தல்
நனவிற் [15]சுழுத்தியுண் ணுடல் இலாமை
நனவில் துரிய [16]மதீதத்து நந்தியே. ௧௬

2203 கனவின் [17]நனவுபோற் [18]காண்டல் நனவாங்
[19]கனவினிற் கண்டு [20]மறத்தல் கனவாங்
கனவிற் சுழுத்தியுங் [21]காணுமை காணல்
[22]அனுமாதி [23]செய்தவி லான துரியமே. ௧௭

2204 சுழுத்தி [24]நனவொன்றுந் தோன்றுமை தோன்றல்
சுழுத்தி [25]கனவதன் உண்மை [26]சுழுத்தியிற்

பா - ம்—[1]சேயல்கே வலவநதுடன். [2]ஆவ. [3]பயனிலையாகுமே. [4]தறிகுவம். [5]வாதியாமானுன். [6]அளவிற்; அவன் வீறிற். [7]வஞ்சினிற். [8]கண்ட. [9]மேவில். [10]டகம. [11]புரிந்த; பொருநதில். [12]புக்க. [13]புலனல் விளக்கம். [14]மறுததல். [15]சுழுனையுண்ணுடிலாமை. [16]மதீதத்த; மதித்தது. [17]நினைவுபோற். [18]கண்டல். [19]கனவிற். [20]மறைத்தற். [21]காணுமற். [22]அனுமாதி. [23]செய்யி; சேரி. [24]கனவுபேர். [25]கனவுதன். [26]சுழுத்தி.

சுழுத்தி [1]யறிவறி வாலே [2]யழிகை
[3]சுழுத்தித் துரியமாஞ் [4]சொல்லறும் பாழே. க௮

2205 துரிய நனவா [5]மிதமுணர் போதந்
[6]துரியக் கனவா மகமுணர் போதந்
[7]துரியச் சுழுத்தி [8]வியோமந் துரியந்
துரியம் பரமெனத் தோன்றிடுந் தானே. க௯

2206 அறிவறி கின்ற அறிவு நனவாம்
அறிவறி யாமை யடையக் கனவாம்
அறிவறி யவ்வறி [9]யாமை சுழுத்தி
அறிவறி வாகு மான துரியமே. உ௦

2207 தானெங்கு மாயவ னைம்மலந் தான்விட்டு
ஞானந் [10]தனதுரு வாகி நயந்தபின்
தானெங்கு மாய்நெறி [11]நின்றது தான்விட்டு
[12]மேனந்தச் சூக்க மவைவன்ன [13]மேலிட்டே. உக

2208 ஐயைந்து மாறுமோ ரைந்து நனுவினில்
எய்யு நனவு கனவு சுழுத்தியா
[14]மெய்யும்பின் சூக்கமும் மெய்ப்பகுதி மாயை
ஐயமுந் [15]தானவ னத்துரி யத்தனே. உ௨

2209 ஈதென் [16]றறிந்திலன் இத்தனை காலமும்
ஈதென் [17]றறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
ஈதென் றறியும் அறிவை அறிந்தபின்
ஈதென் றறியும் இயல்புடை [18]யோனே. உ௩

2210 உயிர்க்குயி ராகி யுருவா யருவாய்
[19]அயற்புணர் வாகி [20]யறிவாய்ச் செறிவாய்

பா - ம்—[1]யறிவாலே யழிகை சுழுததி. [2]யறிகை. [3]சுழுத்தி. [4]சொல்லலும். [5]மிதமுறைபேதந். [6]துரியங். [7]துரியஞ். [8]வியோமத். [9]யாமல். [10]தன்னுரு. [11]நின்று. [12]மோனந்தஞ்; மோனந்த. [13]மேலீட்டே. [14]மெய்துந் துரிபத்துளெய்தும் பகுதியாய்; மெய்யுந்...... [15]தானுனவாதுரி; தானுகியானதுரி. [16]றறிந்திலேன். [17]றறிந்திலேன். [18]யோரே. [19]அறப்புணர்; அயிற்புணர். [20]யறிவாற்.

நயப்புறு சத்தியும் நாதன் உலகாதி
இயற்பின்றி யெல்லாம் [1]இருண்மூட [2]மாமே. ௨௪

2211 சத்தி [3]யிராகத்திற் [4]றானல் லுயிராகி
ஒத்துறு பாச மலமைந்தோ டாறுறு
தத்துவ பேதஞ் சமைத்துக் கருவியும்
வைத்தனன் ஈசன் [5]மலமறு மாறே. ௨௫

2212 சாக்கிரா தீதத்தி லாணவந் தன்னுண்மை
சாக்கிரா தீதந் [6]துரியத்திற் றானுறச்
சாக்கிரா [7]தீதத்தில் ஆணவந் தான்விடாச்
சாக்கிரா தீதம் பரனுண்மை தங்குமே. ௨௬

2213 மலக்கலப் பாலே மறைந்தது சத்தி
மலக்கலப் பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப் பாலே [8]மறைந்தனன் தானு
மலக்கலப் [9]பற்றான் மதியொளி யாமே. ௨௭

2214 திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி [10]நான்கு
[11]வகைக்கின்ற நெஞ்சினுள் [12]ஆனைக்கன் றைந்து
[13]பகைக்கின்ற நெஞ்சுக்குப் பாலிரண் டாமே. ௨௮

2215 [14]சுதறு பதினெட்டுக் [15]கண்களும் போகச்
சிதறி எழுந்திடுஞ் சிந்தையை நீரும்
விதறு படாமுன்னம் மெய்வழி நின்றால்
அதிர வருவதோர் ஆனையு மாமே. ௨௯

2216 நனவகத் தேயொரு நாலைந்தும் [16]வீடக்
கனவகத் தேயுட் கரணங்க ளோடு
முனவகத் தேநின் [17]றுதறியுட் புக்கு
நினைவகத் தின்றிச் சுழுத்திநின் றானே. ௩0

பா - ம்—[1]இருட்சட. [2]லாமே. [3]யராகத்திற்; விகாரத்திற். [4]றான்பல், [5]மயமறு. [6]துரியத்துத்தானுஞ். [7]தீதமாணவ மிடைத் தான்விடச். [8]மறைந்தனன் தானும். [9]பாற்றான்; பாற்றால். [10]நாலும். [11]அசைக்கின்ற; பகைக்கின்ற. [12]ஆனைகளைந்து. [13]பசைக்கின்ற... [14]கவறு. [15]கணங்களும். [16]வீடாக். [17]றுதறியுள்.

2217 நின்றவன் ஆசான் நிகழ்துரி [1]யத்தனாய்
ஒன்றி யுலகின் நியமாதிக ளுற்றுச்
சென்று துரியாதி தத்தே சிலகாலம்
நின்று பரனாய் நின்மல [2]னாமே. ௩௧

2218 ஆனவவ் வீசன் அதீதத்தில் [3]வித்தையாத்
தானுல குண்டு சதாசிவ மாசத்தி
மேனிகள் ஐந்தும்போய் விட்டுச் [4]சிவமாகி
மோன [5]மடைந்தொளி மூலத்த னாமே. ௩௨

2219 மண்டல மூன்றினுள் மாயநன் னாடனைக்
கண்டுகொண் டுள்ளே [6]கருதிக் கழிகின்ற
விண்டலர் தாமரை [7]மேலொன்றுங் [8]கீழாகத்
தண்டமுந் தானா யகத்தினுள் [9]ளாமே. ௩௩

2220 போதறி யாது [10]புலம்பின [11]புள்ளின
மாதறி யாவகை நின்று மயங்கின
வேதறி [12]யாவணம் நின்றனன் [13]எம்மிறை
[14]சூதறி வாருச்சி சூடிநின் [15]றாரே. ௩௪

2221 கருத்தறிந் தொன்பது கண்டமும் ஆங்கே
பொருத்தறிந் [16]தோன்புவ னாபதி நாடித்
திருத்தறிந் தேன்மிகு தேவர் பிரானை
வருத்தறிந் தேன்மன மன்னிநின் றானே. ௩௫

2222 ஆன விளக்கொளி தூண்டு மவனென்னத்
தான விளக்கொளி யாமூல சாதனத்
தான விதிமூலத் [17]தானத்தில் அவ்விளக்
[18]கேனை மதிமண் டலங்கொண் [19]டெரியுமே. ௩௬

பா - ம்—[1]யத்தனாம். [2]னாகுமே. [3]வித்தையத்; வித்தையாய்த். [4]சிவமாக்கி. [5]மடைந்துயர். [6]கருத்துக். [7]மேலொன்று கீழாக வண்டமுக். [8]கீழகத். [9]ளானே. [10]நின்று புலம்பின. [11]தள்ளான. [12]யாவண்ணம்; யாவனம். [13]எம்மைத் தூதறி. [14]தூரறி. [15]றானே. [16]தேன்புவ. [17]தனதில்லம் விளக்கி; தனதில்லை அவ்விளக்; தனதில்லை வவ்விளக். [18]ஏனை. [19]டேயெறியுமே.

2223 உண்ணாடும் ஐவர்க்கு மண்ணாடை யொதுங்கிய
[1]விண்ணாடு நின்ற வெளியை வினவுறில்
அண்ணாந்து [2]பார்த்தைவர் கூடிய [3]சந்தியிற்
கண்ணாடி காணுங் கருத்ததென் றானே. ௫௭

2224 அறியாத [4]வற்றை அறிவான் அறிவான்
[5]அறிவான் அறியாதான் தன்னறி வாகான்
அறியா [6]தவத்தை அறிவானைக் கூட்டி
அறியா தறிவானை யாரறி வாரே. ௫௮

2225 துரிய தரிசனஞ் சொற்றோம் [7]வியோமம்
அரியன தூடண [8]மந்நன வாதி
பெரியன [9]கால பரம்பிற் றுரியம்
[10]அரிய அதீதம் அதீதத்த தாமே. ௫௯

2226 மாயையிற் [11]சேதனன் மன்னும் பகுதியோன்
மாயையின் மற்றது நீவுதன் மாயையாங்
கேவல மாகுஞ் [12]சகலமா [13]யோனியுள்
தோயும் மனிதர் துரியத்துட் சீவனே. ௬௰

எ. *கேவல சகல சுத்தம்

2227 தன்னை யறிசுத்தன் [14]றற்கேவ லன்றானும்
பின்னை முறநின்ற பேத சகலனும்
மன்னிய [15]சத்தசத் துச்சத சத்துடன்
[16]துன்னுவர் தத்தந் தொழிற்கள வாகவே. க

---

* இத்தலைப்பு ஒரு பிரதியில் கேவல சகல சுத்தாதி என்றுளது.

பா - ம்—[1]விண்ணாட்டு. [2]பார்த்தவர் ; பார்த்தையவராக். [3]சத்தியிற். [4]வத்தை. [5]அறியாததன்றி யறியாதான்காண ; அறியாதனனறிவர்காண. [6]தவற்றை. [7]யார்க்கும் ; வியாத்தம். [8]மன்னநனவாதி; மன்னவாதி. [9]காலம். [10]தாமமரிய அதீதத்தாமே. [11]சேதன. [12]சகலமாம். [13]யோனிபுக்குத் ; யோன்புக்குத். [14]நற்கேவ. [15]சத்துச் சதசத்துச் ; சத்துச் சதாசத்துச். [16]உன்னுவர் ; துன்னு வாத்தங்.

2228 தானே தனக்குப் [1]பகைவனும் நட்டானுந்
தானே தனக்கு மறுமையும் இம்மையுந்
தானே தான்செய்த வினைப்பயன் [2]துய்ப்பானுந்
தானே [3]தனக்குத் தலைவனு மாமே. உ

2229 ஆமுயிர் கேவல மாமாயை [4]இன்னடந்
[5]தாமுயிர் மாயை [6]எறிப்ப [7]அறிவுற்றுக்
காமிய [8]மாயேய [9]முங்கல வாநிற்பத்
தாமுறு [10]பாசஞ் சகலத்த தாமே. ௩

2230 சகல அவத்தையிற் சார்ந்தோர் சகலர்
[11]புகலு மலமு வகையும் புணர்ந்தோர்
நிகரின் மலரோன்மா [12]னீடுபல் தேவர்கள்
[13]நிகழ்நரர் கீட [14]மந்தமு மாமே. ௪

2231 தாவிய மாயையில் தங்கும் [15]பிரளய
மேவிய மற்ற [16]துடம்பாய்மிக் குள்ளன
[17]ஓவல் இலக்கணர் ஒன்றிய சீகண்டர்
[18]ஆவயி னூறமெட் டுருத்திர [19]ராமே. ௫

2232 ஆகின்ற கேவலத் [20]தாணவத் தானவ
ராகின்ற வித்தேச ராமனந் [21]தாதிய
ராகின்ற எண்மர் எழுகோடி மந்திர
ராகின்ற ஈசர் அநேகரு [22]மாமே. ௬

2233 [23]ஆமவ ரிற்சிவ னாருள் பெற்றுளோர்
போமலந் தன்னாற் [24]புகழ்விந்து நாதம்விட்

பா - ம்—[1]பகையனும் ; பகையென்ன. [2]துய்த்தலால். [3]தனக்குக் கருவனு ; ...கருமமு. [4]யிடைந். [5]தாயுமுயிர். [6]எழுப்ப. [7]அறிவுறக். [8]மாநேய. [9]முகங்கல. [10]மாமறைவற்ற சகலததே. [11]புகல் ; புகலா. [12]னீடுமலத் தேவர். [13]அகலு காரகட மந்தத்த தாமே ; நிகழு நாற். [14]மைந்தற்ற தாமே. [15]பிரளையா ; பிரளயமாம். [16]துடம்பாக மிக்குள. [17]ஒவவில் கன்மத்தர் ; ஒவிய விலக்கணம். [18]ஆமயெவை யின். [19]ராகுமே ; வென்பவே. [20]தாணுவத் தானுளர். [21]தராதியர் ; தாதிபர். [22]ராகுமே. [23]ஆமா றிற்சிவ. [24]புகல்விந்து.

டோமய [1]மாகி யொடுங்கலி னின்மலந்
[2]தோமறு சுத்தா வவத்தைத் [3]தொழிலே. எ

2234 [4]ஓரினு மூவகை நால்வகை [5]யும்முள
தேரி [6]லிவைகே வலமாயை [7]சேரிச்சை
சாரிய [8]லாயவை [9]தாமே தணப்பவை
[10]வாரிவைத் தீசன் மலமறுத் தானே. அ

2235 [11]பொய்யான போதாந்த மாறாறும் விட்டகன்
றெய்யாமை நீங்கவே [12]எய்தவன் தானாகி
மெய்யாஞ் சராசர மாய்வெளி தன்னுட்புக்
கெய்தாம லெய்துஞ்சுத் தாவத்தை [13]யென்பதே. கூ

2236 [14]அனாதி பசுவியாத்தி யாகு மிவனை
அனாதியில் [15]வந்த மலம்ஐந்தால் ஆட்டி
அனாதியிற் கேவல [16]மச்சக லத்திட்டு
அனாதி பிறப்பறச் சுத்தத்து ளாகுமே. க0

2237 [17]அந்தரஞ் சுத்தாவத் தைகே வலத்தாறு
[18]தந்தோர்தஞ் [19]சுத்தகே [20]வலத்தற்ற தற்பரத்
[21]தின்பால் துரியத் திடையே யறிவுறத்
தன்பால் தனையறி தத்துவந் தானே. கக

2238 ஐயைந் தொடுங்கும் ஆன்மாவில் ஆன்மாவும்
மெய்கண்டு சுத்த [22]அவத்தையில் வீடாகுந்
[23]துய்யவவ் வித்தை முதன்மூன் றுந் தொல்சத்தி
[24]ஐய [25]சிவஞ்சித்தி [26]யாந்தோற்ற மவ்வாறே. கஉ

பா - ம்—[1]மாக வொடுங்கலி னின்மலர். [2]தாமறு சுத்தவத்தைத் தொழில்தானே. [3]தொழிலோ ரே. [4]ஓரிலனு. [5]யுள. [6]லிவையே; லவைகே. [7]சேரிச்சையும். [8]ல்பாயவை. [9]தானே. [10]பாரிலொரு தன்மையாம் பலசத்தியோ. [11]மெய்யான. [12]வெய்யவன்; ஏதவன். [13]யென்பவே. [14]அனுமதி பரன்வியாத் தத்தாகு. [15]விந்து; வந்து. [16]த்தற் சகலத் திட்டனாதி. [17]அந்தர சுத்தவத். [18]தந்ததோர்தஞ். [19]சுத்த வத்தைகே. [20]வலததற் பரத். [21]தின்பானு மேவிடை யேயறிவுற்றன் பாரற்ற. [22]அவத்தை. [23]துய்ய வவத்தை; துய்ய விவத்தை. [24]ஐயஞ். [25]சிவஞ்சத்தி. [26]யரன்.

2239 ஐயைந்து மான்மாவில் [1]ஆறே டடங்கிடு
மெய்கண்ட மேன்மூன்று [2]மேவுமெய் யோகத்தில்
கைகண்ட சத்தி சிவபாகத் தேகாண
[3]எய்யும் படியடங் குந்நாலேழ் எய்தியே. கங

2240 ஆணவத் தாரொன் றறியாத கேவலர்
பேணிய மாயைப் பிரளயா [4]கலராகுங்
காணும் உருவினர் காணுமை [5]காண்பவே
பூணுஞ் [6]சகலர்முப் [7]பாசமும் புக்கோரே. கச

2241 ஆணவ மாகும் விஞ்ஞான கலருக்குப்
பேணிய மாயை பிரளயா [8]கலருக்கே
ஆணவ மாயையுங் [9]கன்ம மூன்றுமே
காணுஞ் சகலர்க்குக் காட்டு மலங்களே. கரு

2242 கேவலந் தன்னிற் கிளர்ந்தவிஞ் [10]ஞாகலர்
கேவலந் தன்னிற் [11]கிளர்விந்து சத்தியால்
ஆவயிற் [12]கேவலத் தச்சக லத்தையும்
மேவிய மந்திர [13]மாமாயை மெய்ம்மையே. கசு

2243 மாயையின் மன் னும் பிரளயா கலர்வந்து
மாயையுந் தோன்று வகைநிற்க [14]ஆணவ
[15]மாய சகலத்துக் காமிய [16]மாமாயை
ஏயமன் னூற்றெட் டுருத்திரர் என்பவே. கஎ

2244 [17]மும்மலங் கூடி முயங்கி மயங்குவோர்
[18]அம்மெய்ச் சகலத்தர் [19]தேவர் சுரர்நரர்
மெய்ம்மையில் வேதா [20]விரிமிகு [21]கீடாந்தத்
தம்முறை [22]யோனிபுக் கார்க்குஞ் சகலரே. கஅ

பா - ம்—[1]ஆறெட். [2]மேவுமே ; மேருமெய். [3]எய்தும். [4]கலர் தம்மைக். [5]காணவே. [6]சகலமும். [7]பாசம். [8]கலராகும் ; காலராம். [9]கன்மமம். [10]ஞானகலர். [11]கிளர்விந்துச். [12]கேவல சுத்தா சகலவத்தை யும் ; கேவலத் தத்சக. [13]மாயேய ; மாய ; ராமெணமா. [14]வாணறு. [15]மாயைச். [16]மகாமாயை ; மாகவே. [17]மும்மல மைம்மலங் கூடி முயங்குவோர். [18]செம்மைச். [19]தேவர. [20]வரிமிகு. [21]கீடாந்த மம் முறை. [22]யோனிக ளாகுஞ்.

2245 சுத்த [1]அவத்தையில் [2]தோய்ந்தவர் [3]மும்மலச்
[4]சத்தசத் தோடத் [5]தனித்தனி பாசமும்
மத்த இருள்சிவ ஞன [6]கதிராலே
தொத்தற விட்டிடச் [7]சுத்தரா வார்களே. கக

2246 தற்கே [8]வலம்முத்தி தானே தனிமையாம்
பிற்பாற் சகலங் கலாதிப் [9]பிறிவதாஞ்
சொற்பாற் [10]புரிசுத்த [11]கேவலஞ் சாக்கிரந்
தற்பாற் புரிவது தற்சுத்த மாமே. உ0

2247 [12]அறிவின்றி [13]முத்தன் அராகாதி [14]சேரான்
[15]குறியொன்றி லாநித்தன் [16]கூடான் கலாதி
செறியுஞ் [17]செயலிலான் [18]றினங்கற்ற வல்லோன்
[19]கிறியன் [20]மலவியாபி [21]கேவலந் தானே. உக

2248 விந்துவும் மாயையும் மேவுங் கிரியையுஞ்
சந்தத ஞான பரையுந் [22]தனுச்சத்தி
[23]விந்துவின் மெய்ஞ்ஞான மேவும் பிரளயர்
வந்த சகலசுத் தான்மாக்கள் [24]வையத்தே. உஉ

2249 கேவல மாதியிற் பேதங் [25]கிளக்குறிற்
கேவல மூன்றுங் கிளருஞ் சகலத்துள்
ஆவயின் மூன்று மதிசுத்த [26]மூடவே
ஓவவில் லாவொன்பா னுற்றுணர் [27]வோர்கட்கே. உ௩

2250 கேவலத்திற் கேவலம் அதீதா [28]தீதங்
கேவலத் திற்சக [29]லங்கள் வயிந்தவங்

பா - ம்—[1]அவத்தை. [2]தோய்ந்த. [3]மும்மலஞ். [4]சத்தொ டசத்துந் தணந்தவப் பாசமா. [5]தனித்தவை ; தனித்தலே. [6]கதிரா லொத்தறி. [7]சுத்தான்மா வாவரே. [8]வலமுத்தி. [9]பிறழ்தலாஞ் ; பிறிதாஞ். [10]பரிசுத்த ; புரிசுத்தங். [11]கேவல சாக்கிரத் ; கேவல மான்மாவுக் கப்பாற் புரிய வதிசுத்த. [12]அறிவன்றி. [13]மூத்தோன் ; மூத்தான். [14]சேரோன். [15]குறியொன்றி லாதிததன் ; குறியொன்றி லானித்தன். [16]கூடோன். [17]செயலோன் ; செயலிலோன். [18]றினகத்தா ; றிணகத்த. [19]இறிகையில் ; கிறியில். [20]மலன் வியாபி. [21]கேவலத்தோனே. [22]தனுசத்தி. [23]விந்துவி லஞ்ஞானர். [24]வைகவே. [25]கிளர்குன்றிற். [26]மூன்றுடன் ; மூன்றதே. [27]வோர்க்கே. [28]தீதமாங். [29]லங்கிளரும் ; லங்கிளரும் வரைத்தது.

கேவலத் [1]திற்சுத்தங் கேடில்விஞ் [2]ஞாகலர்க்
காவயி ஞதன் [3]அருண்மூர்த்தி தானே. ௨௪

2251 சகலத்திற் கேவலஞ் சாக்கிரா தீதஞ்
சகல சகலமே சாக்கிர சாக்கிரஞ்
சகலத்திற் சுத்தமே தற்பரா [4]வத்தை
சகலத்தில் இம்மூன்று தன்மையு மாமே. ௨௫

2252 சுத்தத்திற் சுத்தமே [5]தொல்சிவ மாகுதல்
*சுத்தத்திற் கேவலந் தொல்லுப சாந்தமாஞ்
சுத்த சகலந் துரிய விலாசமாஞ்
சுத்தத்தில் இம்மூன்றுஞ் சொல்லலு மாமே. ௨௬

2253 சாக்கிர சாக்கிரந் தன்னிற் [6]கனவொடுஞ்
சாக்கிரந் தன்னிற் சுழுத்தி துரியமே
சாக்கிரா [7]தீதந் [8]தனிற்சுகா னந்தமே
[9]ஆக்கு [10]மறையாதி [11]ஐம்மல பாசமே. ௨௭

2254 சாக்கிரா தீதத்திற் [12]ருனறு மாணவஞ்
சாக்கிரா தீதம் [13]பராவத்தை தங்காது
[14]ஆக்கு பரோபாதி [15]யாஉப சாந்தத்தை
நோக்கு மலங்குண [16]நோக்குத லாகுமே. ௨௮

2255 பெத்தமும் முத்தியும் [17]பேணுந் துரியமுஞ்
சுத்த [18]வதீதமுந் தோன்றமற் [19]றனுணும்
அத்தன் அருளென் [20]றருளால் அறிந்தபின்
சித்தமும் இல்லை செயலில்லை தானே. ௨௯

* ஒரு பிரதியில் இவ்வடியும் அடுத்ததும் பின் முன்னுக வந்துள்ளன.

பா - ம்—[1]திற்சுத்தமே. [2]ஞானகலர்க். [3]அருண்முத்தி. [4]வவத்தை. [5]சொல்சிவ [6]கனவோடு. [7]தீதாரங். [8]தன்னிற் சுகா ; தன்னிற் சகா. [9]லாக்கு. [10]பரையாதி. [11]ஐம்மலப் ; ஐமலம். [12]ருன்று. [13]பராவவத்தை தங்காதே. [14]ஆக்கும். [15]யாமுப. [16]நோறு தகலுமே ; நோக்குற. [17]பேணுஞ் சகலமுஞ். [18]வதீதமாகத் தொழில்செய்த. [19]ருனும். [20]றறிவா லறிந்தோர்க்குச்.

சூக்கும மான வினையைக் கெடுக்கலாஞ்
[1]சூக்கும மான [2]சிவன தா னந்தமே. உகூ

910 ஆனந்தம் ஆனந்தம் ஒன்றென் றறைந்திட
ஆனந்தம் ஆனந்தம் ஆ-ஈ-ஊ-ஏ-ஓமென் [3]றைந்திடம்
ஆனந்தம் ஆனந்தம் [4]அஞ்சும தாயிடும்
ஆனந்தம் ஆனந்தம் [5]அம்-ஹ்ரீம்-[5]அம்-க்ஷம்-ஆம்-ஆகுமே.

911 மேனி யிரண்டும் [6]விலங்காமல் மேல்கொள்ள
மேனி யிரண்டு [7]மிகார விகாரியா
மேனி யிரண்டும் ஊ-ஆ-ஈ-ஏ-ஓ-என்னும்
மேனி யிரண்டும்-ஈ-ஓ-ஊ-ஆ-ஏ-கூத்தாமே. உஅ

912 கூத்தே சிவாய [8]நமமசி வாயிடுங்
கூத்தே-ஈ-ஊ-ஆ-ஏ-ஓம்-சிவாயநம வாயிடுங்
கூத்தே-ஈ-ஊ-ஆ-ஏ-ஓம்-சிவயநம வாயிடுங் [மாறே
கூத்தே-இ-ஊ-ஆ-ஏ-ஓம் நமசிவாய கோளொன்று

913 [9]ஒன்றிரண் டாடவோ ரொன்று முடனாட
ஒன்றினின் மூன்றாட ஓரேழும் ஒத்தாட
[10]ஒன்றினால் ஆடவோர் [11]ஒன்பதும் உடனாட
மன்றினில் ஆடினான் மாணிக்கக் கூத்தே. ௩0

உ. திருவம்பலச் சக்கரம்

914 இருந்தஇவ் [12]வட்டங்கள் ஈராறி ரேகை
இருந்த இரேகைமேல் ஈரா றிருத்தி
இருந்த [13]மனைகளும் ஈராறு பத்தொன்
றிருந்த மனையொன்றில் எய்துவன் றானே. க

915 தானொன்றி வாழிடந் தன்னெழுத் தேயாகுந்
தானொன்று [14]மந்நான்குந் தன்பே ரெழுத்தாகுந்

பா - ம்—[1]சூக்கமதான. [2]சிவன்தா னனைந்தே. [3]றறைந்திடம். [4]அஞ்சுமஞ்சுமா மாயிடும்; அஞ்சுமாய்விடு மானந்தம். [5]ஆம். [6]விளங்காமல். [7]மிக்கார. [8]நமசி. [9]ஒன்றிவிரண். [10]ஒன்றினில் நாலாட. [11]ஒன்பதுமாட. [12]விடங்கள். [13]மனைக்கும். [14]மைஞ்ஞான்குந்.

2256 எய்திய பெத்தமும் முத்தமும் என்பன
எய்தும் அரனரு[1]ளேவிளை யாட்டோ
[2]டெய்தி டுயிர்சுத்தத் திடுநெறி என்னவே
எய்தும் [3]உயிரிறை பாலறி வாமே. ௫௦

2257 ஐம்மலத் [4]தாரு மதித்த சகலத்தர்
ஐம்மலத் [5]தாரு மருவினைப் [6]பாசத்தார்
[7]ஐம்மலத் தார்சுவர்க் [8]கந்நெறி யாள்பவர்
ஐம்மலத் [9]தாரர ணார்க்கறி வோரே. ௫௧

2258 கருவி லதீதங் [10]கலப்பிக்கு மாயை
அரிய [11]துரிய மதிலுண்ணும் [12]ஆசையும்
[13]உரிய சுழுனை முதலெட்டுஞ் சூக்கத்
தரிய கனைத்தூலம் அந்நன [14]வாமே. ௫௨

2259 ஆணவ மாகும் [15]அதீதமேன் மாயையும்
பூணுந் துரியஞ் சுழுத்திபொய்க் காமியம்
பேணுங் [16]கனவும் மாமாயை திரோதாயி
காணு [17]நனவில் மலக்கலப் பாகுமே. ௫௩

2260 [18]அரன்முத லாக அறிவோன் [19]அதீதத்தன்
[20]அரன்முத [21]லாமாயை தங்கிச் சுழுனை
கருமம் உணர்ந்து [22]மாமாயைக் கைக்கொண்டோர்
[23]அருளு மறைவார் சகலத்துற் றோரே. ௫௪

2261 உருவுற்றுப் போகமே [24]போக்கியந் துற்று
[25]மருவுற்றுப் பூதம [26]ளுதியான் மன்னி

பா - ம்—[1]ளேயா விளை. [2]டெய்தி யிடுமுயிர் சுத்தத் திடுநெறி [3]உயிர்நின்ற. [4]தாராமதி சகலத்தவர்; தாருமச் சகலத்தவர். [5]தாரா. [6]பாசத்தர். [7]உய்ம்மலத். [8]க நரகாள்பவர்; க நரகாழ்பவர். [9]தார்நாற் குணத்தறி; தார்நால் வகையறி. [10]கலப்புக்கு. [11]துரியத்தி லுண்ணு மரசை. [12]ஆசை. [13]முருவில் பகுதி முயலெட்டுஞ். [14]வாகுமே. [15]அதீதத்து. [16]கனவு மாயேயந்; கனவு பெருந். [17]நனவிம். [18]அரண முதலாகும். [19]அதீதத் தரன்முதல் மாயை. [20]அரமுத. [21]லாய மாயை. [22]மாயேயக் களுக்கண்; மாயைக் களுக்கண்டோர். [23]டொரு மறை வாற்சக லத்துற் றனனே; அருமறை வார்ச். [24]போகியத; யோக்கியத். [25]மருவுத்த. [26]ளுதீதமான; ளுதிமான்.

வருமச் செயல்பற்றிச் [1]சத்தாகி வைகிக்
கருவுற் றிடுஞ்சிவன் காணுஞ் சகலத்தே. ௩௫

2262 இருவினை யொத்திட இன்னருட் சத்தி
மருவிட ஞானத்தில் [2]ஆதன [3]மன்னிக்
குருவினைக் கொண்டருட் சத்திமுன் [4]கூட்டிப்
பெருமல [5]நீங்கிப் பிறவாமை சுத்தமே. ௩௬

2263 ஆறாறு [6]மாறதின் ஐயைந் தவத்தையோ
டீறாறு [7]மதீதத் துரியத் [8]திவனெய்தப்
பேறான [9]ஐவரும் [10]போம்பிர காசத்து
நீறார் பரஞ்சிவ [11]மாதேய மாகுமே. ௩௭

2264 தன்னை யறியா துடலைமுன் தானென்றான்
தன்னைமுன் கண்டான் துரியந் தனைக்கண்டான்
உன்னுந் துரியமும் ஈசனோ டொன்றாக்கால்
பின்னையும் வந்து பிறந்திடுந் தானே. ௩௮

2265 சாக்கிரந் தன்னில் அதீதந் தலைப்படில்
ஆக்கிய வந்த [12]வயிந்தவ மானந்த
[13]நோக்கும் [14]பிறப்பறு நோன்முத்தி சித்தியாம்
வாக்கும் மனமும் மருவல்செய் யாவே. ௩௯

2266 அப்பும் அனலும் அகலத்து ளேவரும்
அப்பும் அனலும் அகலத்து [15]ளேவாரா
அப்பும் அனலும் அகலத்து [16]ளேதெனில்
அப்பும் அனலுங் கலந்தவ் வாறே. ௪௰

2267 [17]அறுநான்கு சுத்தம் [18]அதிசுத்தா சுத்தம்
உறுமேழு மாயை [19]உடனைந்தே சுத்தம்

பா - ம்—[1]சத்தாதி. [2]ஆதார ; ஆதான. [3]மன்னவே. [4]கூட்டப். [5]நீக்கிப். [6]மாற்றின். [7]றதீதத் ; வதீதத். [8]திவனெனப். [9]ஐவருமோடிப்பிர. [10]யோமப்பிர சாததது. [11]மாவேத. [12]வசிந்தமா. [13]நோக்கு. [14]பிறப்பற்றும். [15]ளேவர. [16]ளேயொன்றில். [17]அறுநான்க சுதத்ம். [18]அதிற்சுத்த. [19]உடனணைந்தே.

பெறுமா [1]றிவைமூன் றுங் கண்டத்தாற் பேதித்
[2]துறுமாயை மாமாயை யான்மாவி னேடே.　　௪௧

2268 [3]மாயைகைத் தாயாக மாமாயை யீன்றிட
வாய [4]பரசிவன் [5]தந்தையாய் நிற்கவே
ஏயும் உயிர்க்கே வலசகலத் தெய்தி •
ஆய்தரு சுத்தமுந் தான்வந் தடையுமே.　　௪௨

அ. *பராவத்தை

2269 [6]அஞ்சுங் கடந்த அனாதி பரந்தெய்வ
நெஞ்சம [7]தாய நிமலன் பிறப்பிலி
விஞ்சும் உடலுயிர் வேறு [8]படுத்திட
[9]வஞ்சத் [10]திருந்த வகையறிந் தேனே.　　௧

2270 சத்தி பராபரஞ் சாந்தி தனிலான
சத்தி [11]பரானந்தந் தன்னிற் [12]சுடர்விந்து
* மூன்று பிரதிகளில் இச்செய்யுளை யடுத்து, 'சன்மார்க்க சாதனந்தான் ஞானஞேயமாம், துன்மார்க்க சதானமாகுந் தொடக்கத்து [தொடக்கது] பின்மார்க்கம் வேண்டாம் பிதற்றவும் வேண்டாவாம் [வேண்டாவால்], சொன்மார்க்கம் வேண்டாவாம் [கைவிட்ட] சுத்த வானந்தர்க்கே,என்ற செய்யுள் எழுதப்பட்டுளது. இதனை 1483 முதலிய செய்யுள்களோடு ஒப்புநோக்குக.

பா - ம்—1வேறுள ; பேறுள்ளதாமே. [2]மருவப். [3]யாளெனங்கள். [4]நினைக்ஙனின். [5]லார்க்குக். [6]அருவிக். [7]அடியார் ; அடியவராகத்தே. [8]அலைப்படு. [9]நினைபவர். [10]சுனைக்குவளை மலர்ச் ; சுனைக்குமவளை மலர்ச். 11னேனுங். [12]தனத்தை. [13]மத்தடைக். [14]தாருயர்ந். [15]விதி யொன்று. [16]கால் நின்ற. [17]நிகழ் வொழிந்.

திகழ்வொழிந் தார்தங்கள் சிந்தையி னுள்ளே
புகழ்வழி காட்டிப் புகுந்துநின் றானே. கச

2670 வந்த மரகத மாணிக்க [1]ரேகைபோற்
[2]சந்திடு மாமொழிச் [3]சற்குரு சன்மார்க்கம்
இந்த இரேகை யிலாடத்தின் மூலத்தே
சுந்தரச் [4]சோதியுட் சோதியு மாமே. கரு

2671 [5]உண்ணும் வாயும் உடலும் உயிருமாய்க்
கண்ணுமா யோகக் கடவுள் இருப்பது
மண்ணு [6]நீரனல் [7]காலொடு வானுமாய்
விண்ணு மின்றி [8]வெளியானோர் மேனியே. கசு

2672 [9]பரசு பதியென்று பார்முழு தெல்லாம்
[10]பரசிவ னாணை நடக்கும் [11]பாதியாற்
பெரிய பதிசெய்து [12]பின்னும் அடியார்க்
[13]குரிய பதிபும்பா [14]ராக்கிநின் றானே. கஎ

2673 அம்பர [15]நாதன் அகலிட நீள்பொழில்
தம்பர [16]மல்லது தாமறி [17]யோம்என்பர்
உம்பருள் வானவர் தானவர் [18]கண்டிலர்
எம்பெரு மானருள் பெற்றிருந் தாரே. கஅ

2674 கோவணங் கும்படி கோவண [19]மாகிப்பின்
நாவணங் கும்படி நந்தி [20]யருள்செய்தான்
தேவணங் கோமினிச் [21]சித்தந் தெளிந்தனம்
போய்வணங் கும்பொரு ளாயிருந் தோமே. ககூ

பா - ம்—[1]ரேகை போய்ச். [2]சந்தித்திடு மொழிச். [3]சற்குருச். [4]சோதியுடன். [5]உண்ண. [6]நீருமனல். [7]காலும். [8]வெளியான. [9]பரிசு. [10]பரிசவ. [11]பதியிற். [12]பின்னும். [13]கருளிய. [14]ர்க்கரின் ; ர்க்கினின். [15]ந்தான். [16]மென்பது. [17]யோ மென்பார். [18]கண்டிலார். [19]மாக்கிப்பின். [20]க்கருள் செய்தான். [21]சத்தங்.

௬. *பிரணவசமாதி

2675 தூலப் [1]பிரணவஞ் சொரூபானந்தப் பேருரை
பாலித்த [2]சூக்கும [3]மேலைச் சொரூபப்பெண்
ஆலித்த [4]முத்திரை யாங்கதிற் [5]காரணம்
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே. க

2676 [6]ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
[6]ஓமெனும் ஓங்காரத் துள்ளே [7]யுருவரு
[6]ஓமெனும் ஓங்காரத் துள்ளே [8]பலபேதம்
[6]ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே. உ

2677 ஓங்காரத் துள்ளே யுதித்தஐம் பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
[9]ஓங்காரா தீதத் துயிர்மூன் றும் உற்றன
[10]ஓங்கார [11]சீவ பரசிவ ரூபமே. ௩

2678 வருக்கஞ் [12]சுகமாம் பிரமமு மாகும்
அருக்கஞ் சராசர மாகும் உலகில்
தருக்கிய வாதார [13]மெல்லாந்தன் மேனி
[14]சுருக்கமின் ஞானந் தொகுத்துணர்ந் [15]தோரே. ச

2679 மலையு [16]மனோபவ [17]மருள்வன வாவன
[18]நிலையிற் றரிசனம் தீப நெறியாந்
தலமுங் குலமுந் தவஞ்சித்த மாகும்
நலமுஞ்சன் மார்க்கத் துபதேசந் தானே. ரு

2680 சோடச மார்க்கமுஞ் சொல்லுஞ்சன் மார்க்கிகட்
காடிய [19]வீராறின் அந்தமும் [20]ஈரேழிற்

---

* ஒரு பிரதியில் இத்தலைப்பு பிரணவம் என்றுளது.

பா - ம்—[1]பிரணவமச். [2]சூக்கம. [3]மேகலைச். [4]முத்திராந்த மாங் கதிற். [5]சூக்கம ; சூக்க. [6]ஓ மென்னும். [7]யருவுரு ; யுளபேதம். [8]யுரு வரு ; பல்பேதம். [9]ஓங்கார. [10]ஓங்காரஞ். [11]சீவன் ; சிவம். [12]சிவ மாம். [13]மெல்லாந் தனதே ;...தனமே. [14]தருக்கமின். [15]தோற்கே. [16]மனோபக. [17]பூதவனமாகும்; மழுத வனமாவன ; ம்முதலனமாம். [18]இலையிற். [19]வீரானறிந்தமும். [20]ஈரெட்டிற்.

கூடிய அந்தமுங் கோதண்ட முங்கடந்
[1]தேறியே [2]ஞானஞே யாந்தத் திருக்கவே. சுா

ச. ஒளி

2681 ஒளியை யறியில் உருவும் ஒளியும்
[3]ஒளியும் உருவம் அறியில் [4]உருவாம்
ஒளியின் [5]உருவம் அறியில் ஒளியே
ஒளியும் உருக வுடனிருந் தானே. க

2682 [6]புகலெளி தாகும் புவனங்கள் எட்டும்
அகலொளி தாயிரு ளாசற [7]வீசும்
[8]பகலொளி செய்தது மத்தா [9]மரையிலே
இகலொளி செய்தெம் பிரானிருந் தானே. உ

2683 விளங்கொளி யங்கி விரிகதிர் சோமன்
துளங்கொளி [10]பெற்றன சோதி யருள
வளங்கொளி [11]பெற்றதே பேரொளி வேறு
களங்கொளி [12]செய்து கலந்துநின் றானே. ௩

2684 [13]இளங்கொளி யீசன் பிறப்பொன் று [14]மில்லி
துளங்கொளி ஞாயிறுந் திங்களுந் [15]கண்கள்
வளங்கொளி [16]யங்கியு மற்றைக்கண் ணெற்றி
விளங்கொளி செய்கின்ற [17]மெய்காய மாமே. ச

2685 மேலொளி [18]கீழதன் மேவிய மாருதம்
[19]பாலொளி யங்கி பரந்தொளி யாகாசம்
நீரொளி செய்து நெடுவிசும் பொன்றிலும்
[20]மேலொளி யைந்தும் ஒருங்கொளி யாமே. ரு

பா - ம்—[1]தேறிய. [2]ஞானநே ; ஞானயேகாந்தத். [3]ஒழியும். [4]உருவும். [5]உருவும். [6]புகளொளி. [7]வீசப். [8]புகளொளி செய்து. [9]மரையில்லே. [10]பெற்றது. [11]பெற்றதென். [12]சென்று. [13]இளங்கிளை ; இளங்கிழை. [14]மில்லைத். [15]காண. [16]யாகியு. [17]மெய்க்காய. [18]கீழதின் ; கீழ்நில. [19]பாரொளி. [20]ஓரொளி.

2686 [1]மின்னிய [2]தூவொளி [3]மேதக்க செவ்வொளி
பன்னிய ஞானம் பரந்த பரத்தொளி
துன்னிய வாறொளி [4]தூய்மொழி நாடொறும்
உன்னிய வாறொளி [5]யொத்தது தானே. ௬

2687 விளங்கொளி மின்னொளி யாகிக் கரந்து
துளங்கொளி யீசனைச் சொல்லுமெப் போதும்
உளங்கொளி [6]யூனிடை நின்றுயிர்க் கின்ற
வளங்கொளி எங்கும் மருவிநின் றானே. ௭

2688 விளங்கொளி யவ்வொளி யவ்விருள் [7]மன்னுந்
துளங்கொளி யான்தொழு வார்க்கும் ஒளியான்
[8]அளங்கொளி யாரமு [9]தாகஞ் சாருங்
களங்கொளி யீசன் கருத்தது தானே. ௮

2689 இலங்கிய தெவ்வொளி யவ்வொளி யீசன்
[10]துலங்கொளி போல்வது தூங்கருட் சத்தி
விளங்கொளி மூன்றே விரிசுடர் தோன்றி
உளங்கொளி யுள்ளே யொருங்குகின் றானே. ௯

2690 [11]உளங்கொளி யாவதென் உள்நின்ற சீவன்
[12]வளங்கொளி யாநின்ற மாமணிச் சோதி
விளங்கொளி யாய்மின்னி விண்ணில் ஒடுங்கி
வளங்கொளி [13]யாயத்து [14]ளாகிநின் றானே. ௧௦

2691 விளங்கொளி யாய்நின்ற விகிர்தன் இருந்த
துளங்கொளி [15]பாசத்துள் தூங்கிருள் [16]சேராக்
களங்கிருள் [17]நட்டமே கண்ணுத [18]லாட
விளங்கொளி யுன்மனத் தொன்றிநின் றானே. ௧௧

பா - ம்—[1]மின்னின. [2]தூயொளி. [3]மேதகச். [4]தூயொளி. [5]முத்தொத்துத் ; த்தொத்தது. [6]யூனிடையே. [7]மின்னுந். [8]நளங்கொளி ; நலங்கொளி. [9]தாகுகஞ். [10]துளங் கொளி. [11]நலங் கொளி. [12]உளங்கொளியாய் நின்ற. [13]யாமைத்து ; யாயத்துவ ளாகநின். [14]வளர்கின்றவாறே. [15]யாசத்துள். [16]சோரக். [17]நாட்டமே. [18]லாடத் துளங்கொளி ; லாடி யுளங் கொளி.

2692 போது கருங்குழற் போனவர் [1]தூதிடை
ஆதி பாதத்தை அமரர் பிரானொடுஞ்
சோதியும் அண்டத்தப் பாலுற்ற [2]தூவொளி
நீதியி னல்லிருள் நீக்கிய வாறே. ௧௨

2693 உண்டில்லை [3]யென்னும் உலகத் [4]தியல்லது
பண்டில்லை [5]யென்னும் [6]பரங்கதி [7]யுண்டுசொல்
கண்டில்லை [8]மானுடர் கண்ட கருத்துறில்
விண்டில்லை யுள்ளே விளக்கொளி யாமே. ௧௩

2694 சுடருற ஓங்கிய [9]ஒள்ளொளி யாங்கே
படருறு காட்சிப் பகலவன் ஈசன்
அடருறு மாயையி [10]னாரிருள் வீசில்
உடலுறு ஞானத் [11]துறவிய னாமே. ௧௪

2695 ஒளிபவ ளத்திரு [12]மேனிவெண் ணீற்றன்
அளிபவ ளச்செம்பொன் ஆதிப் பிரானுங்
களிபவ [13]ளத்தினன் காரிருள் [14]நீங்கி
ஒளிபவ [15]ளத்தென்னோ டீசனின் றானே. ௧௫

2696 ஈசனின் றானிமை யோர்கள்நின் றார்நின்ற
தேசமொன் [16]றின்றித் [17]திகைத்திழைக் கின்றனர்
பாசமொன் றாகப் பழவினைப் பற்றற
வாசமொன் றாமலர் போன்றது தானே. ௧௬

2697 தானே யிருக்கும் அவற்றில் தலைவனுந்
தானே [18]யிருக்கும் அவனென நண்ணிடும்
[19]வானா யிருக்குமிம் மாயிரு ஞாலத்துப்
பானா யிருக்கப் பரவலு மாமே. ௧௭

பா - ம்—[1]தூடிடை. [2]தூயொளி. [3]யென்றும். [4]தியல்பிது ; தியலிது. [5]யோனும். [6]பரகதி ; பரமகதி. [7]யுண்டு ; கண்டு. [8]மாளிடர். [9]துள்ளொளி. [10]னையிருள் வீசி. [11]தூரவிய. [12]மேனியவெண். [13]ளத்தரன் ; ளத்தன்ன. [14]நீக்கி. [15]ளாந்தனோ. [16]றிக். [17]திகைத் தழைக்கின்றன ; திழைக்கின்ற தேவர்கள். [18]தலைவனுந்தானென. [19]வானரு.

ரு. *தூல பஞ்சாக்கரம்

2698 ஐம்ப தெழுத்தே யனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே யனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை யறிந்தபின்
ஐம்ப [1]தெழுத்தே அஞ்செழுத் தாமே. க

2699 அகார முதலாக ஐம்பத்தொன் றாகி
உகார முதலாக வோங்கி யுதித்து
மகார [2]இறுதியாய் [3]மாய்ந்துமாய்ந் தேறி
நகார முதலாகும் நந்திதன் நாமமே. உ

2700 †அகாராதி யீரெண் [4]கலந்த பரையும்
[5]உகராதி தன்சத்தி யுள்ளொளி யீசன்
சிகாராதி தான்சிவ [6]வேதமே கோண
நகாராதி தான்மூல மந்திர நண்ணுமே. ங

2701 வாயொடு கண்டம் இதய மருவுந்தி
ஆய இலிங்க மவற்றின்மே [7]லேயவ்வாய்த்
தூயதோர் துண்ட [8]மிருமத் [9]தகஞ்செல்லல்
[10]ஆயதி ருமைந்தோ டாமெழுத் தஞ்சுமே. ச

2702 கிரணங்கள் ஏழுங் கிளர்ந்தெரி பொங்கிக்
கரணங்கள் விட்டுயிர் தானெழும் போது
மரணங்கை வைத்துயிர் மாற்றிடும் போது
மரணங்கை [11]கூட்டுவ தஞ்செழுத் தாமே. ரு

2703 ஞாயிறு திங்கள் [12]நவின்றெழு காலத்தில்
ஆயுறு மந்திர மாரும் அறிகிலர்

---

* இரண்டு பிரதிகளில் இத்தலைப்பு **பஞ்சாக்கர தெரிசனத்தில் தூலம்** என்றுளது.

† இரண்டு பிரதிகளில் இச்செய்யுளும் அடுத்ததும் பின் முன்னாக வந்துள்ளன.

பா - ம்—[1]தெழுத்துமோர். [2]இறுதியா ; இறுதிவாய். [3]மாய்ந்துவாய்ந்; மாய்ந்துமனந். [4]மலர்ந்தப். [5]மகராதி. [6]வேதவே. [7]ல் வவ்வாய்த். [8]ம்புருமத்திகஞ் சொல்ல. [9]தகஞ்சொல்வாய். [10]ஆயசிரமைந்தோ; ஆயதீரமைந்தோ. [11]கூடுவ; கூப்புவ. [12]நவின்றெழுங் காலத்து.

பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில்
ஆவிக்குள் மந்திரம் [1]அங்குச மாமே. சசு

960 அருவினில் அம்பரம் அங்கெழு நாதம்
பெருகு துடியிடை பேணிய விந்து
மருவி [2]யகார சிகார நடுவாய்
உருவிட [3]ஆறு [4]முறுமந் திரமே. சஎ

961 விந்துவும் நாதமும் மேவி யுடன்கூடிச்
சந்திர னோடே தலைப்படு மாயிடில்
அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாமே. சஅ

962 ஆறெழுத் தோதும் அறிவார் அறிகிலர்
ஆறெழுத் தொன்றாக ஓதி உணரார்கள்
வேறெழுத் தின்றி விளம்பவல் லார்கட்கு
ஓரெழுத் தாலே உயிர்பெற லாமே. சகூ

963 ஓதும் எழுத்தோ [5]டுயிர்க்கலை மூவைஞ்சும்
ஆதி எழுத்தவை [6]ஐம்பதோ டொன்றென்பர்
சோதி எழுத்தினில் ஐயிரு மூன்றுள
நாத எழுத்திட்டு நாடிக்கொள் ளீரே. ருO

964 விந்துவி லுஞ்சுழி நாதம் எழுந்திடப்
பந்தத் [7]தலையிற் பதினாறு [8]கலைய தாங்
கந்தர [9]வாகரங் காலுடம் [10]பாயினுள்
அந்தமும் [11]இன்றியே ஐம்பத்தொன் [12]றாயதே. ருக

965 *ஐம்ப தெழுத்தே அனைத்தும்வே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தேயு மாவ தறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போய் அஞ்செழுத் தாமே. ருஉ

---

*இச்செய்யுள் நான்கு பிரதிகளில் காணப்படவில்லை.

பா - ம்—[1]அங்கிஷ. [2]யகாரஞ். [3]ஹூறு ; லாறு. [4]மூலமந். [5]டுயிர் கலை மூவைஞ்சில். [6]ஐம்பத்தொ ; ஐம்பத்தொன் றென்பர். [7]தலைவி. [8]கலையதாய்க். [9]வீகாரங் ; விகாரங். [10]பாயினுர். [11]இன்றே. [12]றாமே.

சேயுறு கண்ணி திருவெழுத் தஞ்சையும்
வாயுற வோதி வழுத்தலு மாமே. சு

2704 தெள்ளமு [1]தூறச் சிவாய நமவென்
றுள்ளமு தூற [2]வொருகால் உரைத்திடும்
வெள்ளமு [3]தூறல் விரும்பியுண் ணாதவர்
[4]துள்ளிய நீர்போற் சுழல்கின்ற வாறே. எ

2705 குருவழி [5]யாய குணங்களி னின்று
கருவழி யாய கணக்கை [6]யறுக்க
வரும்வழி மாள மறுக்கவல் லார்கட்
[7]கருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே. அ

2706 [8]வெறிக்க வினைத்துயர் வந்திடும் [9]போது
[10]செறிக்கின்ற நந்தி திருவெழுத் தோதுங்
குறிப்பது [11]வுன்னிற் குரைகழல் கூட்டுங்
குறிப்பறி [12]வான்றவங் கோனுரு வாமே. கூ

2707 நெஞ்சு நினைந்துதம் வாயாற் [13]பிரானென்று
[14]துஞ்சும் [15]பொழுதுன் [16]துணைத்தாள் சரணென்று
மஞ்சு தவழும் [17]வடவரை மீதுறை
[18]அஞ்சில் இறைவன் அருள்பெற லாமே.. கo

2708 பிரான்வைத்த [19]ஐந்தின் பெருமை யுணரா
[20]திராமாற்றஞ் [21]செய்வார்கொல் ஏழை மனிதர்
பராமுற்றுங் கீழொடு பல்வகை யாலும்
அராமுற்றுஞ் சூழ்ந்த [22]அகலிடந் தானே. கக

பா - ம்—[1]தூறிச். [2]வொருக்கால். [3]தூற. [4]துன்னிய. [5]யாயங். [6]யறுத்து. [7]கருவழி. [8]வெறுக்க. [9]போதும். [10]செறிக்கின்ற. [11]வுன்னக் ; வுன்னல் ; வண்ணல். [12]வான்றங். [13]பிரானென்றுங். [14]துன்னும். [15]பொழுதென். [16]துணையே சரணென்னும் ; துணைக்காணீசனு ; துணைக்கான். [17]வடகரை. [18]அஞ்சல். [19]ஐந்தும். [20]ரிராமற்றஞ்; திராமறறஞ். [21]செய்வார்கொள். [22]அலகடந்.

கூ. சூக்கும பஞ்சாக்கரம்

2709 [1]எளிய [2]வாதுசெய் [3]வாரெங்கள் ஈசனை
ஒளியை யுன்னி [4]யுருகு மனத்தராய்த்
தெளிய வோதிச் சிவாய நமவென்னுங்
குளிகை யிட்டுப்பொன் னாக்குவன் கூட்டையே. க

2710 சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
[5]அவஞ்சேர்த்த [6]பாச [7]மலமைந் தகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனார் [8]சேர
[9]அவஞ்சேர்த்த பாசம் அணுககி லாவே. உ

2711 [10]சிவனரு [11]ளாய் சிவன்திரு [12]நாமஞ்
[10]சிவனரு [13]ளான்மாத் திரோத [14]மலமாயை
[15]சிவன்முத லாகச் சிறந்து [16]நிரோதம்
பவம தகன்று பரசிவ னாமே. ங

2712 ஓதிய நம்மலம் எல்லாம் [17]ஒழித்திட்டவ்
[18]வாதி தனைவிட் டிறையருட் சத்தியால்
தீதில் சிவஞான யோகமே சித்திக்கும்
ஓதுஞ் [19]சிவாய மலமற்ற உண்மையே. ச

2713 நமாதி நனாதி திரோதாயி [20]யாகித்
[21]தமாதிய [22]தாய்நிற்கத் தானந்தத் துற்றுச்
[23]சமாதித் [24]துரியந் தமதாக [25]மாகவே
[26]நமாதி சமாதி [27]சிவவாதல் எண்ணவே. ரு

2714 அருட்டரு [28]மாயமும் அத்தனுந் தம்மில்
ஒருவனை [29]யீன்றவர் உள்ளூறு மாயை

பா - ம்—[1]ஒளிய. [2]வாதியெல்லா மெங்கள். [3]வாமெங்கள். [4]யுருக்கு. [5]அவஞ்செத்த. [6]பாய. [7]மலம்வக். [8]சேர்வர். [9]அவன் செத்த. [10]சீவனரு. [11]ளாய்ச். [12]நாமமாஞ். [13]ளத். [14]மலமாயச். [15]சீவன்முத. [16]நிரோதப் பாவமகன்று. [17]ஒழித்தியலாதி. [18]வாதினைவிட். [19]சிவமாய. [20]யாதிற். [21]தமாதியாய் நிற்கத. [22]தாய்நித். [23]சமாதி. [24]துரியன் தனதாக. [25]மீவோர் ; வோரா. [26]அமாதி ; மமாதி. [27]சிவமாதல்; சிவமார் துகளல். [28]மாயனும். [29]யீன்றவள்.

திரிமல [1]நீங்கிச் சிவாயவென் றோதும்
அருவினை [2]தீர்ப்பதும் [3]அவ்வெழுத் தாமே. சு

2715 சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவுந் தேர்ந்துள் [4]அடங்கச்
சிவசிவ வாய தெளிவினுள் ளார்கள்
சிவசிவ [5]வாகுந் திருவரு ளாமே. எ

2716 சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. அ

2717 நமவென னு நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவவென்னு நாமத்தைச் சிந்தையு [6]ளேற்றப்
பவமது தீரும் பரிசும தற்றால்
[7]அவமதி தீரும் [8]அறும்பிறப் [9]பன்றே. கூ

எ. அதிசூக்கும பஞ்சாக்கரம்

2718 சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
[10]அவாயம் அறவே யடிமைய [11]தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
[12]அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே. க

2719 செஞ்சுடர் மண்டலத் தூடுசென் றப்புற
[13]மஞ்சண வும்முறை யேறி வழிக்கொண்டு
[14]துஞ்சு மவன்சொன்ன காலத் திறைவனை
[15]நெஞ்செசன நீங்கா நிலைபெற [16]லாகுமே. உ

2720 அங்கமும் ஆகம [17]வேதம தோதினும்
எங்கள் பிரானெழுத் தொன்றில் இருப்பது

பா - ம்—[1]நீங்கச்; நீக்கச். [2]தீர்ப்பது. [3]அஞ்செழுத. [4]அடங்கிச். [5]மாகுங். [6]ளேற்றிச். [7]அவமது. [8]அரும்பிறப்பின்றே. [9]பன்றே. [10]அபாயம். [11]தாகிச். [12]அபாயங். [13]மஞ்செசன; மஞ்சன்வுமுறை. [14]சுஞ்சு; நஞ்சுணவன் சொன்ன. [15]நெஞ்சனை. [16]லாமே. [17]வேதமு மோதினும்.

[1]சங்கைகெட் [2]டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தால்
[3]அங்கரை [4]சேர்ந்த அருங்கல மாமே. ௩

2721 பழுத்தன ஐந்தும் [5]பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் [6]வினையறி வாரில்லை
எழுத்தறி வோமென் [7]றுரைப்பர்கள் [8]ஏதர்
எழுத்தை யழுத்தும் எழுத்தறி யாரே.* ௪

---

* ஒரு பிரதியில் இச்செய்யுளை யடுத்துத் தவம் என்னுந் தலைப் போடு ஏழு செய்யுட்கள் காணப்படுகின்றன. அவை வருமாறு :—

(1) பள்ள முதுநீர் பழகிய மீனினம்
வெள்ளம் புதியவை காண விருப்புறும்
கள்ளவர் கோதையர் காமனோ டாடினும்
உள்ளம் பிரியா ஒருவனைக் காணுமே.

(2) 1702-ம் செய்யுள். (3) 1703-ம் செய்யுள்.

(4) பாசம தாகும் பழமலம் பற்றற
நேசம தாய்நின்ற வாறுறு நீங்கிடக்
காசமி லாத குணங்கே வலசுத்த
மாசற நிற்ற லதுசுத்த சைவமே.

(5) 1485-ம் செய்யுள். (6) 1632-ம் செய்யுள்.

(7) மனவு நனவு கனவது புந்தி
நினைவி லகந்தை சுழினையுள் நிற்றல்
அதனை யறிசித்தர் துரியமிம் மூன்றின்
நினைவறல் மற்றது நேயத் தளவே.

முன் 1624-ம் செய்யுள் முதல் 1632-ம் செய்யுள் வரையுள்ள ஒன்பது செய்யுள்களைக்கொண்ட தவம் என்னும் தலைப்போடு ஒரு பகுதி வந்துள்ளது.

பா - ம்—[1]சங்கை யறவெழுத். [2]டவ்வழித். [3]அங்கனல். [4]கண்ட. [5]பாழறை ; பழமவை. [6]வினைவறி. [7]றுரைப்பர்களா யெழுத் தெழுத்தை. [8]எதா மெழுத்ஒுத.

அ. *திருக்கூத்துத் தரிசனம்

2722 எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் [1]திருநட்டம்
எங்குஞ் சிவமா [2]யிருத்தலால் [3]எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே. க

2723 [4]சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பத மாம்அந்தச் சுந்தரக் கூத்தனைப்
[5]பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யாரறி வாரே.† உ

---

* இரண்டு பிரதிகளில் இத்தலைப்பு திருக்கூத்து என்றுளது.

† இதனை யடுத்து இரண்டு பிரதிகளில் ஐந்து செய்யுள்கள் காணப்படுகின்றன. அவை வருமாறு :—

(1) திருமந் திரமே சிதம்பரந் தானுந்
திருமந் திரமே சிறந்த உபாங்கந்
திருமந் திரமே திருக்கூத்தின் செய்கை
திருமந் திரமே திருமேனி தானே.

. (2) திருமேனி தானே திருவரு ளாகுந்
திருமேனி தானே திருஞான மாகுந்
திருமேனி தானே சிவஞேய மாகுந்
திருமேனி தானே தெளிந்தார்க்குச் சித்தியே.

(3) அத்தாளத் தாள மதிலசை விற்கா
லொத்தாட வோவாதி யாவேத மூடுற
[மோகாதி யாவேக மூறவே]
வைத்தாடி கூடல் தினமான மாகவே [கூடலதுமான மோதவே]
சித்தான நந்திதென் னம்பலத தாடுமே [தானே].

(4) ஆகஞ்(ஆகுஞ்) சிவானந்த வைவொளி [யவ்வொளி] பூரிக்கி
லேக வொளியா மிதய கமலததே

பா - ம்—[1]திருநடம். [2]யிருந்த திருத்தலால் எங்கெங்குஞ் சிவன்விளை. [3]எங்குந். [4]சிற்பரச். [5]பொற்பதக்.

*சிவானந்தக் கூத்து

2724 தானந்தம் இல்லாச் சதானந்த சத்திமேல்
தேனுந்தும் ஆனந்த மாநடங் கண்டீர்
ஞானங் கடந்து நடஞ்செய்யும் நம்பிக்கங்
கானந்தக் கூத்தாட ஆடரங் கானதே. ௩

2725 ஆனந்தம் ஆடரங் கானந்தம் பாடல்கள்
ஆனந்தம் [1]பல்லியம் ஆனந்த வாச்சியம்
ஆனந்த மாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந் [2]தானுக்கே.† ௪

2726 ஒளியாம் பரமும் உளதாம் பரமும்
அளியார் [3]சிவகாமி யாகுஞ் [4]சமயக்
களியார் பரமுங் [5]கருதுறை யந்தத்
தெளிவாஞ் சிவானந்த [6]நட்டத்தின் சித்தியே. ௫

2727 ஆன நடமைந் தகள [7]சகளத்தர்
ஆன நடமாடி [8]ஐங்கரு மத்தாக
ஆன தொழிலரு ளாலைந் [9]தொழிற்செய்தே
தேன்மொழி பாகன் திருநட மாடுமே. ௬

தாகமுஞ் சோகமுஞ் சார்கலை[சாரார்] புன்னி[தனையுன்னி]
லாக மனங்கசிந் தானந்த மாகுமே[மாமே].

(5) மேலைத் திருவம் பலத்தா மிகுகலை
கோலிப் பரானந்த நாதாநதக் கூத்ததிற்
சீலித்த சித்தர் சிவயோக சித்தராய்
மாலற்ற வர்சுத்த சைவத்து[சைவர்தாம்] வாழ்வரே.

சில பிரதிகளில் இவ்விடத்து முதலிரண்டு செய்யுள்களே காணப்படுகின்றன.

* ஒரு பிரதியில் இத்தலைப்பில்லை.

† ஒரு பிரதியில் இதனை யடுத்து சுந்தரக்கூத்து என்னும் தலைப்போடு 2731-ம் செய்யுள் முதலியன காணப்படுகின்றன. 2725 - 2730 செய்யுள்கள் 2803-ம் செய்யுட்குப் பின்னுள.

பா - ம்—[1]வல்லியம். [2]தானே. [3]சிவோகாமி. [4]சமைவிக் ; சமையிற். [5]கருத்துறை. [6]நடனத்தின். [7]சகளத்தான ; சகளத்தால். [8]அங்கங்க தாக ; ஐங்கக தாக. [9]தொழில்செய்தே.

2728 பூதாண்ட [1]பேதாண்ட போகாண்ட யோகாண்ட
மூதாண்ட முத்தாண்ட [1]மோகாண்ட தேகாண்ட
[2]தாகாண்ட மைங்கரு [3]மத்தாண்ட தற்பரத்
தேகாந்த [4]மாம்பிர மாண்டத்த என்பவே.

2729 வேதங்க ளாட [5]மிகுஆ கமமாடக்
கீதங்க ளாடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
[6]நாதங்கொண் டாடினன் [7]ஞானானந்தக் கூத்தே. அ

2730 பூதங்கள் ஐந்திற் [8]பொறியிற் புலனைந்தில்
வேதங்கள் ஐந்தின் மிகுமா கமந்தன்னில்
ஓதுங் கலைகாலம் ஊழி [9]யுடன்அண்டப்
போதங்கள் ஐந்திற் புணர்ந்தாடுஞ் சித்தனே. கூ

2731 [10]தேவர [11]சுரர்நரர் சித்தர்வித் தியாதரர்
மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் [12]சத்தர் [13]சமயஞ் சராசரம்
யாவையும் [14]ஆடிடும் எம்மிறை யாடவே.* கO

சுந்தரக் கூத்து

2732 அண்டங்கள் [15]ஏழினுக் கப்புறத் தப்பால்
உண்டென்ற சத்தி சதாசிவத் துச்சிமேற்
கண்டங் கரியான் [16]கருணை திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந் தானே.† கக

* ஒரு பிரதியில் இச்செய்யுளும் சுந்தரக்கூத்து என்னுந் தலைப்பிற் சேர்ந்துளது.

† ஒரு பிரதியில் இதனை யடுத்து 2739-ம் செய்யுள்.

பா - ம்—[1]போதாண்ட. [2]தாதாண்ட. [3]த்தாண்ட தற்பாதர்க் கேகாந்த. [4]மம்பர. [5]மிகவா ; மிகுமா. [6]நாதங்கொ. [7]ஞானந்தக். [8]பொழிவிற். [9]யு ளண்டப். [10]தேவர். [11]சுரர்கள். [12]புதர். [13]சமயா சாரி ; சமயாசார சாரி. [14]ஆடுமாம். [15]ஏழினு மப்புறத் தப்பால். [16]கருணைத்.

2733 *கொடுகொட்டி [1]பாண்டங் கோடுசெங் கார
நடமெட்டோ டைந்தாறு நாடியுள் நாடுந்
திடமுற் றெழுந்தேவ [2]தாருவாந் தில்லை
வடமுற்ற மாவன மன்னவன் தானே.† கஉ

2734 பரமாண்டத் தூடே பராசத்தி பாதம்
பரமாண்டத் தூடே படரொளி ஈசன்
பரமாண்டத் தூடே [3]படர்தரு நாதம்
பரமாண்டத் தூடே பரன்நட மாடுமே.‡ கந

2735 அங்குச மென்ன [4]எழுமார்க்கம் போதத்தில்
தங்கிய [5]தொந்தி எனுந்தாள ஒத்தினில்
சங்கரன் [6]மூலநா டிக்குள் [7]தரித்தாடல்
பொங்கிய காலம் [8]புகும்போகல் இல்லையே. கச

2736 [9]ஆனத்தி [10]யாடிப் [11]பின்னவக் கூத்தாடிக்
[12]கானத்தி யாடிக் கருத்தில் தரித்தாடி
[13]மூனச் சுழுனையுள் ஆடி [14]முடிவில்லா
[15]ஞானத்துள் ஆடி முடித்தான்என் [16]நாதனே. கரு

2737 சத்திகள் [17]ஐந்துஞ் சிவபேதந் [18]தானைந்தும்
முத்திகள் [19]எட்டும் முதலாம் [20]பதமெட்டுஞ்
சித்திகள் [21]எட்டுஞ் சிவபதந் [22]தானெட்டுஞ்
[23]சுத்திகள் [24]எட்டீசன் [25]தொல்நட மாடுமே. கசு

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் 2803-ம் செய்யுளை யடுத்துக் காணப்படுகிறது.

† ஒரு பிரதியில் இதனை யடுத்து 2735-ம் செய்யுள்.

‡ ஒரு பிரதியில் இதனை யடுத்து 2740-ம் செய்யுள்.

பா - ம்—[1]பாண்டரங் ; பாண்டரங் கங்கொடு. [2]தாருவுந். [3]படரொளி. [4]எழுமாற்ம. [5]தொந்தீ. [6]மூலா. [7]தரித்தாடப். [8]புகுபோகல்; புகும்புகல். [9]ஆளத்தி ; ஆளத்தீ. [10]யாடிய. [11]பினயக். [12]காளத்தி ; கானத்தீ. [13]மூளச் சுழுனையில். [14]முடிவிலா. [15]ஞாளத்துள். [16]நாதத்தே ; ஞாதமே. [17]ஐந்து. [18]தானைந்து. [19]எட்டு. [20]பதமெட்டு. [21]எட்டுச். [22]தானெட்டு. [23]சத்திகள். [24]எட்டாஞ். [25]சொல்நட.

2738 மேகங்கள் [1]ஏழும் விரிகடல் [2]தீவேழுந்
தேகங்கள் [3]ஏழுஞ் சிவபாற் [4]கரனேழுந்
[5]தாகங்கள் [6]ஏழுஞ் [7]சாந்திகள் ஏழும்
ஆகின்ற [8]நந்தி யடிக்கீழ் அடங்குமே.* கஎ

பொற்பதிக் கூத்து

2739 தெற்கு வடக்குக் [9]கிழக்குமேற் குச்சியில்
அற்புத மானதோர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில்பே [10]ரின்பத் துபய உபயத்துள்
[11]தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே.† கஅ

2740 அடியார் அரனடி யானந்தங் கண்டோர்
அடியா [12]ரானவ ரத்தரு ளுற்றோர்
[13]அடியார் பவரே யடியவ ராமால்
[14]அடியார் பொன்னம்பலத் தாடல் [15]கண்டாரே. கக

2741 அடங்காத என்னை அடக்கி அடிவைத்
திடங்காண் பரானந்தத் தேஎன்னை [16]இட்டு
நடந்தான் செயும்நந்தி நன்ஞானக் கூத்தன்
படந்தான் செய்துள்ளுட் படிந்திருந் தானே. உ0

2742 உம்பரிற் கூத்தனை உத்தமக் கூத்தனைச்
செம்பொற் றிருமன்றுட் சேவகக் கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை
[17]இன்புற நாடிஎன் அன்பில்வைத் தேனே. உக

2743 மாணிக்கக் கூத்தனை வண்டில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுட் புரிசடைக் கூத்தனைச்

* ஒரு பிரதியில் இதனை யடுத்து 2745-ம் செய்யுள்.

† ஒரு பிரதியில் இதனை யடுத்துப் பொற்றில்லைக் கூத்து என்னுந் தலைப்பு ; 2749-ம் செய்யுள் காணப்படுகிறது.

பா - ம்—[1]ஏழு. [2]தீவேழு ; தீயேழுந். [3]ஏழு. [4]கன்னரன் ; கரன்தன. [5]சாகங்கள். [6]ஏழு. [7]சாந்திதனில் ஏழு. [8]மாநந்தி. [9]கிழக்குமே லுச்சியில். [10]ரின்ப வுபய ; ரின்ப முபய முபயத்துள். [11]தற்பர. [12]ரானடி வரத்தரு. [13]அடியா ரவரே ; அடியவ ரடியவரே. [14]அடியா ரடியார். [15]கண்டோரே. [16]விட்டு. [17]இன்புற்று.

சேணுற்ற [1]சோதிச் சிவானந்தக் கூத்தனை
[2]ஆணிப்பொற் கூத்தனை [3]யாருரைப் பாரே. ௨௨

2744 விம்மும் [4]வெருவும் [5]விழும்எழும் மெய்சோருந்
தம்மையுந் தாமறி [6]யார்கள் சதுர்கெடுஞ்
செம்மை சிறந்த திருஅம் பலக்கூத்துள்
அம்மலர்ப் பொற்பாதத் [7]தன்புவைப் பார்கட்கே.*

2745 தேட்டறுஞ் [8]சிந்தை [9]திகைப்பறும் [10]பிண்டத்துள்
[11]வாட்டறுங் கால்புந்தி [12]யாகி [13]வரும்புலன்
ஓட்டறு [14]மாசை [15]அறுமுளத் தானந்த
நாட்ட [16]முறுக்குறு நாடகங் [17]காணவே. ௨௪

2746 காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்
கூளியோ டாடிக் குவலயத் [18]தேயாடி
நீடிய [19]நீர்தீகால் நீள்வா னிடையாடி
[20]நாளுற அம்பலத் தேயாடும் நாதனே. ௨௫

2747 மேரு நடுநாடி [21]மிக்கிடை [22]பிங்கலை
[23]கூருமிவ் [24]வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் [25]திலைவனத் தண்மா [26]மலயத்தூ
டேறுஞ் சுழுனை இவைசிவ பூமியே. ௨௬

2748 [27]பூதல மேருப் புறத்தான தெக்கணம்
[28]ஓதும் இடைபிங் கலையொண் சுழுனையாம்
பாதி மதியோன் பயில்திரு வம்பலம்
ஏதமில் பூதாண்டத் தெல்லையி னீறே.† ௨௭

---

* ஒரு பிரதியில் இதன் பின் 2751-ம் செய்யுள்.

† ஒரு பிரதியில் இதனையடுத்து 2753-ம் செய்யுள்.

பா - ம்—[1]சோதி. [2]ஆணிப்பொன். [3]யாரறிவாரே. [4]பொருமும். [5]விழுமழும். [6]யாதே சதிர்கெடுஞ். [7]தன்புவை யார்கட்கே. [8]சிந்தைத். [9]திகைப்புறும். [10]பிண்டதது. [11]பாட்டறங். [12]யாக வரும்புனல். [13]வரும்புலம். [14]மோசை யுறுமுளத். [15]அறுமுள்ள தாரணநதாட்ட. [16]முறக்குறு. [17]காணுமே. [18]தோடாடி. [19]நீர்காறீ; நீர்காலதன். [20]ஆடி நாளுற. [21]மீக்கிடை; மிக்கலை. [22]பிங்கலைக். [23]கூடுமிவ்; கூருமிம. [24]வானிலங்கைக். [25]திலைவனந். [26]மலயத்துட். [27]பூத. [28]ஓதுமிடைபிங்.

966 அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடந் தாங்கினன்
அஞ்செழுத் தாலே அமர்ந்துநின் றானே. ருந

967 வீழ்ந்தெழ லாம்விகிர் தன்திரு நாமத்தைச்
சோர்ந்தொழி யாமல் தொடங்கும் ஒருவற்குச்
சார்ந்த வினைத்துயர் போகத் தலைவனும்
போந்திடும் [1]என்னும் புரிசடை யோனே. ருச

968 உண்ணு மருந்தும் உலப்பிலி காலமும்
பண்ணுறு கேள்வியும் பாடலு மாய்நிற்கும்
விண்ணின் றமரர் விரும்பி அடிதொழ
எண்ணின் றெழுத்தஞ்சு மாகிநின் றானே. ருரு

969 ஐந்தின் பெருமையே அகலிட மாவதும்
ஐந்தின் பெருமையே ஆலய மாவதும்
ஐந்தின் பெருமையே யறவோன் வழக்கமும்
ஐந்தின் [2]வகைசெயப் பாலனு மாமே. ருசு

970 வேரெழுத் தாய்விண்ணாய் அப்புற மாய்நிற்கும்
நீரெழுத் தாய்நிலந் தாங்கியும் அங்குளன்
[3]சீரெழுத் [4]தாய்அங்கி யாயுயி ராமெழுத்
தோரெழுத் தீசனும் ஒண்சுட ராமே. ருஎ

971 நாலாம் எழுத்தோசை [5]ஞாலம் உருவது
நாலாம் எழுத்தினுள் ஞாலம் அடங்கிற்று
நாலாம் [6]எழுத்தே நவிலவல் லார்கட்கு
நாலாம் எழுத்தது நன்னெறி தானே. ருஅ

972 இயைந்தனள் ஏந்திழை என்னுள மேவி
நயந்தன ளங்கே நமசிவ [7]என்னும்

பா - ம்—[1]என்று. [2]வகையேசெயப். [3]சீயெழுத். [4]தாங்கி; தாயநமசி. [5]ஞால முழுவதும். [6]எழுத்தை. [7]மென்னும்.

பொற்றில்லைக் கூத்து

2749 அண்டங்கள் ஓரேழும் அம்பொற் பதியாகப்
பண்டையா காசங்கள் ஐந்தும் பதியாகத்
[1]தெண்டினிற் சத்தி திருஅம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே. உஅ

2750 குரானந்த ரேகையாய்க் கூர்ந்த [2]குணமாஞ்
சிரானந்தம் பூரித்துத் தென்திசை [3]சேர்ந்து
புரானந்த போகனைப் பூவையுந் தானும்
நிரானந்த [4]மாகி நிருத்தஞ்செய் தானே.* உகூ

2751 ஆதி பரன்ஆட அங்கைக் கனலாட
[5]ஓதுஞ் சடையாட உன்மத்த முற்றாடப்
பாதி மதியாடப் பாரண்ட மீதாட
நாதமோ டாடினான் நாதாந்த நட்டமே. ௩0

2752 கும்பிட அம்பலத் [6]தாடிய [7]கோனடம்
அம்பரன் ஆடும் அகிலாண்ட நட்டமாஞ்
[8]செம்பொரு [9]ளாகுஞ் சிவலோகஞ் [10]சேர்ந்துற்றால்
உம்பர மோனஞா னந்தத்தில் உண்மையே.† ௩க

2753 மேதினி மூவேழ் மிகுமண்டம் [11]ஓரேழு
சாதக மாகுஞ் சமயங்கள் [12]நூற்றெட்டு
நாதமோ டந்த [13]நடானந்த [14]நாற்பதப்
பாதியோ [15]டாடிப் [16]பரனிரு பாதமே. ௩உ

2754 இடைபிங் கலையிம வானோ டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை

---

* ஒரு பிரதியில் இதனையடுத்து 2761-ம் செய்யுள்.

† ஒரு பிரதியில் இதனையடுத்து 2756-ம் செய்யுள்.

பா - ம்—[1]தெண்டினி ; தெண்டினிச். [2]குணமாய்ச். [3]நோக்கிப். [4]மாக. [5]ஓது. [6]தாடிக். [7]கோனட்டம். [8]செம்பொ னருளாஞ். [9]ளாஞ். [10]சேர்ந்தற்றால். [11]ஓரேழும். [12]நூற்றெட்டும். [13]நடனாந்த. [14]நற்பதம் ; நாற்பதம். [15]டாடிடும். [16]பன்னிரு.

[1]கடவுந் திலைவனங் கைகண்ட மூலம்
படர்வொன்றி [2]யென்னும் [3]பரமாம் பரமே. ௫௩

2755 ஈறான கன்னி குமரியே [4]காவிரி
வேறா நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழுள்
பேறான வேதா கமமே பிறத்தலான்
மாறாத தென்திசை வையகஞ் சுத்தமே.* ௫௪

2756 நாதத் [5]தினிலாடி [6]நாற்பதத் தேயாடி
வேதத்தி லாடித் [7]தழலந்த மீதாடி
போதத்தி லாடிப் புவன முழுதாடுந்
தீதற்ற தேவாதி தேவர் பிரானே. ௫௫

2757 தேவரோ டாடித் திருவம்ப லத்தாடி
மூவரோ டாடி [8]முனிசனத் தோடாடிப்
[9]பாவினுள் ஆடிப் [10]பராசத் தியிலாடிக்
கோவினுள் ஆடிடுங் கூத்தப் பிரானே. ௫௬

2758 ஆறு முகத்தில் அதிபதி [11]நானென்றுங்
கூறு சமயக் குருபரன் [12]நானென்றுந்
தேறினர் [13]தெற்குத் திருஅம்ப [14]லத்துளே
வேறின்றி யண்ணல் விளங்கிநின் றானே.† ௫௭

2759 [15]அம்பலம் ஆடரங் காக அதன்மீதே
எம்பரன் ஆடும் இருதாளி னீரொளி
உம்பர மாம்ஐந்து [16]நாதத்து ரேகையுள்
தம்பத மாய்நின்று தான்வந் தருளுமே.‡ ௫௮

* ஒரு பிரதியில் இதனையடுத்து 2804-ம் செய்யுள் முதலியன.

† ஒரு பிரதியில் இதனையடுத்து 2760-ம் செய்யுள்.

‡ ஒரு பிரதியில் இச்செய்யுளில்லை.

பா - ம்—[1]சுடர்வுந். [2]யேழும் ; லேறும் ; யேறும். [3]பரம்பரம் ; பாமா. [4]காவேரி. [5]திலாடி. [6]நற்பதத். [7]தனிலந்த. [8]முனிகணத்தே யாடிப். [9]பாவினில். [10]ச் சத்திலாடி. [11]தானென்றுங் ; நானென்று. [12]நானென்று. [13]தேறத். [14]லத்துள்ளே. [15]அம்பரம். [16]நாதத் திரேகை யும்பத.

2760 ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமுங்
கூடிய [1]கோலங் குருபரன் கொண்டாடத்
[2]தேடியு ளேகண்டு [3]தீர்ந்தற்ற வாறே.* ௩௯

2761 இருதயந் [4]தன்னில் [5]எழுந்த பிராணன்
கரசர ணாதி கலக்கும் படியே
[6]அரதன மன்றினின் மாணிக்கக் [7]கூத்தன்
[8]குரவனாய் எங்கணுங் கூத்துகந் தானே. ௪௦

அற்புதக் கூத்து

2762 குருவுரு [9]வன்றிக் [10]குனிக்கும் [11]உருவம்
அருவுரு [12]வாவது அந்த [13]அருவே
திரிபுரை யாகித் [14]திகழ்தரு வாளும்
உருவரு [15]வாகும் உமையவள் தானே. ௪௧

2763 [16]திருவழி யாவது [17]சிற்றம் பலத்தே
குருவடி வுள்ளாக் குனிக்கும் உருவே
உருவரு வாவது முற்றுணர்ந் [18]தோர்க்கு
[19]அருள்வழி யாவதும் அவ்வழி தானே. ௪௨

2764 †நீருஞ் [20]சிரசிடைப் பன்னிரண் டங்குலம்
[21]ஓடும் உயிரெழுந் தோங்கி [22]யுதித்திட
நாடுமின் நாதாந்த நம்பெரு மானுகந்
தாடும் இடந்திரு அம்பலந் தானே.‡ ௪௩

---

* ஒரு பிரதியில் இதனையடுத்து, முன் அடிக்குறிப்பிற் காட்டிய 'திருமேனி', 'அத்தாளத்' என்னுஞ் செய்யுள்கள்.

† ஒரு பிரதியில் இச்செய்யுளில்லை.

‡ ஒரு பிரதியில் இதனையடுத்து 2770-ம் செய்யுள்.

பா - ம்—[1]காலங். [2]தேடியுள். [3]தீந்தற்ற. [4]நன்னில. [5]நின்ற. [6]அரதன மன்றில். [7]கூத்தனைக். [8]குரவகன யெங்குங். [9]வ மன்றிக். [10]குளிக்கும். [11]உருவும். [12]வாவதும். [13]உருவே. [14]திகழ்தர வாழும்; திகழ்ந்திருந் தாளும். [15]வாளும். [16]திருவடி. [17]சிததம். [18]தோருக்கு; தார்க்கு. [19]மருள்வழி. [20]சிரத்திடைப். [21]ஓடியுயிரெழுத. [22]யுதித்திடம்.

2765 [1]வளிமேக மின்வில்லு [2]வானக வோசை
தெளிய விசும்பில் திகழ்தரு [3]வாறுபோல்
[4]களியொளி யாறுங் கலந்துடன் வேறாய்
ஒளியுரு வாகி ஒளித்துநின் றானே. சச

2766 தீமுதல் ஐந்துந் திசையெட்டுங் கீழ்மேலும்
[5]ஆயும் அறிவினுக் கப்புறம் ஆனந்தம்
மாயைமா மாயை கடந்துநின் [6]றார்காண
நாயகன் நின்று [7]நடஞ்செய்யும் வாறே. சரு

2767 கூத்தன் கலந்திடுங் கோல்வளை யாளொடுங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா [8]ஆனந்தங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஞானத்துக்
கூத்தனுங் கூத்தியுங் கூத்ததின் மேலே. சசு

2768 இடங்கொண்ட சத்தியும் எந்தை பிரானும்
நடங்கொண்டு [9]நின்றமை நானும் அறிந்தேன்
[10]படங்கொடு நின்றஇப் பல்லுயிர்க் கெல்லாம்
அடங்கலுந் [11]தாமாய்நின் றுடுகின் [12]றாரே. சஎ

2769 சத்தி [13]வடிவு சகல ஆனந்தமும்
ஒத்த [14]ஆனந்தம் உமையவள் மேனியாஞ்
சத்தி வடிவு சகளத் தெழுந்திரண்
டொத்த ஆனந்தம் ஒருநட [15]மாமே. சஅ

2770 நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம்
[16]பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடஞ்
[17]சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே. சகூ

2771 அண்டங்கள் தத்துவ [18]மாகிச் சதாசிவந்
தண்டினிற் [19]சாத்தவி சாம்பவி [20]யாதனந்

பா - ம்—[1]வழிமேக. [2]வான்கன வோசை. [3]மாறுபோல்; வார்போல். [4]கழியொளி. [5]ஆதி. [6]றார்கள். [7]நடஞ்செய்யு மாறே. [8]ஆனந்தன். [9]நின்றிவை. [10]படங்கொண்டு நின்ற. [11]தானாய்நின். [12]றானே. [13]வடிவுஞ். [14]ஆனநதமும். [15]மாகுமே. [16]பற்றுக்குட். [17]சித்தம். [18]மாதிச் சதாசிவன். [19]சத்தவி. [20]வாதனக்.

தெண்டினில் ஏழுஞ் சிவாசன மாகவே
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே. ௫௦

2772 மன்று நிறைந்த விளக்கொளி மாமலர்
நன்றிது [1]தானிதழ் நாலொடு [2]நூறவை
[3]சென்றது தானொரு பத்திரு நூறுள
நின்றது தானெடு [4]மண்டல மாமே. ௫௧

2773 அண்டம் எழுகோடி பிண்டம் எழுகோடி
தெண்டிரை சூழ்ந்த திசைகள் [5]எழுகோடி
[6]எண்டிசை சூழ்ந்த இலிங்கம் எழுகோடி
அண்ட [7]நடஞ்செயும் ஆலயந் தானே. ௫௨

2774 ஆகாச மாமுட [8]லங்கார் [9]முயலகன்
[10]ஏகாச மாந்திசை [11]யெட்டுந் [12]திருக்கைகண்
மோகாய முக்கண்கள் மூன்றொளி [13]தானுக
[14]மாகாய மன்றுள் நடஞ்செய்கின் றானே. ௫௩

2775 [15]அம்பல மாவ தகில சராசரம்
அம்பல [16]மாவது ஆதிப் பிரானடி
அம்பல [17]மாவது அப்புத்தீ மண்டலம்
அம்பல மாவது அஞ்செழுத் தாமே. ௫௪

2776 கூடிய [18]திண்முழ [19]வங்குழ [20]லோமென்று
ஆடிய [21]மானுடர் ஆதிப் [22]பிரானென்ன
நாடிய நற்கண [23]மாரம்பல் பூதங்கள்
பாடிய வாறொரு [24]பாண்டரங் காமே. ௫௫

பா - ம்—[1]தானிதனொலொடு. [2]நீறவை; நூறிவை. [3]சென்று. [4]மாமண்டல. [5]ஒரு கோடி. [6]எண்டிசையி லிங்கமெழு கோடியாவன. [7]நெடுநடஞ் செயும். [8]லகார. [9]முயலகன்மேல்; முயலகனே. [10]மேகாச. [11]யெட்டுத். [12]திரைக்கைகள். [13]தானுகி. [14]மாகாயன் மன்றினுள் மாதுடனுடுமே. [15]அம்பர. [16]மாவத தாதிப். [17]மாவதப்புத்தீ. [18]திண்முன. [19]வங்குளவோமென்று. [20]வோமென. [21]மானிடர். [22]ஆதிப்பிரானென்று. [23]மாறன; மார்ப்பன. [24]பண்டரங்.

2777 அண்டத்தில் தேவர்கள் அப்பாலைத் தேவர்கள்
[1]தெண்டிரை சூழ்புவிக் [2]குள்ளுள்ள தேவர்கள்
புண்டரி கப்பதப் பொன்னம் பலக்கூத்துக்
கண்டுசே வித்துக் கதிபெறு வார்களே. ருசு

2778 [3]புளிக்கண் டவர்க்குப் புனலூறு [4]மாபோற்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
[5]துளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் [6]சுருக்கும்
ஒளிக்குளா னந்தத் தமுதூறும் [7]உள்ளத்தே. ருஎ

2779 திண்டாடி வீழ்கை சிவானந்த மாவது
[8]உண்டார்க் குணவுண்டால் உன்மத்தஞ் சித்திக்குங்
கொண்டாடு மன்றுட் [9]குனிக்குந் திருக்கூத்துக்
கண்டார் வருங்குணங் கேட்டார்க்கும் ஒக்குமே. ருஅ

2780 அங்கி தமருகம் அக்குமா லைபாசம்
அங்குசஞ் சூலங் கபால முடன்ஞானந்
[10]தங்கு [11]பயந்தரு நீல [12]மும்முடன்
மங்கையோர் பாகமாய் மாநட மாடுமே. ருகூ

2781 *ஆடல் பதினொ ருறுப்பும் அடைவாகக்
கூடிய பாதஞ் சிலம்புகைக் கொள்துடி
நீடிய [13]நாதம் [14]பாரற்பர நேயத்தே
ஆடிய நந்தி புறமகத் தானே. சு0

2782 *ஒன்பதும் ஆட ஒருபதி னாறுட
அன்புறு மார்க்கங்கள் ஆறும் உடனாட
[15]இன்புறும் ஏழினும் [16]ஏழைம்பத் தாறுட
அன்பது மாடினன் ஆனந்தக் கூத்தே. சுக

---

* ஒரு பிரதியில் இச்செய்யுளில்லை.

பா - ம்—[1]எண்டிசை. [2]குள்ளன. [3]புளிக்கொண். [4]மாறுபோற். [5]அளிக்கும். [6]சுட்கும். [7]உள்ளிதே; ஒளிக்கே. [8]முண்டார்க்குணர் வுண்டாம். [9]குளிக்குந். [10]அங்கை யபய வாதமுடனீல. [11]மபயந்தரு. [12]மு முடன்; முடனுட வைம்பது மாடின னானந்தக் கூத்தே. [13]நாத மும். [14]பராபரன். [15]விம்புறும். [16]ஏழன்பத்; ஏழைப.

2783 ஏழினில் ஏழாய் [1]இகழ்ந்தெழுத் தேழதாய்
ஏழினில் ஒன்றாய் இழிந்தமைந் [2]தொன்றாகி
[3]ஏழினிற் சன்மார்க்கம் எங்கள் பரஞ்சோதி
ஏழிசை நாடகத் தேஇசைந் தானே. ௬உ

2784 [4]மூன்றினில் [5]அஞ்சாகி மூந்நூற் றறுபதாய்
மூன்றினில் ஆறாய் முதற்பன்னீர் மூலமாய்
மூன்றினில் [6]அக்க முடிவாகி முந்தியே
மூன்றிலும் ஆடினன் [7]மோகாந்தக் [8]கூத்தே. ௬௩

2785 [9]தாமுடி வானவர் தம்முடி மேலுறை
மாமணி ஈசன் [10]மலரடித் தாளிணை
[11]வாமணி யன்புடை [12]யார்மனத் துள்ளெழுங்
காமணி ஞாலங் கடந்துநின் றானே. ௬௪

2786 புரிந்தவன் ஆடிற் புவனங்க [13]ளாடுந்
[14]தெரிந்தவன் ஆடும் அளவெங்கள் சிந்தை
[15]புரிந்தவ னாடிற்பல் பூதங்கள் ஆடும்
எரிந்தவன் [16]ஆடல்கண் டின்புற்ற வாறே. ௬௫

2787 ஆதி நடஞ்செய்தான் என்பர்கள் ஆதர்கள்
ஆதி நடஞ்செய்கை யாரும் அறிகிலர்
ஆதி [17]நடமாட லாரும் அறிந்தபின்
ஆதி நடமாட லாமருட் சத்தியே. ௬௬

2788 ஒன்பதோ [18]டொன்பதாம் உற்ற [19]இருபதத்
தன்புறு [20]கோணம் அசிபதத் தாடிடத்
[21]துன்புறு [22]சத்தியுள் [23]தோன்றிநின் றாடவே
[24]அன்புறு [25]எந்தைநின் றாடலுற் றானே. ௬௭

பா - ம்—[1]இகழ்ந்தெழுந். [2]தொன்றாக. [3]ஏழிற். [4]மூன்றில். [5]ஐந்தாகி. [6]நீக்க. [7]மோனானந்தக். [8]கூத்தனே. [9]தூமுடி. [10]மலராடி தாழிணை. [11]யாமணி. [12]யாமனத். [13]ளோடுந். [14]தெளிந்தவன். [15]பரிந்தவ. [16]ஆடிற்கண். [17]நடஞ்செய்கையாரும். [18]டொன்பதாய். [19]இருபாதத். [20]சோணம் சுவேதமொடாடிடத். [21]துன்புறுஞ். [22]சத்தி ; சத்தியுந். [23]தோன்றினுடைவே. [24]அன்புற ; இன்புறு. [25]சமைந்தாடு மெந்தையே.

2789 தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் [1]கூத்தே. சுஅ

2790 இருவருங் காண எழில்அம் பலத்தே
உருவோ டருவோ [2]டுருபர ரூபமாய்த்
திருவருட் [3]சத்திக்குள் சித்தா னந்தன்
[4]அருளாரு [5]வாகநின் றாடலுற் றானே. சுகூ

2791 சிவமாடச் சத்தியும் ஆடச் சகத்தில்
அவமாட ஆடாத அம்பரம் ஆட
நவமான தத்துவ நாதாந்த மாடச்
சிவமாடும் வேதாந்தச் சித்தாந்தத் துள்ளே. எ0

2792 நாதத்தின் அந்தமும் [6]நாற்போத அந்தமும்
வேதத்தின் அந்தமும் மெய்ச்சிவா னந்தமுந்
தாதற்ற நல்ல [7]சதாசிவா னந்தத்து
நாதப் [8]பிரமஞ் [9]சிவநட மாமே.* எக

2793 [10]சிவமாதி [11]ஐவர்திண் டாட்டமுந் [12]தீரத்
[13]தவமார் பசுபாசம் ஆங்கே தனித்துத்
தவமாம் பரனெங்குந் தானாக ஆடுந்
[14]தவமாஞ் சிவானந்தத் தோர்ஞானக் கூத்தே.† எஉ

2794 கூடிநின் றானொரு காலத்துத் தேவர்கள்
[15]வீடநின் றான்விகிர் தாவென்னு நாமத்தைத்
தேடநின் றான்திக ழுஞ்சுடர் மூன்றொளி
ஆடநின் றான்என்னை ஆட்கொண்ட வாறே. எங

---

* ஒரு பிரதியில் இதனை யடுத்தது 2794-ம் செய்யுள்

† ஒரு பிரதியில் இது 2795-ம் செய்யுளை யடுத்துளது.

பா - ம்—[1]கூத்ததே. [2]டரூபா; டொருரூபா. [3]சததிக்குச். [4]அருளரு. [5]வாகிநின். [6]நற்போத. [7]சதாசிவத் தத்துவ. [8]பரசிவன் றானட மாடுமே. [9]சிவனட மாடுமே. [10]சிவமாகி. [11]ஐவர்திரண். [12]திரத்; தீர்த்த வவமாம். [13]தவமாடவர். [14]துவமாஞ். [15]வீடிநின்.

2795 நாதத் துவங்கடந் தாதி மறைநம்பி
பூதத் துவத்தே பொலிந்தின்பம் [1]எய்தினர்
[2]நேதத் துவமும் அவற்றொடு [3]நேதியும்
பேதப் படாவண்ணம் [4]பின்னிநின் றானே. ௭௪

2796 ஆனந்தம் ஆனந்தம் என்பர் [5]அறிவிலர்
ஆனந்த மாநட மாரும் அறிகிலர்
ஆனந்த மாநட மாரும் அறிந்தபின்
[6]தானந்தம் அற்றிடம் ஆனந்த மாமே. ௭௫

2797 திருந்துநற் சிவயன் றுதறிய கையும்
அருந்தவர் வாவென் [7]றணைத்த மலர்க்கையும்
[8]பொருந்தில் [9]இமைப்பிலி [10]யவ்வென்ற பொற்கையுந்
[11]திருந்தத்தீ யாகுந் திருநில மவ்வே. ௭௬

2798 [12]மருவுந் துடியுடன் மன்னிய [13]வீச்சு
மருவிய [14]அப்பும் அனலுடன் கையுங்
கருவின் மிதித்த [15]கமலப் பதமும்
உருவில் சிவாய [16]நமவென வோதே. ௭௭

2799 அரன்துடி தோற்றம் [17]அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையிற்சங் காரம்
அரனுற் [18]றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி [19]யென்றும் அனுக்கிரகம் என்னே. ௭௮

2800 தீத்திரட் சோதி திகழொளி [20]யுள்ளொளி
கூத்தனைக் [21]கண்டஅக் கோமளக் கண்ணினள்
மூர்த்திகள் [22]மூவர் முதல்வ [23]னிடைசெல்லப்
[24]பார்த்தனள் வேதங்கள் [25]பாடினள் தானே. ௭௯

பா - ம்—[1]எய்தினுர். [2]வேதத். [3]நீதியும். [4]பின்னைநின். [5]அறிவில்லார். [6]ஆனந்தம். [7]றணை ; றணைந்த. [8]பொருந்த. [9]வமைப்பிலி. [10]யவென்ற ; யென்ற. [11]திருநதநற் றீயாங் ; திருந்தந்தத் தீயாங். [12]மருவு துடியும். [13]வீச்சும். [14]மைப்பும். [15]கமல. [16]நமவென்ன. [17]அமைத்தலத் தியானம். [18]றளைப்பிலருந் திரோதாயி. [19]யொன்றும். [20]யுள்வொளிக். [21]கண்டவள். [22]மூவா. [23]னிடைச்செல்லப். [24]பார்த்தன. [25]பாடின ; பாடினர்.

2801 நந்தியை எந்தையை ஞானத் தலைவனை
மந்திர [1]மொன்றுள் மருவி யதுகடந்
தந்தர வானத்தின் [2]அப்புறத் [3]தப்பர
சுந்தரக் கூத்தனை [4]என்சொல்லும் வாறே.* அ௦

2802 [5]சீய குருநந்தி திருஅம்ப லத்திலே
ஆயுறு மேனியை யாரும் அறிகிலர்
தீயுறு செம்மை வெளுப்பொடு [6]மத்தன்மை
ஆயுறு மேனி [8]அணைபுக லாமே.† அக

2803 தானான சத்தியுந் தற்பரை யாய்நிற்குந்
தானும் [9]பரற்கும் உயிர்க்குந் [10]தகுமிச்சை
ஞானாதி பேத நடத்து நடித்தருள்
ஆனால் அரனடி நேயத்த [11]தாமே.‡ அஉ

கூ. ஆகாசப்பேறு§

2804 [12]உள்ளது [13]ளோமென ஈசன் ஒருவனை
உள்ளத்து ளேயங்கி யாய வொருவனை
உள்ளத்து [14]ளேநீதி யாய வொருவனை
உள்ளத்து ளேயுடல் ஆகாய மாமே. க

---

* இரண்டு பிரதிகளில் இதனை யடுத்து 2813-ம் செய்யுள்.

† ஒரு பிரதியில் இதனை யடுத்து 2814-ம் செய்யுள்.

‡ ஒரு பிரதியில் இதனை யடுத்து, 'ஆகாசமாலை யமகார முக மூமா, யேகார மாந்திசை யெட்டுந் திருக்கைகண், மோகாய முக் கண்கள் மூன்றொளி தானாகி, மாதார மன்றினுள் மாதுட னுடுமே' என்னும் செய்யுள். அதனை யடுதது 2733, 2814 முதலியன. மற் றொரு பிரதியில் இதனை யடுத்து, 'பத்தி விதையிற் பயிரொன்று நாணத்தைச், சிதறி தருவை ராக்கதத்தாற செய்தறுத், துய்தத சமாதி சிவானநத முண்டிடச், சித்திநிகழ் மூத்தியா னந்தஞ் சிததியே' என் னுஞ் செய்யுள். அதனை யடுதது 2726-2730 செய்யுள்கள்.

§ ஒரு பிரதியில் இப்பகுதி 1613-ம் செய்யுளை யடுத்துளது.

பா - ம்—[1]மொன்று. [2]புறத. [3]தப்புறத்; தப்பாற். [4]என் சொல்லு மாறே. [5]சீ. [6]மெததன்மை. [7]வாயுற வோதில் மனைபுக. [8]அனைபுக. [9]பராகும். [10]தருமிச்சை; தமமிச்சை. [11]னுமே. [12]உள் ளத்து. [13]ளோமென்ன; ளோமென்ற. [14]ளேநிதி.

பயந்தனை [1]யோரும் பதமது [2]பற்றும்
[3]பெயர்ந்தனன் மற்றும் பிதற்றறுத் தேனே. ருசு

973 ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினை
ஓமத்தி லேயுதம் பண்ணும் ஒருத்திதன்
நாம [4]நமசிவ என்றிருப் [5]பாருக்கு
[6]நேமத் [7]தலைவி நிலவிநின் [8]றாளே. கூ௦

974 பட்ட பரிசே பரமஞ் [9]செழுத்ததின்
இட்ட மறிந்திட் டிரவு [10]பகல்வர
நட்டம [11]தாடு நடுவே நிலயங்கொண்
டட்டதே சப்பொரு ளாகிநின் [12]றாளே. கூக

975 அகாரம் உயிரே உகாரம் பரமே
[13]மகார மலமாய் [14]வருமுப் பதத்திற்
சிகாரஞ் சிவமாய் வகாரம் [15]வடிவமாய்
அகாரம் உயிரென் றறையலு மாமே. கூ௨

976 நகார மகார சிகார நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் [16]கூடி
ஒகார முதற்கொண் டொருக்கால் உரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே. கூ௩

977 அஞ்சுள வானை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத் தங்குச மாவன
அஞ்சையுங் கூடத் [17]தடுக்கவல் லார்கட்கே
அஞ்சாதி [18]யாதி அகம்புக லாமே. கூ௪

978 ஐந்து [19]கலையில் அகாதி தன்னிலே
வந்த நகாதி மாற்றி [20]மகாதி

பா - ம்—[1]யோதும். [2]மற்றும். [3]பெயர்ந்தன. [4]நமசிவா. [5]பார்கட்கு. [6]நேமித். [7]தலையில். [8]றானே. [9]செழுததின். [10]பகலெலாம். [11]தாயிடு. [12]றானே. [13]மகாரஞ் சிவமாய். [14]வருமுப்ப தாறிற்; வருமுப்பத் தாறிற். [15]பரமாய்; சிவாய; வடிவாம். [16]கூட. [17]தடக்கவல். [18]யாதியே. [19]கலையின். [20]யகாதி.

2805 பெருநில மாயண்ட மாயண்டத் தப்பால்
[1]குருநில மாய்நின்ற கொள்கையன் ஈசன்
பெருநில [2]மாய்நின்று தாங்கிய தாளோன்
அருநிலை யாய்நின்ற ஆதிப் பிரானே. ௨

2806 அண்ட வொளியும் அகண்ட வொளியுடன்
பிண்ட வொளியாற் பிதற்றும் பெருமையை
[3]உண்ட வெளிக்குள் [4]ஒளிக்குள் ஒளித்தது
கொண்ட குறியைக் குலைத்தது தானே. ௩

2807 பயனுறு [5]கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு [6]மாதி [7]பரஞ்சுடர்ச் சோதி
அயனொடு மாலறி யாவகை [8]நின்றிட்
டுயர்நெறி [9]யாயொளி யொன்றது வாமே.* ௪

2808 அறிவுக் கறிவாம் அகண்ட [10]வொளியும்
பிறியா வலத்தினிற் பேரொளி மூன்றும்
அறியா [11]தடங்கிடில் அத்தன் அடிக்குட்
பிறியா திருக்கிற் பெருங்கால [12]மாமே.† ௫

2809 ஆகாச வண்ணன் அமரர் [13]குலக்கொழுந்
தேகாச மாசுண மிட்டங் கிருந்தவன்
ஆகாச [14]வண்ணம் அமர்ந்துநின் றப்புறம்
ஆகாச மாயங்கி வண்ணனு மாமே. ௬

2810 உயிர்க்கின்ற [15]வாறும் உலகமும் ஒக்க
[16]உயிர்க்கின்ற உள்ளொளி சேர்கின்ற போது
குயிற்கொண்ட பேதை குலாவி யுலாவி
வெயிற்கொண்டென் உள்ளம் வெளியது வாமே. ௭

---

* ஒரு பிரதியில் இதனை யடுத்து 2809-ம் செய்யுள்.

† ஒரு பிரதியில் இதனை யடுத்து முன் அடிக்குறிப்பில் வந்த 'ஆகும் சிவானந்த,' 'மேலைத திருவம்' என்னும் செய்யுள்களும் அவற்றை யடுத்து 2802-ம் செய்யுளும்.

பா - ம்—[1]தருநில. [2]மாய்நின்ற. [3]அண்ட. [4]ஒளியா யடுத்துக் [5]கண்ணியர். [6]மாதிப். [7]பரஞ்சுடர். [8]நின றட். [9]யாய்வெளி. [10]வெளி யும். [11]தடங்கிடும்; துடஙகிடும். [12]ம் போமே. [13]தலக்கொழுந். [14]வண்ணன். [15]வாறு. [16]உயிர்க்கொண்ட துள்ளொளி.

2811 நணுகி [1]லகல்கில ஞுதன் உலகத்
தணுகில் அகன்ற பெரும்பதி [2]நந்தி
நணுகிய மின்னொளி சோதி [3]வெளியைப்
[4]பணியின் அமுதம் பருகலு மாமே. அ

2812 புறத்துளா காசம் புவனம் உலகம்
அகத்துளா காசமெம் மாதி [5]யறிவு
[6]சிவத்துளா காசஞ் [7]செழுஞ்சுடர்ச் சோதி
சகத்துளா காசந் [8]தானஞ்ச மாதியே.* கூ

கഠ. ஞானோதயம்

2813 மனசந் தியிற்கண்ட [9]மன்னன வாகுங்
[10]கனவுற ஆனந்தங் காண்டல் அதனை
[11]வினவுற ஆனந்த [12]மீதொழி வென்ப
இனமுற்று னந்தியா [13]னந்த மிரண்டே.† க

2814 [14]கரியட்ட கையன் கபாலங்கை ஏந்தி
[15]எரியும் இளம்பிறை சூடும்எம் மானை
அரியன் பெரியனென் றுட்பட்ட தல்லால்
கரியன்கொல் [16]சேயன்கொல் காண்கின்றி லேனே.‡ உ

---

* ஒரு பிரதியில் இதனை யடுத்து 2815-ம் செய்யுள்.

† ஒரு பிரதியில் இதனை யடுத்து 1802-ம் செய்யுள்.

‡ ஒரு பிரதியில் இதனை யடுத்து, 'உண்ண லுறங்க லுலாவ லுயிர்போத, நண்ணல் நரக சுவற்கதது நாட்டிடப், பண்ணலவன் பணியாலிவன் பாலிடை, திண்ணிதிற் செய்கை சிவன் பணியாமே' என்ற செய்யுள். மற்றொரு பிரதியில் 'ஓடும் இருக்குங் கிடக்கும் உடனெழுந், தாடும் பறக்கு மகண்டமும் பேசிடும், பாடும் புறத்தெழும் பல்லுயி ரானந்தம், கூடும் பொழுதிற் குறிப்பிவை தானே' என்ற செய்யுளும், அதனை யடுதது 2808-ம் செய்யுளும்.

பா - ம்—[1]லகில்லிய. [2]நாதி. [3]யொளியைப். [4]பணியில். [5]யறிவுஞ். [6]செகத்துளா. [7]செஞ்சுடர்ச். [8]தாஞைஞ்ச. [9]மன்னவராகுங்; மனன. [10]கனவுற்ற. [11]வினவுற்ற; மினவுற்ற. [12]மீதொளி யென்ப. [13]னன. [14]கரிபட்ட. [15]எரியுமிழும்பிறை. [16]செய்யன் கொல்.

2815 *மிக்கா ரமுதுண்ண நஞ்சுண்ட மேலவன்
தக்கார் உரைத்த தவநெறி யேசென்று
புக்கா லருளும் பொன்னுரை ஞானத்தை
நக்கார் கழல்வழி நாடுமின் நீரே. ந

2816 விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக் குள்ளே விளககினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல் [1]லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலு மாமே. ச

2817 தத்துவம் எங்குண்டு [2]தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை [2]தத்துவன் அங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மை யறிந்தபின்
[2]தத்துவன் அங்கே தலைபபடுந் தானே. ரு

2818 விசும்பொன்று தாங்கிய மெய்ஞ்ஞானத் துள்ளே
அசும்பினின் றூறிய [3]தாரமு தாகும்
பசும்பொன் திகழும் படர்சடை மீதே
குசும்ப மலர்க்கந்தங் [4]கூடிநின் றானே. சு

2819 [5]முத்தின் வயிரத்தின் [6]முந்நீர்ப் பவளத்தின்
[7]கொத்தும் பசும்பொன்னின் [8]தூவொளி மாணிக்க
[9]மொத்துயர் அண்டத் [10]துள்ளமர் சோதியை
எத்தன்மை வேறென்று கூறுசெய் வீரே. எ

2820 நானென்றுந் தானென்றும் நாடினேன் நாடலும்
நானென்றுந் [11]தானென் றிரண்டில்லை யென்பது
[12]நானென்ற ஞான முதல்வனே [13]நல்கினான்
[14]நானென்று நானும் நினைப்பொழிந் தேனே. அ

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் முதலியவற்றிற்கே ஞான வுதயம் என்ற தலைப்பு.

பா - ம்—[1]லோர்கட்கு. [2]தத்துவம். [3]வாரமு. [4]கூட்டிநின். [5]முத்தும் வயிரமும். [6]முன்னீர்ப். [7]கொதகின். [8]தூயவொளி. [9]மொத்த வுயாண்டத ; மொத்த வுயிரண்டத. [10]துள்ளேமா. [11]தா னென்று மிரண்டில்லை. [12]நானென்று. [13]நல்கிடின். [14]நானென்றதி.

2821 ஞானத்தின் நன்னெறி நாதாந்த நன்னெறி
ஞானத்தின் நன்னெறி நானென் [1]றறிவோர்தல்
ஞானத்தின் நல்யோக நன்னிலை யேநிற்றல்
ஞானத்தின் நன்மோன நாதாந்த வேதமே. கூ

2822 உய்யவல் லார்கட் குயிர்சிவ ஞானமே
உய்யவல் லார்கட் [2]குயிர்சிவ தெய்வமே
உய்யவல் லார்கட் கொடுக்கம் பிரணவம்
உய்யவல் லாரறி வுள்ளறி வாமே. கO

2823 காணவல் லார்க்கவன் கண்ணின் மணியொக்குங்
காணவல் லார்க்குக் கடலின் அமுதொக்கும்
பேணவல் லார்க்குப் [3]பிழைப்பிலன் பேர்நந்தி
[4]ஆணவல் லார்க்கே [5]யவன் துணை யாமே. கக

2824 ஓமெனும் ஓரெழுத் துள்நின்ற ஓசைபோல்
மேனின்ற தேவர் விரும்பும் விழுப்பொருள்
சேய்நின்ற செஞ்சுடர் எம்பெரு மானடி
[6]ஆய்நின்ற தேவர் அகம்படி யாமே. கஉ

கக. *சத்திய ஞானானந்தம்

2825 [7]எப்பாழும் பாழும் [8]மியாவுமாய் அன்றாகி
[9]முப்பாழுங் [10]கீழுள முப்பாழும் முன்னியே
இப்பாழும் இன்னவா [11]றென்பதி [12]லாவின்பத்
தற்பர [13]ஞானானந்தந் தானது வாகுமே. க

2826 தொம்பதந் தற்பதஞ் [14]சொன்ன [15]துரியம்போல்
நமபிய மூன்றாந் துரியத்து [16]நன்றாகும்

---

* இரண்டு பிரதிகளில் இததலைப்பு சத்திய ஞானந்தம் என்றுளது.

பா - ம்—[1]றறவோர்தல். [2]குயிர்சிவந். [3]பிழைப்பிலாப். [4]ஆன. வல். [5]யணை துணை ; யனைத்துணை. [6]ஆர்நின்ற. [7]எப்பாழும். [8]யாவையுமாய். [9]முப்பாழும் ; முப்புரமும். [10]கீழு. [11]றென்பதில்லா வின்பத்தத். [12]லாவின்பத். [13]ஞானந்தந் ; ஞானானந்த மோனாந்த மாகுமே. [14]சொன்முத். [15]முத்துரி யம்போல். [16]நன்றாம் ; நன்றமம்.

அம்புவி [1]யுன்னு அதிருக்க மப்பாலைச்
செம்பொரு ளாண்டருள் சீர்நந்தி தானே. ௨

2827 மன்னுஞ் சத்தியாதி மணியொளி மாசோபை
அன்னதோ டொப்ப [2]மிடமொன்று [3]மாறது
[4]இன்னிய வுற்பலம் ஒண்சீர் நிறமணம்
[5]பன்னிய சோபை [6]பகாறு மானதே. ௩

2828 சத்தி [7]சிவன்பர ஞானமுஞ் சாற்றுங்கால்
உய்த்த அனந்தஞ் [8]சிவமுயர் ஆனந்தம்
வைத்த சொருபத்த சத்தி வருகுரு
உய்த்த வுடலிவை யுற்பலம் போலுமே. ௪

2829 [9]உருவுற் பலநிறம் ஒண்மணஞ் சோபை
[10]தரநிற்ப [11]போலுயிர் தற்பரந் தன்னின்
மருவச் சிவமென்ற மாமுப் பததின்
சொருபத்தன் சத்தியாதி [12]தோன்றநின் றனே. ௫

2830 நினையும் அளவின் நெகிழ வணங்கிப்
புனையில் அவனைப் பொதியலு மாகும்
எனையுமெங் கோன்நந்தி தன்னருள் கூட்டி
நினையும் அளவில் [13]நினைப்பித் தனனே. ௬

2831 பாலொடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய போமு தாகும் மதுரமும்
போலுந் துரியம் பொடிபட [14]வுள்புகச்
சீல மயிர்க்கால் தொறுந்தேக் கிடுமே. ௭

2832 அமரத் [15]துவங்கடந் தண்டங் கடந்து
தமரத்து நின்ற தனிமையன் ஈசன்

பா - ம்—[1]புண்ணு. [2]மிடவொன்று லானது. [3]மானது. [4]முன்னிய ; முன்னி யுறபலம். [5]பண்ணிய [6]பகர்மாறு. [7]யஞ்சீவம் சிவ ஞானம். [8]சிவமுயிர் ; சிவமுயல். [9]வருவுற். [10]தரைநிறம். [11]போலுயர். [12]தோன்றிநின். [13]நிலைப்பித். [14]வுள்புக்க. [15]துளங்கடந்.

[1]பவளத்து [2]முத்தும் [3]பனிமொழி மாதர்
[4]துவளற்ற சோதி தொடர்ந்துநின் றானே. ௮

2833 [5]மத்திமம் ஆறாறு மாற்றி மலநீக்கிச்
சுத்தம தாகுந் துரியத் துரிசற்றுப்
பெத்த மறச்சிவ [6]மாகிப் பிறழ்வுற்றுச்
சத்திய [7]ஞானானந்தஞ் சார்ந்தனன் ஞானியே. ௯

2834 சிவமா [8]யவமான மும்மலந் தீரப்
பவமான முப்பாழைப் பற்றறப் பற்றத்
தவமான சத்திய [9]ஞானானந் தத்தே
துவமார் துரியஞ் சொரூபம தாமே. ௧௦

கஉ. சொரூப உதயம்

2835 பரம குரவன் பரமெங்கு மாகித்
திரமுற எங்கணுஞ் சேர்ந்தொழி வற்று
[10]நிரவு சொரூபத்துள் நீடுஞ் சொரூபம்
அரிய துரியத் தணைந்துநின் றானே. ௧

2836 குலைக்கின்ற [11]நீரிற் குவலய நீரும்
அலைக்கின்ற காற்றும் அனலொடா காச
நிலத்திடை வானிடை நீண்டகன் [12]றானை
வரைத்து வலஞ்செயு மாறறி [13]யேனே. ௨

2837 அங்குநின் றானயன் மால்முதல் தேவர்கள்
எங்குநின் [14]றாரும் இறைவனென் றேத்துவர்
தங்கிநின் றான்தனி நாயகன் எம்மிறை
பொங்கிநின் றான்புவ னாபதி தானே. ௩

2838 சமையச் சுவடுந் தனையறி யாமற்
கமையற்ற காமாதி காரணம் எட்டுந்

பா - ம்—[1]பவாத்து. [2]முத்துப். [3]பணிமொழி ; பன்றிமொழி. [4]துவாத்த. [5]மத்தம். [6]மாக்கிப். [7]ஞானந்தஞ். [8]மவமான. [9]ஞானாந். [10]திரவுஞ். [11]நீரக். [12]றானை. [13]யோமே. [14]றானும்.

திமிரச் செயலுந் தெளிவுடன் நின்றோர்
அமரர்க் கதிபதி யாகிநிற் [1]பாரே. ௪

2839 மூவகைத் தெய்வத் தொருவன் முதலுரு
வாயது வேறு மதுபோல் அணுப்பரன்
சேய சிவமுத் துரியத்துச் சீர்பெற
ஏயும் நெறியென் றிறைநூல் இயம்புமே. ௫

2840 [2]உருவன்றி யேநின் றுருவம் புணர்க்குங்
[3]கருவன்றி யேநின்று தான்கரு [4]வாகும்
[5]அருவன்றி யேநின்ற மாயப் பிரானைக்
[6]குருவன்றி யாவர்க்குங் [7]கூடவொண் ணாதே. ௬

2841 உருவ நினைப்பவர்க் [8]குள்ளுறுஞ் சோதி
உருவ நினைப்பவர் ஊழியுங் [9]காண்பர்
உருவ நினைப்பவர் உம்பரு மாவர்
உருவ [10]நினைப்பவர் [11]உலகத்தில் யாரே. ௭

2842 பரஞ்சோதி யாகும் பதியினைப் [12]பற்றுப்
பரஞ்சோதி என்னுட் படிந்ததற் பின்னைப்
பரஞ்சோதி [13]புண்ணன் படியப் படியப்
பரஞ்சோதி தன்னைப் [14]பறையக்கண் டேனே. ௮

2843 சொரூபம் உருவங் குணந்தொல் விழுங்கி
அரியன வுற்பல மாமாறு போல
மருவிய சத்தியாதி நான்கு மதித்த
[15]சொரூபக் குரவன் சுகோதயத் தானே. ௯

2844 உரையற்ற ஆனந்த [16]மோன சொரூபத்தன்
கரையற்ற சத்தியாதி காணில் அகார
மருவுற் றுகார மகாரம [17]தாக
உரையற்ற தாரத்தில் உள்ளொளி யாமே. ௧0

பா - ம்—[1]போரே. [2]உருவின்றி. [3]கருவின்றி. [4]வாக்கும்; வாக மருவன்றி. [5]அருவின்றி. [6]குருவின்றி. [7]கூறவொண். [8]குள்ளுறு. [9]காண்பவர். [10]நினைப்பார். [11]உலகத் துயர்வே. [12]பற்றும். [13]புன்னுன். [14]பறையொடுகண்; பறையொ டெனே. [15]சொரூப. [16]வொண். [17]தாகி.

2845 [1]தலைநின்ற தாழ்வரை மீது [2]தவஞ்செய்து
முலைநின்ற [3]மாதறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனிற் கண்டுகொண் டேனே. கக

2846 ஆமா றறிந்தேன் அகத்தின் அரும்பொருள்
போமா றறிந்தேன் புகுமாறு மீதென்றே
ஏமாப்ப தில்லை இனியோ ரிடமில்லை
நாமா முதல்வனும் [4]நானென லாமே. கஉ

கரு. ஊழ்

2847 [5]சேற்றிலென் சீவிலென் செஞ்சாந் தணியிலென்
மத்தகத் தேயுளி நாட்டி [6]மறிக்கிலென்
[7]வித்தகன் நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தன்மைகுன் றாரே. க

2848 தான்முன்னஞ் செய்த விதிவழி தானல்லால்
வான்முன்னஞ் செய்தங்கு வைத்ததோர் [8]மாட்டில்லை
கோன்முன்னஞ் [9]சென்னி குறிவழி யேசென்று
நான்முன்னஞ் செய்ததே நன்னில மானதே. உ

2849 ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறி வாரில்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டென் னுள்ளம் பிரியகி லாவே. ங

2850 வானின் றிடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
[10]தானொன்றி மாருதஞ் சண்டம் அடிக்கிலென்
நானொன்றி நாதனை நாடுவன் நானே. ச

பா - ம்—[1]தலைநின்று. [2]தவஞ்செய. [3]மாதரில் முற்றி யானும். [4]நாமென. [5]செத்திலென். [6]மறுக்கிலென். [7]வித்தக. [8]மாடில்லை. [9]சொன்ன ; செய்த. [10]தானுன்னி.

2851 ஆனை துரக்கிலென் அம்பூ டறுக்கிலென்
கானத் துழுவை கலந்து வளைக்கிலென்
ஏனைப் பதியினில் எம்பெரு மான்வைத்த
ஞானத் துழவினை நானுழு வேனே. ரு

2852 கூடு கெடின்மற் றோர் கூடுசெய் வானுளன்
நாடு கெடினும் நமர்கெடு [1]வாரில்லை
வீடு கெடின்மற் றோர் வீடுபுக் காலொக்கும்
[2]பாடது நந்தி பரிசறி வார்க்கே. சா

கச. *சிவதரிசனம்

2853 சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படுஞ்
சிந்தை தெளியத் தெளியவல் [3]லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே. க

2854 வாக்கு மனமு [4]மறைந்த மறைப்பொருள்
நோக்குமின் நோக்கப் படும்பொருள் நுண்ணிது
போக்கொன்றும் இல்லை வரவில்லை கேடில்லை
யாக்கமும் அத்தனை ஆய்ந்துகொள் [5]வார்க்கே. உ

2855 பரனாய்ப் பராபர [6]னாகியப் பார்சென்
றரனாய் [7]வழக்கற வொண்சுடர் தானாய்த்
தரனாய்த் [8]தனதென வாறறி வொண்ணா
அரனா யுலகில் அருள்புரிந் தானே. ந

கரு. †சிவசொரூப தரிசனம்

2856 ஓதும் மயிர்க்கால் தொறும்அமு தூறிய
பேதம் அபேதம் பிறழாத ஆனந்த

---

* ஒரு பிரதியில் இத்தலைப்பு **சிவரூப தரிசனம்** என்றுளது.

† இரண்டொரு பிரதிகளில் இத்தலைப்பு **சிவ தரிசனம்** என்றுளது.

பா - ம்—[1]வாரல்லர். [2]பாடுதே. [3]லார்கட்கே. [4]பிறந்த. [5]வார்கட்கே. [6]னாகிய பார்சென். [7]வழக்கற்ற. [8]தனதென.

[1]மாதி சொரூபங்கள் மூன்றகன் றப்பாலை
[2]வேதம் ஓதுஞ் சொரூபிதன் மேன்மையே. க

2857 உணர்வும் அவனே உயிரும் அவனே
புணரும் அவனே [3]புலவி யவனே
இணரும் அவன்தன்னை யெண்ணலு மாகான்
துணரின் மலர்க்கந்தந் [4]துன்னிநின் றானே. உ

2858 துன்னிநின் றான்தன்னை [5]யுன்னிமுன் னாவிரு
முன்னி யவர்தங் குறையை முடித்திடும்
மன்னிய கேள்வி மறையவன் மாதவன்
சென்னியுள் நின்றதோர் தேற்றத்த னாமே. ங

2859 மின்னுற்ற சிந்தை விழித்தேன் விழித்தலுந்
தன்னுற்ற [6]சோதி தலைவன் இணையிலி
பொன்னுற்ற [7]மேனிப் புரிசடை [8]நந்தியும்
[9]என்னுற் [10]றறிவனன் [11]என்விழித் தானே. ச

2860 சத்திய [12]ஞானத் தனிப்பொருள் [13]ஆனந்தஞ்
சித்தத்தி னில்லாச் சிவானந்தப் பேரொளி
[14]சுத்தப் பிரம துரியந் துரியத்துள்
உய்த்த துரியத் [15]துறுபே ரொளியே. ரு

2861 பரனல்ல நீடும் பராபர னல்ல
[16]உரனல்ல மீதுணர் ஒண்சுட ரல்ல
தரனல்ல தானவை [17]யாயல்ல வாகும்
அரனல்ல ஆனந்தத் [18]தப்புறத் தானே. சு

2862 முத்தியுஞ் சித்தியும் முற்றிய ஞானத்தோன்
பத்தியுள் நின்று பரந்தன்னுள் [19]நின்றுமா

பா - ம்—[1]மாதிச். [2]வேதகம். [3]புலனு மவனே ; புனலு மவனே. [4]துன்றிநின். [5]யுன்னுமுன். [6]சோதித். [7]வேணிப். [8]நந்தியை. [9]எண்ணுற். [10]றறிவனா. [11]எனவிழித் தேனே. [12]ஞானந். [13]ஆனந்தன். [14]சுத்தத் துரியத் துரியத். [15]துறும்பே. [16]அரனல்ல. [17]ப் பாயல ருகும். [18]தப்புறந். [19]நின்று.

[1]நந்தியை [2]மூலத்தே நாடிப் பரையொடுஞ்
சந்திசெய் வார்க்குச் சடங்கில்லை தானே. ௬௫

979 மருவுஞ் [3]சிவாயமே மன்னும் [4]உயிரும்
அருமந்த [5]போகமும் ஞானமு மாகுந்
தெருள்வந்த சீவனார் சென்றிவற் றாலே
அருள்தங்கி யச்சிவ மாவது வீடே. ௬௬

980 அஞ்சுக அஞ்செழுத் துண்மை அறிந்தபின்
நெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்
[6]வஞ்சக மில்லை மனைக்கும் அழிவில்லை
தஞ்ச மிதுவென்று சாற்றுகின் றேனே. ௬௭

981 சிவாயவொ டவ்வே தெளிந்துளத் தோதச்
சிவாயவொ டவ்வே சிவனுரு வாகுஞ்
சிவாயவொ டவ்வுந் தெளியவல் லார்கள்
சிவாயவொ டவ்வே தெளிந்திருந் தாரே. ௬௮

982 சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஓகார முடனே ஒருகா [7]லுரைக்க
மகார முதல்வன் மதித்துநின் றானே. ௬௯

983 நம்முதல் [8]ஓரைந்தின் நாடுங் கருமங்கள்
அம்முதல் ஐந்தில் அடங்கிய [9]வல்வினை
சிம்முத லுள்ளே தெளியவல் லார்கட்குத்
தம்முத லாகுஞ் [10]சதாசிவந் தானே. ௭௦

984 [11]நவமுஞ் சிவமும் உயிர்பர மாகுந்
தவமொன் றிலாதன தத்துவ மாகுஞ்
சிவமொன்றி யாய்பவ ராதர வால்அச்
[12]சிவமென்ப தானும் எனுந்தெளி வுற்றதே. ௭௧

பா - ம்—[1]நந்திய. [2]மூலத்தை; மூலத்திதை. [3]சிவாயவென சிவாயமேல். [4]உருவும். [5]யோகமும். [6]வஞ்சமு. [7]லுரைக்கும். [8]ஓரைந்து; ஓரைந்துள். [9]வவ்வினைச். [10]சதாசிவன். [11]நமவுஞ். [12]சிவனென்ப.

சத்தியுள் நின்றோர்க்குத் தத்துவங் கூடலாற்
சுத்தி யகன்றோர் சுகானந்த போதரே. எ

2863 துரிய அதீதஞ் [1]சொல்லறும் பாழாம்
அரிய துரியம் அதீதம் புரியில்
விரியுங் குவியும் விள்ளா [2]மிளிருந்தன்
உருவுந் [3]திரியும் உரைப்பதெவ் வாறே. அ

கக. *முத்தி பேதம், கரும நிருவாணம்

2864 ஓதிய முத்தி [4]யடைவே [5]உயிர்பர
[6]பேதமி லச்சிவம் [7]எய்துந துரியமோ
[8]டாதி சொரூபஞ் சொரூபத்த தாகவே
[9]ஏதமி [10]லாநிரு வாணம் [11]பிறந்ததே.† க

2865 ‡பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்
கற்றற் றவர்கற்றுக் கருதிய கண்ணுதல்
சுற்றற் றவர்சுற்றி [12]நின்றஎன் சோதியைப்
[13]பெற்றுற் றவர்கள் பிதற்றொழிந் தாரே.§ உ

---

* இரண்டு பிரதிகளில் இத்தலைப்பு முத்தி பேதம் என்றுளது.

† ஒரு பிரதியில் இதனை யடுத்து 2936-ம் செய்யுள் முதலியன.

‡ ஒரு பிரதியில் இச்செய்யுள் கரும நிருவாணம் என்ற தலைப்போடு காணப்படுகிறது.

§ ஒரு பிரதியில் இதனை யடுத்து, ' சிதநஞ் சிவமாம் சிவஞானி சேர்விடம், சுத்தச் சிவாலயம் தொல்பாவ நாசமாம், அத்த மழையக மானந்த மேவிடும், முதநம் பெருகும் முழுப்பொருளாகுமே ' என்னும் செய்யுளும், அதனை யடுத்து 1513, 2423 செய்யுள்களும், அவற்றை யடுதது, ' ஆணவ மூலத்தகார முதிததிடப், பேணியுகாரங் கலாதி பிறிவிக்கத, தாணு மகாரஞ் சதாசிவ மாகவே, ஆணவ பாச மடர்தல் செய்யாவே', ' நெற்றி நடுவுள் நினைவெழு கண்டமு, முற்ற விதையமு மோதிய நாபிக்கீழ்ப், பெற்ற துரியமும் பேசிய மூலத்தே, யுற்ற வதீத மொடுங்கு முடனே ' என்னுஞ் செய்யுள்களும் காணப் படுகின்றன.

பா - ம்—[1]சொல்லூறு. [2]மிளிர்ந்தென். [3]திரிய. [4]யடையே. [5]உயிர்ப்பர மேதமி ; உயிர்பாத. [6]பேதமல்லாச் சிவம். [7]எய்திஞ் சொரூபமோ. [8]டாதி தன்னைச் சொரூபச் சொரூபத். [9]ஏதமில். [10]லஞ் நிர் ; லா றுநிறு. [11]பிறந்தே. [12]நின்ற எஞ். [13]பெற்றற்.

கஎ. *சூனிய சம்பாஷணை

2866 காயம் [1]பலகை கவறைந்து [2]கண்மூன்றாய்
ஆயம் பொருவதோர் ஐம்பத்தோ ரக்கரம்
ஏய பெருமா னிருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப்பறி யேனே. க

2867 தூறு படர்ந்து கிடந்தது [3]தூநெறி
மாறிக் கிடக்கும் வகையறி வாரில்லை
மாறிக் கிடக்கும் வகையறி வாளர்க்கு
ஊறிக் [4]கிடந்ததென் உள்ளன்பு தானே. உ

2868 ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியிற்
சாறு படுவன நான்கு பனையுள
ஏறற் கரியதோர் ஏணியிட் டப்பனை
ஏறலுற் றேன்கடல் ஏழுங்கண் டேனே. ங

2869 [5]வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் [6]டோடினார் [7]தோட்டக் [8]குடிகண்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே. ச

2870 ஐயென்னும் வித்தினில் ஆனை விளைப்பதோர்
செய்யுண்டு செய்யின் தெளிவறி வாரில்லை
மையணி கண்டன் [9]மனம்பெறின் அந்நிலம்
[10]பொய்யொன்று மின்றிப் புகளி தாமே. ரு

2871 பள்ளச்செய் யொன்றுண்டு பாழ்ச்செய் இரண்டுள
கள்ளச்செய் யங்கே கலந்து கிடந்தது
உள்ளச்செய் [11]யங்கே யுழவுசெய் வார்கட்கு
வெள்ளச்செய் யாகி விளைந்தது தானே. சா

---

* ஒரு பிரதியில் இப்பகுதி 3025-ம் செய்யுளையடுத்துக் காணப்படுகிறது; மற்றொரு பிரதியில் இத்தலைப்பு சூனிய சம்பாஷணம் என்றுளது.

பா - ம்—[1]பலவகை. [2]கண் மூன்றாயம். [3]தூய்நெறி. [4]கிடக்குமென். [5]வழுதிலை. [6]டாடினார். [7]தொட்டிக். [8]குடியினர்; குடிகள். [9]மனம்பேறின். [10]பொய்யென்று. [11]யிங்கே.

2872 மூவணை [1]யேறு முழுவது முக்காணி
[2]தாமணி கோலித் [3]தறியுறப் பாய்ந்திடு
நாவணை கோலி நடுவிற் [4]செறுவுழார்
காலணை கோலிக் களருழு வாரே. எ

2873 [5]ஏற்றம் இரண்டுள ஏழு [6]துரவுள
மூத்தான் இறைக்க இளையான் படுத்தநீர்
பாத்தியிற் பாயாது [7]பாழ்ப்பாய்ந்து போயிடிற்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாமே. அ

2874 பட்டிப் பசுக்கள் இருபத்து நாலுள
குட்டிப் பசுக்களோ [8]ரேழுள ஐந்துள
குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் [9]பசுவே பனவற்கு வாய்த்ததே. கூ

2875 ஈற்றுப் பசுக்கள் இருபத்து நாலுள
ஊற்றுப் பசுக்கள் ஒருகுடம் பால்போதும்
காற்றுப் பசுக்கள் கறந்துண்ணுங் காலத்து
மாற்றுப் பசுக்கள் வரவறி யோமே. க௦

2876 தட்டான் அகத்தில் தலையான மச்சின்மேல்
[10]மொட்டா [11]யெழுந்தது [12]செம்பால் மலர்ந்தது
[13]வட்டம் படவேண்டி வாய்மை மடித்திட்டுத்
தட்டான் அதனைத் தகைந்துகொண் டானே. கக

2877 அரிக்கின்ற நாற்றங்கால் அல்லற் கழனி
திரிக்கின்ற [14]வொட்டஞ் சிக்கெனக் கட்டி
[15]வரிக்கின்ற [16]நல்லான் [17]கறவையைப் பூட்டில்
விரிக்கின்ற வெள்ளரி வித்துவித் தாமே. கஉ

பா - ம்—[1]யேரு. [2]தாவணை. [3]தறியினிற். [4]செய்ச்சேறுழார் [5]ஏத்தம். [6]துலாவுள. [7]பாழ் பாய்ந்து. [8]ரெட்டுள. [9]பசுக்கள் பனவர்க்கு. [10]மட்டா. [11]மெழுந்தது. [12]செம்பாய். [13]வட்டப். [14]வொட்டகஞ். [15]விரிக்கின்ற; அரிக்கின்ற. [16]நல்ல; நல்லனற். [17]கறவையை பூட்டி.

2878 1*இடாக்கொண்டு [2]நூவி எருவிட்டு வித்திக்
[3]கிடாக்கொண்டு பூட்டிக் கிளறி முளையை
[4]மிடாக்கொண்டு சோறட்டு மெள்ள விழுங்கார்
[5]கிடாக்கொண்டு செந்நெல் அறுக்கின்ற வாறே. ௧௩

2879 விளைந்து கிடந்தது மேலைக்கு [6]வித்தது
விளைந்து கிடந்தது மேலைக்குக் காதம்
விளைந்து [7]விளைந்து விளைந்துகொள் [8]வார்க்கு
விளைந்து கிடநதது [9]மேவுமுக் காதமே. ௧௪

2880 களருழு வார்கள் கருத்தை யறியோங்
களருழு வார்கள் [10]கருதலு மில்லைக்
களருழு வார்கள் களரின் முளைத்த
வளரிள வஞ்சியின் [11]மாய்தலு மாமே. ௧௫

2881 கூப்பிடு [12]கொள்ளாக் குறுநரிக் [13]கொட்டகத்
தாப்பிடு பாசத்தை யங்கியுள் வைத்திட்டு
நாட்பட நின்று நலம்புகுந் தாயிழை
[14]ஏற்பட இல்லத் தினிதிருந் தானே. ௧௬

2882 மலைமேல் மழைபெய்ய மான்கன்று துள்ளக்
குலைமேல் இருந்த கொழுங்கனி வீழ
உலைமேல் இருந்த [15]உறுப்பெனக் கொல்லன்
முலைமேல் [16]அமிர்தம் பொழியவைத் தானே. ௧௭

2883 பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் [17]இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்
பார்ப்பான் பசுஐந்தும் [18]பாலாச் சொரியுமே. ௧௮

---

* இரண்டு பிரதிகளில் இதுவும் அடுத்த செய்யுளும் பின் முன்னாக உள்ளன.

பா - ம்—1இடாக்கொண்டு ; இடர்க்கொடு. [2]நூவி. [3]கிடர்க்கொண்டு. [4]விடாக்கொண்டு ; மிடர்க்கொண்டு. [5]அடர்க்கொண்டு. [6]வித்து. [7]கிடந்து. [8]வார்க்கே. [9]மேலைமுக் ; மேலுமுக். [10]கருத்திலு. 11வாய்தலுந் தானே ; வாய்த்தலுந் தானே. [12]கொள்ளார். [13]கோட்டகத். [14]ஏப்பட. [15]உறுப்பினக் ; உறுபிணக். [16]அமுதம் ; அமுத மொழியை வைத். [17]இனறியே. [18]பாலாய்ச்.

2884 ஆமாக்கள் ஐந்தும் அரியேறு முப்பதுந்
[1]தேமா இரண்டொடு திப்பிலி [2]யொன்பதுந்
[3]தாமாக் [4]குரங்கொளிற் றம்மனத் துள்ளன
மூவாக் [5]கடாவிடின் மூட்டுகின் றாரே. க௯

2885 எழுதாத [6]புத்தகத் தேட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந் தேர்த
மலராத [7]பூவின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணமுண்ட வாறே. உ௦

2886 போகின்ற பொய்யும் புகுகின்ற பொய்வித்துங்
கூகின்ற நாவலின் [8]கூழைத் தருங்கனி
ஆகின்ற பைங்கூழ் அவையுண்ணும் ஐவரும்
வேகின்ற கூரை விருத்திபெற் றாரே. உக

2887 [9]மூங்கின் முளையில் எழுந்ததோர் வேம்புண்டு
வேம்பினிற் [10]சார்ந்து கிடந்த பனையிலோர்
பாம்புண்டு [11]பாம்பைத் தூரத்தித்தின் பாரின்றி
வேம்பு கிடந்து வெடிக்கின்ற வாறே. உஉ

2888 பத்துப் [12]பரும்புலி யானை [13]பதினைந்து
வித்தகர் ஐவர் [14]விநோதகர் ஈரெண்மர்
[15]அத்தகு மூவர் அறுவர் மருத்துவர்
அத்தலை ஐவர் அமர்ந்துநின் றாரே. உ௩

2889 இரண்டு [16]கடாவுண்டு இவ்வூரி னுள்ளே
இரண்டு [17]கடாவுக்கும் [18]ஒன்றே [19]தொழும்பன்
இரண்டு [20]கடாவும் இருத்திப் பிடிக்கில்
இரண்டு [20]கடாவும் [21]ஒருகடா வாமே. உச

பா - ம்—1 சேமா. [2]ஒன்பது. [3]தாமாற். [4]குரங்கொள்ளிற். [5]கிடா விடின். [6]பொததகத். [7]மொட்டின். [8]கூழை. [9]மூங்கிலெழுந்ததோர் வேம்புண்டு வேம்பினிற். [10]சார்ந்து கிடந்த பனையிலோர் பாம்புண்டு. [11]பாம்பைத் தூரத்திட்டு வேம்பைத தின்பாரின்றி. [12]பெரும்புலி. [13]பதினஞ்சு. [14]விஞயகர். [15]வைதத குரவர். [16]கிடாவுண் டிவ்வூரி. [17]கிடாவுக்கும். [18]ஒன்று. [19]தழுப்பன் ; தளப்பன். [20]கிடாவும். [21]ஒரு கிடா.

2890 ஒத்த 1மனக்கொல்லை யுள்ளே [2]சமன்கட்டிப்
பத்தி வலையிற் பருத்தி நிறுத்தலால்
முத்தக் [3]கயிறாக மூவர்கள் [4]ஊரினுள்
[5]நித்தம் பொருது [6]நிரம்பநின் றாரே. ௨௫

2891 கூகையும் பாம்புங் கிளியொடு பூனையும்
நாகையும் பூழும் நடுவில் உறைவன
நாகையைக் கூகை நணுக லுறுதலுங்
கூகையைக் கண்டெலி கூப்பிடு மாறே. ௨௬

2892 குலைக்கின்ற நன்னகை [7]யாங்கொங் குழக்கின்
[8]நிலைக்கின்ற வெள்ளெலி மூன்று [9]கொணர்ந்தான்
உலைக்குப் புறமெனில் ஓடு மிருக்கும்
புலைக்குப் [10]பிறந்தவை போகின்ற வாறே. ௨௭

2893 காடுபுக் [11]காரினிக் காணூர் கடுவெளி
கூடுபுக் கானது ஐந்து குதிரையும்
மூடுபுக் கானது ஆறுள ஒட்டகம்
மூடு [12]புகாவிடின் மூவணை யாமே. ௨௮

2894 கூறையுஞ் சோறுங் [13]குழாயகத் தெண்ணெயுங்
[14]காறையும் நாணும் [15]வளையலுங் [16]கண்டவர்
பாறையி [17]லுற்ற பறக்கின்ற சீலைபோல்
ஆறைக் குழியில் [18]அழுந்துகின் றாரே. ௨௯

2895 [19]துருத்தியுள் ளக்கரை தோன்று மலைமேல்
[20]விருத்திகண் காணிக்கப் போவார்முப் போதும்
வருத்தியுள் நின்ற மலையைத் [21]தவிர்ப்பாள்
[22]ஒருத்தியுள் [23]ளாளவர் ஊரறி யோமே. ௩0

பா - ம்—[1]மனக்கொலை. [2]சமன்கூட்டி. [3]கவறாக. [4]நாரினும். [5]நெய்த்தம். [6]நிரம்பிநின். [7]யாங்கொடு குததி. [8]வலைக்கென்று; விலைக்கென்று. [9]குணர்ந்தான் ; கொணர்ந்தாள். [10]பிறந்தவர். [11]காரன்றிக். [12]புதாவிடின். [13]குழாயக்த. [14]காறைய. [15]வளையிலுங். [16]காண்டவப். [17]லெற்றப். [18]அமந்துகின் ; அமர்ந்துநின். [19]துருத்தி யுண்ணக்கரை. [20]விருத்திகங். [21]தவிர்ப்பார். [22]அருத்தியுள். [23]ளானவர் ; ளாளவன்.

2896 பருந்துங் கிளியும் படுபறை கொட்டத்
திருந்திய மாதர் [1]திருமணப் பட்டார்
[2]பெருந்தவப் பூதம் [3]பெறலுரு வாகும்
[4]இருந்திய [5]பேற்றினில் இன்புறு [6]வாரே. ௩௧

2897 [7]கூடும் பறவை இரைகொத்தி மற்றத
னூடுபுக் குண்டி யறுக்குறில் [8]என்றேனுக்குஞ்
[9]சூடேற்றி நெய்யுண்டு மைகான் றிடுகின்ற
பாடறி வார்க்குப் பயனெளி தாமே. ௩௨

2898 [10]இலையில்லை பூவுண் டினவண் டிங்கில்லை
தலையில்லை வேருண்டு [11]தாளில்லை பூவின்
[12]குலையில்லை கொய்யும் மலருண்டு [13]சூடுந்
[14]தலையில்லை தாழ்ந்த [15]கிளைபுல ராதே. ௩௩

2899 [16]அக்கரை நின்றதோர் ஆல மரங்கண்டு
[17]நக்கரை வாழ்த்தி நடுவே [18]பயன்கொள்வர்
மிக்கவ ரஞ்சு துயரமுங் கண்டுபோய்த்
தக்கவர் [19]தாழ்ந்து கிடக்கின்ற வாறே. ௩௪

2900 கூப்பிடு யாற்றிலே வன்கா டிருகாதங்
காப்பிடு கள்ளர் கலந்துநின் றுருளர்
காப்பிடு கள்ளரை [20]வெள்ளர் தொடர்நதிட்டுக்
[21]கூப்பிடு மீண்டதோர் [22]கூரைகொண் டாரே. ௩௫

2901 கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை
எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையுங்
கட்டியுந் தேனுங் கலந்துண்ண மாட்டாதார்
எட்டிப் பழத்துக் கிளைக்கின்ற வாறே. ௩௬

பா - ம்—[1]சிவமணம். [2]பொருந்திய. [3]போலுரு ; பெறனுரு. [4]இருந்திய. [5]பேறினி ; பேறினில். [6]வாயே. [7]கூடு. [8]என்னைக்குஞ். [9]சூடரி. [10]இலை யில்லைப். [11]தாளில்லைப். [12]குலையில்லைக். [13]கொய் யுந். [14]தலையில்லைத். [15]மயிர்புல. [16]அக்கண. [17]நக்கண. [18]கிளிவஞ்சி ; கிழிவஞ்சி. [19]வாழ்ந்து. [20]வெள்ளந் துரந்திட்டுக். [21]கூப்பிட. [22]கூறை கொண்.

2902 பெடைவண்டும் ஆண்வண்டும் பீடிகை [1]வண்ணக்
[2]குடைகொண்ட பாசத்துக் கோலமுண் டானுங்
கடைவண்டு தானுண்ணுங் கண்கலந் திட்ட
பெடைவண்டு [3]தான்பெற்ற தின்பழ மாமே. ௩௭

2903 கொல்லையில் [4]மேயும் பசுக்களைச் செய்தவன்
எல்லை கடப்பித் திறையடிக் கூட்டியே
வல்லசெய் தாற்றன் மதித்தபி னல்லது
கொல்லைசெய் நெஞ்சங் [5]குறியறி யாதே. ௩௮

2904 தட்டத்து நீரிலே தாமரை பூத்தது
குட்டத்து நீரிற் குவளை எழுந்தது
விட்டத்தி னுள்ளே [6]விளங்கவல் லார்கட்குக்
குட்டத்தி லிட்டதோர் கொம்மட்டி யாமே. ௩௯

2905 [7]ஆறு பறவைகள் ஐந்தகத் துள்ளன
நூறு பறவை நுனிக்கொம்பின் மேலன
[8]ஏறும் பெரும்பதி ஏழுங் கடந்தபின்
மாறுத லின்றி மனைபுக லாமே. ௪௦

2906 [9]கொட்டனஞ் செய்து குளிக்கின்ற கூவலுள்
[10]வட்டனப் பூமி மருவிவர் தூறிடுங்
[11]கட்டனஞ் செய்து [12]கயிற்றால் [13]தொழுமியுள்
[14]ஒட்டனஞ் [15]செய்தொளி யாவர்க்கு மாமே. ௪௧

2907 ஏழு [16]வளைகடல் எட்டுக் குலவரை
யாழும் [17]விசும்பினில் அங்கி [18]மழைவளி
தாழு மிருநிலந் தன்மை [19]யதுகண்டு
வாழ நினைக்கில [20]தாலய மாமே. ௪௨

பா - ம்— [1]வண்டுண்ணக். [2]குறைகொண்ட. [3]தான் பிறர்க்கின் பழம். [4]மேவும்; மையும். [5]குறிப்பறி. [6]விலக்கவல். [7]ஆறும். [8]வேறு [9]கொட்டணஞ். [10]வட்டணப்; வட்டணம். [11]கட்டணஞ். [12]கயிறார்த்; கயிறாராத். [13]தொழுமியும்; தொழிமியுள். [14]ஒட்டணஞ்; எட்டணஞ். [15]செய்தொழி. [16]குலகடல். [17]விசும்பிடில்; விசும்பிடி. [18]மழை வெளி; மறைவெளி. [19]யதுகண்டாழ. [20]ததானையு; த்தாலையு.

2908 [1]ஆலிங் கனஞ்செய் [2]தகஞ்சுடச் சூலத்துச்
சாலிங் [3]கமைத்துத் தலைமை தவிர்த்தனர்
கோலிங் [4]கமைத்தபின் [5]கூபப் பறவைகண்
[6]மாலிங்கன் வைத்தது முன்பின் வழியே. ௪௩

2909 [7]கொட்டுக்குந் தாலி இரண்டே இரண்டுக்குங்
[8]கொட்டுக்குந் தாலிக்கும் பாரை வலிதென்பர்
[9]கொட்டுக்குந் தாலிக்கும் பாரைக்கும் மூன்றுக்கும்
இட்டம் வலிதென்பர் ஈசன் [10]அருளே. ௪௪

2910 கயலொன்று கண்டவர் கண்டே இருப்பர்
முயலொன்று கண்டவர் மூவரும் உய்வர்
பறையொன்று பூசல் பிடிப்பா னொருவன்
[11]மறையொன்று கண்ட [12]துருவம்போன் றாமே. ௪௫

2911 கோரை எழுந்து கிடந்த [13]குளத்தினில்
ஆரை படர்ந்து தொடர்ந்து கிடந்தது
நாரை படுகின்றற் [14]போலல்ல நாதனார்
பாரை [15]கிடக்கப் படிகின்ற வாறே. ௪௬

2912 கொல்லைமுக் காதமுங் காடரைக் காதமும்
எல்லை மயங்கிக் கிடந்த [16]இருநெறி
எல்லை மயஙகா தியங்கவல் லார்கட்
கொல்லை [17]கடந்துசென் றார்புக லாமே. ௪௭

2913 உழுவொன்று வித்து வொருங்கின காலத்
தெழுமழை பெய்யா திருநிலச் [18]செவ்வி
[19]தழுவி வினைசென்று [20]தான்பய வாது
வழுவாது [21]போவன் வளர்சடை யோனே. ௪௮

பா - ம்—[1]ஆலிகணஞ் செய். [2]தகஞ்சுடர். [3]கமைத்த ; கம் வைத்தமை தானங் கவித்தனர். [4]கமைத்தமின். [5]கூப்பப் பறவை தண். [6]பாலிங்கன். [7]கொட்டுக் குவிந்தா லிரண்டே. [8]கொட்டுக்குவிர். [9]கொட்டுக் குவிந்தாரைக்கும் பாரை. [10]அறிவே. [11]பிறையொன்று. [12]துருவம் போலாமே. [13]குளத்தினுள். [14]போல் நல்ல. [15]க்கடக்கப் படிக்கின்ற. [16]இருள்நெறி. [17]நடந்து சென். [18]செல்வி. [19]தழுவ வணச் சென்று ; தழுவினை சென்ற. [20]தாம்பய. [21]போவர்.

2914 பதுங்கிலும் பாய்புலி பன்னிரு காதம்
ஒதுங்கிய தண்கடல் ஓதம் உலவை
மதுங்கிய [1]வார்களி யாரமு தூறப்
பொதுங்கிய ஐவரைப் [2]போய்வளைத் தானே. சகூ

2915 [3]தோணியொன் றேறித் தொடர்ந்து கடல்புக்கு
வாணிபஞ் செய்து வழங்கி [4]வளர்மகன்
நீவிக் [5]கிறையுமே [6]நெஞ்சின் நிலைதளர்ந்
தாலிப் பழம்போல் [7]அளிக்கின்ற அப்பே. ருO

2916 முக்காத மாற்றிலே மூன்றுள வாழைகள்
செக்குப் [8]பழுத்த திரிமலங் காய்த்தன
[9]பக்கனார் மிக்கார் [10]படங்கினார் [11]கன்னியர்
நக்கு மலருண்டு [12]நடுவுநின் றூரே. ருக

2917 அடியும் முடியும் [13]அமைந்தோர் [14]ஆத்தி
[15]முடியும் நுனியின்கண் [16]முத்தலை மூங்கில்
கொடியும் படையுங் [17]கோட்சரன் ஐயைந்து
மடியும் வலம்புரி [18]வாய்த்ததவ் வாறே. ருஉ

2918 [19]பன்றியும் பாம்பும் பசுமுசு வானரந்
தென்றிக் கிடந்த [20]சிறுநரிக் கூட்டத்துக்
[21]குன்றுமை கூடித் தராசின் நிறுத்தபின்
குன்றி [22]நிறையைக் குறைக்கின்ற வாறே. ருங

2919 மொட்டித் தெழுந்தோர் மொட்டுண்டு மொட்டினைக்
கட்டுவிட் [23]டோடின் மலர்தலுங் காணலாம்
பற்றுவிட் டம்மனை பாழ்பட நோக்கினாற்
கட்டுவிட் டார்க்கன்றிக் [24]காணவொண் ணாதே. ருச

பா - ம்—[1]வாரமு தூறலுண் ணமற் ; வார்கனி. [2]போய்விளைத். [3]தோணியென். [4]வளர்மகள். [5]கிறையுமென். [6]நெஞ்சு ; நெஞ்சில். [7]அழிக்கின்ற. [8]பழுத்துத திகழ்மரங் ; பழுத் திரிமரங். [9]வக்கனார். [10]அடங்கினார். [11]கன்னியா ரனைவர். [12]நடுவுணின். [13]அமைத்தோர். [14]அத்தி. [15]முடியின். [16]முத்தினை ; முத்தின. [17]தொடர்சானை யைந்து. [18]வாய்வைத்த. [19]குன்றியும். [20]சிறுகரிக். [21]குன்றுமற். [22]யறையக் ; யறையைக். [23]டோடி. [24]காண்கவொண்.

985 கூடிய எட்டும் இரண்டுங் [1]குவிந்தறி
நாடிய நந்தியை ஞானத்துள் ளேவைத்து
ஆடிய ஐவரும் அங்குற வாவர்கள்
[2]தேடி அதனைத் தெளிந்தறி [3]யீரே. ௭௨

986 எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்
எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே. ௭௩

987 எட்டு வரையின்மே லெட்டு வரைகீறி
இட்ட [4]நடுவுள் இறைவன் [5]எழுத்தொன்றில்
வட்டத்தி லேயறை நாற்பத்தெட் டுமிட்டுச்
சிட்டஞ் செழுத்துஞ் [6]செபிசிக் கிரமே. ௭௪

988 [7]தானவர் [8]சட்டர் சதிரர் இருவர்கள்
ஆனஇம் மூவரோ டாற்றவ ராதிகள்
ஏனைப் பதினைந்தும் விந்துவும் நாதமுஞ்
சேனையுஞ் [9]செய்சிவ சக்கரந் தானே. ௭௫

989 [10]பட்டன மாதவ [11]மாறும் பராபரம்
விட்டனர் தம்மை விகிர்தா நமஎன்பர்
எட்டனை யாயினும் [12]ஈசன் திறத்திறம்
ஒட்டுவன் பேசுவன் ஒன்றறி யேனே. ௭௬

990 [13]சிவன்முதல் மூவரோ டைவர் [14]சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றான
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதல் சங்கரன் தன்பெயர் தானே. ௭௭

991 வித்தாஞ் [15]செகமய மாக வரைகீறி
[16]நத்தார் கலைகள் பதினாறு [17]நாட்டிப்பின்

பா - ம்—[1]குவித்தறி. [2]தேடிய தன்னைத். [3]வீரே. [4]நடுவின். [5]எழுத்தாறில். [6]செவிக்கிற தாமே; செபிசிற காமே; செவிசித் தாமே; செவிசக் கரமே. [7]தானைதவர். [8]வட்டர். [9]செய்க சிவாக்கரந்; செய்யச் சிவாக்கரந். [10]பட்டண. [11]மாற்றும். [12]ஈசனிறத்திறம். [13]சிவமுதல். [14]சிறந்து. [15]சிகமய. [16]நத்தாக். [17]நாட்டிப்பின் னுண்டுத்தரம்.

2920 நீரின்றிப் பாயும் [1]நிலத்தினிற் பச்சையாம்
யாவரும் என்றும் அறியவல் லாரில்லை
கூரு மழைபொழி யாது பொழிபுனல்
[2]தேரினிந் நீர்மை திடரினில் [3]லாதே. ௫௫

2921 கூகை [4]குருந்தம தேறிக் குணம்பயில்
[5]மோகம் உலகுக் குணர்கின்ற காலத்து
[6]நாகமும் ஒன்று [7]நடுவுரை செய்திடும்
பாகனு [8]மாகின்ற பண்பனு மாமே. ௫௬

2922 வாழையுஞ் சூரையும் வந்திடங் [9]கொண்டன
[10]வாழைக்குச் சூரை வலிது வலிதென்பர்
வாழையுஞ் [11]சூரையும் வன்துண்டஞ் செய்திட்டு
வாழை யிடங்கொண்டு வாழ்கின்ற வாறே. ௫௭

2923 நிலத்தைப் பிளந்து நெடுங்கடல் ஓட்டிப்
புனத்துக் [12]குறவன் புணர்ந்த கொழுமீன்
விலக்குமின் யாவர்க்கும் [13]வேண்டிற் குறையா
[14]தருத்தமு மின்றி யடுவது மாமே. ௫௮

2924 தளிர்க்கும் ஒருபிள்ளை தட்டா னகத்தில்
[15]விளிப்பதோர் சங்குண்டு [16]வேந்தனை நாடிக்
களிக்குங் [17]குசவர்க்குங் காவிதி யார்க்கும்
அளிக்கும் பதத்தொன் [18]றுய்ந்துகொள் வார்க்கே.

2925 குடைவிட்டுப் [19]போந்தது கோயில் எருமை
படைகண்டு மீண்டது பாதி வழியில்
உடையவன் மந்திரி யுள்ளனும் ஊரார்
[20]அடையா நெடுங்கடை ஐந்தொடு நான்கே. ௬௦

பா - ம்—[1]நிலத்தின்றிப். [2]தேரினி னீர்மை. [3]லாவே. [4]குருந் தேறி......காலத்துங் கோகமுலகு குணக்கின்ற. [5]தோகம். [6]நாதமும். [7]நடுவுரைச். [8]மாய்கின்ற. [9]கொண்டது. [10]வாழைக்குஞ். [11]சூரையை. [12]குறைவன். [13]வேண்டிக். [14]யருத்தமு. [15]வளிப்பதோர். [16]வேதனை. [17]கசற்குங் ; கசவர்க்குக். [18]றுயங்கொள். [19]போந்து. [20]இடையா.

2926 போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
[1]ஆகிப் படைத்தன ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டொடு [2]நாலு புரவியும்
பாகன் [3]விடாவிடிற் பன்றியு மாமே. கூக

2927 பாசி படர்ந்து கிடந்த [4]குளத்திடைக்
கூசி யிருக்குங் குருகிரை [5]தேர்ந்துண்ணுந்
[6]தூசி மறவன் [7]துணைவழி எய்திடப்
பாசங் கிடந்து பதைக்கின்ற வாறே. கூஉ

2928 [8]கும்ப பலைமேல் எழுந்ததோர் கொம்புண்டு
[9]கொம்புக்கும் அப்பால் அடிப்பதோர் காற்றுண்டு
[10]வம்பாய் மலர்ந்ததோர் [11]பூவுண்டப் [12]பூவுக்குள்
வண்டாய்க் கிடந்து [13]மணங்கொள்வன் ஈசனே. கூங

2929 வீணையுந் தண்டும் விரவி யிசைமுரல்
தாணுவும் மேவித் தகுதலைப் [14]பெய்தது
வாணிபஞ் சிக்கென் [15]றதுவடை யாமுன்னங்
காணியும் அங்கே கலக்கின்ற வாறே. கூச

2930 கொங்குபுக் காரொடு வாணிபஞ் செய்தது
[16]வங்குபுக் காலன்றி ஆய்ந்தறி வாரில்லை
திங்கள்புக் கால்இரு ளாவ [17]தறிந்திலர்
தங்குபுக் கார்சிலர் [18]தாபதர் தாமே. கூரு

2931 [19]போதும் புலர்ந்தது பொன்னிறங் கொண்டது
தாதவிழ் புன்னை தயங்கு மிருகரை
[20]ஏதமில் ஈசன் இயங்கு நெறியிது
மாத ரிருந்ததோர் [21]மண்டலந் தானே. கூகா

பா - ம்—[1]ஆதி. [2]நாலும். [3]விடிலிவை. [4]குளத்திடங். [5]காந் துண்ணுங். [6]தூசியு மற்பவன். [7]துணைவிழி. [8]கும்பலை மேலே. [9]கொம்புகள். [10]வெம்பாய். [11]பூவுடைப். [12]பூவுக்கு. [13]மணங்கொள்ளும். [14]பெய்தி. [15]றுவடை; றதுபடை யாமுனங். [16]மங்குபுக். [17]தறிகிலர். [18]தாபத ராமே. [19]போது. [20]எதுமில். [21]மண்டலத்.

2932 [1]கோமுற் றமருங் குடிகளுந் தம்மிலே
காமுற்ற [2]கத்தி இடுவர் கடைதொறு
[3]மீவற்ற [4]வெல்லை விடாது வழிகாட்டி
யாமுற்ற [5]தட்டினால் ஐந்துண்ண லாமே. ௯௭

2933 [6]தோட்டத்தில் மாம்பழந் தோண்டி விழுந்தக்கால்
நாட்டின் புறத்தில் நரியழைத் தென்செயும்
மூட்டிக் கொடுத்து முதல்வனை முன்னிட்டு
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. ௯௮

2934 புலர்ந்தது [7]போதென்று புட்கள் சிலம்பப்
[8]புலர்ந்தது போதென்று பூங்கொடி [9]புல்லிப்
புலம்பி னவளோடும் போக நுகரும்
புலம்பனுக் [10]கென்றும் [11]புலர்ந்திலை போதே. ௯௯

2935 தோணியொன் றுண்டு துறையில் [12]விடுவது
வாணி [13]மிதித்துநின் றைவர்கோ லூன்றலும்
வாணிபஞ் செய்வார் வழியிடை யாற்றிடை
ஆணி [14]கலங்கில் அதுவிது வாமே.* ௱

---

௧௮. †மோன சமாதி

2936 நின்றார் இருந்தார் கிடந்தார் [15]எனவில்லை
[16]சென்றார்தஞ் சிதத [17]மோன சமாதியாம்
[18]மன்றேயு மங்கே மறைப்பொரு ளொன்றுண்டு
சென்றாங் கணைந்தவர் சேர்கின்ற வாறே. ௧

---

* ஒரு பிரதியில் இதனை யடுத்து 3026-ம் செய்யுள் முதலியன.

† ஒரு பிரதியில் இப்பகுதித் தலைப்பு **கரும நிருவாணம் அநுபூதி** என்றுளது.

பா - ம்—[1]கோயிற் றருமங்; கோயிற். [2]கற்றி. [3]வீவற்ற. [4]நெல்லை யிடாது. [5]தட்டி னலைந் துண்ண. [6]தோட்டத்தின். [7]தாமென்று. [8]புலர்ந்தில்லைப். [9]புல்லப். [10]கென்றே. [11]புலர்ந்தில்லைப். [12]விடுவன. [13]மிதிக்க நின்றவர்க்கோ. [14]கலக்கில். [15]எனவில்லைச். [16]சென்றார் தருஞ். [17]மான. [18]மன்றே நிறையு.

2937 காட்டுங் குறியுங் [1]கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடி [2]னல்லது
ஆட்டின் கழுத்தில் [3]அதர்கிடந் தற்றே. ௨

2938 உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்றும்
உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
உணர்வுடை யார்கள் உணர்ந்தஅக் காலம்
உணர்வுடை யார்கள் உணர்ந்துகண் டாரே. ௩

2939 மறப்பது வாய்நின்ற [4]மாயநன் னாடன்
பிறப்பினை [5]நீங்கிய பேரரு ளாளன்
சிறப்புடை [6]யான்திரு மங்கையுந் தானும்
உறக்கமில் [7]போகந் துறங்கிடுந் தானே. ௪

2940 துரியங்கள் மூன்றும் [8]கடந்தொளிர் சோதி
அரிய துரிய [9]மதில்மீது மூன்றாய்
விரிவு [10]குவிவு விழுங்கி யுமிழ்ந்தே
[11]உரையில் அநுபூ [12]திகத்தினுள் ளானே. ௫

2941 உருவிலி யூனிலி யூனமொன் றில்லி
திருவிலி தீதிலி தேவர்க்குந் தேவன்
பொருவிலி பூதப் படையுடை யாளி
மருவிலி வந்தென் மனம்புகுந் தானே. ௬

2942 கண்டறி வாரில்லைக் [13]காயத்தின் நந்தியை
எண்டிசை யோரும் இறைவனென் றேத்துவர்
அண்டங் கடந்த அளவிலா [14]ஆனந்தத்
தொண்டர் முகந்த துறையறி யோமே. ௭

2943 தற்பர [15]மல்ல சதாசிவன் தானல்ல
[16]நிட்கள [17]மல்ல சகள நிலையல்ல

பா - ம்—[1]கடந்தவக். [2]னல்லதவ். [3]அதட்கறந். [4]மாயனன். [5]நீக்கிய. [6]யாள்திரு. [7]யோகத். [8]துடர்ந்தொளிர். [9]மதன்மீது. [10]குவவு. [11]உரைய னநுபூதி யகத்தினுள். [12]தியத்தினுள். [13]காயத்துள். [14]ஆனந்தர். [15]மல்லச் சதாசிவந். [16]நிற்கள. [17]மல்லச்.

அற்புத மாகி யநுபோகக் காமம்போற்
கற்பனை யின்றிக் கலந்துநின் றானே. ௮

2944 [1]முகத்திற் கண்கொண்டு [2]காண்கின்ற மூடர்காள்
[3]அகத்திற் கண்கொண்டு [4]காண்பதே ஆனந்தம்
மகட்குத் [5]தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் [6]சொல்லுமா றெங்ஙனே.

2945 [7]அப்பினில் உப்பென அத்தன் அணைந்திட்டுச்
செப்பு [8]பராபரஞ் சேர்பர மும்விட்டுக்
[9]கப்புறு [10]சொற்பத மாளக் [11]கலந்தமை
எப்படி யப்படி [12]என்னுமவ் வாறே. ௧௦

2946 கண்டார்க் [13]கழகிது காஞ்சிரத் தின்பழந்
[14]தின்றார்க் கறியலாம் அப்பழத் தின்சுவை
பெண்டா னிரம்பி மடவிய ளானுற
கொண்டான் அறிவன் குணம்பல தானே. ௧௧

2947 நந்தி யிருந்தான் [15]நடுவுத் தெருவிலே
சந்தி சமாதிகள் [16]தாமே யொழிந்தன
உந்தியி னுள்ளே யுதித்தெழுஞ் சோதியைப்
புந்தியி னாலே புணர்ந்துகொண் டேனே. ௧௨

2948 விதறு படாவண்ணம் வேறிருந் தாய்ந்து
பதறு படாதே பழமறை பார்த்துக்
கதறிய பாழைக் [17]கடந்தக் கற்பனை
உதறிய பாழில் [18]ஒடுங்குகின் றேனே. ௧௩

2949 வாடா மலர்புனை சேவடி வானவர்
கூடார் [19]அறநெறி நாடொறு மின்புறச்

பா - ம்—[1]முகத்துக். [2]பார்க்கின்ற. [3]அகத்துக். [4]பார்ப்பதே. [5]தாயர். [6]சொல்லும்வா. [7]அப்பனை. [8]பராற்பரஞ். [9]கப்பறு. [10]தொம்பத. [11]கலந்தவை. [12]எண்ணுமவ். [13]கழகிதாங். [14]தின்றா லறியலாம். [15]நடுவுட் டெருவிலே. [16]தானே யொழிந்தது. [17]கடந்தது. [18]ஒடுங்கிகின். [19]அரனெறி.

சேடார் கமலச் செழுஞ்சுட ருட்சென்று
நாடார் [1]அமுதுற [2]நாடார் [3]அமுதமே. கசு

2950. அதுக்கென் [4]திருவர் அமர்ந்தசொற் [5]கேட்டும்
பொதுக்கெனக் காமம் புலப்படு மாபோல்
[6]சதுக்கென்று வேறே [7]சமைந்தாரைக் [8]காண
மதுக்கொன்றைத் [9]தாரான் வளந்தரு [10]மன்றே. கரு

2951 [11]தானும் அழிந்து தனமும் அழிந்துநீ
டூனும் அழிந்து உயிரும் அழிந்துடன்
வானும் அழிந்து [12]மனமும் [13]அழிந்துபின்
நானும் அழிந்தமை நானறி யேனே. கசு

2952 இருளும் வெளியும் இரண்டையும் மாற்றிப்
பொருளிற் பொருளாய்ப் பொருந்தவுள் ளாகி
அருளால் அழிந்திடும் அத்தன் அடிக்கே
உருளாத கன்மன முற்றுநின் [14]றேனே. கஎ

2953 ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் பராபரம்
ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் சிவகதி
ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் உணர்வினை
ஒன்றிநின் [15]றேபல வூழிகண் டேனே.* கஅ

ககூ. †வரையுரை மாட்சி

2954 தான்வரை வற்றபி னுரை வரைவது
தானவ னுணபி னுரை நினைவது

---

* ஒரு பிரதியில் இதனை யடுத்து 1573-1613 செய்யுள்களும், அவற்றை யடுத்து 2804-2812-ம் செய்யுள்களும், அவற்றை யடுத்து 2957-ம் செய்யுள் முதலியனவும் உள; மற்றொரு பிரதியில் இதனை யடுத்து 2957-ம் செய்யுள் முதலியன காணப்படுகின்றன.

† ஒரு பிரதியில் இப்பகுதி 3045 ம் செய்யுளுக்குப் பின் உபதேச முப்பது மெழுதிய பின் எழுதப்பட்டுள்ளது.

பா - ம்—[1]அமுதுறு. [2]நாட ; நாடா. [3]அமிர்தமே ; அமுதே. [4]திருந்தார். [5]கேட்டுப். [6]அதுக்கென்று. [7]சமைந்தார்களைக். [8]காணில். [9]தாரோன். [10]ந் தானே. [11]தானு மிழந்து. [12]மணமும். [13]அழிந்த பின். [14]றுனே. [15]றுள்ளேபல் லூழிகண்.

காமனை வென்றகண் ணாரை யுகப்பது
[1]தூமொழி வாசகஞ் சொல்லுமின் நீரே. க

2955 உரையற்ற [2]தொன்றை யுரைசெய்யு [3]மூமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண [4]லாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் [5]றிருந்தான் புரிசடை யோனே. உ

2956 [6]மனமாயை [7]மாயைஇம் மாயை மயக்க
மனமாயை [8]தான்மாய மற்றொன் றுமில்லை
[9]பினைமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டா
தனையாய்ந் திருப்பது தத்துவர் தானே. ங

உ௦. அணைந்தோர் தன்மை

2957 மலமில்லை மாசில்லை மானுபி [10]மானங்
குலமில்லை கொள்ளுங் குணங்களு மில்லை
நலமில்லை நந்தியை ஞானத்தி னாலே
பலமன்னி [11]யன்பிற் பதித்துவைப் [12]போர்க்கே. க

2958 *ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்
கழிந்தேன் கடவுளும் நானுமொன் றானேன்
[13]அழிந்தாங் கினிவரு [14]மாக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே. உ

2959 ஆலைக் கரும்பும் [15]அமுதும்அக் காரமுஞ்
சோலைத் [16]தண்ணீரும் உடைத்தெங்கள் நாட்டிடைப்
பீலிக்கண் ணன்ன வடிவுசெய் வாளொரு
கோலப்பெண் [17]ணட்குக் [18]குறையொன்று மில்லையே.

* ஒரு பிரதியில் இதுவும் அடுத்த செய்யுளும் பின் முன்னாக வந்தன.

பா - ம்—[1]தாய்மொழி. [2]வொன்றை. [3]மூடர்காள். [4]லாமோ. [5]றுநின்றான். [6]மனமாய மாயமிம் மாய. [7]மாயை. [8]தான்மாயு. [9]பினை மாய வேண்டா. [10]மானக். [11]யாங்கே. [12]பார்க்கே. [13]இழிந்தாங் [14]மார்க்கமும். [15]அமுதமா. [16]தெண்ணீரும். [17]ணற்குறை வொன்று. [18]குறிப்பொன்று.

2960 ஆராலும் என்னை அமட்டவொண் ணாதினிச்
சீரார் பிரான்வந்தென் சிந்தை [1]புகுந்தனன்
சீராடி யங்கே திரிவதல் [2]லால்இனி
யார்பாடுஞ் சாரா அறிவறிந் தேனே. ௪

2961 பிரிந்தேன் பிரமன் பிணித்ததோர் பாசந்
தெரிந்தேன் சிவகதி செல்லு நிலையை
அரிந்தேன் வினையை [3]அயில்மன வாளால்
முரிந்தேன் புரத்தினை முந்துகின் றேனே. ரு

2962 ஒன்றுகண் டீர்உல குக்கொரு [4]தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி [5]நமசிவா யப்பழந்
தின்றுகண் [6]டேற்கிது தித்தித்த வாறே.* சு

2963 சந்திரன் பாம்பொடுஞ் சூடுஞ் சடாதரன்
வந்தென்னை யாண்ட மணிவிளக் கானவன்
அந்தமும் ஆதியும் இல்லா அரும்பொருள்
சிந்தையின் மேவித் தியக்கறுத் தானே. எ

2964 பண்டெங்கள் ஈசன் நெடுமால் [7]பிரமனைக்
கண்டங் கிருக்குங் கருத்தறி வாரில்லை
விண்டங்கே தோன்றி வெறுமன மாயிடில்
துண்டங் கிருந்ததோர் தூறது [8]வாமே. அ

2965 அன்னையும் அத்தனும் அன்புற்ற தல்லது
அன்னையும் அத்தனு மாரறி வாரென்னை
அன்னையும் அத்தனும் யானும் உடனிருந்
தன்னையும் அத்தனை [9]யான்புரந் தேனே. கூ

---

* இரண்டு பிரதிகளில் இதனை யடுத்து 2953-ம் செய்யுள் இரண்டாம் முறை எழுதப்பட்டுளது.

பா - ம்—[1]புகுந்தான். [2]லாதினி. [3]அயிர்மன. [4]தெய்வம், [5]நமச்சிவா. [6]டோற்கிது தித்திக்கும். [7]பிரமனுங். [8]வாகுமே. [9]யான் புரிந்.

2966　கொண்ட [1]சுழியுங் குலவரை யுச்சியும்
அண்டரும் அண்டத் தலைவரும் ஆதியும்
எண்டிசை யோரும்வந் தென்கைத் [2]தலத்துளே
[3]உண்டனர் நானினி உய்ந்தொழிந் தேனே.　க0

2967 * தானே திசையொடு தேவரு மாய்நிற்குந்
தானே [4]வடவரை யாதியு மாய்நிற்குந்
தானே யுடலுயிர் தத்துவ மாய்நிற்குந்
தானே யுலகில் தலைவனு மாமே.　கக

2968　நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்
சிவன்வரின் நானுடன் [5]போவது திண்ணம்
பவம்வரும் வல்வினை பண்டே யறுத்தேன்
தவம்வருஞ் சிந்தைக்குத் தாமெனதி [6]ராரே.　கஉ

2969　சித்தஞ் சிவமாய் மலமூன் றுஞ் செற்றவர்
சுத்தச் சிவமாவர் [7]தோயார் மலபந்தங்
கத்துஞ் சிறுகுங் கலகமுங் [8]கைகாணார்
சத்தம பாவிந்து [9]தானுமென் றெண்ணியே.　கங

2970　நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சம்
வினைப்பற் றறுக்கும் விமலன் இருக்கும்
வினைப்பற் றறுக்கும் விமலனைத் தேடி
நினைக்கப் பெறிலவன் நீளிய னாமே.　கச

2971　சிவபெரு மானென்று நானழைத் [10]தேத்தத்
தவபெரு மானென்று தான்வந்து நின்றான்
அவபெரு மானென்னை யாளுடை நாதன்
பவபெரு மானைப் பணிந்துநின் றேனே.　கரு

2972　பணிந்துநின் றேன்பர மாதி பதியைத்
துணிந்துநின் றேன்இனி மற்றொன் றும்வேண்டேன்

---

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]குழியுங். [2]தலத்துள்ளே. [3]உண்டென நாமினி. [4]தடவரை. [5]சேர்வது. [6]ராமே; ரானே. [7]தோயாமற் பந்தங். [8]காணார். [9]தாமாமென். [10]தோதத்.

அணிந்துநின் றேனுடல் ஆதிப் பிரானைத்
தணிந்துநின் றேன்சிவன் தன்மைகண் டேனே. கசு

2973 என்னெஞ்சம் ஈசன் இணையடி [1]தாஞ்சேர்ந்து
முன்னஞ்செய் [2]தேத்த முழுதும் [3]பிறப்பறுந்
தன்னெஞ்சம் இல்லாத் தலைவன் |தலைவிதி
பின்னஞ்செய் தென்னைப் பிணக்கறுத் தானே. களு

2974 பிணக்கறுத் தான்பிணி மூப்பறுத் தெண்ணுங்
கணக்கறுத் தாண்டனன் காணந்தி என்னைப்
பிணக்கறுத்.[4]தென்னுடன் [5]முன்வந்த துன்பம்
வணக்கலுற் றேன்சிவம் வந்தது தானே. கஅ

2975 சிவன்வந்து தேவர் [6]குழாமுடன் கூடப்
பவம்வந் திடநின்ற பாசம் அறுத்திட்
டவனெந்தை யாண்டருள் ஆதிப் பெருமான்
அவன்வந்தென் னுள்ளே யகப்பட்ட வாறே. ககூ

2976 கரும்புந் தேனுங் கலந்ததோர் காயத்தில்
அரும்புங் கந்தமு மாகிய ஆனந்தம்
[7]விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
(கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே.) உ0

2977 உள்ள [8]சரியாதி ஒட்டியே [9]மீட்டென்பால்
வள்ளல் அருத்தியே வைத்த வளம்பாடிச்
செய்வன எல்லாஞ் சிவமாகக் காண்டலாற்
கைவள மின்றிக் [10]கருக்கடந் தேனே. உக

2978 மீண்டார் கமலத்துள் அங்கி மிகச்சென்று
தூண்டா விளக்கின் நகளிநெய் [11]சோர்தலும்
பூண்டாள் ஒருத்தி புவனசூ [12]டாமணி
மாண்டா னொருவன்கை வந்தது தானே. உஉ

பா - ம்—[1]தான்செய்து ; தாஞ்செய்து. [2]தோர்க்கு ; தேற்கு. [3]பிறப்படுக். [4]தென்னுடல். [5]முன்வந்து. [6]குழாமொடு. [7]விரும்பி ; விரும்பிய. [8]சரிதாதி. [9]மீட்டன்பால். [10]கருத்தடைக். [11]சேர்தலும். [12]ளாமணி.

உத்தாரம் பன்னிரண் டாதி கலைதோகும்
பத்தாம் பிரம [1]சடங்குபார்த் தோதிடே. ௭௮

992 [2]கண்டெழுந் தேன்கம லம்மல ருள்ளிடை
கொண்டொழிந் தேன்உடன் கூடிய காலத்துப்
[3]பண்டழி யாத பதிவழி யேசென்று
நண்பழி யாமே நமவென லாமே. ௭௯

993 புண்ணிய வானவர் பூமழை தூவிநின்
[4]றெண்ணுவர் அண்ணல் இணையடி மந்திரம்
நண்ணுவர் நண்ணி [5]நமஎன்று நாமத்தைக்
கண்ணென உன்னிக் கலந்துநின் [6]றாரே. ௮0

994 ஆறெழுத் [7]தாவ தாறு சமயங்கள்
ஆறுக்கு நாலே இருபத்து நாலென்பர்
[8]சாவித் திரியில் தலையெழுத் தொன்றுள
பேதிக்க வல்லார் பிறவியற் றார்களே. ௮௧

995 எட்டினில் எட்டறை யிட்டோ ரறையிலே
கட்டிய [9]ஒன்றெட்டாய்க் காண நிறையிட்டுச்
சுட்டி இவற்றைப் பிரணவஞ் சூழ்ந்திட்டு
[10]மட்டும் உயிர்கட் குமாபதி யானுண்டே. ௮௨

996 நம்முதல் அவ்வொடு நாவின [11]ராகியே
அம்முத [12]லாகிய எட்டிடை யுற்றிட்டு
[13]உம்முத [14]லாகவே [15]உணர்பவர் உச்சிமேல்
உம்முத லாயவன் உற்றுநின் றானே. ௮௩

997 *நின்ற அரசம் பலகைமேல் [16]நேராக
ஒன்றிட [17]மவ்விட்டு ஓலையிற் [18]சாதகந்

---

*மூன்று பிரதிகளில் இச்செய்யுளுக்கு முன் அர்ச்சனை என்னும் தலைப்பு காணப்படுகிறது. 1003-வது செய்யுளுக்கு முன் இல்லை. ஆகவே அப்பகுதியில் உள்ள செய்யுள்கள் கஅ.

பா - ம்—[1]சடங்குபத். [2]கண்டொழிந. [3]பண்பழி. [4]றெண்ணிய. [5]நமவென்னும். [6]றானே; றேனே. [7]தாலவ்வாறு. [8]சாதித். [9]ஒன்றெட்டாற் காணு நிறையிடச். [10]மட்டுயிர்கட். [11]ராகி; ராகிய. [12]லாகியே வேற்றிடை. [13]ஒம்முத. [14]லாக; லாகியே. [15]உண்பவர். [16]நேராகத் தொன்றிட. [17]மவ்விட் டோலையிற்; மவ்விட. [18]சாகத்.

2979 ஆறே யருவி [1]யகங்குளம் ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது [2]வண்ணமுங்
கூறே [3]குவிமுலைக் கொம்பனை யாளொடும்
வேறே யிருக்கும் விழுப்பொருள் தானே. ௨௩

2980 [4]அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் [5]உருவ இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை யீசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே. ௨௪

2981 *மனம்வி ரிநது குவிந்தது மாதவ,
மனம்வி ரிந்து குவிந்தது [6]வாயு
வனம்வி ரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம்வி ரிந்துரை [7]மாண்டது முத்தியே. ௨௫

௨௧. தோத்திரம்

2982 மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமும் நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின் னாட்டிடைக் கண்டுகொண் டேனே. ௧

2983 மன்னு [8]மலைபோல் மதவா ரணத்தின்மேல்
இன்னிசை பாட இருந்தவ ராரெனில்
[9]முன்னியல் கால முதல்வனார் நாமத்தைப்
[10]பன்னினர் என்றே [11]பாடறி வீரே. ௨

2984 முத்தினின் முத்தை முகிழிள [12]ஞாயிற்றை
எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணா தாற்றுகின் றேனையோர்
பித்தன் இவனென்று பேசுகின் றாரே. ௩

* ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை.

பா - ம்—[1]யகன்குள. [2]திண்ணமுங். [3]குவிமுலை. [4]அன்பும். [5]உருக. [6]வாயுவு மனம்வி. [7]மாண்டிட. [8]மலையொண் ; மலையோன். [9]முன்னிய. [10]பன்னியவ ரென்று ; பன்னினவ னென்று. [11]பற்றறி யீரே ; பாரறி யீரே. [12]ஞானத்தை.

2985 புகுந்துநின் [1]றானெங்கள் புண்ணிய மூர்த்தி
புகுந்துநின் றானெங்கள் போதறி வாளன்
புகுந்துநின் றானடி யார்தங்கள் நெஞ்சம்
புகுந்துநின் றானையே போற்றுகின் றேனே. ச

2986 பூதக்கண் ணாடியிற் புகுந்திலன் போதுளன்
வேதக்கண் ணாடியில் வேறே வெளிப்படு
நீதிக்கண் ணாடி [2]நினைவார் மனத்துளன்
கீதக்கண் ணாடியிற் கேட்டுநின் றேனே. ரு

2987 நாமமோ ராயிரம் ஓதுமின் நாதனை
ஏமமோ ராயிரத் துள்ளே [3]இசைவீர்கள்
ஓமமோ ராயிரம் ஓதவல் [4]லாரவர்
காமமோ ராயிரங் [5]கண்டொழிந் [6]தாரே. சு

2988 போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகழ் ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின் [7]றேன்அறை யோசிவ [8]யோகத்தைப்
போற்றுகின் றேன்எம் பிரானென்று நானே. எ

2989 நாணு விதஞ்செய்து நாடுமின் நந்தியை
ஊனார் கமலத்தி னூடுசென் றப்புறம்
வானோர் உலகம் [9]வழிப்பட [10]மீண்டபின்
தேனார வுண்டு தெவிட்டலு மாமே. அ

2990 வந்துநின் றானடி யார்கட் கரும்பொருள்
இந்திர னாதி இமையவர் வேண்டினுஞ்
சுந்தர மாதர் துழனியொன் றல்லது
அந்தர வானத்தின் அப்புற மாமே. கூ

2991 [11]மண்ணிற் கலங்கிய நீர்போல் மனிதர்கள்
[12]எண்ணிற் கலங்கி இறைவன் இவனென்றார்

பா - ம்.—[1]றேனெங்கள். [2]நினைப்பார் மனத்துளே. [3]இயைவன. [4]லார்களும்; லார்கட்குக். [5]கட்டொழிந் தோர்களே. [6]தார்களே. [7]றேனவன் றன்சிவ; றேனவரை. [8]லோகத்தை யேற்றுகின். [9]வழிபட. [10]மீண்டவன். [11]மண்ணீர். [12]எண்ணீர்.

[1]உண்ணிற் குளத்தின் முகந்தொரு பால்வைத்துத்
[2]தெண்ணிற் படுத்த சிவனவ னாமே. கo

2992 [3]மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்
கைத்தலஞ் சேர்தரு நெல்லிக் கனியொக்குஞ்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்கள்
அத்தனை நாடி அமைந்தொழிந் தேனே. கக

2993 அமைந்தொழிந் தேன்அள வில்புகழ் ஞானஞ்
சமைந்தொழிந் தேன்தடு மாற்றமொன் றில்லை
புகைந்தெழும் பூதலம் [4]புண்ணியன் நண்ணி
வகைந்து கொடுக்கின்ற வள்ள லுமாமே.

2994 வள்ளற் றலைவனை வானநன் னாடனை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் [5]காண்பர்கொ லோஎன்று
உள்ளத்தி னுள்ளே [6]யொளித்திருந் தாளுமே. கங

2995 ஆளும் மலர்ப்பதந் தந்த கடவுளை
நாளும் வழிபட்டு நன்மையுள் நின்றவர்
கோளும் வினையும் அறுக்குங் குரிசிலின்
வாளு [7]மனத்தொடும் வைத்தொழிந் தேனே. கச

2996 விரும்பில் அவனடி வீர சுவர்க்கம்
பொருந்தில் அவனடி புண்ணிய லோகந்
திருந்தில் அவனடி தீர்த்தமு மாகும்
வருந்தி யவனடி வாழ்த்தவல் லார்க்கே. கரு

2997 வானக மூடறுத் தானிவ் வுலகினில்
தானக மில்லாத் தனியாகும் போதகன்
கானக வாழைக் கனிநுகர்ந் துள்ளூறும்
பானகச் சோதியைப் பற்றிநின் றேனே. கசு

பா - ம்—[1]உண்ணீர். [2]தெண்ணீர்ப் படுத்தச். [3]மெய்த்தவ ரத்தனை. [4]புண்ணிய. [5]காண்பார்கொல். [6]யொளிததிரு நாளுமே. [7]மனத்தொடு.

2998 விதியது மேலை யமரா் உறையும்
பதியது பாய்புனற் கங்கையும் உண்டு
துதியது தொல்வினைப் பற்றறு விக்கும்
[1]பதியது வவ்விட்ட தந்தமு மாமே. ௧௭

2999 மேலது வானவர் கீழது [2]மாதவர்
[3]தானிடர் மானுடர் கீழது மாதனங்
கானது கூவிள மாலை கமழ்சடை
ஆனது செய்யுமெம் ஆருயிர் தானே. ௧௮

3000 சூழுங் கருங்கடல் நஞ்சுண்ட கண்டனை
ஏழும் இரண்டிலும் ஈசன் பிறப்பிலி
யாழுஞ் சுனையும் அடவியும் [4]அங்குளன்
வாழும் எழுத்தைந்து மன்னனு மாமே. ௧௯

3001 உலகம [5]தொத்துமண் ணொத்துயர் காற்றை
[6]அலர்கதிர் அங்கியொத் தாதிப் பிரானும்
நிலவிய மாமுகில் நீரொத்து [7]மீண்டச்
செலவொத் [8]தமர்திகைத் தேவர்பி ரானே. ௨௦

3002 பரிசறிந் தங்குளன் அங்கி அருக்கன்
பரிசறிந் தங்குளன் மாருதத் தீசன்
பரிசறிந் தங்குளன் மாமதி [9]ஞானப்
பரிசறிந் தன்னிலம் பாரிக்கு மாறே. ௨௧

3003 அந்தங் கடந்தும் அதுவது வாய்நிற்கும்
[10]பந்த வுலகினிற் கீழோர் பெரும்பொருள்
தந்த வுலகெங்குந் தானே பராபரன்
வந்து படைக்கின்ற மாண்பது [11]வாமே. ௨௨

3004 [12]முத்தண்ட வீரண்ட மீமுடி [13]யாயினும்
அத்தன் உருவம் உலகே ழெனப்படும்

பா - ம்—[1]மதியது. [2]வானவர். [3]கானிடர் மானிடர். [4]அங்குள்ள. [5]தோதுமண். [6]அலைகதிர். [7]மீண்ட. [8]தமாதிகை. [9]ஞானம். [10]பெந்த. [11]தானே. [12]முத்தனவ்; முத்தன்று. [13]யாகிலும்.

[1]அத்தனின் பாதாளம் அளவுள்ள சேவடி
மத்தர் அதனை மகிழ்ந்துண ராரே. ௨௩

3005 ஆதிப் [2]பிரான்நம் பிரானவ் [3]வகலிடச்
சோதிப் பிரான்சுடர் மூன்றொளி யாய்நிற்கும்
ஆதிப் பிரான்அண்டத் தப்புறங் கீழவன்
ஆதிப் பிரான்நடு வாகிநின் றானே. ௨௪

3006 அண்டங் கடந்துயர்ந் [4]தோங்கும் பெருமையன்
பிண்டங் கடந்த பிறவிச் சிறுமையன்
தொண்டர் நடந்த [5]கனைகழல் கண்டொறுந்
தொண்டர்கள் தூய்நெறி தூங்கிநின் [6]றானே. ௨௫

3007 [7]உலவுசெய் நோக்கம் பெருங்கடல் [8]சூழ
நிலமுழு தெல்லா நிறைந்தனன் ஈசன்
பலமுழு தெல்லாம் படைத்தனன் முன்னே
புலமுழு பொன்னிற மாகிநின் றானே. ௨௬

3008 பராபர னாகிப்பல் ஊழிகள் தோறும்
பராபர [9]னாயிவ் வகலிடந் தாங்கித்
தராபர னாய்நின்ற தன்மை யுணரார்
நிராபர னாகி நிறைந்துநின் றானே. ௨௭

3009 போற்றும் பெருந்தெய்வந் தானே [10]பிறரில்லை
[11]ஊற்றமும் ஓசையும் ஓசை யொடுக்கமும்
வேற்றுடல் தானென் றதுபெருந் தெய்வமாங்
காற்றது ஈசன் கலந்துநின் றானே. ௨௮

3010 திகையனைத் துஞ்சிவ னேயவ [12]னாகின்
மிகையனைத் [13]துஞ்சொல்ல வேண்டா [14]மனிதரே
புகையனைத் தும்புறம் அங்கியிற் [15]கூடு
முகையனைத் தும்எங்கள் ஆதிப் பிரானே. ௨௯

பா - ம்—[1]இத்தன்ன பாதா ளளவுள்ள ; இத்தனன பாதாளத் தப்பறச். [2]பிரானெம் பிரானிவ். [3]வகலிடஞ். [4]தெங்கும். [5]துணைக் கழல். [6]றாரே. [7]உணர்வுசெய். [8]சூழ்ந்த. [9]னாகியிவ். [10]பிறிதில்லை. [11]ஏற்றமும். [12]னாகி. [13]துஞ்செல்ல. [14]மனிதர். [15]கூட்டு.

3011 அகன்றான் அகலிடம் ஏழுமொன் றாகி
இவன்றா னெனநின் றெளியனு மல்லன்
சிவன்றான் பலபல [1]சீவனு மாகி
நவின்றான் உலகுறு நம்பனு மாமே. கo

3012 கலையொரு மூன்றுங் [2]கடந்தப்பால் நின்ற
தலைவனை நாடுமின் [3]தத்துவ நாதன்
விலையில்லை விண்ணவ ரோடும் [4]உரைப்பன்
நரையில்லை [5]யுள்ளுறு முள்ளவன் தானே. கக

3013 படிகால் பிரமன்செய் பாசம் அறுத்து
நெடியான் குறுமைசெய் நேசம் அறுத்துச்
செடியார் தவத்தினிற் செய்தொழில் நீக்கி
அடியேனை உய்யவைத் தன்புகொண் டானே. கஉ

3014 [6]ஈசனென் றெட்டுத் திசையும் இயங்கின
ஓசையி னின்றெழு சத்தம் உலப்பிலி
தேசமொன் றாங்கே செழுங்கண்டம் [7]ஒன்பதும்
வாச மலர்போல் மருவிநின் றானே. கங

3015 இல்லனு மல்லன் உளனல்லன் எம்மிறை
கல்லது நெஞ்சம் பிளந்திடுங் காட்சியன்
தொல்லையன் தூயன் துளக்கிலன் தூய்மணி
சொல்லருஞ் சோதி தொடர்ந்துநின் றானே. கச

3016 உள்ளத் தொடுங்கும் புறத்துளும் நானெனுங்
கள்ளத் தலைவன் கமழ்சடை நந்தியும்
வள்ளற் பெருமை வழக்கஞ்செய் [8]வார்கள்தம்
அள்ளற் கடலை அறுத்துநின் றானே. கரு

3017 மாறெதிர் [9]வானவர் தானவர் நாடொறுங்
[10]கூறுதல் செய்து குரைகழல் [11]நாடுவர்

பா - ம்—[1]சீவரு. [2]கலந்தப்பால். [3]தத்துநதன். [4]உரைப்ப வுரையில்லை. [5]யுள்ளு. [6]ஈசனே எட்டுத் திசைக்கும். [7]ஒன்பது. [8]வானுதல். [9]தானவர் வானவர். [10]கூடுதல். [11]நாடுவார்.

[1]ஊறுவர் உள்ளத் தகத்தும் புறத்துளும்
வேறுசெய் [2]தாங்கே விளக்கொளி யாமே. ருகூ

3018 விண்ணிலும் வந்த [3]வெளியிலன் மேனியன்
[4]கண்ணிலும் வந்த [5]புலனல்லன் காட்சியன்
பண்ணினில் வந்த பயனல்லன் [6]பான்மையன்
எண்ணிலா னந்தமும் எங்கள் பிரானே. ருஎ

3019 உத்தமன் எங்கும் உகக்கும் பெருங்கடல்
நித்திலச் சோதியன் நீலக் கருமையன்
எத்தனை காலமும் எண்ணுவர் ஈசனைச்
சித்தர் அமரர்கள் [7]தேர்ந்தறி யாரே. ருஅ

3020 நிறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன்
[8]அறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் இன்பம்
[9]மறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் பாவம்
புறம்பல [10]காணினும் போற்றகி லாரே. ருகூ

3021 [11]இங்குநின் [12]றானங்கு நின்றனன் எங்குளன்
பொங்கிநின் றன்புவ [13]னுபதி புண்ணியன்
கங்குல்நின் றன்கதிர் மாமதி ஞாயி
றெங்குநின் றன்மழை போலிறை தானே. சO

3022 உணர்வது [14]வாயுமே யுத்தம மாயும்
உணர்வது நுண்ணறி வெம்பெரு மானைப்
புணர்வது [15]வாயும் புல்லிய தாயும்
[16]உணர்வுடல் அண்டமு மாகிநின் றானே. சக

3023 தன்வலி யாலுல கேழுந் தரித்தவன்
தன்வலி யாலே யணுவினுந் தானொய்யன்
தன்வலி யான்மலை எட்டினுந் தான்சாரான்
தன்வலி யாலே தடங்கட லாமே. சஉ

பா - ம்—[1]ஊறுவார். [2]தங்கே. [3]வெளியல்லன். [4]பண்ணிலும். [5]புனலல்லன். [6]பார்வையன். [7]தேர்ந்தற்ற வாறே. [8]நறம்பல. [9]பறம்பல. [10]காணினை. [11]அங்குநின். [12]றானெங்கு. [13]னுபதிப். [14]மாயுமே. [15]வாயுவும். [16]உணர்வு முடலண்ட.

3024 ஏனோர் பெருமைய னாகிலும் எம்மிறை
ஊனே [1]சிறுமையுள் [2]உட்கலந் தங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே யறியுந் தவத்தின் அளவே. ௨௫

3025 [3]பிண்டாலம் வித்தில் எழுந்த பெருமுளைக்
குண்டாலங் காயத்துக் குதிரை பழுத்தது
[4]உண்டனர் உண்டார் உணர்விலா மூடர்கள்
[5]பிண்டத்துட் பட்டுப் பிணங்குகின் [6]றார்களே.* ௨௬

---

* ஒரு பிரதியில் இதன் பின் அடியார் பெருமை யென்னுந் தலைப்போடு ஐந்து செய்யுட்கள் காணப் படுகின்றன. அவை வருமாறு :—

1. சித்தஞ் சிவமாஞ் சிவஞானி சேர்விடஞ்
சுத்தச் சிவாலயந் தொல்பாவ நாசமாம்
மத்த மழையக மானந்த மேலிடு
முத்தம் பெருகு முழுப்பொரு ளாகுமே.

2. சாயுச் சியஞ்சாக் கிராதீதஞ் சாருதல்
சாயுச் சியமுப சாந்தத்திற் றங்குதல்
சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவில்லாச்
சாயுச் சியமனந் தானந்தச் சத்தியே.

3. பாசம் பயிலுயிர் தானே பரமுதல்
பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப
பாசம் பயிலப் பசுபதி யாதலாற்
பாசம் பயிலாப் பசுபதி யாமே. [2423-ஓடு ஒப்பிடுக.]

4. ஆணவ மூலத் தகார முதித்திடப்
பேணி யுகாரங் கலாதி பிறிவிக்கத்
தாணு மகாரஞ் சதாசிவ மாகவே
யாணவ பாச மடர்தல்செய் யாவே.

5. நெற்றி நடுவுள் ளினவெழு கண்டமு
முற்ற விதயமு மோதிய நாபிக்கீழ்ப்

பா - ம்—[1]சிறுமை யுள்கலந். [2]உள்கலந். [3]விண்டாலம். [4]உண்டார்கள் ; உண்டா னரண்டார். [5]பிண்டத்துப். [6]றாரே.

௨௨. சர்வ வியாபி

3026 ஏயுஞ் சிவபோக மீதன்றி [1]யோரொளி
ஆயும் அறிவையும் மாயா உபாதியால்
ஏய பரிய புரியுந் தனதெய்துஞ்
சாயுந் தனது [2]வியாபகந் தானே. ௧.

3027 நானறிந் தப்பொருள் [3]நாடவிட மில்லை
வானறிந் தங்கே வழியுற விம்மிடும்
ஊனறிந் துள்ளே [4]உயிர்க்கின்ற ஒண்சுடர்
தானறிந் [5]தெங்குந் தலைப்பட லாமே. ௨

3028 கடலிடை வாழ்கின்ற கௌவை யுலகத்
துடலிடை [6]வாழ்வுகொண் டுள்ளொளி நாடி
உடலிடை [7]வைகின்ற உள்ளுறு [8]தேவனைக்
கடலின் [9]மலிதிரைக் காணலு மாமே. ௩

3029 பெருஞ்சுடர் மூன்றினும் உள்ளொளி [10]யாகித்
[11]தெரிந்துட லாய்நிற்குந் தேவர் பிரானும்
இருஞ்சுடர் [12]விட்டிட் டிகலிட மெல்லாம்
பரிந்துடன் போகின்ற பல்கோரை யாமே. ௪.

3030 உறுதியி னுள்வந்த [13]வுள்வினைப் பட்டு
இறுதியின் வீழ்ந்தார் இரணம தாகுஞ்
சிறுதியின் உள்ளொளி திப்பிய [14]மூர்த்தி
பெறுதியின் மேலோர் பெருஞ்சுட ராமே. ௫

3031 [15]பற்றி னுள்ளே [16]பரமாய பரஞ்சுடர்
முற்றினு முற்றி முளைக்கின்ற மூன்றொளி

பெற்ற துரியமும் பேசிய மூலத்தே
யுற்ற வதீத மொடுங்கு முடனே.

இவற்றுள் 1, 4, 5-ம் செய்யுட்கள் முன் 2865-ம் செய்யுளின்கீழுள்ள குறிப்பிற் கண்டனவே.

பா - ம்—[1]யீதே யேரொளி. [2]வியாபகத்; வியாபதத் தானதே. [3]நாடாவிட. [4]யொளியுற வோங்கினுற். [5]தங்கே. [6]வாழ்வுகண் ; வாழக் கண். [7]வைக்கின்ற. [8]தேனைக். [9]மலிதிரை. [10]யாதி. [11]தெளிந்துட. [12]வீட்டிட் ; விட்டி. [13]ஆழ்வினைப். [14]முத்தி. [15]பற்றினி ; பற்றி னின்று. [16]பரமாய்ப்.

நெற்றியி னுள்ளே நினைவாய் நிலைதரு
மற்றவ னாய்நின்ற மாதவன் தானே. ௬

3032 தேவனு மாகுந் திசைதிசை [1]பத்துளும்
ஏவனு மாம்விரி [2]நீருல கேழையும்
ஆவனு.[3]மாமமர்ந் தெங்கு முலகினும்
நாவனு மாகி நவிற்றுகின் றானே. ௭

3033 நோக்குங் கருடன் நொடியே ழுலகையும்
காக்கு மவனித் தலைவனு [4]மங்குள
நீக்கும் வினையென் நிமலன் பிறப்பிலி
போக்கும் வரவும் புணரவல் லானே. ௮

3034 செழுஞ்சடை யன்செம்பொ [5]னேயொக்கு மேனி
ஒழிந்தன வாயு ஒருங்குடன் [6]கூடுங்
கழிந்திலன் எங்கும் பிறப்பிலன் ஈசன்
ஒழிந்தில [7]கேழுல கொத்துநின் றானே. ௯

3035 உணர்வும் அவனே உயிரும் அவனே
புணர்வும் அவனே [8]புலனும் அவனே
இணரு மவன்றன்னை எண்ணலு மாகான்
துணரின் மலர்க்கந்தந் துன்னிநின் றானே. ௧௦

3036 புலமையின் நாற்றமில் புண்ணியன் எந்தை
நலமையின் ஞான வழக்கமு மாகும்
[9]விலமையில் வைத்துள வேதியர் கூறும்
பலமையில் எங்கும் பரந்துநின் றானே. ௧௧

3037 விண்ணவ னாயுல கேழுக்கு மேலுளன்
[10]மண்ணவ [11]னாய்வலஞ் சூழ்கடல் [12]ஏழுக்குந்
தண்ணவ னாயது [13]தன்மையின் நிற்பதோர்
கண்ணவ [14]னாகிக் கலந்துநின் றானே. ௧௨

பா - ம்—[1]பத்தையும். [2]நீரே ழுலகையு. [3]மாமளர். [4]மங்குளன். [5]ஞெக்குமா. [6]கூட்டுங். [7]னேழுல. [8]புனலும். [9]விலமையுள். [10]விண் ணவ. [11]னாய்வல. [12]எழொக்குக். [13]தன்மைய. [14]னர்கி ; னங்கி.

போக்கலு மாகும் [1]புகலற [2]ஒன்றெனில்
தேக்கலு மாகுந் [3]திருத்திய பத்தே. அ

778 ஏயிரு நாளும் இயல்புற ஓடிடிற்
பாயிரு [4]நாலும் பகையற நின்றிடும்
[5]தேய்வுற மூன்றுந் திகழுவே நின்றிடில்
ஆயுரு [6]வாறென் றளக்கலு மாமே. கூ

779 அளக்கும் வகைநாலும் அவ்வழியே [7]ஓடில்
விளக்கும் ஒருநாலு [8]மெய்ப்பட நிற்கும்
துளக்கும் [9]வகையைந்துந் தூய்நெறி ஓடில்
களக்க [10]மறமூன்றிற் காணலு மாமே. க0

780 காணலு மாகுங் கருதிய பத்தோடிற்
காணலு மாகுங் கலந்த இரண்டையும்
காணலு மாகுங் [11]கலப்பற [12]மூவைந்தேற்
காணலு மாகுங் கருத்துற ஒன்றே. கக

781 கருதும் இருபதிற் [13]காணஆ றுகும்
கருதிய [14]ஐயைந்திற் காண்பது மூன்றும்
கருதும் இருப [15]துடனாறு காணிற்
கருதும் இரண்டெனக் காட்டலு மாமே. கஉ

782 காட்டலு மாகுங் கலந்திரு பதேழில்
காட்டலு மாகுங் கலந்தெழும் [16]ஒன்றெனக்
காட்டலு மாகுங் கலந்திரு பத்தெட்டிற்
காட்டலு மாகுங் கலந்தா [17]ரைந்தே. கந

783 ஈரைந்தும் ஐந்தும் இருமூன்றும் எட்டுக்கும்
பாரஞ்சி [18]நின்ற [19]பகைபத்து நாளாகும்

பா - ம்—[1]புகலுற. [2]ஒன்றெண்ணில். [3]திருந்திய. [4]காளும் [5]தேயுற. [6]வாமென். [7]ஓடிடில். [8]மெய்ப்படா ; மெய்ப்பட்டு. [9]வகையா யைந்தும். [10]மாமூன்றிற். [11]கலப்புற. [12]மூவைகதேழ். [13]காணவீரா றுகுங். [14]ஐந்திற். [15]துடனாறுங். [16]ஒன்றெனிற். [17]ரையைந்தே. [18]னிற் ; நின்று. [19]பகைப்பதது நான்கும்.

[1]துன்று மெழுகையுள் பூசிச் சுடரிடைத்
[2]தன்ற வெதுப்பிடத் தம்பனங் காணுமே. அச

998 [3]கரண [4]விறளிப் [5]பலகை யமன்றிசை
[6]மரணமிட் [7]டெட்டின் மகார வெழுத்திட்டு
[8]வரணமி லங்காயம் பூசி [9]யடுப்பிடை
முரணிற் புதைத்திட மோகன மாகுமே. அரு

999 ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்திற்
பாங்கு படவே பலாசப் பலகையிற
[10]காங்கரு மேட்டிற் கடுப்பூசி விந்துவிட்
டோங்காமல் வைத்திடும் உச்சா டனத்துக்கே. அசு

1000 உச்சியம் போதில் ஒளிவன்னி மூலையிற்
பச்சோலை யிற்பஞ்ச காயத்தைப் பாரித்து
முச்சது ரத்தின் முதுகாட்டில் வைத்திட
அச்சமற [11]மேலோர் [12]மாரணம் வேண்டிலே. அஎ

1001 ஏய்ந்த வரிதார மேட்டின்மே லேபூசி
[13]ஏய்ந்த வகாரம் உகாரம் எழுத்திட்டு
வாய்ந்ததோர் [14]வில்லம் பலகை [15]வசியத்துக்
கேய்ந்தவைத் தெண்பதி னாயிரம் வேண்டிலே. அஅ

1002 எண்ணுக் கருடனை எட்டின் [16]உகாரமிட்
டெண்ணுப் [17]பொன்னொளி எழுவெள்ளி பூசிடா
வெண்ணுவற் பலகையி லிட்டுமேற் [18]கேநோக்கி
எண்ணு வெழுத்தொடெண் ணாயிரம் வேண்டிலே.

பா - ம்.—[1]துன்றுமே பூகையுள் ; துண்டு. [2]தண்ட. [3]காரண. [4]விறவிப் ; பிறவிப் ; விரளிப். [5]பலகை மன்றிசை. [6]மாரணமெட் டெட்டின் மகாரமெழுத்திட் டாரணமி. [7]டெட்டியின். [8]வாரண மில்லை யடுப்பிற் புதைக்க வூனமிலாத மோகனம தாகுமே. [9]அடுப்பிற் புதைக்க வூனக மில்லாத ; அடுப்பிற் புதை மூனகமில்லாத. [10]காங்கரும் பேட் டிற். [11]மேலோகை வாரணம் ; மேலோ மாரணம். [12]ஆண்டிலே. [13]வாய்ந்த வகார வுகார ; ஆய்ந்த. [14]வில்லப் ; வில்வப். [15]வசியத் தேய்ந்தவைத். [16]யகாரமிட். [17]பொன்னொளில். [18]கேசோக்கில் ; கு சோக்கில்.

3038 நின்றனன் மாலொடு [1]நான்முகன் தானாகி
நின்றனன் தான்நிலங் கீழொடு மேலென
நின்றனன் தான்நெடு மால்வரை ஏழ்கடல்
நின்றனன் [2]தானே வளங்கனி [3]யாயே. கங

3039 புவனா பதிமிகு புண்ணியன் எந்தை
அவனே உலகில் [4]அடர்பெரும் பாகன்
அவனே அரும்பல சீவனு மாகும்
அவனே இறையென மாலுற்ற வாறே. கச

3040 உண்ணின் [5]றொளிரும் [6]உலவாப் பிராணனும்
விண்ணின் றியங்கும் [7]விரிகதிர்ச் [8]செல்வனும்
மண்ணின் [9]றியங்கும் வாயுவு மாய்நிற்குங்
கண்ணின் றிலங்குங் [10]கருத்தவன் தானே. கரு

3041 எண்ணும் எழுத்தும் [11]இனஞ்செயல் அவ்வழிப்
[12]பண்ணுந் [13]திறனும் படைத்த பரமனைக்
[14]கண்ணிற் கவருங் கருத்தில் அதுவிது
உண்ணின் றுருக்கியோர் ஆயமு மாமே. கசு

3042 இருக்கின்ற [15]எண்டிசை அண்டம்பா தாளம்
[16]உருக்கொடு தன்னடி வோங்கவிவ் வண்ணங்
[17]கருக்கொடு எங்குங் [18]கலந்திருந் தானே
திருக்கொன்றை வைத்த செழுஞ்சடை யானே. கஎ

3043 பலவுடன் [19]சென்றஅப் பார்முழு தீசன்
செலவறி வாரில்லை சேயன் அணியன்
[20]அலைவிலன் சங்கரன் ஆதிஎம் மாதி
[21]பலவில தாய்நிற்கும் [22]பான்மைவல் [23]லானே. கஅ

பா - ம்—[1]நான்முக னாகி. [2]தாமே. [3]யாமே. [4]அடற்பெரும். [5]றொளியை. [6]உலகர் பிராணனை ; உலகார் பிரானை. [7]விரிகதிராய்ச். [8]செல்லும் ; சொல்லும். [9]றியங்கியும். [10]கருத்தவனாமே. [11]இனஞ் செய்தல். [12]பண்ணின். [13]திறமும். [14]கண்ணின். [15]தெண்டிசை. [16]உருக்கொண்டு. [17]கருக்கொண்டு மெங்குங். [18]கலந்திவன் றானே. [19]சென்றது. [20]நலவியன். [21]பலவியல் காய்நிற்கும் ; பலவில காய்நிற் கும். [22]பார்வைவல். [23]லோனே.

3044 அதுவறி வானவன் [1]ஆதிப் புராணன்
[2]எதுவறி யாவகை [3]நின்றவன் [4]ஈசன்
பொதுவது வான புவனங்கள் எட்டும்
[5]இதுவறி வான்நந்தி எங்கள் பிரானே. ௧௯

3045 நீரும் நிலனும் விசும்பங்கி [6]மாருதந்
தூரும் உடம்புறு சோதியு [7]மாயுளன்
பேரும் பராபரன் பிஞ்ஞகன் எம்மிறை
ஊருஞ் சகலன் உலப்பிலி தானே.* ௨௦

3046 †மூல னுரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூல னுரைசெய்த முந்நூறு மந்திரம்
மூல னுரைசெய்த முப்ப துபதேசம்
மூல னுரைசெய்த மூன்றும் ஒன்றாமே. ௨௧

3047 †வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே. ௨௨

ஒன்பதாந் தந்திர முற்றிற்று

ஆ மொத்தம் ௩௦௪௭

திருமந்திரம் முற்றிற்று.

---

* நூல் முழுதுமுள்ள ஒரு பிரதியில் இங்கு எண் கூட்டி ௩௦௦௦ என்னும் தொகை காட்டப்பட்டிருக்கிறது. இதன் பின் அப்பிரதியில் முன் வாராத உபதேசம் முப்பது செய்யுள்களும் **தேரிந்து முப்பது** என்னுந் தலைப்போடு எழுதப்பட்டுள. அவற்றின் பின் **வரைவுரை மாட்சி**. மற்றொரு பிரதியில் ஆக 3037 என்னும் கணக்கோடு. 1868, 1881, 1882 செய்யுள்கள் எழுதப்பட்டு இறுதியில் ஆக 3040 எனக் கணக்கிடப்பட் டிருக்கிறது.

† நூல் முழுவதுமுள்ள இரண்டு பிரதிகளிலும இச் செய்யுள்களில்லை.

பா - ம்—[1]ஆதி. [2]எதுவகை. [3]நின்றனன். [4]ஈரப். [5]இதுவா னவனந்தி. [6]மாருத ; மாருதத். [7]மங்குளன்.

திருமந்திரம் முழுவதுமுள்ள பிரதியொன்றில் நூல் முடிந்தவிடத்துக் கீழ்வரும் செய்யுட்கள் மூன்றும் காணப்படுகின்றன

திருமூல தேவனையே சிந்தைசெய் வீர்க்குக்
கருமூல மில்லையே காண். ௧

திருமந் திரமே சிவகதிக்கு வித்தாந்
திருமந் திரமே சிவமா—மருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றுமடி யார்தமக்குச்
சந்திக்குந் தற்பரமே தான். ௨

ஒன்றுகண் டேனிவ் வுலகுக் கொருகனி
நன்றுகண் டாயது நமச்சிவா யக்கனி
மென்றுகண் டாலது மெத்தென் றிருக்குந்
தின்றுகண் டாலது தித்திக்குந் தானே. ௩

பிற நூல்களிலும் உரைகளிலும் (அதிகமாகக்) காணப்படும்

திருமந்திரச் செய்யுள்கள்*

அண்ணன் முதலா அறுபதி னாயிரம்
எண்ணிலி கோடி தொகுத்தஇவ் வாகமம்
அண்ணல் அறைந்த வறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியு நீர்மே லெழுத்தே. ௧

---

* இவற்றுள் ௧, ௨, செய்யுள்கள் பெருந்திரட்டுக் குறுந் திரட்டிலும், ௩, ௪ செய்யுள்கள் வைராக்கியதீப உரையிலும், ௫-ம் செய்யுள் சிட்டானுபூதி யுரையிலும், ஏனைய ஆறும் அவிரோத வுந்தியார் உரையிலும் காணப்படுகின்றன. இவற்றுள் ௧-ம் செய்யுளை இந்நூல் 64-ம் செய்யுளோடும், ௧0-ம் செய்யுளை 2318-ம் செய்யுளோடும் ஒப்பிடுக.

ஆறு சமய முதலாஞ் சமயங்கள்
ஊற தெனவும் உணர்க உணர்பவர்
வேற தறவுணர் வார்மெய்க் குருநந்தி
யாறி யமைபவர்க் கண்ணிக்குந் தானே. ௨

